# இராமர் அம்மானை

கலாநிதி முருகு தயாநிதி



# இராமர் அம்மானை

பதிப்பாசிரியர்

கலாநிதி முருகு தயாநிதி
MA, PGDE, MEd, MPhil, Ph.D
முதுநிலை விரிவுரையாளர்
தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.

தமிழ்ப் புதுவை
புதுச்சேரி

இராமர் அம்மானை

வெளியீடு: தமிழ்ப் புதுவை, 17, 14ஆவது தெரு, கிருஷ்ணா நகர், புதுச்சேரி – 8.

பதிப்பாசிரியர்: கலாநிதி முருகு தயாநிதி

பதிப்பு : டிசம்பர் 2019

விலை : ரூ. 200/-

பக்கம்: 158

புத்தக கணினி வடிவமைப்பு : பிளாட்டினம் கிராபிக்ஸ், புதுச்சேரி – 1.

அச்சிட்டோர் : பிரிண்ட் பிராசஸ், சென்னை – 600 014

ISBN : 81-938307-7-2

Ramar Ammanai

Publisher : Tamizh Puduvai, 17, 14th Street, Krishna Nagar, Puducherry - 8

Author : Kalanithi Murugu Dhayanithi

Edition : December 2019

Price : Rs.200/-

Pages : 158

Book Layout & Design : Platinum Graphics, Puducherry - 605001.

Printed at : Print Process, Chennai - 600 014.

© All rights reserved No part of this book may be repoduced or retrieved or Photocopied in any form excepting for the purpose of reference or research without prior permission of the Author.

# அணிந்துரை

இந்தியப் பெருங்கடலின் மகுடமாகத் திகழும் இலங்கையில் வாழும் வளர்தமிழ் ஆசிரியர் முனைவர் முருகு தயாநிதி உலக அளவில் விருது பெற்ற சிறப்பு செய்தி கேட்ட வேளையில் இந்நூலுக்கான அணிந்துரை எழுதும் வாய்ப்பையும் பெற்றுள்ளேன். அவர்தம் சீரிய முயற்சிகளுக்கு ஒரு தூண்டுதலாக இது அமையும் என்றெண்ணுகிறேன். எனக்கு இலக்கியம் அதிக ஆர்வமுள்ள துறையாக இருந்தபோதிலும் என்னுடையத் துறை உளவியலாகும். எனவே இந்நூலை மதிப்பிடும் நிலையில் நான் இல்லை. மேலும் இந்நூல் ஒரு மறு உருவாக்க முயற்சி. அதனை தமது பதிப்பாய்வில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். நூலின் பதிப்பாசிரியர்.

அவர்தம் சீரிய முயற்சியில் காணாமல் போன இலங்கை இலக்கியங்கள் உயிர்ப்பித்து உலா வருகின்றன. "புராண இதிகாசங்கள் பழங்கதை, பண்டைய வரலாறு போன்றவற்றை மனிதன் மனிதனாக வாழ்வதற்கேற்ற வகையில் ஒழுங்குபடுத்தித் தருகின்றன. ஏதோ ஒரு வரலாற்று உண்மையே புராண இதிகாசத்தின் கருவாக உள்ளன." (பக்.5) எனக் குறிப்பிட்டுத் தொடங்கும் பதிப்பாய்வு பதிப்பாசிரியரின் நுண்மான் நுழைபுலத்தை வெளிப்படுகின்றது.

புராணங்களையும் இதிகாசங்களையும் இன்றைய காலத்திற்கு ஏற்ப எவ்வாறு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். ஆற்றொழுக்கு நடையில் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இந்நூலைச் செம்மையாக வடிவமைத்துள்ளார். நூல் முழுவதும் படிப்பதற்கு தொய்வில்லாத நடையில் கருத்துக்களை முன் வைத்துள்ளார். செய்யுள் வகைகள், சுவடி பெறப்பட்டமை, அம்மானை, இராமாயணம், இராமாயணக் கதைச் சுருக்கம், இராமர் அம்மானை, ஏட்டெழுத்து, குஞ்சரத்துக்கு எய்தல், புத்திரப்பேற்று யாகம், தாடகைக்கு அம்பு விட்டுக் கொள்ளுதல், சீதை பிறப்பு, இராமருக்குப் பட்டம் சூட்டுதல், குகனைச் சந்தித்தல், பரதன் அறிதல், சூர்ப்பநகை மூக்கரிதல், மாரீசன் மான் வழவு எடுத்தல், சீதையினைக் கவர்ந்து

செல்லுதல், சீதையினைத் தேடுதல், அனுமனைச் சந்தித்தல், வாலிக்கும் சுக்கிருபனுக்கும் சண்டை இடம் பெறல், அனுமனிடம் ஆளி கொடுத்து அனுப்புதல், இராவணனுக்கு அனுமனுக்கும் இடையில் உரையாடல், *விபுஷணன் புத்தி சொல்லுதல், சண்டைக்கு ஆயித்தமாதல், கும்பகர்ணன்* வருகை, மயிரரக்கனின் மாறுவேண்டும், அனுமனின் தூது செல்லுதல், இராவணனின் தளபதிகள், இராவணன் யுத்தம் செய்தல், விபுஷணனுக்கு பட்டம் சூட்டுதல், அனுமர் சீதையினை அழைத்து வருதல், நாட்டாரியல் நம்பிக்கைகள், மண்டோதரி கனாக் காணுதல், இடக்கண் துடித்தல், மட்டக் களப்பில் இராமாயணம் என இராமாயணத்தின் சுருக்கத்தை தம் பதிப்பாய்வில் குறிப்பிட்டு ஆய்வாளர்கள் எவ்வாறு அணுக வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

தாம் கண்டெடுத்தக் காவியத்தை தமிழ் உலகறியச் செய்த தமிழ்ச்செம்மல் "தயாநிதி" பார்ப் புகழ வளர வாழ்த்துகிறேன்.

அன்புடன்
முனைவர் **பாஞ். இராமலிங்கம்**
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி
சிறப்புத் தலைவர்,
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,
கனடா

# பதிப்பாய்வு

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவிய லாகும். உலகில் மொழியும் அடுத்து வாய்மொழி இலக்கியங்களும் அதனைத் தொடர்ந்து எழுதப்பட்ட இலக்கியங்களும் எழுந்தன. புராணக் கதைகள், கதைகள், பழமொழி, விடுகதை, பாடல், கலையின்பாற்பட்ட கூறுகள் அனைத்தின் அறிவையும் நாட்டுப்புறவியல் என்ற சொல் உணர்த்துகின்றது என்பர். புராண - இதிகாசங்கள் பழங்கதை, பண்டைய வரலாறு போன்றவற்றை மனிதன் மனிதனாக வாழ்வதற்கேற்ற வகையில் ஒழுங்குபடுத்தித் தருகின்றன. ஏதோ ஒரு வரலாற்று உண்மையே புராண-இதிகாசத்தின் கருவாக உள்ளன. உயர்ந்த கருத்துக்களைப் பல வடிவங்களில் மக்களுக்குக் கற்பிப்பதே புராணங்களின் நோக்கமாகும். இராமாயணமும் மகாபாரதமும் உயர்ந்த கருத்துக்களை மனித இனத்தின் முன்வைப்பதால், அவற்றைச் சிறந்த அடிப்படை நூல்களாகக் கருத வேண்டும் என்கின்றனர். எந்தப் புராணமானாலும் சரி, அதிலுள்ள தத்துவத்தை அறிய, அதில் வரும் பாத்திரங்கள் உண்மையா? கற்பனையா? என்ற ஆராய்ச்சிக்கு அப்பால் அவை போதிக்கும் அறக் கருத்துக்களை மனித இனத்திற்குப் போதிப்பதே புராண - இதிகாசங்களின் நோக்கமாக இருப்பது குறிப்பிடத்தக்கதே.

## செய்யுள் வகைகள்

தமிழிலக்கியம் தொடங்கிய காலத்தில் அகவல், கலிப்பா, பரிபாடல் என்னும் செய்யுள் வகைகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. அகவல் என்பது ஒவ்வொரு செய்யுள் அடியிலும் நான்கு சீர்கள் உடையதாய், மூன்று அடி முதல் நூற்றுக்கணக்கான அடிகள் வரையில் அமைந்தது (சீர் என்பது இரண்டு அல்லது மூன்று அசை உடையது. அசை என்பது ஒன்று அல்லது இரண்டு உயிரெழுத்துக் கொண்டது) அது, உரைநடை போலவே தொடர்ந்து அமைவது. எதுகை மோனைகளைக் கொண்டு, நான்கு நான்கு சிறு சீர்களாக ஒலிக்கும். பழங்காலத்தில் உரைநடையும் நான்கு நான்கு சீர்களாக அமையவே எழுதப்படுவதுண்டு. சிலப்பதிக்காரத்தின் இடையிடையே வரும் உரைநடையிலும், பிறகு வந்த உரையாசிரியர்களின் எழுத்திலும் அந்த

அமைப்பைக் காணலாம். கலிப்பா என்பது, நான்கு சீர்கள் கொண்ட அடிகள் உடையது.

பண்டைய காலத்தில் வாய் மொழியாகவே இலக்கியங்கள் பயிலப்பட்டு வந்துள்ளன. பிற்கால கட்டத்தில் எழுத்துக்களால் எழுதும் பழக்கம் வந்த பின்னர், தமிழ் இலக்கிய நூல்கள் பனை ஓலை சுவடிகளில் எழுதப்பட்டு சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. அந்த நூல்களை கொண்டு பாடம் கற்பிக்கப்பட்டது. சீடர்கள் சில நேரம், தங்களுக்கென்று பிரதி வேண்டுமெனில், புதிய ஓலை சுவடிகளில் எழுதி எடுத்து கொண்டனர். முந்நூறு வருடங்கள் வரை ஒரு ஓலை சுவடி சிதையாமல் இருக்குமாம், அதன் பின், மறு பதிப்பு (Reprint) செய்ய வேண்டிவரும். அவ்வாறு மறுபதிப்பு செய்யும் போதோ அல் லது புதிய பிரதிகளை எழுதும் போதோ, அந்த கால கட்டத்தில், எந்த வழக்கு சொற்கள் அதிகமாக புழக்கத்தில் இருந்தனவோ, அந்தச் சொற்களைப் பயன்படுத்தியே சுவடிகள் எழுதப்பட்டுவந்துள்ளன. பிற்காலத்தில் எழுதப்பட்ட ஓலை சுவடிகள் தற்போதைய தமிழ் வார்த்தைகளையும், சில நேரம் பிற மொழி கலந்தும் இருப்பதற்கு இதுவே காரணமாகும். பல ஏடுகளின்; மூல நூல்களை அல்லது வாய் வழி நூல்களை பிற்காலத்திலேயே, அவர்கள் வழிவந்த சீடர்கள் ஓலை சுவடிகளில் எழுதி பாதுகாத்து வந்துள்ளனர். ஆனாலும், அந்த நூலின் முதல் பிரதியின் மூலம், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எழுதப்படிருக்கும், அல்லது வாய்வழியாக கடத்தப்பட்டிருக்கும் என்பர்.

## சுவடி பெறப்பட்டமை

மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல ஏடுகள் இருந்துள்ளன. அவற்றுள் வைகுந்த அம்மானை, பாரத அம்மானை, கஞ்சன் அம்மானை, இராமர் அம்மானை முதலியவற்றைக் கொள்ளமுடியும். இந்த இலக்கியங்கள் ஏடுகளிலேயே எழுதப்பட்டிருந்தன. இவற்றுள் இராமர் அம்மானை இராம – இராவண யுத்தம் பற்றிய செய்தியினைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. இவ்வம்மானைகள் தமிழ் நாட்டிலோ, இலங்கையின் ஏனைய பிரதேசங் களிலோ அறியப்படாதவையாகும். இராமர் அம்மானை ஏட்டில் இருந்து பிரதியாக்கம் செய்யப்பட்டது. இந்த ஏடானது முனைக்காட்டுக் கிராமத்தி னைச் சேர்ந்த இளையதம்பி சின்னையா என்பவரிடம் இருந்து பெறப்பட்டது. இந்த ஏட்டினை அவருடைய பேரனும் எனது அருமை மாணவனுமான ச.சபேரஸ்கரன் என்பவர் மூலம் 2003ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டேன். இன்னும் ஒரு இராமர் அம்மானை ஏட்டினையாவது பெறுவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டும் எனக்குக் கிடைக்கவில்லை

என்பதனால் இருக்கும் ஏட்டினையாவது பதிப்பிக்க வேண்டும் என்பதற்காக இந்த முயற்சியினை மேற்கொண்டுள்ளேன். வருங்காலங்களில் பிரதிகள் கிடைத்தால் பிரதிபேதம் பார்த்து மூலபாடத் திறனாய்வின் அடிப்படையில் பதிப்பிக்கலாம் என்ற நம்பிக்கையில் விட்டுச் செல்கின்றேன்.

## அம்மானை

அம்மானை என்பது மகளிர் ஆடும் விளையாட்டுகளில் ஒன்று. இது, இரண்டு அல்லது மூன்று பெண்கள் மரத்தால் ஆக்கப்பட்ட அம்மானைக் காய்களை மேலே எறிந்து அவை கீழே விழமால் அவற்றில் ஒன்றைக் கழித்து அல்லது கூட்டிப் பிடிப்பதாக அமைந்த விளையாட்டாகும். மரக்காய்களுக்குப் பதிலாகக் கற்களையோ, மணிகளையோ பயன்படுத்துவதும் உண்டு. இலக்கியத்தில், இருபதிலிருந்து இருபத்தைந்து வயதுவரை உள்ள அரிவைப் பருவத்துப் பெண்களுக்குரிய விளையாட்டாக அம்மானை காணப்படும். இவ்விளையாட்டை ஆடுகையில் பாடப்படுவனவாக எழுந்தவை அம்மானைப் பாடல்கள். இவை காலப்போக்கில் பலவகையான மாறுதல்; பெற்றுப் பயின்றன. தொல்காப்பியர் அம்மானை பற்றி தனியான இலக்கணம் வகுத்துள்ளதாகத் தெரியவில்லையாயினும் பண்ணத்தி என அவர் வகுத்துள்ள வரையறைக்குள் அம்மானை எனும் பிரபந்தத்தையும் அடக்குவதற்கான குறிப்புக்கள் ஆங்காங்கு காணப்படுகின்றன. 482 - வது சூத்திரத்தில் பண்ணத்திச் செய்யுள் இதுவெனக் கூறிகின்றார்.

"பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாடடி னியல பண்ணத்தியே..." (செய்யுளியல் 173)

பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுள்கள், பாட்டினிடத்துக் கலந்த பொருளை உடையனவாகிப் பாட்டுக்களின் இயல்பை உடையனவாம். "பண்ணத்தி" (பாவினம்) அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன என்றார்.

தொல்காப்பியர் 483 - வது சூத்திரத்தில் 'அதுவே தானும் பிசியோடு மானும்' என்கின்றார். பண்ணத்தி பிசியோடு ஒத்த அளவின் பண்பினை உடையது. பிசி என்பது இரண்டடி அளவின் கண்ணே வருவது என்றார். பிசியின் பண்புகளில் நொடி போல் அமைபவனவற்றை பண்ணத்தி யின்பாற்படுத்தலாமெனத் தொல்காப்பியர் கூறுகின்றார். இது ஒரு வினா விடை முறையில் அமையப்பெற்றுள்ளன. சிலப்பதிகாரம், திருவாசகம் ஆகிய இலக்கியங்களில் வருகின்ற அம்மானைப் பாடல்கள் ஆறு வரிகளில் அமையப் பெற்றுள்ளன. இவை பண்ணத்தி வகையில் அமைந்தவை என்பர். ஐந்தடி கொண்ட கலம்பகப் பாடல்கள், திருவெம்பாவைப்பாட்டு, திரு வம்மானை என்பனவும் இவ்வகையே என்றார். பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுளாகிய சிற்றிசையும் பேரிசையும் முதலானவை இசைத்தமிழில்

ஓதப்படுவதாகக் கூறுகின்றார். பண்ணத்தி என்பது இசை தழுவிய அமைப்பு என்கின்றார் பேராசிரியர். அம்மானைப் பாடல் வகையை முதன்முதலில் சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் வாழ்த்துக் காதையில் "அம்மானை வரி" என்னும் தலைப்பில் காண்கிறோம்.

வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த உரவோன்யார் அம்மானை?
ஓங்கரணங் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை

என்று தொடங்கி ஐந்தடிகள் கொண்ட நான்கு அம்மானை வரிப்பாடல்கள் அம்மானை விளையாடும் மகளிர் தம் ஆட்டம் வழியே சோழ மன்னனின் புகழைப் பாடி மகிழ்தலைக் காட்டுகின்றன. இசைப் பாட்டாகப் பொழியும் இப்பாடல்களில் வெண்டளை முழுமையாகப் பயில்வதைக் காணலாம். முதல் இரு அடிகளில் ஒரு கேள்வியும், அடுத்த இரு அடிகளில் விடையும், இறுதி அடியில் வாழ்த்தும், இரண்டு - மூன்று அடிகளில் மடக்கும் அமைந்து கலித் தாழிசை வடிவில் காணும் இப் பாடல்கள் மூன்று பெண்கள் தமக்கிடையே உரையாடிக் கொள்வதைக் காட்டுகின்றன எனச் சொல்வர்.

திருமுறைகளில், அம்மானை ஆட்டம் பற்றிய குறிப்பைத் திருஞானசம்பந்தரின் பாடல் ஒன்றில், "கருந்தடங்கண்ணார் கழல் பந்து அம்மானைப் பாட்டயருங் கழுமலமே" என்ற குறிப்பு இருப்பினும் அம்மானைப் பாடல்கள் மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் அன்றி, மற்ற இடங்களில் காணப்படுவதில்லை. திருவாசகத்தில், திருவம்மானை என்ற தலைப்பில் உள்ள இருபது பாடல்கள் "அம்மானாய்" என்ற சொல்லைப் பாட்டின் இறுதிச் சொல்லாகக் கொண்டுள்ளன.

"பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்"
(திருவம்மானை)

என்றவாறுள்ள இவ்வம்மானைப் பாடல்கள், சிலம்பில் காண்பது போல் மன்னனைப் பற்றி அல்லாமல் இறைவனைப் பாட்டுடைத் தலைவனை வாழ்த்தும் வகையில் அமைந்திருக்கின்றன. இம்மாற்றத்தை முதலில் மாணிக்கவாசகர் செய்தார் எனத் தோன்றுகிறது. மேலும், இவை வினா விடை வடிவில் அமையவில்லை. சிலம்பில் கண்ட கலித்தாழிசை வடிவம் இப்பாடல்

களில் கொச்சகக் கலியாக மாறியிருப்பதைக் காண்கிறோம். வெண்டளை பயிலுமாறு அமைக்கப்பட்ட இப்பாடல்களின் ஓசைநயம் கருதியும், இவற்றை அடுத்துவரும் திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்புல்வல்லி போன்ற மகளிர் விளையாட்டுகளை ஒட்டி அமைந்துள்ள பாடல் களைக் கருதியும், திருவம்மானைப் பாடல்கள் அம்மானை விளையாட்டில் பாடுவதற்காக அமைந்தவை எனத் தெரிகிறது. பாடல்களைக் கருதியும், திருவம்மானைப் பாடல்கள் அம்மானை விளையாட்டில் பாடுவதற்காக அமைந்தவை எனத் தெரிகிறது. அம்மானாய் என்ற சொல்லைத் திருப்பாவையின் பத்தாவது பாட்டில் "நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்" காண்பது போல அம்மா என்று பொருளில் விளையாடச் சேர்ந்திருக்கும் மகளிரை முன்னிலைப்படுத்திக் கூறும் சொல்லாகத் தெரிகிறது. இதுபோல, அம்மனை, அம்மனார், அம்மானே போன்ற சொற்களும் பயன்படுத்தப்படும். சிலம்பில் தாழிசை வடிவிலும் திருவாசகத்தில் கொச்சகக் கலிப்பா வடிவிலும் அமைந்த அம்மானைப் பாடல்களை அடுத்து கலம்பகம், உலா, பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களில் மெருகூட்டிய தரவுக் கொச்சகக் கலிப்பாவாக உருக்கொண்டது. நாயக்கர் ஆட்சிக் காலத்தில் அம்மானைப் போக்கில் சில வளர்ச்சிப் படிகள் தோன்றுகின்றன. கி.பி.1647 ஆம் ஆண்டு சந்தியா குமாயோர் அம்மானை பாடப்பட்டிருக்கின்றது. மதுரை வீரன் அம்மானை, ராமப்பையன் அம்மானை, பொன்னழகர் அம்மானை போன்ற அம்மானைகளும் எழுந்துள்ளன.

"புந்திவனஞ் சுல்மும் பொருவில்லாப் பிள்ளையார்
தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணி அம்மானை
தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணி ஆமாகில்
இந்த வயிற்றுக்கு இரையெங்கே அம்மானை?
இன்றென்றே ஈசன் இரக்கலுற்றான் அம்மானை! "
(மூவரம்மானை)

"தேனமரும் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலார்காண் அம்மானை
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே ஆமாகில்
சானகியைக் கொள்வாரோ தாரமாய் அம்மானை?
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை!"
(திருவரங்கக் கலம்பகம்)

சிலப்பதிகார அம்மானை வரிப்பாடல்களைப் போல இவற்றில் வினா - விடை அமைப்பும் அடிமடக்கும் பயிலக் காண்கிறோம். எனினும், இப்பாடல்களின் சொற்களில் காணும் வஞ்சப்புகழ்ச்சி / நையாண்டி வகை நகைச்சுவையும், குறிப்பாக, இறுதியடியில் சிலேடை நயம் தோன்ற விடையளித்து ஒரு திருப்பத்துடன் முடிக்கும் முறையும் அம்மானைப்

பாடல்களின் அழகிய பரிணாம வளர்ச்சியைப் பறை சாற்றுகின்றன. இப்பாடல்களின் பின்னணியான அம்மானை விளையாட்டில், பாட்டுடைத் தலைவனின் குண நலன்களைக் கூறும் ஒரு பெண்ணும், அவை பற்றிய கேள்வியொன்றை எழுப்பும் ஒரு பெண்ணும், அதற்கு விடையளிக்க மூன்றாவதாக ஒருபெண்ணும் பங்கெடுப்பதாகக் கற்பனை செய்யலாம். இரு மகளிர் மட்டுமே இருப்பதாகவும் கருதலாம் என்பர்.

மேலும், ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திக்கும் இடையே ஒரு வாக்குவாதம் நடைபெற்றதாகவும், அது அம்மானை வடிவத்திலேயே நடந்ததாகவும் வினோதரசமஞ்சரி போன்ற நூல்களில் பார்க்கலாம். புகழேந்தி,

"திருநெடுமால் அவதாரஞ் சிறுபுலியோ அம்மானை!
சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானை!
ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்தது அம்மானை!
ஒப்பரிய விளையாட்டு உறந்தையிலோ அம்மானை!
கரையெதிர் ஏடேறியது காவிரியோ அம்மானை!
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானை!
பரவைபடிந் தசும்சோழன் பதந்தனிலோ அம்மானை!
பாண்டியனார் பராக்கிரமம் பகர்எளிதோ அம்மானை!"

கடந்த இரு நூற்றாண்டுகளில், அம்மானைப் பாடல்கள் கதைப் பாட்டு என்னும் நாட்டுப்புற இலக்கியமாக மாறி, மக்களிடையே வாய்மொழியாகப் பயில்நிலையில் உள்ளன. இதுவரை நாம் பார்த்த அம்மானைப் பாடல்களில் உள்ளது போலன்றி, இக்கதைப் பாட்டில், அம்மானை என்ற சொல் குறிப்பிட்ட பொருள் ஏதும் இன்றிக் கேட்போர் கவனத்தை ஈர்க்க மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. அரசியல், சமுதாய, சமயத் தலைவர்களின் வரலாற்றை விவரிப்பதற்கோ அல்லது ஒரு நீண்ட கதையைப் பாடல் வழியாகக் கூறுவதற்கோ இந்த அம்மானைக் கதைப் பாட்டுக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இராமப்பய்யன் அம்மானை, ஆமையார் அம்மானை சிவகங்கைச் சீமை அம்மானை, அகிலத் திரட்டு அம்மானை போன்றவை இவ்வகையைச் சார்ந்தவை.

'லாவணி' என்றழைக்கப்படும் சமீபத்திய கதைப்பாட்டும் அம்மானைக் கதைப் பாட்டுப் போலவே அமைந்திருக்கும். குதிரை லாவணி போன்றவை அன்றாடப் பேச்சுவழக்குத் தமிழில் குறிப்பிட்ட இலக்கணம் ஏதுமின்றி அமைவதைப் பார்க்கலாம் அம்மானைப் பாடலின் இலக்கணம் பற்றித் தொல்காப்பியத்திலோ, பாட்டியல் போன்ற பழைய யாப்பிலக்கண நூல்களிலோ குறிப்பில்லை. சிலப்பதிகாரத்திலும் சிற்றிலக்கியங்களிலும் பிரபந்தங்களிலும் அண்மைக்கால நாட்டுப்புற இலக்கியத்திலும் தாம் கண்ட அம்மானைப் பாடல் அமைப்புக்களை நோக்கி அதற்கான யாப்பு இலக்கணத்தை

முதன்முறையாக நமக்குத் தந்தவர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆவார். அறுவகை இலக்கணம் என்னும் அவரது நூலில் உள்ள நூற்பாக்கள் அம்மானைப் பாடலின் காலத்திற்கேற்ற வளர்ச்சியையும் சுட்டுகின்றது.

"இரண்டு நாலைந் தெனுமடி ஈற்றில்அம்மானை
ஈற்றின் விடைமொழி யதனுள்
இருபொருள் காட்டல் மிகையாம் முப்பொருள்
நாற்பொருள் மொழியினும் இசைவுறல் நலமே"

"கலிப்பா அரையரை யாகக் கூட்டியும்
எதுகை இன்றித் தனித்தனி சேர்த்தும்
காதை அம்மானை கழறினர் சிலரே

"கொச்சகச் சீர்கொடு கூறுமம்மானை
இழிவின தாகுமென் றிசைப்பது துணிவே"

## இராமாயணம்

இராமாயணம் தமிழில் எழுந்த காப்பியமாகும். வடமொழியில் வான்மிகி பாடிய இராமாயணத்தினைக் கம்பர் தமிழ் மொழியில் கி.பி. 12 நூற்றாண்டில் பாடியுள்ளார். கம்பருடைய இராமாயாணத்தில் சில இடங்கள் வான்மிகி இராமாயணத்திலிருந்து மாறுபட்டு நிற்பதனையும் தெளிவாகவே கண்டுகொள்ள முடிகின்றது. பொதுவாக நோக்கும்போது இராமாயணம்,

1. அக்காலத்துச் சமூக நிலையினை விவரமாகத் தெளிவுபடுத்துகின்றது. அதாவது, சமூகத்தில் காணப்பட்ட போட்டித் தன்மையினை விபரித்து நிற்கின்றது.

2. சமூகத்தினை வழிநடத்தும் ஒரு தலைவன் எவ்வாறு ஒழுக்க நெறிமுறைகளுக்கு ஏற்ப நடந்துகொள்ள முயற்சிக்கின்றான் என்றும், அவ்வாறு செயற்பட வருகின்றபோது ஏற்படுகின்ற தடைகள், சிக்கல்களிலிருந்து எவ்வாறு விடுதலை பெறுகின்றான் என்பதனையும் தெளிவுபடுத்துகின்றது.

3. உலகில் தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும்போது தர்மத்தை நிலை நாட்டுவதற்காக விஷ்ணு அவதாரத்தினை மேற்கொண்டுள்ளமை பற்றிய தெளிவினையும் தருகின்றது.

4. இவற்றுக்கு மேலாக ஒரு இனத்தின்மீதோ அல்லது இனக் குழுக்களின் மீதோ அபாரமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது போன்ற கருத்தாடல்கள் இருப்பதனையும் ஆழ்பொருளாகத் தருகின்றது.

5. மொத்தத்தில் ஆரியர்கள் தமிழ் நாட்டுக்குள் வந்து இடம் பிடிப்பதற்காகத் தங்களை நல்லவர்களாகக் காட்டிக் கொள்வதற்கு, இறை என்ற தொன்மத்தைப் பயன்படுத்தி வெற்றி பெற்றுள்ளமையினையும் எடுத்தக்காட்டுகின்றது என்பர்.

## இராமாயணக் கதைச் சுருக்கம்

### பால காண்டம்

அயோத்தியை ஆண்டு வந்த தசரத மன்னனுக்கு நீண்ட நாட்களாக குழந்தை இல்லாததால் மனக்கவலை கொண்டிருந்தான். தன் மந்திரி சும ந்தரர் மற்றும் தன் குலகுருவான வசிட்டரின் அறிவுரைப்படி குழந்தைப் பாக்கியம் வேண்டி புத்திர காமேஷ்டி யாகம் நடத்தினான். அப்போது மகா விஷ்ணு தோன்றி, ஓர் தங்கத்திலான பாத்திரத்தை தசரதனிடம் கொடுத்து, அதிலிருக்கும் புனிதமான தேனைத் தசரதனின் மனைவியரை பருகும்படி கேட்டு கொண்டார். அதன்படி தசரதரும் தன் மனைவியரான கோசலை, சுமித்திரை மற்றும் கைகேயியிடம் தேனைப் பகிர்ந்தளிதார். அதன்படி கோசலைக்கு இராமனும், கைகேயிக்கு பரதனும், சுமித்திரைக்கு இரட்டையரான இலக்குவன் மற்றும் சத்ருகன் ஆகியோர் பிறந்தனர். சிறிது காலத்திற்கு பின்பு நால்வரும் வசிட்டரிடம் சீடர்களாக சேர்ந்து பல்வேறு கலைகளை கற்றுகொள்ள ஆரம்பித்தனர். இந்நிலையில் விசுவாமித்திர முனிவர், அயோத்தியை அடைந்து தசரதரிடம் தன் யாகங்களுக்கு சில இராட்சகர்களால் இடையூறு ஏற்படுவதால் அவர்களை அழிக்க இராமனை தன்னுடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொண்டார். முதலில் தயங்கினாலும் பிறகு இராமனையும், இலட்சுமணனையும் அவருடன் அனுப்பி வைத்தார். இராமர் தாடகையை அழித்து யாகத்தைக் காத்தார். இதற்காக விசுவாமித்திரர் அவர்களுக்கு சில அஸ்திரங்களை அருளி ஆசிர்வதித்தார். பின்னர், மிதி லைக்கு இராமனையும், இலக்குவனையும் விசுவாமித்திரர் அழைத்துச் செல்கிறார். அவ்வேளை வழியில், கல்லாக இருந்த அகலிகை இராமனின் கால்பட்டு உயிர்பெறுகிறாள். அவளுடைய நிலையினை விசாரித்தறிந்து, அவளை கௌசீக முனிவருடன் சேர்த்துவிட்டு செல்கின்றனர்.

### அயோத்தி காண்டம்

விசுவாமித்திரர் இராமனையும், இலட்சுமணனையும் மிதிலைக்கு அழைத்துச் சென்றார். அந்நாட்டு அரசன் ஜனகன் சீதைக்குத் திருமணம் செய்வதற்காக அரசர் போட்டியொன்றை ஒழுங்கு செய்திருந்தார். அவளுடைய சுயம்பரத்துக்காகப் பல தேசங்களில் இருந்தும் பல அரசகுமாரர்கள் வந்தி ருந்தனர். சீதைக்கு சுயம்வரம் நடக்கிறது. அதில் இராமன் கலந்து கொண்டு பலரும் முயற்சித்து உடைக்கமுடியாத சிவதனுசை உடைத்து, சீதையை ம ணந்துகொண்டு அயோத்திக்கு சென்றார்.

## ஆரண்ய காண்டம்

தசரதன் மூத்த மகனான இராமனுக்கு முடிசூட்ட எண்ணினான். அரச குடும்பத்தினரும் மக்களும் இது குறித்து மிகவும் மகிழ்ந்தனர். ஆனால், கைகேயியின் பணிப்பெண்களில் ஒருத்தியான கூனி என்பாள் இராமன் மீது வெறுப்புற்றிருந்தாள். இராமன் அரசனாவதை அவள் விரும்பவில் லை. அதனால், கைகேயியைத் தூண்டி விட்டு இராமன் அரசனாவதைத் தடுக்க எண்ணினாள். கூனி கூறிய விடயங்களைக் கைகேயி ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றாள். பின்னர் கூனியின் வலையில் வாத்தையில் மயங்கி விடுகின்றாள். தசரதன் தருவதாகக் கூறிய இரண்டு வரங்களையும் கேட்டு வாங்கும்படி கூனி கைகேயிக்கு ஆலோசனை கூறினாள். அதற்கிணங்க தனது மகனான பரதன் அரசனாக வேண்டும், இராமன் பதி னான்கு ஆண்டுகள் காட்டில் வாழவேண்டும் என்னும் இரண்டு வரங்களைக் கைகேயி தசரதரிடம் கேட்டாள். மனதை மாற்றிக்கொள்ளும்படி தசரதர் வேண்டியும் கைகேயி பிடிவாதமாக மறுத்துவிட்டதனால், தான் சொன்ன சொல் லைக் காப்பாற்றுவதற்காக வேறு வழியின்றி அவளுடைய கோரிக்கைக்குத் தசரதன் இணங்க வேண்டியதாயிற்று. இதன்படி இராமன் சீதை, இலச்சும ணனுடன் உடனடியாகவே காட்டுக்குச் சென்றார். அவ்வேளையில் பரதனும், சத்துருக்கனும் நாட்டுக்கு வெளியே இருந்தனர். தந்தையின் இறப்புச் செய்தி கேள்வியுற்ற அவர்கள் உடனடியாக நாடு திரும்பி நடந்ததை அறிந்து கொண்டனர்.

நடந்தவை அனைத்துக்கும் தனது தாயே காரணம் என்பதை அறிந்த பரதன் கோபம் கொண்டான். முடிச்சூடிக்கொள்ள மறுத்த அவன் இராம னைத் திரும்பவும் கூட்டி வருவதற்காகக் காட்டுக்குச் சென்றான். தந்தையின் சொல்லைக் காப்பாற்றுவதற்காக அயோத்திக்கு வர இராமன் மறுக்கவே, பரதன் இராமனின் காலணிகளை கேட்டுப் பெற்றுக்கொண்டு அயோத்திக்குச் சென்றான். அங்கே இராமனின் பாதுகைகளை அரியணையில் வைத்து இராமன் காட்டிலிருந்து மீளும் வரை அவனுக்காகப் பரதன் ஆட்சியை நடத்தி னான். இராமனும், சீதையும், இலட்சுமணனும் காட்டில் வாழ்ந்து வந்தபோது அரக்கர் குலத்தைச் சேர்ந்த சூர்ப்பனகை என்பவள் இராமன் மீது ஆசை கொண்டாள். அதனை அறிந்துகொண்ட இலட்சுமணன் அவளது மூக்கை வெட்டித் துரத்திவிட்டான். இதனால் கோபமடைந்த அவள் தனது அண்ணன் இராவணனிடம் முறையிட்டாள். தனது தங்கைக்கு நேர்ந்த நிலையால் சினம் கொண்ட இராவணன் இராமனைப் பழிவாங்க எண்ணிச் சீதையைக் கவர்ந்து கொண்டு வந்து, இலங்கையில் உள்ள அசோகவனத்தில் சிறை வைத்தான். சீதையின் அழகில் மயங்கிய அவன், தன்னை மணந்து கொள்ளுமாறும் வற்புறுத்தினான்.

## கிஷ்கிந்தா காண்டம்

சீதையைத் தேடி அலைந்த இராமனுக்கும், இலட்சுமணனுக்கும் வானரர்களின் அரசனான சுக்கிரீவனின் நட்புக் கிடைக்கிறது. சுக்கிரீவனின் அமைச்சனும், காற்றுக் கடவுளின் மகனுமான அனுமன் இராமனிடம் *பெரும் பக்தி கொண்டிருந்தான். இராமனும் தன்னைப் போல மனைவியை* இழந்து தவிக்கிறான் என்பதை அறிந்த சுக்கிரீவனும், அவனுடைய குடிம க்களான வானரங்களும் இராமனுக்கு உதவ முன்வருகிறனர். பின்னர் இராமபாணத்தால் வாலி கொல்லப்படுகின்றான். சுக்கிரீவனின் ஆணைப்படி வானரப் படைகள் பல திசைகளிலும் சென்று சீதையைத் தேடுகின்றனர்.

## சுந்தரகாண்டம்

அனுமன் கடலைத் தாண்டி இலங்கைக்குச் செல்லுதல், அசோக வனத்தில் சிறையிருந்த சீதையைக் காணுதல் என்று பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அனுமன் மூலம் சீதை இருக்கும் இடத்தை அறிந்து கொண்டனர். அனுமன், சீதையிடம் தான் இராமனின் தூதுவன் என்று கூறி, இராமனின் அடையாளமான மோதிரத்தினைத் காண்பிக்கின்றான். சீதையும் அந்த மோதிரத்தினைப் பெற்றுக் கொண்டு சுல்ளாமணி எனும் அணியைக் கொடுக்கின்றாள். அதனைப் பெற்று இராமனிடம் திரும்புகின்றார்.

## யுத்த காண்டம்

இராமன் வானரப் படைகளின் உதவியோடு இலங்கைக்குச் சென்றான். இதனை அறிந்த, இராவணனின் தம்பியான விபீடணன், சீதையை *விட்டுவிடுமாறு இராவணனுக்கு ஆலோசனை கூறியும் அவன் அதனை* ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். நியாயத்துக்கு எதிராக இராவணனுக்கு உதவ விரும்பாத விபீடணன் இராமனை அடைந்து அவனுக்கு உதவினான். இடம்பெற்ற போரில் இராவணனும், அவனது போர்வீரர்களும் மடிந்தனர். இராவணனுக்குரிய இறுதிக்கடைமைகளை விபிடணன் நிறைவு செய்த பின்னர், அவனுக்கு இராமன் இலங்கை அரசனாக முடி சூட்டினான். இராமன் சீதையை மீட்டபோதும், சீதையின் தூய்மையை நிரூபிப்பதற்காக அவள் தீக்குளிக்க வேண்டியதாயிற்று. இவ்வேளையில் இராவண னுக்கு விதிக்கப்பட்ட பதினான்கு ஆண்டுகள் முடிவடைந்ததனால் இராமன், சீதை, இலட்சுமணன் ஆகியோர் அயோத்திக்கு மீண்டனர். அங்கு இராமன் அரசனாக முடிசூட்டிக் கொண்டான். ஒருநாள் அயோத்தியின் குடி மக்களில் ஒருவன், சீதை இராவணனால் கடத்திச் செல்லப்பட்டதைக் குறித்து ஐயுற்றுப் பேசியதை அறிந்த இராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்பினான். அப்போது சீதை கருவுற்றிருந்தாள். காட்டில் சீதை வால்மீகி முனிவரின் ஆதரவில் வாழ்ந்து வந்தாள். அவளுக்கு லவன், குசன் என இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தனர். அவர்கள் வால்மீகியின் ஆசிரமத்திலேயே

வளர்ந்தனர். அக்காலத்தில் இராமன் தனது பேரரசை மேலும் பெருப்பிக்கும் நோக்குடன் அசுவமேத யாகத்தை ஒழுங்கு செய்தான். இந்த யாகத்தைச் செய்யும் ஒரு மன்னன் ஒரு குதிரையைப் பெரும் படையோடு அண்டை நாடுகளுக்கு அனுப்புவான். அவனுடன் போரிட முடியாமல் அடிபணிய விரும்பும் அரசர்கள், அக்குதிரையைத் தமது நாட்டில் உலவவிடுவர். அப்படியின்றி அவ்வரசன் அடிபணிய விரும்பாவிட்டால் குதிரையைப் பிடித்துக் கட்டிவிடுவான். குதிரையை அனுப்பிய அரசன் போர் புரிந்து குறிப்பிட்ட நாட்டைத் தோற்கடிக்கவேண்டும். இராமன் அனுப்பிய குதிரை அவனது பிள்ளைகளான லவனும், குசனும் வாழ்ந்த காட்டில் உலவியபோது அவர்கள் அதனைப் பிடித்துக் கட்டியதுடன், அதனுடன் வந்த படையினருடன் மோதி, அவர்களைத் தோற்கடித்தனர். இதைக் கேள்வியுற்ற இராமன் காட்டுக்கு வந்து தனது பிள்ளைகளையும் சீதையையும் கண்டான். சில காலத்தின் பின் புவியில் தனது காலம் முடிவுக்கு வருவதை சீதை உணர்ந்து, தன்னை ஏற்றுக்கொள்ளும்படி புவியன்னையை வேண்டினாள். சீதையின் வேண்டுகோளுக்கு இணங்கிப் புவி பிளந்து அவளை ஏற்றுக்கொண்டது. லவனும், குசனும் அயோத்திக்குச் சென்று தந்தையுடன் வாழ்ந்தனர்.

## உத்தர காண்டம்

சீதையை வால்மீகி ஆசிரமத்தில் சேர்த்தல், லவன், குசர்கள் பிறப்பு மற்றும் வால்மீகி லவ, குசர்களுக்கு கல்வி மற்றும் போர் பயிற்சி கற்றுக்கொடுத்தல் மற்றும் இராமகாதையை எடுத்துரைத்தல் போன்ற செயல்களை உள்ளடக்குகின்றது. கம்ப இராமாயணத்தின் இறுதிக் காண்ட மாகிய உத்தர காண்டம், ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது. கம்பர் தம் இராமா யணத்தைப் பால காண்டம் முதல் யுத்த காண்டம் முடிய உள்ள ஆறு காண்டங்களில் நிறைவு செய்துள்ளார். யுத்த காண்டத்தின் நிறைவில் வரும் விடைகொடுத்த படலத்தில் சுக்ரீவன், அனுமன், வீபிடணன் மற்றும் வானரர் முதலியோர்க்கு பரிசில்கள் கொடுத்து இராமன் விடை கொடுத்துஅனுப்பிய செய்தி கூறப்பட்டுள்ளது. அதன் பின்பு இராமர் பல்லாண்டு மனுநெறி தவறாமல் ஆட்சி செய்ததை விளக்கி, இராமாயணத்தைக் கம்பர் நிறைவு செய்கின்றார். அதன்பின் நிகழ்வுகளாக, சீதை தொடர்பான வதந்தியினை குடிமகன் மூலம் கேட்ட இராமன், ஐந்து மாத கர்ப்பிணியான சீதையை, இலக்குமணனைக் கொண்டு காட்டில் விட்டு விடுதல், காட்டில் சீதைக்கு வால்மீகி ஆசிரமத்தில் லவன் மற்றும் குசன் எனும் இரட்டைக் குழந்தைகள் பிறப்பதும், இராமர் செய்த அசுவமேத யாகக்குதிரைகளை லவ, குசர்கள் கட்டி வைத்தல், சத்துருக்கனன், பரதன் மற்றும் இலக்கு மணராலும் வெல்ல முடியாத லவ, குசர்களை, இராமரே நேரில் வந்து பார்த்து போரிடுவதும், பின்னர் லவ, குசர்களை அயோத்திக்கு அழைத்து செல்லுதலும், பூமி பிளந்து சீதை பூமா தேவியுடன் சேர்தல் போன்ற செய்திகளை உத்தர காண்டத்தில்

ஒட்டக்கூத்தர் அடையாளப்படுத்துகின்றார். இவ்வாறாக இராமாயணத்தின் சுருக்கம் அறிமுகப்படுகின்றது.

## இராமர் அம்மானை

மட்டக்களப்புத் தமிழகத்திலே வான்மிகி இராமாயணமும் கம்ப ராமாயணமும் பயில் நிலையில் இருந்துள்ளமையினை இராமர் அம்மானையின் வாயிலாகத் தெரிந்துகொள்ளமுடிகின்றது. இராமர் அம்மானை வான்மிகி இராமாயணத்தின் உட்பொருளையும் கம்பருடைய கம்பராமாயணத்தின் உட்பொருளையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள போதிலும் சில இடங்களில் அவற்றின் போக்கு சற்று ம றுபட்டுக் காணப்படுவதனை அவதானிக்கமுடிகின்றது. பாடிய புலவருடைய அதீத கற்பனைகளும் ஒரு பாத்திரத்தினை உயர்த்தி, தாழ்த்திக் பார்க்கின்ற முறையினையும் அவதானிக்கமுடிகின்றது. இராமர் அம்மானையினை விளங்கிக்கொள்வதற்காக இராமாயணத்தின் சுருக்கத்தினை எடுத்துக்காட்டி விளக்கம் தரப்படுகின்றது

## அண்ணாவி

மட்டக்களப்பு பண்பாட்டம்சத்திலே பேசுபொருளாக இன்றும் இருப்பது அண்ணாவி என்பதாகும். அண்ணாவி, அண்ணா வியார் என்ற சொல்லாடல்கள் கருத்தியலை அடையாளப் படுத்திக் காட்டுகின்றது. நாட்டுக்கூத்துமரபில் அடையாளப்படுத்தப்பட்ட அண்ணாவியர் என்பவர் மத்தளம் அடிப்பவர் என்ற நிலையில் இருந்து அந்த கூத்தையே பழக்கி அரங்கேற்றி ஆற்றுப்படுத்துபவர் என்ற உயரிய நிலையினை வகிக்கின்றது. அதாவது இந்தக் கூத்தைப் பழக்கும் அண்ணாவி அல்லது அண்ணாவியார் யார் என்றுதான் கேட்பது வழக்கில் உள்ளது. அவ்வாறாயின் ஒரு நிகழ்வினை முன்கொண்டு முடித்துவைப்பவர் அண்ணாவியார் என்ற நிலையினை எட்டியுள்ளார். இது இவ்வாறிருக்க சமூகத்திலே அண்ணாவி என்ற நிலையில் பயிலப்படம் சொல்லாடல் முக்கியமானதாகும். ஒரு சமூகச் செயற்பாட்டை முன்கொண்டு செல்பவரை அண்ணாவி என்று அழைக்கும் நிலையும் உள்ளது. உதாரணமாக இந்தத் திருமணம் இடம்பெறுவதற்கு அண்ணாவி யார்? என்று கேலியாகவும் முன்வைப்பார்கள். உயர்ந்த நிலையிலும் முன்வைப்பார்கள். ஆக ஒரு செயற்பாட்டின் முழுப் பொறுப்பினை ஏற்று நடத்தும் பங்குதாரர் அண்ணாவியாவார். இராமர் அம்மானையில் இந்த சொல்லாடல் ஆங்காங்கு வருவதனைக் காணமுடிகின்றது.

"மெத்தப் பயந்து விபூசணரும் வந்து நின்று
எத்திசையும் எண்ணும் இராவணனார் முன்சென்று
பத்துத்தலையனுக்குப் புத்திமதி சொல்லலுற்றார்
மதம்பெரிய கும்பகர்ணனும் மன்னன் விப'ணனும்

இதம்பெரிய இராவணனை ஏற்கவே கைதொழுது
மாயன் கடற்கரையில் வந்துவிட்டார் அண்ணாவி
ஆயனிடதேவியரை ஆரணங்கைப் போகவிடாய்
மன்னவனே நாமிருந்து வாளிலங்கை ஆளவென்றால்
தென்னவனே ஆயனிட தேவியரைப் போகவிடீர்
தேனிருக்கும் பூஞ்சோலை தென்னிலங்கை மன்னவனே
நாமிருக்க வேணுமென்றால் நாயகியைப் போகவிடாய்"

அதாவது முழுப்பொறுப்பும் உடையவன் நீதான். நீதான் சீதையினைக் கொண்டுவந்து சிறைவைத்துள்ளாய். உன்னால் தான் எல்லாம் இடம் பெறுகின்றது. நீ நினைத்தால் சீதையினை விட்டு போரைத் தவிர்த்து இலங்கையினை நாம் ஆள முடியும். என்ற வகையில் இராவணனை முழுப்பொறுப்புடையவனாகக் காட்டுவதற்குப் பொதுமக்கள் மத்தியில் பயன் பாட்டில் உள்ள அண்ணாவி என்ற சொல்லாடலைப் புலவர் இந்த இடத்துக்குப் பொருத்தமாகப் பயன்படுத்தியுள்ளார்.

## ஏட்டெழுத்து

அம்மானையைப் பாடிய புலவர் இயல்பான மொழிநடையுடன் ஆங்காங்கு பேச்சுத் தமிழிச் சொற்களையும் கையாண்டுள்ளார். 'ழ' எந்த இடத்திலும் பயன் படுத்தப்படவில்லை. 'ல' 'ள' ஆகிய எழுத்துக்களே ஏடு முழுவதுமாக எழுதப்பட்டுள்ளன. 'ழ' ஏட்டில் எழுதுவது சிரமம் என்பதால் அந்த எழுத்து தவிர்க்கப்பட்டிருக்கலாம். 'ழ' பதிலாக 'ள' உள்ளமையினால் எழுத்துப் பஞ்சம் காணப்படாமையும் காரணமாகலாம். பதிப்பில் ஏட்டில் உள்ளமா திரியே தந்துள்ளேன். அடுத்து போர் உக்கிரமாக இடம் பெறுகின்ற போது அல்லது சொல்லாடல் இடம்பெறுகின்றபோது 'வாடா' 'போடா' என்று வக்கிரமான சொற்களையும் கையாண்டுள்ளார். இது படிப்பவரை கவரும் நோக்கில் கையாளப்பட்டிருக்கும் சொல்லாடலாகும். இவ்வாறாக பேச்சுத் தமிழ்ச் சொற்கள் ஆங்காங்கு வருகின்றன. பாடல் பாடுகின்றவரின் சூழலுக்கு ஏற்றாப்போல் அவை விரவி வருவது வழக்கமாகும். பாத்திரப் பெயர்கள் சற்று வித்தியாசத்துடனே வருகின்றது. சில இடங்களில் சரியான உச்சரிப்புக் கொண்ட பெயர்களும் இருப்பதனை அவதானிக்கலாம்.

## குஞ்சரத்துக்கு எய்தல்

குருபுத்திரன் மகன் தனது மாதாப்பிதாவுக்கு தண்ணீர் எடுப்பதற்காக கமண்டலத்துடன் வந்து தண்ணீர்கரைக்கு வருகின்றான். அவன் தண்ணீர் எடுக்கும் சத்தத்தினை தசரதன் குஞ்சரம் வந்தது என்று எண்ணிக் கூர்அம்பு தொடுக்கின்றான். அம்பு பட்டு அலறிய சத்தத்தால் அது மனிதனுடைய அலறல் என்று எண்ணி அந்த இடம் சென்று விடயத்தினைக் கூறுகினறான். பின்னர் தசரதன் தண்ணீரை எடுத்துக்கொண்டு முனிவரிடம் செல்கின்றான்.

வேற்றுக்குரல் என்பதனை அறிந்த முனிவர் விடயத்தினை விசாரிக்கின்றார். தசரதனும் நடந்த விடயத்தினைக் கூறுகின்றான். அதனைக் கேட்டதும் வேதமுனி புத்தி கலங்கிப் புரண்டெழுந்து, கோபம் பொங்க "நான் படுகின்ற இந்தப் பிரிவுத் துயரினை நீயும் கொண்டிருப்பாய என்றும் புத்திரசோகத்தால் துயரில் ஆழ்வாய்" என்று சாபம் இடுகின்றார். இதனைக் கேட்டதும் தேவலோகமே அதிர்ச்சியில் ஆழ்கின்றது.

"வார்த்தை யறியாமல் மயக்கம் வருகையிலே
பார்த்துத் தெசரதனைப் பாலகனு மேதுசொல்வான்
மாதாவுந் தண்ணீர் வருமென்று தானிருப்பார்
என்னை அறியாமல் எய்தாயே ராசாவே
மன்னா இத்தண்ணீரை மாதவுக் கீயுமென்றான்
தண்ணீர் கொடுக்க முன் தான் பார்த்தங்கேதுரைப்பார்
வேற்று குரலாய் இருக்குதென்றார் வேதமுனி
போற்றுத் தெசரதனார் போதகத்தை நாடி வந்தேன்
கூரம்பு தான் தொடுத்துக் குஞ்சர மென்றெய்து விட்டேன்
பாரம்பு தான் பட்டுப் பட்டு விட்டார் என்றுரைக்க
பக்தியுள்ள பாலகனார் பட்டு விட்டார் என்றுரைக்க
பத்தி கலங்கிப் பொறி கலங்கி மாமுனியும்
இத் துயரங் கொண்டிருப்பான் என் மகனை எய்தவன்தான்
புத்திர சோபத்தால் போவான் எனமொழிந்தார்"

## புத்திரப்பேற்று யாகம்

தசரதனுக்கு நீண்ட காலமாக புத்திரப்பேறு இல்லாமல் இருந்தமையினால் மிக்க சோகத்தில் காணப்பட்டான். இந்தக் குறையினைப் போக்குவதற்காக அவன் விசுவாமித்திரரிடம் செல்லுகின்றான். விசுவாமித்திரரின் வேண்டுகோளுக்கு இணங்க புத்திரப்பேற்று யாகம் செய்கின்றான். அதன் பயனாய் வேதியனார் (விஷ்ணு) தெப்பைப் பிண்டம் நான்கு கொடுத்தார் அதனை வாங்கி கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகியோருக்குக் கொடுக்க முறையே இராமன், பரதன், இலக்குவணன், சத்துருக்கன் ஆகிய வீரர்கள் பிறக்கின்றனர். மேலும் யாககுண்டலத்தில் எழுந்த ஓமத்தில் இருந்து புல்தம் எழுந்து, பொன்தட்டில் அமிதம் போன்ற பிண்டம் ஏந்தி வந்து தசரதனின் கையில் கொடுத்த மாத்திரத்தில் மறைந்து போயுள்ளமையினையும் இராமாயணம் தரும் செய்தியால் உணர்கின்றொம்.

"புத்திரனை வேண்டிப் போத தளண்டு
வெற்றித் தெசரதனார் விசுவாமுனி முன்சென்று
குற்றம் பல செய்தோமோ கொடும் பாவம் செய்தோமோ
என்ன வினை செய்தோமோ யாக முனிக்கரசே"

வான்மிகி இராமாயணத்தில் புத்திரப்பேறு இல்லாமல் இருந்தபோது தன்மந்திரி சுமந்தரர் மற்றும் குலகுருவான வசிட்டரின் அறிவுரைப்படி புத்திரகாமேஷ்டி – புத்திரப்பேற்று யாகம் நடத்தினர் அப்போது மகாவிஷ்ணு தோன்றி ஒரு தங்கத் தாம்பாளத்தில் தசரதனிடம் கொடுத்து அதிலிருக்கும் தேனை தசரதனார் மனைவியர் பருகும்படி கேட்டார் அதன் படி அவர்கள் பருகியபோது குழந்தைகள் பிறந்தனர் என்கின்றது.

## தாடகைக்கு அம்புவிட்டுக் கொல்லுதல்

விசுவாமுனி செய்த யாகம் அனைத்தையும் தாடகை என்றொரு பெண் அழித்துவந்தாள். அதனால் மனம் நொந்த விசுவாமித்திர முனிவர் தசரதனிடம்வந்து இராமனை யாகத்தைக் காப்பதற்காக கேட்கின்றார். இராமன் சிறுபிள்ளை என்று கூறி மறுத்து பின்னர் அனுப்புவதற்கு உடன்படுகின்றான். இராமனுக்கு துணையாக அவன் இலக்குவணனையும் அனுப்புகின்றார். அங்கு மீண்டும் தாடகை யாகத்தை அழிப்பதற்காக வருகின்றாள். இராமர் இராமபாணத்தால் அம்புவிட்டு அவளைக் கொல்லுகின்றார். பின்னர் இலக்குவணன் ஏனைய இராட்சகர்களைக் கொல்லுகின்றான். அதன் பின்னர் யாகம் இனிதே நிறைவேறுகின்றது. இதற்காக விசுவாமித்திரமுனிவர் சில அஸ்திரங்களை அருளி ஆசிர்வதித்தார். இராமர் அம்மானையில் இராவணனுடைய தங்கையாகவே தாடகை விசுவாமித்திரமுனியால் காட்டப்படுகின்றாள்.

## சீதை பிறப்பு

உலகில் உள்ள அத்தனை அழகுள்ளவளாகவும் சீதை தினகரனார் மகளாகப் பிறக்கின்றாள். இவள் தண்ணீருக்குள் தழைத்தெழுந்த தாமரைபோன்ற அழகுடையவளாகக் காட்டப்படுகின்றாள். இவ்வாறான அழகிக்குத் திருமணம் முடித்து வைப்பதற்காக சனகர் ஏழுலகுக்கும் ஓலை அனுப்புகின்றார். அதாவது, இந்த வில்லை தூக்கி எடுப்பவர்க்குப் பெண் கொடுப்போம் என்பதுதான் அந்த ஓலையில் எழுதப்பட்டிருந்த வாக்கியம். பல மன்னர்களும் மன்னர் புத்திரர்களும் முயற்சித்தும் முடியாமற் போனது. விசுவாமித்திரர் இராமனையும் இலக்குவணனையும் மிதிலைக்கு அழைத்துவந்தபோது இந்த நிகழ்விலும் கலந்துகொண்டார். இராமர் அந்த வில்லை இலகுவாக எடுத்து ஒடித்துவிட அவனுக்கே சீதையினைத் திரும ணம் செய்து கொடுக்கின்றனர். ஆனால், ஜனக மகாராசனின் வேள்வியைக் காணும் பொருட்டே இவர்களை விசுவாமித்திரர் அங்கு அழைத்துச் சென்றிருக்கின்றார்.

## இராமருக்குப் பட்டம் சூட்டுதல்

இராமனுக்கு பட்டாபிஷேகம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. அதனை அறிந்த கூனி கைகேசிக்கு பழைய விடயம்

ஒன்றினை ஞாபகப்படுத்துகின்றாள். அதாவது முன்பு உனக்கு இரண்டு வரங்கள் தருவதாக தசரதன் கூறி இருக்கின்றான். அதனை நீ இப்போது பெற்றுக்கொள்ள வேண்டும். சக்களத்தி மகன் நாட்டினை ஆள்வது உனக்குத் தகுமா? உனது மகன் பரதந்தான் நாட்டினை ஆளவேண்டும் என்று பலவாறு கூறுகின்றாள். முதலில் மறுத்த கைகேயி பின்னர் கூனி கருத்தினை ஏற்றுக்கொள்கின்றாள். பின்னர் கைகேசி தசரதனை வணங்கித் தனக்குரிய வரங்ளைக் கேட்கின்றாள். இராமன் பதிநான்கு வருடம் காடாள் வேண்டும் என்றும், பரதன் பதிநான்கு வருடம் நாடாளவேண்டும் என்றும் கேட்டவுடன் தசரதன் மயக்கமுற்று மண்ணில் வீழ்கின்றான். கைகேயி இராமனை அங்கு அழைத்து நீங்கள் பதிநான்கு வருடம் காடாளவும் உனது தம்பி பதி நான்கு வருடம் நாடாளவேண்டும் என்ற வனவாந்திர முறையினை உனது அப்பா சொன்னார் என்று கூறியதும் இராமன் அதனை ஏற்று வனவாந்திரம் செல்லுகின்றான். தாயினுடைய கருத்தை ஏற்று வனவாந்திரம் செல்வது கம்பருடைய இராமாயணமாகும். வான்மிகி இராமாயணத்தில் இராமன் அறம்புறமாக ஏசுவதாகக் காட்டப்படுகின்றது.

## குகனைச் சந்தித்தல்

இராமன் கங்கைக் கரையினை அடைந்ததும் அங்கு குகனைச் சந்திக்கின்றனர். குகன் நாட்டை ஆளவேண்டிய நீங்கள் காட்டில் வருவதேனோ என விசாரிக்கின்றான். அதற்கு "கைகேயி சொற்படிக்கு காடுறைய வந்தோம் நாம் என்கின்றனர்". ஓடத்தில் ஏறிய அவர்கள் கங்கையைக் கடந்து மறுகரையினை அடைந்து அங்கு தங்கலாயினர். இங்கு கைகேயி சொற்படிக்கே காடுறைய வந்தோம் என்று பெருமையாகப் பேசுகின்றார் இராமர். ஆனால், கைகேயி "உனது அப்பா சொல்கின்றார்" என்றே இராம னிடம் கூறியதும் குறிப்பிடத்தக்கதே.

## பரதன் அறிதல்

இங்கு நடந்த செய்தியினை மந்திரிகள் ஓலைமூலம் அறிந்து கொண்ட பரதன் கனல் பறக்க கோபங்கொண்டு கைகேயியின் கழுத்தை அறுத்தெறியும் நிலையில் வருகின்றான். அய்யரையும் கொண்டு எங்கள் அப்பாவையும் ஓட்டவிட்டு வையகத்தை ஆளப்போறாயோ நீலி, நெட்டூரி, மாபாவி என்றெல் லாம் திட்டுகின்றான். இவ்வாறான நிலையில் இராமனைக் காண்பதற்காக படை படைக்கலங்களுடன் புறப்பட்டுச் செல்கின்றான். படைகளை கங்கைக் கரையில் விட்டுவிட்டு குகனுடன் ஓடத்தில் ஏறி அக்கரையை அடைகின்றான். இராமனை நாடாளுவதற்கு வரும்படி பலவாறு வேண்டுகின்றான். இராமனோ பதிநான்கு வருடம் சென்றதும் அங்கு வருகின்றேன் என்று கூறுகின்றான். அதனை ஏற்று அவனுடைய பாத அணிகளை எடுத்துக்கொண்டு பதிநான்கு வருடத்தால் அங்குவராவிட்டால் நான் நெருப்பில் வீழ்ந்து உயிர்விடுவேன் என்று திரும்பி இராமராஷ்ய ஆட்சி நடத்துகின்றான்.

## சூர்ப்பநகை மூக்கரிதல்

சூர்ப்பநகை மகன் பிராமணர் ஒருவரைக் கொன்றுவிட்டான். இதனை அறிந்த இலக்குவணன் அவனை வாளால் வெட்டி இராமரிடம் நடந்தவற்றைக் கூறுகின்றான். இதனை அறிந்த சூர்ப்பநகை இலக்குவணனைக் கொல்வதற்காக அழகான பெண்ணுருவாக மாறுவேடம் பூண்டு அவர்கள் இருக்கும் இடத்துக்குச் செல்கின்றாள். முதலில் இராமனைக் தெய்வக் கன்னிபோல கண்டு வணங்கி, பின்னர் இலக்குவணனுடைய திருவடியைத் தொழுது இச்சித்து நிற்கின்றாள். அப்போது இலக்குவணன் "அண்ணரடியைத் தொழுத ஆரணங்கே அங்கே நில்; பெண்னே நீ என்னைப் பெற்றெடுத்த மாதா என்கின்றான்." அப்போது அவள் பல்கடித்து சீதையினைக் கொண்டுசெல்ல முயற்சித்தபோது அவளுடைய மூக்கை அரிந்து விடுகின்றான். அட்டதிக்கும் அதிர அலறி அண்ணணான இராவணனிடம் சென்று நடந்தவற்றையும் சீதையின் அழகையும் பற்றிக் கூறுகின்றாள். இதனைக் கேட்ட இராவணன் சீறி எழுந்து செயற்பட முனைகின்றான். ஆனால், சூர்ப்பநகை இராமனை அடைய நினைக்கின்றாள். அதற்கு சீதை தடையாக இருப்பதனை உணர்ந்தே அவளை எடுத்துச் செல்ல முற்பட்டபோது, இலட்சுமணன் அவளின் அங்கத்தினை அரிந்துள்ளான் என்கிறது.

## மாரீசன் மான் வடிவு எடுத்தல்

இராவணனுடையகட்டளைக்குஏற்பமாரீசன்மான்வடிவுஎடுக்கின்றான். அந்த மான் மாணிக்கம் போன்ற அழகுடனும் மும்மடங்காகக் காணப்பட்டது. அதன் ஒவ்வொரு புயங்களும் ஒவ்வொரு அழகுடனே காட்சியளித்தது. அதாவது இந்த உலகிலே நிகரில்லாத அழகுடன் காணப்பட்டது. இத்தகைய மான் சீதை முன்பாக வந்து விளையாடுகின்றது. அதனைக் கண்ட சீதை மானைப் பிடித்துத்தரும்படி இராமனை வேண்டுகின்றாள். அதனை ஏற்றுக்கொண்ட இராமர் சீதைக்கு இலக்குமணரைக் காவல் வைத்து மானைப் பிடிக்கப்புறப்படுகினறார். மாயமான் ஓடிய திசையினை நோக்கி சென்று அதனைப் பிடிக்கமுடியாமல் களைத்துப்போகவே இராம பாணத்தால் எய்கின்றார். அப்போது "இளைய பெருமாளென" ஒலி எழுப்பி மான் மறைகின்றது. அந்த சத்தம் தம்பி செவியதனில் கேளாமல் இராமர் சாபம் இடுகின்றார். ஆனால் சீதைக்கு அந்தக் குரல் கேட்கின்றது. அவள் உடனே அந்தக் குரல் ஏதென்று விசாரிக்கும்படி இலக்குவணனைக் கேட்கின்றாள். அதற்கு "விண்ணவற்கும் வானவற்கும் மிக்கவற்கும் தீங்குவந்தால் அண்ணற்கும் தீங்கு வருமோ அவனியிலே" என்ற சொற்கேட்டதும் சீதை கண்சிவந்து அதீதமாய் கோபப்பட்டு இலக்குவணனைத் திட்டுகின்றாள். அவளுடைய நிலையினை உணர்ந்த அவன் அண்ணனைத்தேடி காட்டில் செல்கின்றான். அவனைக் கண்டதும் இராமர், நான் உன்னை சீதைக்குக் காவல் வைத்து வந்தேன் நீ இங்கு ஏன் வந்தாய் மாபாவி எனத்

திட்டுகின்றார். இலக்குவணனும் அங்கு நடந்த விடயத்தைக் கூறுகின்றான். கம்பருடைய இராமாயணத்தில் மான் வடிவுகொண்ட மாரிசன் இராமனுடைய அம்பு பட்டதும் இலட்சுமணா அபயம், ஜானகி அபயம் என்று கூக்குரல் இடுகின்றான். இதனைக் கேட்டும் சீதை பலவாறு கூறி இலக்குவணனை அங்கு அனுப்ப முயற்சிக்கின்றாள். இலக்குவணனும் அண்ணன் அப்படி அபயமிடமாட்டார் என்று கூறுகின்றான். அதனைக் கேட்காமல் பலவாறான வார்த்தைகளைக்கூறி இலக்குவணனை அங்கு அனுப்புகின்றாள். இலக்குவணனைக் கண்டதும் இராமன் வியந்துபோனான். ஏனப்பா அவளைத் தனிமையில் விட்டு வந்தாய் எனக் கேட்டு அவ்விடம் வருகின்றனர். வந்ததும் அங்கு சீதை இல்லை என்பதனை உணர்ந்து திகைப்பிலும் சோகத்திலும் ஆழ்ந்துவிடுகின்றனர்.

## சீதையினைக் கவர்ந்து செல்லுதல்

சீதையின் விடாப்பிடியில் இலக்குமணன் இராமனைத் தேடிச் சென்றபோது மாறுவேடம் கொண்டுவந்த இராவணன் சீதையினை மணித்தேரில் கவர்ந்து செல்கின்றான். அந்தவேளையில் தனது கணவனை எண்ணிக்கொண்டு தனது வளையல்கள் யாவையும் உருவி கீழே விழச் செய்கின்றாள். இந்த வேளையில் சடாசுமுனி மணித்தேர் செல்லும் வளியை மறித்து போர் செய்கின்றான். அப்போது இராவணன் சடாசி முனியின் ஒரு பக்க இறகை வெட்டி விடுகின்றார். அதனால் அவன் துடிதுடித்து மண்ணில் வீழ்கின்றான். கம்பர் புஷ்பக விமானத்தில் கொண்டு சென்றதாகவும் சடாசுவை சடாயு என்றும் காட்டுகின்றார்.

## சீதையினைத் தேடுதல்

சீதையினைத் தேடி வருகின்றபொழுது குற்றுயிருடன் கிடந்த சடாசிமுனியை காணுகின்றனர். அவனைக் கண்டதும் நீ யார் என இராமர் விசாரிக்கின்றார்? அதற்கு சடாசிமுனி தான் சடாசிமுனி என்றும் நடந்த விடயங்களைக் கூறும்படி கேட்டபோது அவனும் கூறுகின்றான். ஈரைந்து சென்னியுடைய வாளரக்கன் சீதையினைக் இலங்கைக்குக் கொண்டு செல்கின்றமையினைக் கண்டு அவளை மீட்பதற்காகப் போராடினேன் அவன் எனது ஒரு பக்கத்துச் சிறகை வெட்டிவிட்டான் என்று கூறி உயிரை விடுகின்றான். இப்போதுதான் இராமர் சீதையினை இராவணன் கொண்டு சென்றமையினை அறிந்துகொள்கின்றார்.

## அனுமனைச் சந்தித்தல்

சீதையினைத் தேடி வனம் பல கடந்து வருகையிலே அனுமனைச் சந்திக்கின்றனர். அனுமன் ஆலமரத்தில் இருந்து இறங்கி அவர்களைத் தொழுகின்றான். அனுமனை இராமர் விசாரித்தபொழுது அதற்கு அவன் தன்னைப் பற்றி தெளிவாகவே கூறுகின்றான். அனுமனும் பதிலுக்கு

நீங்கள் அயோத்தி நகரை ஆளவேண்டியவர்கள் ஆனால், இங்கு ஏன் காட்டில் அலைகின்றீர்கள் என்று கேட்கின்றான். அதற்கு இராமர் நாங்கள் மான்வேட்டையாடச் சென்றபோது இராவணன் பெருமாட்டியை கொண்டு இலங்கை புகுந்துள்ளான் என்கின்றார். இதனைக் கேட்டதும் அனுமன் வாய் புதைந்து நிற்கின்றான். அப்போது அனுமன் தனது அரசன் "சுக்கிருபனை ஞாபகப்படுத்துகின்றான்." சுக்கிருபன் காட்டகத்தில் வாழும் கலைக்கோட்டு மாமுனி என்றும், அவன் இராவணனைத் தோற்கடித்து சீதையினை மீட்கவல்ல திறன் உடையவன் என்றும், வாலி தாரகையை கொண்டு சென்றதனால் அவன் தாரகையை இழந்து நிற்கின்றான் என்றும், வாலியைக் கொன்று தாரகைக்குத் தாலி கட்டினால் சீதையினை மீட்டுவிடலாம் என்று கூறுகின்றான். அதற்கு ஏற்ப இராமரும் ஒப்புக்கொள்கின்றார். பின்னர் அனுமான் சுக்கிருபனை இராமனுக்கு அறிமுகப்படுத்துகின்றார். சுக்கிருபன் இராமனை வணங்கி நடந்த விடயங்களைத் தெளிவாகவே கூறித் தனது படையினைக் கொண்டு இராவணனை அழித்து சீதையினை மீட்பதற்கு உடன்படுகின்றான்.

## வாலிக்கும் சுக்கிருபனுக்கும் சண்டை இடம்பெறல்

இராமர் ஒப்புதல் அளித்ததற்கு ஏற்ப வாலிக்கும் சுக்கிருபனுக்கும் சண்டை இடம்பெறுகின்றது. சண்டையில் சுக்கிருபன் தோற்று வந்து இராம னுக்கு பலவாறு சொல்லி ஏசுகின்றான். இராமர் மீண்டும் சத்தியம் செய்து கொடுத்து காந்தமலரை அவனுடைய காதல் அடையாளமிட்டுச் செல்லும்படி கூறுகின்றார். அப்படியே மீண்டும் செல்லுகின்றான். அதற்கு ஏற்ப மீண்டும் போருக்கு அழைக்கின்றான் சுக்கிருபன். அப்போது தாடகை "தடக்கை உடையவரே நீங்கள் போருக்குப் போகாதீர்கள், வடக்குப் பக்கம் இருந்து வேடர் இருவர் வந்திருக்கின்றார்கள் அவர்களால் ஏதோ சகுனம் நிகழப் போகின்றது". நீங்கள் போருக்குச் செல்லாதீர்கள் என்று சொல்லியதையும் தட்டியெறிந்துவிட்டு வாலி போருக்குச் செல்லுகின்றான். அங்கு சந்தர்ப்பம் பார்த்து இராமர் இராம பாணத்தைத் தொடுக்கின்றார். பாணம் நெஞ்சில் பட்டபோது அதனைப் பிடித்துப்பார்த்து அது இராமபாணம் என்பதனை உணர்ந்து மனம் வெதும்பிப் பலவாறு கூறுகின்றான். தாடகையும் "மரங்கள் ஏறிக் கனியுண்ணும் புனத்தே வாழும் குரங்கினங்கள் நாங்கள் அதனை எய்யவென்றோ கொற்றவில் வாங்கினாயோ" என்று பலவாறு மனம் நொந்து அழுகின்றாள்;. அப்போது பலவாறு சத்தியம் செய்து கொடுத்து, 'வாலி உன்னுடைய புண்ணை ஆற்றி உன்னைப் பிழைக்க வைக்கின்றேன் நீ இதற்கு சம்மதம் தெரிவி என்கின்றான்.

"அஞ்சாதே சேவுகனை அறியாமல் எய்தோம் யாம்
நம்சோ சிரசானை யிந்த நாலுமறை தன்னானை
என்னானை தம்பி இலட்சுமணன் தன்னானை

உன்னாணை வாலி உருவிய புண்ணாற்றுகிறேன்
என்னானை வாலி ஈரக்க நீ வல்லாயோ
சொல்லாய் என உரைத்தர் திருமாலும் அப்பொழுது
அப்போது வாலி அளண்டு முகம் நோக்கி
உங்கள் குலத்தார் வடுப்பட்டிருந்தாலும்
எங்கள் குலத்தார் வடுப்பட்டிருப்பார்களோ"

என்று அதனை மறுத்து, என்னை இவ்வாறு கொன்றது போல் அங்கதனையும் தம்பி சுக்கிருபனையும் கொன்றுவிடாதே அவர்களைக் காத்தருள்வாயாக என்று வேண்டி, இந்த நாட்டினை சுக்கிருபனுக்குக் கொடுத்து தாடகையினையும் அவனுக்கு தாலிகட்டச் செய்து பரலோகம் சென்றுவிடுகின்றான்.

## அனுமனிடம் ஆளி கொடுத்து அனுப்புதல்

இராமர் அனுமனுக்கு அவனுடைய மோதிரத்தினைக் கொடுத்து இலங்கைக்கு அனுப்புகின்றான். அனுமனும் தென்திசைக்கு வந்து பல இடங்களும் தேடுகின்றான். பின்னர் இராவணனுடைய மாளிகைக்குள் புகுந்து தேடுகின்றான். பின்னர் தண்ணீர் எடுக்கவந்த பெண் ஒருத்தியிடம் விசாரித்து மீண்டும் தேடிக் அசோகவனம் வந்து அவள் இருக்கும் இடத்தினைக் காண்கின்றான். அனுமனுடைய ஆளியினைக் காட்டி தன்னை யார் என விளக்கமாகக் கூறுகின்றான். அதனை ஏற்றுக் கொண்ட சீதை இராமபிரானைச் சேருவதற்கான வழிகளைக் கேட்கின்றாள். அதற்கு அனுமன் அஞ்சாதே தாயே அரக்கன் பதி அழித்து உன்னைக் காப்பாற்ற விரைவில் இராமபிரான் வருவார் என்று கூறுகின்றான். பின்னர் அனுமன் பழங்கள் உண்பதற்காக சீதையிடம் அனுமதி கேட்டு தோட்டத்துக்குள் செல்கின்றான். மரங்கள் பலவற்றை அடியோடு அழித்து அழிமதி செய்கின்றமையினை அரக்கர்கோமான் அறிந்து அதனைத் துரத்துவதற்குப் படைகளை அனுப்புகின்றான். இராவணன் அனுப்பிய படைகள் யாவும் அனுமனால் கொல்லப்படுகின்றன. பின்னர் மேகநாதனை அனுப்பு கின்றான். மேகநாதன் விட்ட அம்புகள் யாவற்றையும் பிடித்து முறித்து எறிகின்றான். இறுதியாக விபுஷணன் வந்து அனுமனை விசாரித்தல், அனுமன் தன்னை வாயுபுத்திரன் என அறிமுகப்படுத்தல். ஆனால், மேகநாதன் விட்ட பிரமாஸ்திரத்தால் கட்டுண்ட அனுமனை இராவணன் முன்கொண்டு வருகின்றனர். பழங்கள் உன்பதற்காக சீதையிடம் அனுமதியும் பெறப்பட்டதாகத் தெரியவில்லை.

## இராவணனுக்கும் அனுமனுக்கும் இடையில் உரையாடல்

அனுமனை யார் என்று இராவணன் விசாரிக்கின்றான். அதற்கு அனுமன் தன்னைப்பற்றி அறிமுகப்படுத்தியபோது இருவருக்கும் இடையில்

கனல் பறந்த உரையாடல் இடம்பெறுகின்றது. அங்கிருந்தவர்களுள் பலர் அனுமன் குரங்கினம் அல்ல இவன் கூற்றுவன் என்று உரைக்கின்றனர். அனுமனும் அண்டமளந்த தேவிதனை நீ விடாவிட்டால் இலங்கைதனைப் படாது படுத்துவேன் என்கின்றான். இவ்வாறான நிலையில் அனும னுக்கு இராவணன் அடிக்கின்றான். அனுமன் இராவணனுக்கு தாடியில் அறைகின்றான். இவ்வாறான நிலையில் இவனைக் கொல்லுக என்று கூற விபுஷணன் அதனைத் தடுத்து தூதுவந்தவனைக் கொல்லல் ஆகாது எனப் புத்தி கூறுகின்றான். விபுஷஷணன்மீது கோபங்கொண்ட இராவணன் நீ இன்று முதல் எனக்குத் தம்பி அல்ல சத்துரு என்று கூறுகின்றான். பின்னர் அனுமனுடைய வாலில் சீலைபல சுற்றப்பட்டு நெய் ஊற்றி நெருப்பு வைக்கப்படுகின்றது. அனுமன் இலங்கையின் பல இடங்களைக் கொளுத்தி நடுக்கடலில் வாலைத் தோய்த்து இராமனிடம் செல்கின்றான். அனுமன் சீதையினை விடும்படி கேட்டபோது அதற்கு இராவணன் விரும்ப வில்லை. இதனால் இருவருக்குமிடையில் வாதம் இடம்பெறுகின்றது. இங்கு இராவணனுக்கும் அனுமனுக்கும் இடையில் கைகலப்பு இடம்பெற வில்லை. அதுபோல் வாலுக்குச் சீலை சுற்றப்பட்டு தீ வைக்கப்பட்டதாகத் தெரிய வில்லை. வாலுக்கே தீயிடப்பட்டதாக காட்டப்படுகின்றது.

## விபுஷணன் புத்தி சொல்லுதல்

விபுஷணன் பயந்து நடுங்கி இராவணனையும் கும்பகர்ணனையம் வணங்கி, இராமர் இலங்கை கடற்கரைக்கு வந்து விட்டார். அவருடைய தேவியரை விடுவோம் அண்ணாவி என்று கூறுகின்றான். நாம் இந்த இலங்கையினை ஆளவேண்டும் என்றால் இலட்சுமியை விடுவதுதான் தருமம் என்கின்றான். போர் செய்து வெல்வதை விட தருமவழியில் செல்வோம் என்று கூறுகின்றான்.

“மெத்தப் பயந்து விபூசணரும் வந்து நின்று
எத்திசையும் எண்ணும் இராவணனார் முன்சென்று
பத்துத்தலையனுக்குப் புத்திமதி சொல்லலுற்றார்
மதம்பெரிய கும்பகர்ணனும் மன்னன் விபூஷிணனும்
இதம்பெரிய இராவணனை ஏற்கவே கைதொழுது
மாயன் கடற்கரையில் வந்துவிட்டாரண்ணாவி
ஆயனிடதேவியரை ஆரணங்கைப் போகவிடாய்
மன்னவனே நாமிருந்து வாளிலங்கை ஆளவென்றால்
தென்னவனே ஆயனிட தேவியரைப் போகவிடீர்”

இன்னுமொன்று சொல்லுகிறேன் அண்ணாவி, அனுமன் இங்கு வந்தபோது பல இடங்களை அழித்தான் அதனை எம்மால் தடுக்கமுடியாமல் போனமையினையும் நீ அறிவாயே என்று கூறக்கேட்டு, பயந்தவனே! நீ

எனக்குத்தம்பியல்ல சத்துரு, நீ என்னை நாடாதே போய்விடு என்று கோபத் தீ பறக்கக் கூறுகின்றான்.

"இன்னமொன்று சொல்ல இராவணனே நீகேளாய்
முன்னமே வந்தனுமான் மூதூரில் பட்டணத்தை
இன்னதென்றெண்ணாமல் அழித்தது கண்டிலையோ
ஏற்றமுள்ள வாழ்வும் இழந்துவிடப்போகுதுகாண்
தாயாரும் தள்ளார் தமியேன் உரைத்த சொல்லை
ஆண்ட இலங்கை அழிந்துவிடப்போகுது காண்
வேண்டாம் நீ லெட்சுமியை விட்டுவிடும் அண்ணாவே
அந்தகிரி நாதர்படை ஆர்ப்பாரந்தான் கேட்டு"

இந்தப் பத்துத்தலை பூமியில் திருகி வீழ்ந்தாலும் ஆரணங்கை அவனருகே போகவிடேன் என்று விபுஷணனைத் துரத்துகின்றான். விபுஷணனும் தேரை வேகமாகச் செலுத்தி இராமன் இருக்கும் இடத்தி னை அடைகின்றான். இராமனிடம் நடந்த விடயங்ளை விளக்கமாகக் கூறுகின்றான். சீதையினை விடு என்று கூறியபோது அவன் என்னை துரத்தி விட்டான். என்னை மதியாதவனோடிருந்து அரசாளாமல் மண்ணளந்தார் மலரடிகாண வந்தேன், என்னைக் காத்தருள்வாயாக என்கின்றான்.

விபுஷணன்கும்பகர்னனையும்இராமர்பக்கம்சேரும்படிகேட்கின்றான். அண்ணா இலங்கை அழியப்போகின்றது. ஆகவே நீ இராமர் பக்கம் வந்து சேர்ந்துவிடு தருமத்தைக் காப்பதற்காக உன்னை அழைக்கின்றேன் என்று பலவாறு கூறுகின்றான். அதற்கு கும்பகர்ணன் வரமுடியாது என்ற செய்தி யினையும் ஞாயத்தினையும் தெளிவுபடுத்துகின்றான்.

"மன்னர் விபூ'ணரும் மகிழ்ந்துரைத்த சொற்கேட்டு
அண்ணனெனும் கும்பகனும் அவர்க்கருளி ஏதுசொல்வார்
வாசமுற்ற சோலை மதிளிலங்கை மன்னவனார்
ஆசையுடன் நமைவளர்த்த அண்ணர்தமை விட்டகன்று
சொல்லுற்றபோர் துடர்ந்து போவர்களோ தம்பியரே
கிள்ளை மதிளிலங்கை கிளைகெட்டுப்போகாமல்
கொள்ளை பெருஞ்சேனையுடன் கூட நின்று மாளாமல்
உள்ள பேர் தன்னில் ஒருத்தனாகிலும் பிளைத்து
எள்ளும் இளநீரும் இறைத்திடும் நீ என்று சொன்னார்
எல்லோரும் நாங்கள் உடனிறந்து போனாக்கல்
நல்லவிபூஷணரே நற்பதவிசேருமென்றார்
இன்று முதல் நமக்கு உடற்பிறப்பு மில்லையென்று
கண்டு இருவருமாய்க்கட்டி மிகஅளுது"

## சண்டைக்கு ஆயத்தமாதல்

விபுஷணன் கூறியதைக் கேட்டதும் இராமர் தலைமையில் சண்டைக்கான ஆயத்தம் செய்யப்படுகின்றது. அங்குதன், சாம்புவன் தலைமையில் படையணி இலங்கையின் தெற்குவாசல் பக்கம் செல்கின்றனர். லெட்சுமணன் தலை மையில் படையணி மேற்கு வாசல் பக்கம் காவல் செய்யவும், நீலன், குமுதன், சதுவலியன் தலைமையில் தடையறத் தாக்குவதற்குத் தயாராகின்றனர், அங்குஷனும் சுக்கிருபனும் படை இருக்கும் இடம் சென்று அருங்கனிகள், காய்கள், கிழங்குகள் கொடுத்துப் படைகளைக் காப்பதற்காகப் புறப்படுகின்றனர். இதனை அறிந்ததும் இராவணனும் தங்களது படைகளை சண்டைக்காக ஆயத்தப்படுத்துகின்றான். மேகநாதன் தலைமையில் படையணிகளும் படைக்கலங்களும் தயார் நிலையில் வைக்கப்படுகின்றன. வேந்தன் மகோதரன் தெற்குவாசல் பக்கம் என்று இராவணனும் தனது படைகளைத் தயார் நிலையில் வைத்துள்ளான். இவ்வாறாகப் போருக்குத் தயாரான நிலையில் விபுஷணன் மீண்டும் இராவணனிடம் சமாதானத்தை வேண்டித் தூது செல்கின்றான். தூது பிழைக்கவே இராவணனும் அண்டம் அதிரப் போருக்குப் புறப்படுகின்றான்.

## கும்பகர்ணன் வருகை

அரக்கருடைய பலம் வலிகுன்றிப் போகுதென்றும், இலங்கை அழியுதென்றும், உங்கள் அண்ணருடைய சேனைகள் யாவும் அழியப்போகுதென்றும் பலவாறு சொல்லி அவனை எழுப்புகின்றனர். மேலும் கோடாரி, வாள் கொண்டு வெட்டுதல், யானை, குதிரைகளை விட்டு மிதித்தல் போன்ற செயல்களைச் செய்தும் அவன் எழும்பவில்லை என்பதனைப் புலவர்,

“கலங்கி அரக்கரெல்லாம் கால்சாய்த்து போகுதடா
இலங்கை அளியுதடா எழுந்திரடா கும்பகனே
உறங்குகின்ற கும்பகனே உங்களண்ணர் சேனை எல்லாம்
இறந்துவிடப் போகுதடா எழுந்திரடா கும்பகனே”

“கொட்டுடனே கோந்தாலி கூரிய வாள் கோடாலி
வெட்டித்திறந்தோர் விளைப்பிளை கும்பகற்கு
ஆனை குதிரை அடர்ந்து மிதித்துவர
சேனை மன்னர் தான் நடுங்கச் செங்காளமூதிவர
கோலிஅடித்திதமுப்பிக் கும்பகரன்றனையும்
வாரிஎழும்பி மறுகி மறுகிக் கிடந்தான்”

பல முயற்சிகள் செய்து நீண்ட நேரத்திற்குப் பின்னர் இங்கு என்ன நடக்குதென்று எழுந்திருந்தான். இராவணனுடைய சொற்படி அவன்

போருக்குத் தயாராகின்றான். உன்னோடு பிறந்தேன் உனக்கு முன்னே என்னுயிரை விடுவேன் என்று போர்க்களம் செல்கின்றேன். நான் போரில் தோற்றால் நீ சீதையினை விட்டு இலங்கையினை சிறப்பாக ஆட்சி செய்வாயாக என்கின்றான்.

"குணம்பெரிய கும்பகனும் கும்பிட்டெளுந்திருந்து
வணங்கி வளிகொண்டு மன்னவனைத் தான்பார்த்து
இன்னுமொரு வார்த்தை இயம்புகிறேன் கேட்டருள்வீர்
மன்னா நான் தோற்றால் மாயனிட தேவியரை
அண்ணே நீவிட்டு அரசாளும் என்று சொன்னான்
எண்ணாமல் நீயும் எதிர்த்துப் பொருதாக்கால்
மன்னாமடிவை வாகாகச் சொன்னேன் நான்"

போர் இடம் பெறுகின்றது. இலக்குவணனுடைய அம்பில் கும்பகர்ணன் மடிகின்றான். கும்பகர்ணனுடைய வேண்டுகோளுக்கு இணங்க அவனுடைய உடல் கடலில் போட கடல் அதனைக் கண்டு கலங்கியதாம்.

"வம்பலரும் தோளான் வரம் வேண்டி மன்றாட
வரங் கொடுத்து அப்போ வாளி வாங்கிப் பெருமான்
காந்தலை அறுத்துக் கருங்கடலிற் போடலுற்றார்
அம்புதலை கொண்டு ஆளிதனிற் போட
கண்டு கடல் கலங்கி கண் புரண்ட தம்மானை"

## மயிரரக்கனின் மாறுவேடம்

கும்பகர்ணனின் வீழ்ச்சியால் இராவணன் கலங்கிப்போயிருந்தான். மயிரரக்கன் விபுஷணனைப்போல் வேடம் பூண்டு அனுமனது வாலால் இட்ட கோட்டைக்குள் சென்று சிந்தூரப் பொடியினை வீசி எல்லோரையும் மயக்கி இராமனையும், இலக்குவணரையும் கட்டித் தலையில் வைத்து மாகாளிக்குப்பலிகொடுக்கச்செல்கின்றான். இராம, இலக்குவனரை அனுமன் விண்ணுலகம், மண்ணுலகம் யாவும் தேடியும் காணாமல் வருந்துகின்றான். மீண்டும் இலங்கைக் கரைக்கே வந்தான். அப்போது மயிரரக்கன் தங்கை தண்ணீர் எடுக்க வருகின்றாள். அவளைக் கண்டதும் இங்கு இருவர் வந்ததனை அறிவீர்களோ என தன்னை அறிமுகப்படுத்தி வினையமாக வேண்டுகின்றான். அவர்கள் மூலம் விடயத்தினை அறிந்து அந்தத் தண்ணீர் முட்டிக்குள் அனுமன் அடங்கி, அந்த இடம் சென்று மயிரரக்கனையும் படைகளையும் அழித்து அவர்களைக் காப்பாற்றிக் கொண்டுவருகின்றான். மீண்டும் வாலால் கோட்டை கட்டி விடியுமட்டும் அவர்களைக் காப்பாற்றி வைக்கின்றான்.

## அங்கதன் தூது செல்லுதல்

வாலியின் மகனான அங்கதன் இராவணனிடம் தூது செல்கின்றான்.

அங்கதனுமப்போ அரக்கன்முன்னேதான் சென்று
மங்குதடா உன்வாழ்வு வாளரக்;காநீகேளாய்
வட்ட உலகளந்த மாயவனார் தேவியரை
விட்டுவிடு நீ கெடுவாய் வேண்டாமென உரைத்தான்

இராவணன் இவனை விசாரித்தபோது தான் யார் என்பதனைக் கூறி சீதையினை விடும்படி கேட்கின்றான். அதற்கு இராவணன் அங்கதா நீ எனது தோழன் வாலியின் மகன் நீ அங்கிருந்தால் உன்னையும் கொன்றுவிடுவார்கள். ஆகவே எங்கள் பக்கம் வந்துவிடு என்கின்றான்;. அதனைக் கேட்டு கனத்த கோபத்தோடு,

"அந்தமொழி கேட்டு அங்குதனு மேது சொல்வான்
சங்கு சக்கரம் தரித்த சக்கரபாணி தன்னைவிட்டு
சிங்கத்தின்குட்டி மூளி நாயருகே சேருமடா
சொல்லச்சினந்தெளுந்தான் தோளிரண்டுபத்துடையான்
பல்லைக்கடித்துப் பிடித்திவனைக் கொல்லுமென்றான்"

இதனைக் கேட்டதும் அங்கிருந்த வீரர்களுடன் போர் செய்து தப்பி இராமனிடம் செல்கின்றான். அதிகாயன் தேர்மீது இருந்து போரிடுவதைக் கண்ட அங்கதன் இலக்குவனைத் தன் தோள்மீது ஏற்றிக்கொண்டு போர் செய்து அவன் தலையைக் கொய்யச் செய்கின்றான்.

## இராவணனின் தளபதிகள்

இந்திரனை வென்ற இந்திரஜித் அல்லது மேகநாதன், போரில் பெயர் கண்ட பிரகஸ்தன், அதிகாயன், தேவாந்தன் போன்றவர்கள் இராவணனின் புதல்வர்கள் மட்டுமல்ல தளபதிகளாகவும் இருந்துள்ளனர். அவர்களில் மேகநாதன் சிறந்த வீரன். அதிகாயனின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து மேகநாதன் புறப்படுகின்றான். மேகநாதன் படைகள் பலவற்றை அழித்தான். வானவர்கள் வலிகுன்றி நிற்க போரை முடக்கிவிட்டான். லெட்சுமணனுடன் எழுபது வெள்ளம்சேனை மேகநாதன் அம்பில் பட்டு மாண்டனர். இராமர் தனது தம்பியரை மடியில் வைத்து அழுகின்றார். அவ்விடம் வந்த இராமரைப் பார்த்து "சிவன் கயிலை கடந்து சென்றால் மருந்து மலை தோன்றும் அங்கு சென்று மும்மருந்து கொண்டுவந்தால் படையினை எழுப்பிவிடலாம் என்று கேட்டதற்கு இனங்க, மருந்து பெறப்பட்டு யாவரும் எழும்புகின்றனர். இதனை அறிந்த மேகநாதன் ஆயுதங்கள் பெற இந்திரசெயிற்று யாகம் செய்கின்றான். இந்த யாகம் வளர்த்தால் இனி வெற்றிபெறமுடியாது என விபுஷஷணன் இலக்குவணரை உடன் போருக்குத் தூண்டுகின்றான். இந்திர செயிற்றுடனே

போர் இடம்பெறுகின்றது. ஆயுதமற்று இருந்த மேகநாதன் மேகத்துள் புகுந்து ஒளிக்கின்றான். அப்போது அனுமான் இலக்குவனரைத் தோளில் சுமந்து மேகநாதன் தலையினைக் கொய்யச் செய்கின்றார்.

"மேகத்தினுட் புகுந்து வேந்தன் மகனொளிக்க
அகம்மிக மகிழ்ந்து அனுமானு மப்பொழுது
வாளகிரி போலே வந்தனுமான் மன்னவனை
தோளில் எடுத்துச் சுமந்து நின்றாரம்மானை
இந்திரன் தந்தாயுதத்தை இளைய பெருமாளெடுத்து
அந்தரத்தே ஏவி அவன் தலையைத் தானறுத்து
இந்திரலோகம் எல்லோற்கும் தான் காட்டி
வந்தவன் தந்தை முன்னே வைத்தனர் காணம்மானை"

"சொல்லின் செல்வன்" அனுமன் போல் "வில்லின் செல்வன்" எனப் போற்றப்படுபவர். மேகநாதன். இந்திரனை வென்றதால் இந்திரசித்து என்றாயிற்று. அவனது வில்லின் திறத்தை நான்முகனே மெச்சிப் புகழ்வதாக ஒரு மதுரகவியில் சொல்வான் கம்பன்.

"சந்த வில்லி முப்புரம் தழறபடச் சரந்தொடும்
அந்த வில்லியும்சினத்து அரக்கரோடு தானவர்
சிந்த வில்லி ஐந்தெடுத்த தேவர்தேவ னும்அலால்
இந்த வில்லி ஒக்கும் வில்லி எங்குமில்லை இல்லையே"

வில்லைத் திறம்படக் கையாளத் தெரிந்தவன் வில்லி. திரிபுரம் எரிக்கும் பொருட்டு பினாகம் எனும் வில்லினை எடுத்த சிவனையும், அரக்கரும் தானவரும் அழியும் பொருட்டு ஐம்படைகளை எடுத்த திருமாலையும் தவிர, இந்த மேகநாதனுக்கு இணையான வீரன் எவ்வுலகத்திலும் இல்லை யென்கிறது.

தன் பாசக் கயிற்றால் இராமனையே கட்டியவன் மேகநாதன். பின் கருடன் வரவால் அது இற்றது. தன் பிரம்மாஸ்திரத்தால் இலக்குவனையும் வானர சேனையையும் சாய்த்தான். பின் அனுமன் சஞ்சீவிமலை கொணர்ந்து அவர்களின் உயிர்மீட்டான். தன் ஆற்றலையும் ஆயுதவலிமையையும் எதிர்கொண்டு மீளும் எதிரிகளின் வல்லமையைக் கண்டு வந்த மேகநாதன், மறுநாள் போருக்குப் புறப்படும் முன் இராவணனிடன் சொல்வான்.

"ஆதலால் அஞ்சி னேன் என்று அருள் அலைஆசை தான்அச்
சீதைபால் விடுதி யாயின் அனைவரும் சீற்றம் தீர்வர்
போதலும் புரிவர் செய்த தீமையும் பொறுப்பர் உன்மேல்
காதலால் உரைத்தேன் என்றான் உலகெலாம் கலக்கி வென்றான்."

அப்பா எதிரிகளைக் கண்டு அஞ்சிச் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம், உன் மீதுள்ள அன்பினால் சொல்கிறேன் என்று மேற்கண்டவாறு சொல்கிறான்.

தம்பி "அட்சயகுமாரனைத் தரையோடு தரையாகத் தேய்த்துக் கொன்ற அனுமனை தூதன் என்று கொல்லாமல் உயிரோடு விட்டு விட்டாய். அவனைத் தொடர்ந்து சென்று பகைவர் இருக்குமிடம் அறிந்து அவர்களை அழித்தா யில்லை. புத்தி இல்லாதவனே, உன் மக்களையும் இழந்து விட்டாய். உன் வாழ்க்கை அழிந்தது" என்றான். இந்திரஜித். இலக்கு வனின் வீரத்தையும், தெய்வப் பண்பினையும் சொல்லிவிட்டு, "நீ சீதை மேல் வைத்த காதலை மறந்து விடு. அவர்கள் போர் செய்வதை விட்டுவிடுவார்கள்" என்று அறிவுரை கூறுகிறான். அதற்கு மான உணர்ச்சி பொங்க இராவணன் சொல்கிறான், "நான் ஒருவரையும் நம்பி இந்தச் செயலைச் செய்யவில்லை. என்னையே நோக்கி, யான் இந்நெடும் பகையை தேடிக் கொண்டேன்" என்கிறான். இறப்பது யார்க்கும் உறுதி. ஆனால், புகழுக்கு அழிவு இல்லை. சீதையை நான் விட்டுவிட்டு மற்றவர்க்கு எளியனாய் ஆவதைக் காட்டிலும் நான் இறந்தாலும் உறுதியாய் இறப்பேன். "நீ போ! நானே போருக்குப் போகிறேன்" என்றான் இராவணன்.

ஆத்திரத்துடன், "நடந்தது நடந்து போயிற்று. இனி நினைந்து என்ன பயன். என் தம்பி அதிகாயனைக் கொன்ற இலக்குவனைக் கொல்லாமல் இலங்கை நகருக்குள் திரும்பமாட்டேன், எனக்கு வாழ்வும் வேண்டாம். இலக்குவனைக் கொல்லாவிட்டால் நான் இராவணன் மகன் அல்லன்" என்று சபதம் செய்தான். அதற்கு இராவணன், "இந்திரஜித்! நீ கூறிய இந்த வீரச் செயல்களைச் செய்வாயாக! புத்திர சோகத்தால் தவிக்கும் எனக்கு உனது சொற்கள் ஆதரவாக இருக்கிறது" என்றான். தந்தையை வணங்கி, வில்லைக் கையில் ஏந்தி போருக்குப் புறப்பட்டான் இந்திரஜித். அனுமன் இலக்குவனுக்குத் துணையாக அருகில் வந்து நின்று கொண்டான். அனும ன் இலக்குவனிடம் "அவன் தேர்மீது நின்று போரிட, நீ தரையில் நின்று போரிட வேண்டாம். என் தோள்மீது ஏறிக் கொண்டு போரிடு" என்றான். போர் இடம்பெறுகின்றது வெட்ட வெட்டத் தன் அங்கங் களைச் சேர்க்கத் தெரிந்த மாயாவி மேகநாதன் என்பதால், தொடர்கணைகளால், கை, கால்கள் வேறு, உடல், தலை வேறென அறுத்து, தலையை மட்டும் கடலில் வீழ்த்தி மூழ்கடிப்பான் இலக்குவன். வாய்மையும் வலிமையும் மிக்க மேகநாதன் அடையும் இத்தகைய மரணம்தான், யுத்த காண்டத்திலேயே இராவணன் மரணத்தை விடவும் படிப்போர் மனத்தை நோகச் செய்வதாகும்.

## இராவணன் யுத்தம் செய்தல்

இராவணன் அனுமனுடன் யுத்தம் செய்கின்றான். அனுமன் மார்பில் பாய்ந்து அவனை அடிக்கின்றான். அப்போது அவன் மயங்கி விழ்கின்றான்.

மயக்கம் தெளிந்த இராவணன் "உன்னுடைய கை இரும்புக்கை" என்று அவனைப் புகழ்கின்றான். அனுமனும் என்னை மெச்சவேண்டாம் இலங்கைக்கு ராசாவே உன்னை மெச்சிக்கோ என்று சொல்லிச் செல்கின்றான.

"முன்னே இராவணனும் முற்கோடி பதித்த கொம்பு
பின்னே களண்டு விழுந்ததுவே அம்மானை
மறந்து விளி சுளண்டு வாளரக்கன் போய்விழவே
காந்தமலர்க்கையான் கருணாகரனனுமான்
வேந்தர் பெருமாள் மிகவெறுப்பார் நம்மை என்று
ஆராய்ந்து மிகவே அனுமான் திகைத்து நின்றார்
வேந்தன் இராவணனும் மெய்சோபந்தான் தெளிந்து
போர்ந்தங்கெழுந்திருந்து புன்குரங்கைத் தான்பார்த்து
மெச்சிக் குரங்கை மிகவே விரல் சுழற்றி
அச்சம் தெளிந்து அரக்கன் முகம் நோக்கி
உன்னுடையகைதான் இருப்புலக்கையோகெடுவாய்
என்றானிராவணனும் அப்போதனுமானும்
என்னை மெய்க்க வேண்டாம் இலங்கைக்கு ராசாவே
உன்னை மெச்சிக்கொண்டேன் உவகளந்தார்தம்மானை"

அனுமனைப் பெரியவன் என்று கூறுவது அதிதக் கற்பனையாகும். கந்த புராணத்திலும் விஷ்ணு எய்த சக்கரம் தாருகாசூரன் கழுத்தில் மாலையாக விழ விஷ்ணுவும் அவனைப் அதீத வீரன் என்று புகழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கதே.முன்னர் யுத்தம் இடம்பெற்றபோது இராமர் விட்ட சக்கரத்தால் அனைத்து ஆயுதங்களையும் இழந்து நின்றான் இராவணன். அப்போது இராமர் "இன்று போய் போர்க்கு நாளைவா" என்று அவனை அனுப்புகின்றார்.

"குன்றுமேல் வந்து நின்ற கொற்றவனைக் கோவிந்தனார்
இன்றுபோய் நாளை வாஎன்றார் இராவணனை
நின்று நெடுமுச்செறிந்து நினையாததெல்லாம் நினைந்து
சென்றுகுபுந்தான் திருமாளிகைதனிலே"

இறுதி யுத்தம் செய்வதற்கு இராவணன் புறப்பட்டு வந்த சினத்தினைப் பார்த்து அனுமார் கோபங்கொள்ளுகின்றார். பல பாணங்கள் தொடுத்து படைகள் வீழ்கின்றன. இவ்வாறாகப் பதினாறு ஆண்டுகள் சென்றன. லெட்சுமணர் பல பாணங்களைத் தொடுத்தார். இராவணன் தொடுத்த பாணத்தில் வானரப் படைகள் யாவும் பின்வாங்குகின்றன. இறுதியாக இராமர் இராமபாணத்தினைத் தொடுத்து அவனது தலையினைத் துண்டிக்கின்றார். இராவணனை இறுதிவரையும் கொல்லமுடியவில்லை. அவன் பிரமனிடம்

பெற்றவரத்தால் அவனுடைய நாவால் அமிர்தம் சுரக்கும். அது அவனைக் கொல்லவிடாது. தலைகள் வெட்டுப்பட்டாலும் பின்னர் ஒட்டிவிடும். இந்த வேளையில்தான் விபிஷணன் இராமருக்குச் சொல்லுகின்றான். நீங்கள் 31 அம்பை ஒரே தடவையில் எய்யுங்கள். அவற்றுள் 20 அம்புகள் அவன் கரத்தை அறுக்க, 10 அம்புகள் அவன் சிரத்தை அறுக்க, ஒரு அம்பு அவன் நாவை அறுக்கும் என்றான். இதன்படி செயற்பட்டதனால்தான் இராவணன் வீழ்ந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. இராவணனின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து இராமர் விபுஷணனை அழைத்து இராவணனுக்குரிய இறுதிச் சடங்கினைச் செய்யும்படி கேட்கின்றார்.

## விபுஷணனுக்கு பட்டம் சூட்டுதல்

விபுஷணன் இராவணனுடைய போர்த் தந்திரங்களைக் காட்டிக் கொடுத்ததனால்தான் இராமர் வெற்றி பெற்றார். இல்லையென்றால் இராமர் வீழ்ந்திருப்பார் என்பது உறுதி. அதனால்தான் விபீஷணனுக்கு இறுதியில் இலங்கை அரசனாகப் பட்டம் சூட்டுகின்றனர். இராமர் விபிஷஷணனை அழைத்து இராவணனுக்குரிய கடமைகளைச் செய்யச் சொல்லுகின்றான்.

"அப்போது மாயவனார் விபூஷணரைத் தானழைத்து
இப்போ இராவணற்கும் உள்ளிட்ட இராட்சதற்கம்
தப்பாமலுள்ள சடங்கு செய்யப்போமென்றார்
என்பிறப்பே அண்ணாவி என்வார்த்தை கேளாமல்
உன்வார்த்தையாலே உயிரிழந்து விட்டாயே
அன்னை உடனே அரசுபதி ஆளாமல்
காசினியோர் வாளக் கடன் களித்து விட்டாயே
தென்னிலங்கை செல்வம் செலுத்தி அரசாளாமல்
மாணிக்கப் பொன்னிலங்கை வாள்வொளிந்து விட்டீரே
அண்டுபெருமாள் அடியார் தன்னண்ணாவி
இன்று பெருமாள் இணையடியைச் சேருமென்றார்"

என்று விபிஷணன் பலவாறு சொல்லி அழுகின்றான். இராவணனுக்குரிய கடமைகள் அனைத்தும் நிறைவு பெற்றதும், போர் வெல்வதற்குக் காரண மான விபீபிஷணருக்கு பட்டங்கட்டி இலங்கையினை அரசாள்வதற்குச் வாய்ப்புக் கொடுக்கப்படுகின்றது. இராமன் தன் தம்பி இலக்குவனை அழைத்து, "நீ போய், சுக்ரீவன், அனுமன் மற்றும் வானர வீரர்களை அழைத்துக் கொண்டு, விபிஷணனுக்கு வேதமுறைப்படி இலங்கை அரசின் முடிசூட்டி பட்டாபிஷேகம் செய்து வருவாயாக" என்று பணித்தான். இதனைக் கேட்டு தேவர்கள் விபிஷணனின் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்கின்றனர். இலக்குவன் அனைவர் முன்பாகவும், விபிஷணனுக்கு வேத தோத்திரங்கள் முழங்க, மங்கள ஸ்ஞானம் செய்வித்து, புத்தாடைகள் அணிந்து, முடிசூட்டி

இலங்கைக்கு அரசனாக்கினான். இலங்கையின் அரசனாக முடிசூட்டிக் கொண்ட விபீஷணன், இலக்குவனை வணங்குகிறான். பிறகு இராமபிரான் இருக்குமிடம் சென்று அவரை வணங்கி ஆசி பெறுகிறான். இராமன் விபிஷணனைத் தழுவிக் கொண்டு ராஜ நீதிகள் பலவற்றை எடுத்துச் சொல் கிறார்.

## அனுமர் சீதையினை அழைத்து வருதல்

போர் முடிந்ததும் தேவலோகமே கண்ணீர் சொரிய அனுமார் சீதையினை அழைத்துவந்து இராமரிடம் சேர்க்கின்றார். அவள் கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகியோரை வணங்கி நிற்கின்றாள். இராமர் உடன் ஏற்காமல் அக்கினி வளர்த்து அதில் நடக்கவைத்து பின்னர்தான் ஏற்றுக்கொண்டார்.

## நாட்டாரியல் நம்பிக்கைகள்

தமிழர்களுடைய பண்பாட்டு அடுக்கமைப்பில் வாழ்வியல் நம்பிக்கையுடன் இணைந்தாப்போல் பல செயற்பாடுகள் காட்டப்படுகின்றன. இவற்றினை இவ்அம்மானை பாடிய புலவர் பல்லி பலன் சொல்லல், மண்டோதரி கனவு காணுதல், இடக்கண் துடித்தல் என்ற கருத்தியல் முக்கிய மான செய்தியினைத் தருவதாக காட்டுகின்றார். இந்த நம்பிக்கைக் இன்றும் மக்கள் நம்பிக்கையில் மேலெழுந்த வண்ணமே உள்ளன. பல்லி சொல் லிய விடயத்தினை சீதை சொல்வதாகக் காட்டுகின்றார் புலவர். சீதைக்கு விளங்கிவிட்டது பல்லி சொன்ன பலன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதே.

"பருதி எதிர்ப்பல்லி பலபலெனச் சொல்லுகையால்
நிருதர் பதியளியப் போகுதென்றாள் நேரிளையும்
இலங்கை முழுதும் எரிகொளுத்தப் போகுதென்றாள்
தலங்களுள்ள அரக்கர் தலையுருளப் போகுதென்றாள்
அல்லைப் பெருங்குழலாள் அந்தத்திருச்சடையும்
நல்ல விடயம் நமக்கு வரப் போகு தென்றாள்
இன்னாளிலேதான் இராமச்சந்திரன் தூதன்
பொன்னாளி கொண்டு வரப் போகுதென்றாள் பொற்கொடியும்"

## மண்டோதரி கனாக் காணுதல்

இங்கு மண்டோதரி கண்ட கனவு பலித்தாக காட்டுகின்றார். அந்தக் கனவின் பலத்தால் இலங்கை அழிந்து, இராவணன் மாண்டமையும் குறிப்பிடத்தக்கதே.

"அவ்வளவிலங்கே அந்த அரக்கனவன் தேவி
மைவேல்விளியாள் வண்டோதரி என்ன சொல்வாள்

கொற்றவளே இன்று கொடியகனாக்கண்டேன்
கோலமதினிவங்கை கொற்றவனே என்னுடைய
தாலி சிதறித் தரையில் விழக் கண்டேன்
என்னிலமெண்ணும் இலங்கையிராவணனே உன்
பொன்னின் முடிபத்தும் பொறிந்து விளக்கண்டேனே
அம்புவியோரெண்ணும் அரக்கர் குலத்தரசே உன்
தம்பிமார் பட்டுத் தரையில் விளக்கண்டேனே
அந்தரத்தோர் மெய்க்க அச்சமத்தனாயிருந்த
இந்திரசெயிற்றும் இறந்து விடக் கண்டேனே
தலங்கள் முமுது மெண்ணும் தார்வேந்தே உன்னுடைய
இலங்கை முமுதும் எரிகொளுத்தக் கண்டேனே
மாறாத மன்னா மணவாளா உன்னுடைய
வீறானவாசல் வெளியாகக் கண்டேனே
செல்வப் புகளரசே தென்னிலங்கை மன்னவனே
ஏற்றமுள்ள வாழ்வும் இழந்து விடக்கண்டேனே
முகிலே நீராக முழங்கும் நகரி எல்லாம்
பகலில் நரி ஓடிப்பாள் கிடக்கக் கண்டேனே
அந்த இலங்கை அரக்கனவன் தேவி
கொங்கை தனத்தாள் கொடிய கனாக் கண்டேனே"

## இடக்கண் துடித்தல்

திருச்சடை கனாக் காட்சியினைக் கூறியதும் சீதைக்கு இடக்கண் துடித்திருக்கின்றது. இடக்கண் பெணகளுக்குத்; துடித்தால் நல்லவிடயம் நடக்கப்போவது என்று கூறுகின்ற மரபும் இன்றுவரையும் உண்டு.

"கொந்தார் குழலார் திருச்சடையைத் தானளைத்து
இன்று திருவாவளிவர இடக்கண் துடிக்குதென்றாள்"

## மட்டக்களப்புத் தமிழகத்தில் இராமாயணம்

மட்டக்களப்புப் பிரதேசத்தில் மகாபாரத, இராமாயணச் செல்வாக்கு பல இடங்களில் பயிலப்பட்டு அல்லது வணங்கப்பட்டு வருகின்றன. அதற்குச் சான்றாக இங்கு எழுந்த இலக்கியங்களை கொள்ளமுடிகின்றது. அதாவது வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் பல இந்த இரண்டு காவியங்களின் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டே எழுந்திருப்பது சிறந்த எடுத்துக்காட்டாகும். மகாபாரதக் கதை இன்றும் மக்கள் மத்தியிலே விஸ்ணு ஆலயங்கள் ஊடாகப் பயிலப்பட்டு வருகின்றது. விஷ்ணுவுக்கு, துரோபதைக்கு என்று ஆலயங்கள் இருப்பதும், அருச்சுணர் தவநிலையில் ஏறுவதும், அருச்சுணன் தவசி என்றும் பல செயற்பாடுகள் பயில்நிலையில்

உள்ளன. அவ்வாறாயின் மகாபாரதக்கதையின் செல்நெறி மக்கள் மத்தியில் பயிலப்பட்டிருப்பது போன்று அன்று இராமாயணமும் பயில் நிலையில் இருந்திருக்கின்றது. ஆனால் இலங்கையில் இராமாயணச் செல்வாக்கு பெரிதாகப் பயிலப்படவில்லை. அதாவது இராவணனுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் இராமனுக்குக் கொடுப்பதில்லை. இராவணனுக்குச் சிலை எடுத்தல், அவனுக்கு கோயில் அமைத்தல் என்ற நிலையில் இராமரையோ, சீதையினையோ வணங்குவது குறைவாகவே உள்ளது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் இவ்வணக்கமுறை இல்லை என்றே கூறவேண்டியுள்ளது. அதே நேரம் அனுமரை வழிபடுகின்ற நிலை இன்று அதிகரித்து வருகின்றது. ஆலயங்களில் சிலை வணக்கமும் வீடுகளில் படங்களை வைத்து வணங்குகின்ற நிலையும் இன்று அதிகரித்துள்ளது. ஒரு காலத்தில் இந்த அம்மானை ஆலயங்களில் பயிலப்பட்டிருக்கின்றது. ஆனால் இன்று அவை பயிலப்படுவதில்லை. இவ்வாறு இராவணாதியர்களுக்கான செல்வாக்கு சமூகநிலையில் மேம்பட்டு நிற்பதற்கு, அவர்கள் தமிழர்கள் என்பதோடு இலங்கையினை ஆண்ட முதல்வர்கள் என்ற கருத்தியல் வலுப்பட்டு வருகின்றமையே காரணமாக அமைகின்றது. ஆரியர்களால் அவர்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டிருக்கலாம் அல்லது தமிழர்கள்மீது வீண்பழி சுமத்துவதற்கு தாங்கள் இறைவனின் அவதாரம் என்று அடையாளம் காட்டிக்கொண்டு அவர்களுடைய காரியத்தை நிறைவேற்றி மக்களை நம்பச் செய்திருக்கலாம் என்ற ஐயப்பாடு இன்றும் தமிழ் மக்கள் மனங்களில் நீங்காத நினைவுகளாய் உள்ளன.

## ஆய்வாளர்களுக்கு

மட்டக்களப்புத் தமிழகத்தில் அம்மானைகள் பல எழுந்துள்ளன. அவற்றுள் கஞ்சன் அம்மானை, பாரத அம்மானை என்பன பதிப்பிக்கப் பட்டுள்ளது. தற்போது இராமர் அம்மானையினையும் வள்ளியம்மன் அம்மானையினையும் பதிப்பிக்கின்றேன். இந்த அம்மானைகள் தமிழ் கூறும் நல்லுலகிலே இலங்கையில் மட்டக்களப்புத் தமிழகத்தில்தான் எழுந்திருக்கின்றமையினையிட்டுப் பெருமை கொள்வதற்கு அப்பால் இதன் காலத்தினை அறிய வேண்டிய அவசியம் எமக்கு இருக்கின்றது. அதற்கான முயற்சிகளை ஆய்வுலகம் இன்னமும் முன்கொண்டு சென்றதாகத் தெரிய வில்லை. குறிப்பாக மட்டக்களப்புத் தமிழகத்தில் அறியப்படாத இலக்கியங்கள் ஏட்டில் உள்ளன அவற்றினைக் கண்டுபிடித்து பதிப்பிக்கவேண்டிய தேவை நமக்குரியது. வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் நூற்றுக்கு மேல் இருக்கின்றன. அவை அனைத்தும் பதிப்பிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. இன்னும் பல இலக்கியங்கள் எமக்குத் தெரியாமல் இருப்பதனால் அவற்றினையும் தேடிப்பார்க்கவேண்டிய தேவை அனைவருக்கும் உண்டு.

இந்த இராமர் அம்மானையினை ஏட்டிலே உள்ளதுபோல் சொற்களையோ கருத்துக்களையோ மாற்றம் செய்யாமல் அப்படியே தருகின்றேன். காரணம் அறிவுப் பொருளாதாரச் சிந்தனையின் விரிவும் விபரிப்பும் காலத்தின் நிலைகருதி பல்வேறு சிந்தனைக் கிளறலை ஏற்படுத்தி வருகின்றன. ஏட்டில் உள்ளதுபோல் இருந்தால் எதிர்காலத்தில் ஆய்வினைச் செய்கின்ற ஆய்வாளன் இந்த இலக்கியத்தின் சமூக பண்பாட்டுத்தளத்தினை ஆராய்வதற்கு தடங்கல்கள் இருப்பதற்கு வாய்ப்பு இருக்காது. மாறாக தற்கால மொழியமைப்புக்கு ஏற்றாப்போல் எழுத்துக்களையோ, சொற்களையோ மாற்றம் செய்தால் ஆய்வாளன் அதனை முன்கொண்டு செல்வதற்குப் பல சிரமங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனாலும், ஏட்டில் 'ழ' கரம் பயன் படுத்தப்படுவதில்லை. அந்த எழுத்தினையும் 'ர்' என்ற எழுத்தும் சொற்களுடன் சேர்ந்து இடையில் வரும் பொழுது வருவதில்லை. அதனையும் இனங்கண்டு திருத்தியுள்ளேன். உதாரணமாக பார்த்தான் என்பது பாத்தான் என்றுதான் இருக்கும். இவ்வாறான சொற்களை நீங்கள் அவதானித்துப் பார்க்கலாம். அத்துடன் சில பேச்சுத் தமிழுக்கான எழுத்துத் தமிழினை பின்னிணைப்பில் காட்டியுள்ளேன்.

இறுதியாக இந்த இராமர் அம்மானையானது மட்டக்களப்புத் தமிழகத்திலே எழுந்துள்ளது. இதனைப்பாடிய புலவரின் பெயர் அறியப்பட வில்லை. இங்கு எழுந்த இலக்கியங்கள் யாவும் புலவர்களின் பெயர்கள் இல் லாமலே இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. அதற்குக் காரணங்கள் பல. அவை ஆய்வின் அடிப்படையில் எதிர்காலத்தில் முன்வைக்கப்படும். பொதுவாக இராமர் அம்மானை சிற்சில மாறுதல்களுடன் பொதுமக்களுக்குப் பழக்கமான மொழியில் எழுதப்பட்டு கதை சுவாரகசியமாக முன்கொண்டு முடிக்கப்பட்டிருக்கின்றமை தெளிவாகின்றது.

இந்த அம்மானை ஏட்டினைத் தந்துதவிய முனைக்காட்டுக் கிராமத்தி னைச் சேர்ந்த இறைபதமடைந்த இளையதம்பி - சின்னையா எனபவருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் குறிப்பாக என்றும் அன்பிற்கு பாத்திராக அமையும் எனது மாணவன் சபேஷ்கரன் என்பவருக்கும், இதற்கு அணிந்துரை எழுதிச் சிறப்பிக்கும் மதிப்புக்குரிய பேராசிரியர் பாஞ். இராம லிங்கம் அவர்களுக்கும் இதனைப் பதிப்பித்து வெளியிடும் தமிழ்ப் புதுவை நிறுவகத்தாருக்கும் வெளியீட்டுக்கு என்றும் துணையாக இருக்கும் துணைவியர் மற்றும் புதல்வர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

முருகு தயாநிதி

0094779028965
muruguthayanithy@gmail.com

## சமர்ப்பணம்

இளையதம்பி - சின்னையா என்பவருக்கு இவ்அம்மானை சமர்ப்பணமாகின்றது

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அணிந்துரை | 3 |
| 2. | பதிப்பாய்வு | 5 |
| 3. | இராமர் அம்மானை | 40 |
| 4. | பின்னிணைப்பு | 154 |

## காப்பு

நாடிய பொருளும் கூடி ஞானமும் புகழுமுண்டாம்
வீடிய வெளியதாகும் வேதியக் கமலம் நோக்கும்
நீடிய அரக்கர்சேனை நீறுபட்டளியவாகை
சூடிய நிலையிராமன் றோள் வலி கூறுவோர்க்கே

அத்தன் திருமகனே ஆனை முக வேதியனே
சத்திக் கணபதியே தையல் நல்லாள் புத்திரனே
சித்த மகிழ்ந்து திரு நாமமே உரைக்க
வித்தகனைப் பாட விளைப்பதங்காணம்மானை

சீரார் பணி மதியும் செங்கதிரோன் உள்ளளவும்
வாரீர் உலகில் மழை பொழிய மண்ணிலுள்ளோர்
பாரில் அயன் படைத்த பல்லுயிரும் வாழ்கவென்று
ஆராகும் வாழ்கவென்று அம்மானை பாடுகிறேன்

அம்மானை அம்மானை ஆடிய சீரம்மானை
யாரை இனிப்பாடி ஆடுவோம் அம்மானை
செய்யாகும் மிக்க சிறுவாகையில் வாழும்
கையானைப் போலே முகமுடைய கற்பகமே
அரிய தமிழ் தெரிந்து அம்மானை பாடுகிறேன்
கரிய முகமுடைய கற்பகமே முன் நடவாய்
எற்றிசை எண்ணும் இயல் பெரிய காட்சியிலே
அத்திகிரி நாதற்கம்மானை பாடுகிறேன்
கல்லைப் பெண்ணாக்கி விட்டகாலை இரு கைதொழுது
அல்லற் பிறப்பறவே அம்மானை பாடுகிறேன்
நற்சரவிற்பள்ளி கொள்ளும் நாராயணன் மருகன்
பச்ச மயில் ஏறிவரும் பாலகனே முன் நடவாய்
அம்பிலே கண் வளர்தாற்கம்மானை பாடுகிறேன்
தீட்டு புகழெழுதிச் செம்பொன் முடி சூட்டி
நாட்டிய தூணில் நர சிங்கங்காணம்மானை
மண்ணை அளந்தவன் காண் மாட்டிடையர் தன் மனையில்
வெண்ணை திருடி விழுங்கினர் காணம்மானை
அன்று இடைச்சிகையில் அணை கயிறு தன்னாலே
கட்டியடி பட்டுரலில் கட்டுண்டவன் காணம்மானை
கண்டால் வினவெறிந்து காலியின் பின்னே திரிந்து
அண்டாலிலையில் அமர்ந்தவன் காணம்மானை

மண்டாகும் சீர் துளசிமாலை அணிமார்பன்
குண்டால் மனை தடுத்த கோவிந்தன் காணம்மானை
சீராக வாழும் திருவரங்கத்தலே
பேராக வாழும் பெருமாள் காணம்மானை
காச்சியபால் திருடிக் கண்ணைப் பியந்தருளி
பேச்சி முலை உண்ட பெருமாள் காணம்மானை
பார்க்கும் புகழ் உடைய பத்துத் தலை படைத்த
அரக்கர் குலத்தை அறுத்தவன் காணம்மானை
அடுத்த மடுக்கரையில் யானைவந்து ஓலமிட
நடுக்கமது தீர்க்கவந்த நாரணன் காணம்மானை
நொய்யாமல் சிற்றடியை நூற்றுவரை ஓடவென்று
ஐவர் சகாயம் அறிந்தவன் காணம்மானை
வெள்ளை நோய் குஸ்டம் வியாதிகளைத் தீர்க்வல்ல
பிள்ளைவிடாய் தீர்த்த பெருமாள் காணம்மானை
வேடர் திருமலையில் வேங்கையாகி நின்றதொரு
ஆடுமயிலேறுந் தன் குமாரன் காணம்மானை
பாரெங்கும் மண் சுமந்து மாம்பனையில் பள்ளி கொள்ளும்
சீரங்க ராமன் சீராமன் காணம்மானை
பூமருவும் சோலை புடை சூழுலகாண்ட
மாவலியை வன்சிறையில் வைத்தவன் காணம்மானை
நாராயணன் பெரிய நாலுமறை தனக்கு
பேரால் பெரிய பெருமாள் காணம்மானை
அண்டமரற்காக அசுரர்ரை வேரறுத்து
சென்றுலகில் வாழும் நீ ராமன் காணம்மானை
மெய்யாய் அசுரர்களை வேரறுக்க வேணுமென்று
கையாயிரம் கலப்பை கண்டவன் காணம்மானை
அச்சம் தவிர்த்தவன் காண் அன்றொரு அவதாரத்தில்
மச்சமாய் நீரில் வளர்ந்தவன் காணம்மானை
சீரடந்த மெய்யான் சிவனார் அடிதேடி
பாரெல்லாம் தோண்டியதோர் பன்றி காணம்மானை
பொய் வந்தார் நெஞ்சில் புகழொளியாய் நில்லாமல்
மெய் வந்தார் நெஞ்சில் விளக்கொளி காணம்மானை
கைகொண்ட மாவலியைக் கைச்சிறையாக வைத்து
வைகுண்டம் வாழவந்த மாயவன் காணம்மானை
வன்னப் பசுங்குதிரை வாள் முகமாம் வையத்தே
இன்னம் பிறப்பார் இராமர் காணம்மானை
அரக்கரிலக்காக அன்று சரந்தொடுத்த

சிலக்கையுடைய இராமன் காணம்மானை
யாராக வாழும் அயோத்திப் படைநகரில்
நீராக வாழும் இராமருடைய மாயவனார்
மெத்தியவாழ்வும் மிகுத்த பெருஞ் செல்வமுமாய்
புத்திரனை வேண்டிப் போத தளன்று
வெற்றித் தெசரதனார் விசுவாமுனி முன்சென்று
குற்றம் பல செய்தோமோ கொடும் பாவம் செய்தோமோ
என்ன வினை செய்தோமோ யாக முனிக்கரசே
வந்திபல செய்தோமோ வழங்கை அளித்தோமோ
எந்தவினை செய்தோமோ யாக முனிக்கரசே
மந்திரிகள் சொல்லை மறுத்தேனோ மங்கையரை
சிந்தை கலங்கிளந் செய்தவினை பாவமுண்டோ
என்றவர் சொல்ல ஏதுரைத்தார் மாமுனியும்
தப்பாமற் சொல்லுகிறேன் தாடகையை கொண்டுமிக
இப்போது யாகம் வளர்க்கிறேன் அஞ்சாதே
புவனமதிக்கரசே போர்வேந்தே உம்முடைய
மகனைத் துணையாக வரவிடல்லாயோ
பிள்ளை எனக்குண்டாகில் பிட்டுக்கு மண்சுமந்த
வள்ளல் திரவாரன வரவிடுவேன் தப்பாது
அழகுபுயத்தரசே அஞ்சாதே குஞ்சரத்தை
எழுபது யானை படை எய்ய வல்லீர் ஆமாகில்
சித்திரமாக இராட்சியத்தை ஆழுதற்கு
புத்திரனுண்டாகப் போகுதென்றார் மாமுனியும்
என்று முனி சொல்ல இராச குலப் பெருமாள்
நன்றெனவே மன்னவனார் நாளும் முகூர்த்தமிட்டு
தீட்டு புகளான தெசரதனார் அப்போது
கோட்டிம்தனு வில்லும் கொடுங்கணையும் கொண்டு சென்று
சேனை அணிக்காட்டில் சென்று தெசரதனார்
ஆனைபடை எய்து அறுபத்தொன்பதும் விழவே
துண்டு மலற்காலில் தும்பி வரும் வளிக்கே
ஒண்டுக் கொளிவிட்மொளித்திருந்தாரம்மானை
மருவொற்ற பூங்காட்டில் மாமுனிவன் பெற்றெடுத்த
குரு புத்திரன் கையில் கமண்டலத்தைக் கொண்டு சென்று
தண்ணி முகந்தெடக்கம் தந்தி வந்த தென்று எண்ணி
எண்ணித் தெசரதனார் எய்து விட்டார் பட்டுவிழ
அந்தத்துரதி மகன் ஐயோஎன விழவே
வார்த்தை யறியாமல் மயக்கம் வருகையிலே

பார்த்துத் தெசரதனைப் பாலகனு மேதுசொல்வான்
மாதாவுந் தண்ணீர் வருமென்று தானிருப்பார்
என்னை அறியாமல் எய்தாயே ராசாவே
மன்னா இத் தண்ணீரை மாதவுக் கீயுமென்றான்
தண்ணீர் கொடுக்க முன் தான் பார்த்தங்கேதுரைப்பார்
வேற்று குரலாய் இருக்குதென்றார் வேதமுனி
போற்றுத் தெசரதனார் போதகத்தை நாடி வந்தேன்
கூரம்பு தான் தொடுத்துக் குஞ்சர மென்றெய்து விட்டேன்
பாரம்பு தான் பட்டுப் பட்டு விட்டார் என்றுரைக்க
பக்தியுள்ள பாலகனார் பட்டு விட்டார் என்றுரைக்க
புத்தி கலங்கிப் பொறி கலங்கி மாமுனியும்
இத் துயரங் கொண்டிருப்பான் என் மகனை எய்தவன்தான்
புத்திர சோகத்தால் போவான் எனமொழிந்தார்
மூவர்களும் எண்ணரிய முப்பத்து முக்கோடி
தேவர்களும் சூரியரும் தெய்வேந்திரனாரும்
கெங்கை இளம்பிறையும் கெருமனுடன் யாவும்
மங்கையும் மானும் மளுவுடனே வெள்ளெருக்கும்
வேங்கையும் வாரணத்தின் மெய்த்தோலும் தான் பூண்டு
அங்கையிலே ஓடேந்தி அரனே அபயமென்றார்
சித்தனே எங்கள் சிவனே அபய மென்றார்
மாவேறு செங்கை மளுவேந்தும் மன்னவனே
கோவேறிவாழும் சிவனே அபய மென்றார்
அபய மென்ற சத்தம் அரனாரது கேட்டு
தவமுனியை நோக்கித் தலை வருத்தி இட்டபடி
பச்சை முகில் மேனியனார் பாற்கடலில் பள்ளி கொள்வார்
அச்சமறுப்பார் அவருக்கே சொல்லுமென்றார்.
தேவரெல்லாம் அசுரரைத் தெண்டனிட்டுக் கைதொழுது
மாய வரை வானவர்கள் வந்து கண்டார் அம்மானை
வைகுண்ட நாகம் படுத்துறங்கப் பள்ளி கொள்ளும்
வைகுண்டநாதர் முன்னே வந்து அபய மிட்டார்
அரக்கர் உவத்தியம் ஆற்ற முடியாது என்றார்
சேர்க்கரிய பச்சைத் திருத்துழாய் மாலையுடன் பாற்கடலில்
பள்ளி கொள்ளும் பங்கயத்தோன் கண் மலர்ந்து
செஞ்சோற் பெருமாள் திருக்கையமர்த்தி அருளி
அஞ்சாதே என்று அன்பாய் அருகழைத்து
கற்றவரும் நோற்றவரும் கருத்துள் மனம் வைத்தவரும்
மற்றவரும் நம்மை மனதில் நினைப்பவரும்

இப்புவியில் வாழும் எல்லா உயிர்களுக்கும்
தப்பாமற் கேட்ட வரம் கொடுப்போமே தார் வேந்தே
எப்போதும் போலே இருந்தாரை ஆளாமல்
வல்லவர்கள் நல்ல நல்ல வரமிடக்கால் மாய்வார்கள்
செல்லாத நாட்டைச் செலுத்தி அரசனாமவ்
சொல்லாது சொல்லித் தடித்துத் திரிவானம்
பொங்கரவ மேற்றுயிலும் புண்டரீகக் கண்ணனவன்
அச்சமறுப்பான் அவனருகே செல்லுமென்றார்
தேவரெல்லாம் ஈசுரரைத்தெண்டமிட்டுக் கைதொழுது
கொட்டி தமர் முழுதும் குங்குமத்தாலே பரப்பி
நாட்டித்திசை தோறும் நல்ல முத்து மாணிக்கம்
இட்டதெசரதனார் பத்திரியாள் வளர்தார்
நற்கனகக் குண்டலத்தில் நல்லதொரு வேதியனார்
தெற்பைத் துயிலுடனே சீராக நாலுபிண்டம்
பொற்கலத்தில் விட்டுப் புறப்பட்டார் அம்மானை
கண்டு தெசரதனார் கண்களிக்கத் தெண்டனிட்டு
பிண்டந்தனை வாங்கிப் பெண்ணனங்கின் கை கொடுத்தார்
கந்தநறுங்குழலார் கௌதலையாள்தான் விழுங்க
வந்து அவதரித்தார் வயிரமணியார் வயிற்றில்
முத்து நல்ல ஞானம் முழுதும் நல்ல பாக்கியமும்
பெற்ற பெருமாள் பிறந்தனர் காணம்மானை
ஆயிரம் ஆதித்தன் ஒளிபோல் அழகுடனே
மாயவனார் வந்து பிறந்தனர் காணம்மானை
கார் செறியும் பூங்கூந்தல் கேகேகி கன்னியற்கு
பாரென வென்று பாரதாழ்வார் தான்பிறந்தார்
செவ்விளநீர் கொங்கை சிமித்திரையாள் தேன்மொழிக்கு
எவ்வுலகுமென்னும் இலட்சுமணன் தான் பிறந்தார்
சித்திரமாக இராட்சியத்தை ஆழுதற்கு
சத்துருக்களைச் செபிக்கும் சத்துரக்கன் தான் பிறந்தார்
காலுக்குப் பொற்சதங்கை கைக்கு வெள்ளிக் காப்புமிட்டு
நீலத்தால் மை எழுதி நெற்றியிலே நாமமிட்டு
மின்னும் கனக மேலான கிங்கிணியும்
பொன்னின் மணி உள்ளதெல்லாம் பூட்டி அலங்கரித்த
மாணிக்கத் தொட்டிலிலே வைத்து மன மகிழ்ந்து
தாயார் துளசிமணித் தாமரைப் பூச்சாணை இட்டு
வாயார வாழ்த்தி வளர்த்தனர் காணம்மானை
தொட்டிலுக்குள் இருந்து துள்ளி விளையாடினர் காண்

மற்றவரும் காணா வழக்குடைய மன்னவனார்
எற்றிசையும் போற்ற இருந்தனர் காணம்மானை
சிற்றடியும் எண்ணும் சீருடனே பொற்சதங்கை
குற்றடியுமிட்டு நடந்தனர் காணம்மானை
தேடும் மறையோரும் சிவனுமுள்ள தேவர்களும்
நாடு மகிழ நடை கற்றனர் காணம்மானை
தொட்டார் மிதியடியும் சுண்டுவில்லும் கைப்பிடித்து
இட்டார் விரல் நிறைய இரத்தினத்தால் மோதிரத்தை
கட்டினார் தொப்பாரும் காதில் கடுக்கனிட்டார்
பட்டினால் கச்சைகட்டிப் பச்சை நிறம் படைத்தார்
முன்பு சுருதி முனி இட்டதொரு சாபத்தால்
பின்பு தெசரதனார் பெற்ற பெருமாள் காண்
மாறு கொண்டார் வாணானை வாங்கவந்தமாய வன்காண்
ஆறிரண்டாம் வயதில் அம்பு வில்லும் கைப்பிடித்து
ஏழிரண்டு பேருலகு மெண்ணும் சிறிராமனென்றும்
ஆளியும் சங்கும் தரித்தனர் காணம்மானை
கோடையொடு சரிகை சுழற்றும்பெருவாளும்
பட்டயமும் நல்பருத்த படைத்தலமும்
இட்டதனு நாலும் இவர் படித்தாரம்மானை
மின்னும் முகில் மேனியரும் மெய்ப்புடைய தம்பியரும்
மண்ணு கலையும் படைக்கலமும் தான் படித்தார்
குண்டுதனை எடுத்த கொற்றவரும் தம்பியரும்
சென்று தெசரதனார் திருவடியையும் தெண்டனிட்டு
இருசி வளர்க்கும் யாகத்தைத் தாடகை தான்
வருணன் பொழிந்தாப்போல் வந்து யாகம் தானழித்தாள்
கண்டு கலங்கிக் கருணை விசுவாமுனியும்
தென்றிசைசூழ் வையகத்தே தெசரதனை வந்து கண்டார்
என்நாயகமே யாகம் நிறை வேற்றுதற்கு
மன்னா என் புத்திரனை மகனை வரக்காட்டுமென்றார்
சென்றுபோர்வெல்லச் சிறுவனல்லோமாமுனியே
என்றவர் தான் சொல்ல இராச குலப்பெருமாள்
நன்றியுடன் நாங்கள் சென்று நற்றுணையாய் மாமுனிக்கு
மேகமொற்ற மேனியரே வேதமுனிதன்னுடனே
யாகக்கரையில் நடவுமென்றார் அம்மானை
அப்போ பெருமாள் ஐயர் அடிதொழுது
செப்பமுடனே சிலை எடுத்து நானேற்றி
மாற்றவரை வெல்லவென்று மனதில் அவர் நினைந்து

வேற்றுருவம் கொண்டு விட்டுணும் தம்பியரும்
எதிரிபடார் தங்களையும் எமலோக மேற்றிவிட்டார்
பதினெட்டு ஆயுதமும் பண்பாகத்தானெடுத்து
ஏற்றும் சிலையோடே இராமபாணம் எடுத்து
தோற்றும் பெருமாள் துணைபோனார் மாமுனிக்கு
யாகக் கரையில் எழுந்தருளி வந்த பின்பு
இருசி முனிவரையும் எம்பெருமாள் தம்பியையும்
கருதி அரக்கிவரக்கண்டு தவமாமுனியும்
அண்டம் பதினாலும் அட்டதிக்கும் நின்றதிர
வண்டார் குழலாள் வருகிறாள் மாமலை போல்
கண்டந்தத் தாடகைதான் கருமேகம் போலெழுந்தாள்
கருதி அரக்கி வரக்கண்டு தவமாமுனியும்
பெருமாளிடம் காட்டிப் பின்னும் முன்னும் ஓடலுற்றார்
நெஞ்சிருக்கும் பூங்குழலாள் நெட்டெனவே கிட்டவந்து
அச்சிறுக் கண்ணாரோடவர் பிறகே ஓடியவன்
எம்பெருமான் திரும்பி இவள் ஆரெனக் கேட்டார்
மின்னுமுகில் மேனியற்கு வேதமுனி என்ன சொல்வார்
ஏற்றமுடைய இராவணணார் தங்கை இவள்
குற்றம் செய்த தாடகையைக் கூசாமல் சொல்லுமென்றார்
பண்போர் படையுமல்ல பாருலகில் முந்த முந்தப்
பெண்போர் பொருவார்களோ பேர் பெரிய மாமுனியே
கெட்டோம் இத்தாடகையைக் கேவலமாய் எண்ணுதே
விட்டீராய் எம்மை இருவரையும் கொன்றிடுவாள்
ஞானமுனி சொற்கேட்டு நாராயணர் நடந்து
தோள் புரளும் அம்பைத் தொடுத்து மிக வாங்கி
சென்று நின்று அப்போ இராமபாணம் தொடுத்தார்
ஒன்றிரண்டு மூன்று நாலைந்து துண்டாய் விழுந்தாள்
ஏற்றும் பெருமாள் யாகம் நிறைவேற்றிடவே
போற்றும் திருமாலும் போக மன மகிழ்ந்தார்
மண்ணை உளுதுவரும் மாணிக்கப் பெட்டியிலே
நற்கனக வில்லுடனே நல்லதொரு லெட்சுமியார்
பொற்கலப்பை நாவில் பிறந்தனர் காணம்மானை
செந்தாமரை போலச் சிற்றடியும் கண்டதன்பின்
பொன்னின் புறங்காலும் பொற்கலத்தில் ஓரடியும்
கன்னிவரால் போல கனைக்காலும் காரிகைக்கு
வன்னத்தொடையழகு வாளைக்குருத்துப்போல்
வாய்த்த துயிலுடையும் வஞ்சி இடை அழகும்

அன்னநடையாற்கு ஆலிலை போலே வயிறும்
இன்னமின்னம் இலட்சுமியார் பேரழகை
பச்சை நிறமுடைய பயத்தங்காய் போல் விரலும்
கச்சுப்பெருமுலையும் கமலத் திருமுகமும்
சங்கு திருக்கழுத்தும் தாழ்ந்த குலைத்தோடழகும்
சங்கனிவாய் போலழிதளும் சேர்ந்தமுத்துப் பல்லழகும்
வெள்ளிவட்டி நாவற் பவளம் போல் விளி இரண்டும்
தெள்ளிவிட்ட சொல்லழகும் தேய்பிறைபோல் நெற்றியுமாம்
சிந்தூரமிட்ட பொட்டும் சிராய்முகத் தழகும்
சந்திர வட்டம் போல் தையல் திருமுகமும்
காமன் கழுத்துக் கருப்புச் சிலை போபேலும்
பூமன் எழுதரிய புருவ நெற்றியின் அழகும்
மழலைக் குழல் முடியும் மாணிக்கச் சுட்டியுடன்
சோலைக் கிளிமொழிக்குச் சோரிமுத்தத் தாவடமும்
சேலையுடைய அழகும் தினகரனார் தன் மகளார்
தண்ணீருக்குள்ளே தளைத்தெழுந்த தாமரை போல்
பேரழகி வந்து பிறந்தனர் காணம்மானை
சந்தானத்திற் பெரிய சனத்தாருடன் பிறந்து
இந்தச் சிலையை எடுத்தவற்குப் பெண் கொடுப்போம்
என்று தினகரனார் ஏழுலகில் உள்ளவற்கு
நன்றி உடன் எழுதி நாலு திக்கும் ஓலை விட்டார்
கொம்பனைய கொங்கையற்குக் கோலக் கலியாணமென்று
அம்புவியோரெண்ணும் அயோத்தி நகர் ஓலைவிட்டார்
செம்பொன்னின் ஓலை தினகரனார் போகவிட்டார்
வந்தோலை வாசகத்தை மன்னன் தெசரதனார்
கந்த மருந்தோளான் கலியாணம் தான் கேட்டு
வந்தவற்குச் சொல்லி வளங்கி மன மகிழ்ந்து
வஞ்சியர்கள் கோடி மனிதர் பல கோடி
குஞ்சரங்கள் கோடி குதிரை பலகோடி
வெள்ளிக்குடை பிடிக்க வெண்சாமரை வீச
தெள்ளுதமிழ் தெரிந்து செந்தமிழோர் பாடி வர
சங்குமுழங்கத் தவில் முரசுதான் முழங்க
தோற்று மனுக்கோடி கெருடக்கொடி சூழ்ந்து வர
பாரேளும் மென்னும் பரதாழ்வார் தம்பியரும்
மானிலத்திலுள்ள மன்னவர்கள் தான் சூழ
மந்தாரம் பூகம் மலற்காட்சி தான் வீச
செந்தாமரையார்க்குத் திருக்கலியாணமென்று

சொல்லிப்பெருமாள் சீராமர்க் கலிக்கமிட்டு
வில்லை நாண் பூட்டி மிதுலை தனை நோக்கி
மல்லைப் பெருந்தோளான் மாயன் வரும் வழிக்கே
அல்லைப் பெருங்குழலாள் அகலி எழுந்திருந்து
அன்று பெருமாள் அயோத்தி தளத்துடனே
சென்று பெருமாள் தினகரனார் பட்டணத்தே
சாந்து புனுகு பன்னீர் சந்தணத்தாலே மெழுகி
சேர்ந்த மலர்ப் பரப்பிச் சித்திரமாய் கோலமிட்டு
பட்டணமெங்கும் பலமுத்தின் தோரணமும்
கட்டி அலங்கரித்துக் கனகமணி புனைந்து
சந்தணக்கால் நாட்டித் தாமரைப்பூப் பந்திலிட்டு
அந்துமுள்ள சந்தணத்தால் அரசாணி தானுமிட்டு
பட்டுமேற் கட்டி கட்டிப் பளிங்கால் நிலமெழுகி
முட்ட மனி மாளிகையில் மூவகையும் தான் முளங்க
ஓது மறைவேதியர்கள் ஓமம் தனை வளர்க்க
வேத ஒலி முழங்க விண்ணோர் கடங்கறுக்க
பொன்னின் சிலை எடுக்கப் போர் வேந்ததான் சூழ
மன்னர் பெருமாள் மனமகிழ்ந்து வந்து நின்று
அங்கம் பதித்த அரசாணி முன்பாக
கொங்கையிலட்சுமிக்குக் குங்குமத்தால் பொட்டுமிட்டு
மெய் நிறைந்த முத்தும் விரல் நிறைந்த மோதிரமும்
கை நிறைய இட்டுக் கமலத் திருமகளார்
மாணிக்கமிட்ட வயிர விளங்கரிய
வேதச் சடங்கறுக்க விண்ணோர்கள் தற்சூழ
மங்கயர்கள் சூழ வயிர விளக்கெரிய
சங்குமுழங்கச் சமுத்திரம் ஏழும்முழங்க
தினகரனார் பெற்றெடுத்த சீதை லெட்சுமியார்
கனகமுலையழகும் கமலத் திருமுகமும்
வண்டுறையும் பூங்கூந்தல் வஞ்சி இடையழகும்
நின்றாரிராசர் நிறை ஒற்ற பந்தலிலே
கண்டு சிலையை வளைத்தெடுத்தும் கையாலே
வண்டாரும் சீர் துளசி மாலையணி மாயவனார்
தேனூர் மொழியார் சிறு விரலைக் கைப்பிடித்து
மானார் மொழியாற்கு மங்கிலியம் தான் தரித்து
தோழியும் தோழனும் போல் சுற்றி மிக வாழ்ந்திருப்பீர்
ஆளியும் சங்கும் அடிமையும் பாற்பசுவும்
மேதினியோர் எண்ணும் மிதுலை வளர்நாடும்

சீதனங்கள் தான் கொடுத்துத் தினகரனார் நீர் வார்த்தார்
கொத்து முத்து மாலையிட்டுக் கொண்டு வருகையிலே
பாரச்சிலையுடனே பரசுராமன் வந்தெதிர்த்தான்
காரைப்பெருந்தோளான் காயாம்பூ மேனியனார்
ஓங்குபுகழ் பரசுராமன் உற்ற சிலையுடனெ
வாங்கி அயோற்றியிலே வந்து புக்காரம்மானை
அந்த அயோற்றியிலெ அரசர்களும் தான் கூடி
சீரான மார்பன் திருமனது தான் குளிர
பாராள மாயவற்குப் பட்டங் கட்டவேணுமென்று
மற்றுமுள்ள மன்ன வரும் மந்திரிகளும் சூழ
கற்றைக் குழலாள் கௌதலையாள் கைகேகி
சிற்றிடையாளந்தச் சிமித்திரையாள் தென்மொழியும்
பக்தியுடனே பரதனை வாவென்றழைத்து
அத்திகிரிநாதற் கபிஷேகம் சூட்டவென்று
எத்திசையும் சென்றுங்கள் மாமமாரெல்லோர்க்கும்
பக்தியுடன் சொல்லுமென்று போகவிட்டாரம்மானை
போகவிட்டதின் பிறகே பொற்கொடியாள் கூனிவந்து
பாகனைய மென்மொழியாள் பைந்தொடியும் என்ன சொல்வாள்
நாராயணனை இந்த நாட்டுக்கரசாக வைத்து
நேராக எந்தன் நிலை குலையப் போகுதென்றாள்
மட்டவிழ்பூங்கோதையரே மாதேகைசியரே
எட்டாதுன் புத்திரற்கு உரைக்கக் கேறென்றுரைத்தாள்
புண்ணாகச் சொன்னாய் புவிபமுது நீ உரைத்தாய்
நன்றாக மாயவனார் நாடாழ வேணுமென்று
கொள்ளை நாளாக வந்து கோடி தவம் பண்ணியபின்
வள்ளலாய் எங்களுக்கு வள்ளல் முளைக்கவந்து
பிள்ளைவிடாய் தீர்த்த பெருமாள் காணெங்களுக்கு
ஆற்று கைக்குமெந்தன் அபிஷேகம் சூட்டுவதற்கு
மாற்றுகைக்கு மெந்தன் மனமமுதே மாபாவி
கூனி உன் வார்த்தை குலை பாதபங்காணும்
விடியே நீ போடி மிகுவார்த்தை பேசாதே
கைகேகி சொல்லக் கன்னி நல்லாள் ஓடி வந்து
துய்ய மலர்க்குழலே தோகையரே நான் சொல்லக்கேள்
சக்களத்திப் பிள்ளை தகுமோடி வையகத்தே
மக்களிருக்க வளர்ப்பார்களோ மாற்றானை
கண் சிவந்த நீலி கடும் பாவி நெட்டூரி
எண்ணுந் தெசரதனை ஏதென்று கேட்பேன் நான்

தேரோடி வந்த அன்று செங்கை கொடுத்த வரம்
தார் மொய்க்குந் தோளானே தா என்று கேளுமென்றாள்
கொந்தலரும் பூங்குழலாள் கூனி சொல்லைத் தான்கேட்டு
வந்தவள் தானும் மனந்திரும்பிக் கைகேகி
காரார் குழலாள் கணவனைப் போய்க் கைதொழுது
பெத்த மனம் நடுங்கி மேல் மூச்சுத் தானெறிந்து
சித்தம் கலங்கி விழுந்தார் தெசரதனார்
அங்கம் அழியுதென்று அம்மா வந்து தான் புலம்ப
மங்கையவள் கைகேகி மாயவர்க் கங்கேதுரைப்பாள்
வையம் பதினாலு வருஷம் அளவுங்கள்
அய்யர் வன வாந்திரமுறையச் சொன்னார்காண்
வனவாந்திரமுறைய அருளினர் காணம்மானை
சென்றந்த தாயாரைத் தெண்டனிட்டு கைதொழுது
அண்டு பெருமாள் வனவாந்திரமுறைய
கொம்பனைய லெட்சுமியும் கொற்றவரும் தம்பியரும்
மங்கையுடன் காடுறைய வந்தனர் காணம்மானை
அங்கம் பதித்தார் வனவாந்திரவரக்கே
கெங்கைக் கரையில் குகன் கண்டாரம்மானை
கண்டு வணங்கி அவன் கண்ணனையும் தம்பியையும்
சென்று நின்று நாரணனைச் சீர்பாதம் தான் நோக்கி
ஆலிலை மேற்பள்ளி கொள்ளும் அர்ச்சுரரே அன்று கல்லை
செவி இரண்டும் கண்ணும் திருவுருவுமாக்கிவிட்ட
காலிரண்டும் நோகவந்த காரணமே தென்பெருமாள்
மைசெறியும் சோலை வளநாடு தன்னைவிட்டு
கைகேயி சொற்படிக்குக் காடுறைய வந்தோம் நாம்

## விருத்தம்

கோதை விடா தோளான் குகனை மகம் நோக்கி
பாதையடா என்னைப் பணிந்தவனு மாதவனை
அந்தநெடுங் கானம் அன்பான பூங்குழலும்
இந்த மரம் என்னாகு மென்றான்

## வேறு

அன்று கல்லைப் பெண்ணாக்கி அடிக்கமலம் சென்றேற்றி
இன்று மரமோயடாது எண்ணாகப் போகுதென்று
ஆலிலையில் பள்ளி கொண்ட அற்சுதரே அன்று கல்லை

மாவலியைச் சிதைத்த மகிடமுடி மன்னவனே
சீர்பாதங் காணச் சிறந்த வரம் பெற்றவர் போல்
ஆர்பாதமோடி அழகு பெறப் போகுதென்று
ஏற்றி அவரை இடம் பெரிய ஓரிடத்தில்
ஆற்றைக் கடக்கக் குகன் விடுத்தாராம்மானை

## விருத்தம்

அன்னை சொற்கேட்டு மாயன் அருஞ்சுனை நீரையுண்டு
மன்னவரிருவரோடும் மாதரும் துணையாய்க் கூட்டி
தென்னவன் கயிலை வேந்தன் திருப்பதம் நினைந்துகொண்டு
பொன்னகர் அயோத்திவிட்டுப் புண்ணியன் அடியைப்புக்காள்

## வேறு

போற்றும் பெருமாளும் பூவையரும் தம்பியரும்
ஆற்றைக் கடந்து அக்கரையில் சென்று பின்பு
அன்றுபெருமாள் அவனிதனில் சென்றேற
நின்று இளைய பெருமாள் இடஞ்சமைக்க
சென்று புகுந்தார் சித்திரப் பூம்மண்டபத்தே
நாடுறைத்த மாயவனார் காடுறைந்தார் எனக் கேட்டு
புத்திர சோகத்தால் தெசரதனார் பட்டாரே
சீராய் அயோற்றியிலே தெசரதனார் செத்த செய்தி
பாரோர் புகழும் பரதனுக்கு மந்திரிகள்
ஆராருங் கூடியிருந்த நாளோலை போக விட்டார்
கேட்டு முகங் கருகிக் கெட்டேனென அழுது
வாட்டமுடன் அயோற்றி வந்தனர் காணம்மானை
மயிரை விரித்தலறி மண்மேல் விழுந்தழுது
கைகேயியைக் கண்டு கழுத்தறுக்க வேணுமென்று
வெய்ய சினம் கண்டு விலக்கினாராயரையும் கொண்டு
அய்யரையும் கொண்டு எங்கள் அண்ணரையும் ஓட்டிவிட்டு
வையகத்தை ஆழ இருந்தாயோ மாபாவி
அய்யோ எனக்கு அரும்பாவி நெட்டுரி
என்னையோ பட்டங் கட்டியிருக்க நினைத்தாய் நீயும்
என்று பரதன் இவளை மிக வெறுத்து
சென்று விழுந்தார் தெசரதனார் பாதமதில்
அடித்து விழுந்து அலங்காரமாய் உடுத்து
எடுத்து அடக்கி உள்ள சடங்கறுத்தாரம்மானை
தென்னிலங்கை திண்டோளான் தெசரதனார் செத்த செய்தி

மன்னு புகழ் மந்திரிகள் வந்து நொந்தாரம்மானை
கண்ணர் கதறி அழக் கண்டவர்களும் புலம்ப
மண்ணும் மரமும் மலையும் அழுதுவே
அழுது மனம் தெறிந்து ஆற்றிலே தான் மூழ்கி
பழுதற்ற பிண்டமிட்டுத் தெற்பைப் புல்லும்கைப்பிடித்து
கற்பித்த எள்ளுமிள நீரும் கையாலிறைத்ததுவே
கற்பனைகள் சொல்லிச் சடங்கறுத்தாரம்மானை
பண்ணாரும் செந்தமிளோர் எண்ணும் பரதாழ்வார்
கண்ணீர் சொரியக் கைகேயியைக் திட்டி வைத்து
மண்ணோர் புகழும் மாயவரைக் காணுமவர்
கோட்டானை கோடி குதிரை ஒரு கோடி
நாட்டார் ஒரு கோடி நடந்து வரக் கண்டு
வந்து விட்டார் கங்கை வடகரையில் அம்மானை
இந்து வொத்த செம்முகத்தார் லெட்சுமியார் தற்சூழ
அரவக் கொடியுடனே அயந்தாரும் மன்னவனே
பரதன் எடுத்து வாறானே பாரீர் நீர்
பைந்தொடியே கேளும் படையல்ல நம்பரதன்
ஆறாத்துயரமுடன் வாறான் காணாரணங்கே
அன்புடைய அய்யரவர் மடிந்தாரெனும் செய்தி சொல்ல
பரதன் வருகிறானென்று இரந்தனர் காண்
பரதன் வருகிறதைப் பார்த்திருந்துதான் குகனும்
அன்று குகனும் அவனை வழிமறித்து
கோவிந்த நாரறிந்து குகனை வரவழைத்து
ஒன்றுக்கு மஞ்சாதே ஓடந்தணிலேற்றிவிடாய்
என்றருளிச் செய்ய இடம் பெரிய ஓடத்தில்
ஆற்றைக் கடக்கக் குகன் விடுத்தாரம்மானை
பண்ணாருஞ் செந்தமிழோர் என்னும் பரதாழ்வார்
மண்ணோர் புகழ வரும் மாயவரைக்காணுவராம்
ஆலைவயல் சூழும் அவனிமுழுதும் ஆழ்வார்
காலில் விழுந்து கதறினர் காணம்மானை
பண்ணாளுஞ் சொல்லான் பரதன் விருந்தமுது
புண்ணியரே நம்மையர் போனாரென அழுதார்
ஆனை இருந்து அரசாண்ட மண்டபத்தே
பூனை இருந்து புலம்புவரோ நாரணரே
விண்டி அழுத தம்பி கண்ணீர்தனைத் துடைத்து
மெத்த அணைத்து நம்மள் விதிவசத்தை என்ன செய்வோம்
இங்கே வருஷம் பதினாலும் சென்ற பின்பு

அங்கே வருவோம் அவ்வளவும் நீ இருந்து
துங்கமுடிசூட்டித் துய்ய உலகு தன்னில்
செங்கோல் செலுத்துமென்று திருவடி தான் கொடுத்தார்
வாங்கித் திருவடியை மாயன் முகம் நோக்கி
பூங்கமலத் தாள் பணிந்து போற்றிப் பரதாழ்வார்
பாரில் வருஷம் பதினாலும் சென்ற பின்பு
வாரீரேயாமாகில் வன்னிக் குளியருகே
நாராயனா விழுவேன் நல்ல தேசம் மீதிலே
தப்பாமல் வந்திலனால் தான்எரியீர் தம்பியரே
அப்போவிழுவோமென்றவற்கு விடை கொடுத்தார்
நின்றாரெனுமான்போல் நிறை சேனை தன்னுடனே
மீண்டான் பரதன் மிகுந்த படை தன்னுடனே
பாரோர் புகழப் பல்லக்கின் மீதேறி
ஆராரும் வாளவென்று அயோற்றி நகராழ
சென்று திருவடியைச் சிங்காசனத்தில் வைத்து
நின்று பரதன் நீதியுடன் தெண்டனிட்டு
வேகத்துடன் பரதன் வேங்கைப் புலியை எண்று
தாகத்துடன் வேட்டை ஆடினர் காணம்மானை
பன்றி புலி கரடி பாயும் கலைமானும்
கொண்டெடுத்துக் காவுடனே கூடிவருகையிலே
கண்டு கொண்டு மாயவரைக் கற்றைச் சடையுடனே
அண்டர் தொழுமுனியோ யாரோ நீர் தானுமென்று
என்ற மொழி கேட்டு ராமரருளிச் செய்தார்
வந்தோம் வனவாஷம் மாதா சொல் மாறாமல்
விந்தை நெடுவீரரென்று மெத்ததிர்ந்து கொக்கரித்து
ஓங்கி மிகத்தாண்டி உயந்துமெத்த உள் நிமிர்ந்து
கோங்கு மலை கொண்டெழுந்து கொல்ல வந்தாரம்மானை
வையமுலகளர்ந்;த மாயவனார் தம்பியரும்
எய்யச் சிலையை வளைத்தாரே லெட்சுமணர்
எட்டிப் பிடித்தாரே இராமர் இராட்சதனை
கட்டி விளவெட்டி இருகாலாலுதைக்கலுற்றார்
அப்போ விராதன் அறிவு மிகஞானமுமாய்
தப்பாமல் பாதம் சரணம் சரணமென்றான்
வையகத்தோர் மைத்துணனே விண்ணப்பங் கேட்டருளீர்
ஆயுதத்தாற் சாகான் அகத்திமுனி சொற்படிக்கு
பூமியைக் கீறிப் புதையுமென்றார் அம்மானை
அப்போ பெருமான் அவனிதனைக் கீறி

மேவிக் குழியில் விளவிட்டாரம்மானை
நின்றுமே பார்த்தால் நெறுநெறெனத் தான் மதித்த
பூண்ட விராதன் அவன் செய்த புண்ணியத்தால்
மாணிக்கப்பாதம் படவைகுண்டம் சேர்ந்தான்காண்
அவ்வனத்தை விட்டு அகன்று பெருமாளும்
செவ்வனத்தில் இந்திரரும் தேவர்களும் தானிருந்து
தண்டமிளோ ரென்னும் சங்கரனார் தம்முடனே
ஏகாந்தமாக இராட்சியத்தை ஆளுகையில்
மன்னவன் இந்திரனைக் கண்டு மறைந்துவிட்டார்
காயும் கிழங்கும் கனியும் மிகப் பெருக
ஆயன் பதினாலும் ஆண்டிருந்தாரம்மானை
தன்னந்தனிப்பெருமாள் தம்பியரைத் தானழைத்து
முன்னே ஒரு சாலை முந்தச் சமையுமென்றார்
என்ற மொழிகேட்டு இராமருளிச் செய்வார்
கொந்தலரும் பூங்குழலாள் சூர்ப்னகை தன் குமாரன்
அந்தாலின் கீழிருந்து அந்தணரைக் கொன்று மிக
வன்பாதகனாக வழி பார்த்துத் தானிருந்து
செங்கை குவித்துத் திரவடியைத் தெண்டனிட்டு
சங்கரனை நோக்கித் தவசி நின்றாரம்மானை
எட்டுத் திற்கும் எண்ணும் இளைய பெருமாளும்
அந்தரத்தில் வந்து மந்திரவாளைப்பூட்டி
சிந்தை உடல் துணியச் செங்குருதி மேற்றெறிக்க
வெட்டி இளைய பெருமாள் மிகச் சனிந்து
பட்ட துவாலை பயத்துடனே ஓடிவந்து
கண்டு பெருமாள் இருகை யமர்த்தி அருளி
அண்டர் தொழுமுனியோ ஆரோ என அறியேன்
விந்தையுடல் துணிவெட்டி வந்தேன் அண்ணாவே
அஞ்சாதே என்று அமர்த்தி அருகழைத்து

## விருத்தம்

ஓங்கிய வாளை வாங்கி உலகெலாம் குருதி கொள்ள
தாங்கிய அரக்கிமுன்னே தானது பறந்து செல்லப்
பாங்கிய பாதை காணப் பதறியே அடியை வைத்து
நீங்கிய காதல் கொண்டு நேரிளை அணுகிச் சென்றாள்

மனதினில் உடல்துணிய மறித்தவனடிக்கக் கண்டு
பெண்கொடியான வஞ்சி பேயதுபோலே நின்றாள்

கண்பொறிபோச்சே என்று கலங்கியே உடலை மாற்றி
விண்தனில் போகவென்று வெண்மகம் வாடி நின்றாள்.

வாடியே முகங்கருகி வாட்டமே எடுத்துமெத்த
ஆடியே அமையே யங்கே யமத்தியே நிறுத்தியாதி
ஓடியே வந்தங்கே ஒன்றொன்றாய் சொல்லினின்று
தேடியே செல்வமென்று தென்றிசையேறிச் சென்றாள்

### வேறு

தந்தியுடல் துணியத்தன் குமாரன் பட்ட இடத்தே
குத்திவிழுந்தழுது கூப்பிட்டாள் சூர்ப்பனகை
தன் மகனைக் கொண்ட பளிதான் வாங்கவேணுமென்று
கூற்றுவனைப் போலே கொடிய சினம்தீர
வேற்றுருவங் கொண்டு வினை செய்தாள் சூர்ப்பனகை
கோட்டு முலைச் சூர்ப்பனகை குமாரன் பழிவாங்க
வெட்டவெளியே போலிடையும் வேறுமுகத்தழகும்
கொண்டை குழலழகும் குங்குமத்தால் பொட்டுமிட்டு
சண்டை இடவேணுமென்று தன்னுருவம் வேறுகொண்டு
பச்சைத்துயிலுடையும் பாதமணிச் சிலம்பும்
கச்சுப் பெருமுலையும் கலமமுகத்தழகும்
மையுலவும் கண்ணாள் மருட்டி மிக விழித்து
தெண்டிரைசூழ் வையகத்தே இராமனை வந்து கண்டு
தெய்வகன்னிபோலே சிரித்து மிக வந்து நிற்க
அண்டர் பெருமாள் அருளி விடைகொடுத்தார்
கந்தமலற்குழலாள் காரிகையாளிங் குழலர்காண்
இந்து நுதலாள் இளையோனடி தொழப்போய்
பச்சைப்பெருமாள் பதந்தொழுது சூர்ப்பனகை
இச்சித்து நின்றாள் இளையோனைக் கண்டுமிக
அண்ணரடி தொழுது ஆரணங்கே அங்கேநில்
பெண்ணமுதே நீ எனக்குப் பெற்றெடுத்த மாதா காண்

### விருத்தம்

கண்ணே கரும்பே காரிகையே கருவே கல்விப் பசுங்கிளியே
வானோர் பொருந்தும் வளர்முலையே வார்த்தை சொல்ல நீகேளாய்
அன்னே அண்ணர் தமைவளர்க்கும் மருவேயமுதே ஆயிளையே
பெண்ணே எங்கள் மூவரையும் பெருக்க ஈன்றபேதை என்றார்

துலங்கவே வேறு கொண்டு துய்யவன் முகத்தை நோக்கி
இலங்கையும் நகரிதானும் இரவியுமதிர நின்றாள்
கலங்கவே வேறுகொண்டு காட்டியே எடுத்துக் கொண்டு
இலங்கையில் ராசன் முன்னே என்பளிதீரப்பேன் என்றாள்

வேறு

பாதாளம் ஏழும் பயப்படவே பற்கடித்து
வேதாளம் போலே சிரித்தாள் மின் வளர்ந்தாள்
மண்ணதிர விண்ணதிர மண்டிவிழுந்தழுதாள்
வண்டமரும் பூங்குழலாள் வாளரக் கண்செத்ததற்கு
எண்டிசையும் எண்ணும் இளையபெருமாளே
கொண்டு போகவேணுமென்று குறித்தெடுத்தாள் சூர்ப்பனகை

விருத்தம்

கறுத்தெழு நிறத்தினாள் கதித்தெழு கொங்கையாள்
வெறுத்தவள் குமாரனை வெட்டும் வீரனை
இறுத்தவள் புயத்தின் மேல் எடுத்தங்கேகலே
அறுத்தனன் நாசியை அங்கையில் வாளினாள்

வேறு

மாலை முகம் பார்க்க மாயவனார் கண்காட்ட
சேலையுடையழகன் கண்சீராவைத்தானுருவி
உற்றமுடன் வளர்த்த தோள்மேலுறவிருந்து
நோக்கரிய சூர்ப்பனகை மூக்கரிந்தாரம்மானை

விருத்தம்

கையது நெகிளவிட்டுக் கணக்கவே மூச்செறிந்து
மெய்யது கடுங்கிக் கொண்டு வேந்தனுக்கென்ன சொல்வேன்
மையமர்கண்ணுள் தானும் மாற்றமாயுரைக்கவென்று
அய்யகோ அய்யோ வென்று அலறினுள் ஆரணங்கு

வாரிபோற்குருதிபாய வானம்போற் பரந்து செல்ல
ஏரிவாய் மடைகள் போலே இரத்தங்கள் நாசியோட
மாற்றிக்கால் சரங்கள் தூவ மன்னன் தங்கையங்கே
நீரில்லாக்கோரை போலே நின்றனள் அரக்கி அங்கே

வேறு

விட்டாளிளையபெருமாளை மின்கொடியும்
அட்டகிரி அதிர அலறிவிழுந்தழுதாள்

கத்திக்கதறிக் கரநூலிணன் தன்னுடனே
முத்தின் குடையுடையான் சிற்றரக்கண் முன்னேபோய்
குத்தி விழுந்தழுது கூப்பிட்டாள் சூர்ப்பனகை
தங்களிலங்கை மன்னவனார் தங்கையவள்
பங்கப்படுவாளென்று படை எடுத்தாரம்மானை
ஆதிபரனுலகளந்த அச்சுதனார் தம்மெதிரே
பதினாயிரங்கோடி படை எடுத்தாரம்மானை
வட்டச்சிலையெடுத்து மாயன் எங்கும் தானாக
கட்டுப் பரியரக்கன் கண்கொள்ளாச் சேனையுடன்
பட்டுவிடப்பாளி தொகுத்துவிட்டார் அம்மானை
வட்டமுலைச் சூர்ப்பனகை வாளரக்கன் முன்னேபோய்
இலங்கை அரசாளும் இராவணனைக் கைதொழுது
அண்ணே ஒருத்தி அவள் அழகெழுத ஒண்ணாது
விண்ணோர்தொளும் தெய்வமோ ஏதேதோ நானறியேன்
மின்னி எழுமுகில்போல் வேடரிருவரையும்
கன்னி ஒருத்தியையும் கண்டெதிரே சென்றேன் நான்
தென்னிலங்கை மன்னவனே உதவி உனக்காகவென்று
அன்னநடையாள் அவளருகே சென்றேன் நான்
செப்பார் முலையாரைச் சேருவையோ என்று சொல்லி
அப்போ முகத்தை அரிந்துவிட்டான் அண்ணாவே
துய்ய மலர்க்குழலாள் சூர்ப்பனகை சொற்கேட்டு
செய்ய குலவாளரக்கன் சீறி எழுந்திருந்து
கொடிய சினத்துடனே கோவித்தெழுந்திருந்து
படியை உறமிதித்துப் பார்த்தான் பொறி பறக்க
பார்பெரிய நம்மில் பார்க்கப்பெரிய வன்காண்
ஆர் என்றெழுந்திருந்து ஆறாச்சினத்துடனே
சீரடைந்த செம்பொன் சிறுதேரின் மீதேறி
போரடைந்த மாமனைத் தான்போவென்றான் பொய்மானாய்
மானுருவங்கொள்ளுகின்ற மாரீசன் என்ன சொல்வான்
ஊளி உலகில் உலகத்திசை தோறும்
ஏழுலகுமெண்ணும் இராவணனே நீகேளாய்

## விருத்தம்

மானெனும் வடிகொள்ளில் மன்னவன் இராமன் சொல்வான்
நானினி அல்லவென்றால் நீஇனி இங்கே அல்லாய்
நானினி முன்னே சென்று யமனிடகோயில் புக்கி
சேனைக்கும் படைக்கும் முன்னே சென்றிடம்பிடிப்பேன் என்றான்

வேறு

பொற்கையுயைடவனே புகழிலங்கை மன்னவனே
ஏற்கவே நான்போய் இயமதலம் புகுந்து
மன்னா உனக்கும் மகாமேகநாதனுக்கும்
தன்னிகரிலாத தம்பிகும்ப கர்ணனுக்கும்
அதிகாயனுக்கும் அரக்கர் பெரும்படைக்கும்
பதியாக நான்போய் பார்த்து இடம்பிடிப்பேன்
மாரீசனப்போ மான் வடிவு கொள்ளலுற்றான்
மானுக்கு முன்மடங்கும் மாணிக்கம் போலழகும்
தேனுக்குற்ற செங்கமலம் போலே திருமுகமும்
வேலைப்பொருதும் கனையும் வீரக்கயல்விளியும்
காலிற்குளம் பளகும் கமலமணிக்களுத்தும்
நிகரில்லா அழகுடனே நின்றிளமான்கன்றாக
மற்பொருதும் திண்டோளான் மாரீசன் மான் வடிவாய்
மன்னன் மனம் தளண்டு மானுருவம் வேறு கொண்டு
மன்னிய செந்தாமரைமுன் வந்து விளையாடலுற்றான்
வந்து விளையாடும் மானுருவம் வேறு கொண்டு
சிந்தை மகிழ்ந்து சீதை இலட்சுமியார்
துடிக்கும் மணிநிகரான துள்ளிவரும்மானை
பிடித்துத் தரவேணும் பெருமானே என்றுரைத்தாள்
கோட்டித்த வில்லுடனே கொற்றவரே எந்தனுக்காய்
ஓடிப்பிடித்துத் தரவேணும் என்றுரைத்தாள்
என்ற மொழிகேட்டு இராமர் அருளிச் செய்வார்
தேனிருக்கும் செல்வமொழியாரே சீதையரே
மானல்ல காணவந்த மாயங்காணரணங்கே
மன்னவரே எந்தனக்கு மானிளங்கன்றதனை
எப்படியும் நீர் பிடித்துத் தரவேணுமென்றாள்காண்
வண்டாரும் சீர்துளசிமாலை மணிபார்பன்
தண்டாமசையாற்குத் தம்பியைக் காவல்வைத்து
வெள்ளைச் சிலைப்பெருமாள் மிகுந்த அம்பு தன்னுடனே
துள்ளிவரும் மானைத் துரத்தினர் காணம்மானை
மானோடத்தானோடி மாயவனார் தான்சலித்து
மையாரும் கண்சலித்து மங்கைநல்லாள் சொற்கேட்டு
எய்தார் பெருமான் இராமர் சரத்தாலே
வளையும் சிலைவாங்கி மானை அவர் எய்த பின்பு
இளைய பெருமாளென விழுந்தாராம்மானை

அந்த உரைகேட்டு அரசனிது மாயமென்ன
தம்பி செவிதனிலே கேளாமற் சாபமிட்டார்
இந்து நுதலார் இராமச்சந்திரன் தேவி
செந்தாமரையார் திருச்செவியில் உற்றது
என்றமொழிகேட்டு இலட்சுமியாள் என்ன சொல்வார்
வண்டமரும் பூங்காட்டில் வாளாயிழமான்பிறகே
சென்றபெருமாள் குரலோ தெய்வமுனி தன்குரலோ
மகாதுக்கமாக வனத்தில் எழுந்த குரல்
ஏதென்று ஆராய்ந்து அறியும் நீர் இளையவரே
ஆதாரமான குரல் அங்கே எழுந்ததுவே
மாதேவிகூற மறுவார்த்தை ஏதுசொல்வார்
விண்ணவற்கும் வானவற்கும் மிக்கவற்கும் தீங்குவந்தால்
அண்ணற்கும் தீங்கு வருமோ அவனியிலே
என்றார் இளைய பெருமாளும் லெட்சுமிக்கு
கண்டு முகங் கருகிக் கண்ணாலும் பாராமல்
போனவர்கள் சொத்துக்கள் இருந்தாற்குரியதென்று
மானிடர்கள் சொல்லும் வழக்காய் முடிந்ததுவே
கனக்கச் சினந்தெழுந்து கண்ணிரண்டும் நீர்சொரிய
வளத்தின் வழியே வந்து கண்டார் மாயவரை
கச்சணிந்த கொங்கையற்குக் காவல் என்றும் வாசலிலே
வைத்து வந்தேன் அங்கிராமல் ஏன் வந்தாய் மாபாவி
வளருங் கருங்காட்டில் மலர்மகளைத் தேடுமென்றார்
அளவறக் கோவித்தார் அவ்வளவில் நான் வந்தேன்
பண்ணற்ற செந்தமிளோன் எண்ணரிய நம்மையைய்யா
பெண்வார்த்தை கேட்டுப் பிழைகெட்டாய் தம்பியாரே

விருத்தம்

பெண்சொற்கேட்டு சம்மனையர் பெரியகானகம் அடைந்தார்
பெண்சொற்கேட்டு நீயும் இந்தப் பெண்ணார் திருவை விட்டுவந்தாய்
பெண்சொற்கேட்டுக் கனங்குடிக்குப்பெரிய விதியின் பயனென்றார்
பெண்செற்கேட்டதால் பிழையும் வந்ததவோ நமக்கு

வேறு

ஏதேது சொன்னாலும் எப்படித்தான் வைத்தாலும்
மாதர்கள் சொற்கேட்டு வருவர்களோ தம்பியரே
என்றார் பெருமாள் இலட்சுமணரைப் பார்த்து
நின்றார் இருபேரும் நினையாததெல்லாம் நினைந்து

ஏற்றமுடைய இராவணன் தானுமப்போ
போற்றுமணித்தோரைப் பூமியிலே தானெறிந்து
தெண்டும் கமண்டலமும் சீரான புஸ்த்தகமும்
வெண்சங்கு ஒத்த பல்லும் வேட்டி உடையழகும்
நரைத்த தலைமயிரும் நடுநடுங்கி வந்து நின்று
அன்னாச்சியாரின் அழகுமுகம் நோக்கி
சன்னாசியாக வந்து தைய நல்லாள் பிச்சை என்றார்
மையமரும் கன்னி அந்த மாயவனார்தன்தேவி
அய்யமிடச் சென்றாள் அரக்கன்மணித்தேர் மேல்
ஓட்டினான் சாரதி தேர் ஓடாமல் நின்றதுவே
நீட்டினான் கையை அந்த நேரிளையாள் தன்னெதிரே
எடுத்தந்தத்தோளான் இராவணனிதென்னவென்றான்
ஓடியங்கே சென்றாள் தேரோடலுற்றதம்மானை
வாகாயரக்கன்வயிர மணித்தேரதுதான்
ஆகாசம் கொண்டு பறந்ததுவே அம்மானை
இந்துவொற்ற செம்முகத்தார் லெட்சுமியாரைப் போது
கொந்தார் குழல்விரித்துக் கூப்பிட்டாரம்மானை
சீலையுடைவிளச் சீதேவியார் லெட்சுமியார்
மாலைக்குழல் விரித்து மாயோர்க்கபயமென்றாள்
முத்தாரமான மணிமோதிரங்கள் தான் கழற்றி
வித்தாரமாக முன்னே விட்டெறிதாரம்மானை
சேனாடர் போற்றும் திருமாலும் முறைஇடவே
பூணாரம் தான் களற்றிப் பூமியிலே விட்டெறிந்தாள்
வேலைப் பொருவிளியாள் விண்ணோர்க்கபயமென்று
காலிற் சிலம்பைக் கழற்றி எறியலுற்றாள்
நின்ற குழல் விரனித்துத் தேர் மீதில் தான் விழுந்து
பூண்ட மணிகளெல்லாம் பூமியிலே விட்டெறிந்தாள்
மற்பொருதும் திண்டோளான் மாயவரைக் காணாமல்
பொற்றொடியைக் கொண்டரக்கன் போகலுற்றாராம்
மாது படுந் துயரம் கண்டு சடாசுமுனி
காதில் விளக்கேட்டுக் கண்கள் தேவியரை
வண்டார் குழலாரை மாயவனார் தேவியரை
கண்டான் சடாசுமுனி கடல்வண்ணன் தேவியரை
கொண்டுவருவாயோ என்று கோபித்தெழுந்திருந்தான்
ஆளிலங்கை மன்னன் அரக்கன் திடுக்கிடவே
வளியை மறித்துப் பொருதான் சடாசுமுனி
மனுகிடா நெஞ்சமள்ள வாளரக்கன் திடுக்கிடவே

சிறகடித்துக் கொண்டு பொருதான் சடாசுமுனி
பொருதசடாசதுதான் போதமிகக் கொக்கரித்து
விருதுசொல்ல வெட்டி மிகுத்தரக்கன் தன்னுடைய
பாரமுடிபத்தும் பறித்தேறிந்தாரம்மானை
ஆண்ட இலங்கை அரக்கன் சிரமுடிகன்
மீண்டும் முளைத்து மிகவளர்ந்தாரம்மானை
செட்டைச் சடாசுமுனியும் தேர்மேல் இராவணனும்
ஒட்டிப்பொருதார் உயிர்நிலை என்றம்மானை
அச்சுத்திருத்தோரை ஆகாசத்தே நிறுத்தி
மேற்சிறகை வெட்டி விளிவட்டாரம்மானை
காயாம்பூமேனியனார் கண்ணர்வருமளவும்
தாயார் சடாசுமுனிக்குச் சாகாமற் சாபமிட்டான்
தென்சூழிலங்கையிலே தேர்மேலே கொண்டு சென்று
வித்தார வல்லியரை வேதக் கலவியரை
வைத்தார் அயோகவனத்திலே அம்மானை
சொரியும் மலர்க்காவில் சுற்றிவரும் அக்கினியை
எரிய வளர்த்து இருந்ததுவே லெட்சுமியும்
ஏலங்குழலாள் இருக்கும் அயோகையிலே
மாலைக்குளங் முடியார் வாழும் திருச்சடையும்
பாங்கியர் சூழப் பலமாதர் தற்சூழ
காங்கையைத்தான் விரும்பிக் காமக்குயில் கூவ
அன்னம் விளையாட ஆடுமயிலாட
புன்னைமலர் சொரியப் பூங்காவனம் தனிலே
இன்னம் மிகப்பேசும் அன்னங்கள் தற்சூழ
மாயவனார் தேவி மனமகிழ வேணுமென்று
வீசுபுகழ் அரக்கன் விபூசணனார் தன் மகளார்
ஆசாரமாக அடிதொழுது அங்குநின்று
தேசம் மகிழத் திருச்சடையும் வீற்றிருந்தாள்
கருமாமுகில் போலக் கறுத்த முகம் வாடித்
திருமாலும் தம்பியரும் தேவியரைத் தேடலுற்றார்
சாகாவனத்திருந்த சானகியைக் காணாமல்
போத மனம் தளண்டு புல்லாடலாயிருந்தார்

## விருத்தம்

உள்ளமுருகி ஒன்றாய் உடலெல்லாங்கருகி அய்யோ
கள்ளமே செய்துபோன காரிகையாளைக் காட்டாய்
மெள்ளவே முகிலோடொற்ற மேனியை விடாது நின்ற
துள்ளிமான் துரந்து போன துயரெனை விடாது கண்டாய்

நாலாறுபளங்கள் சிந்தக் கண்ணீர்கள் பரவி ஓட
தேனது பரந்து பாயத் தெருவெல்லாம் முற்றுச் சிந்த
மானார்தான்போன வளிவாசமோ நானறியேன்
பூனாறு பொளியவன்றில் பூதமன்னனைப் பாராயோ

மனையிற் காணேன் இனிக் கூந்தல் மதியிற் காணேன் இனி அழகை
கனையிற் காணேன் இளந்தோள்கள் கமுகிற்காணேன் தன்கழுத்தை
புனையிற் காணெனின்னிடையை என்ன என்ன யான் செய்த
மனையிற்கானேன் பினை ஒன்றும் பெண்ணே என்னைப் பிரிந்தாயோ

சிற்றடி சிலம்பு கண்டேன் சீரிதன்முறுவல் கண்டேன்
உற்ற பேரழகு கண்டேன் உடனிருந்தணுகக்கண்டேன்
கற்றதால் மறையோர் சொல்லும் காணவேன் முடிந்தவாறே
சிற்றிடையைப் பொற்கொடியைத் தேடி வருகையிலே

வேறு

குற்றுயிரோடே கிடந்தான் சடாசுமுனி
மண் களிக்கும் பச்சை வடிவு சங்கு சக்கரமும்
கண்களிக்கக் கண்டு கைதொழுதாரம்மானை
அம்புலவுகையானே ஆரடா என்று சொல்லி
அனந்தம் பிலங்கொண்ட சடாசுமுனி நானென்றான்
என்றமொழி கேட்டு இராமருளிச் செய்வார்
வாரஞ்சு மென்முலையார் மாதை இலட்சுமியை
ஆரிங்கே கொண்டு வந்தார் அஞ்சாதே சொல்லுமென்றார்
ஈரைந்து சென்னி உடைய இராவணன்தான்
கூரஞ்சாவாளரக்கன் கூசாமல் கொண்டுவந்தான்
வீரங்கள் சொல்லி அவன் மென்மேலும் பொய்கள் சொல்லி
போரிங்கே செய்திலங்கை போய்ப் புகுந்தாரம்மானை
தேவர் பெருமாளும் சடாசுமுனி சொற்கேட்டு
ஆவல் துயர் தீர்ந்து ஆரணங்கைக் காணாமல்
சொன்ன சடாசுமுனி சொர்க்கத்தைத்தான் சேர்ந்தார்
பின்னும் பெருமாள் பிறதூதால் தேடலுற்றார்
வண்டாரும் சீர்தளசி மன்னரிருவரையும்
கண்டான் கவுதன் கழுத்து முடிஇல்லாதான்
சேர இருவரையும் செங்பை விரித்தலறி
வாரிப்பிடிக்க வந்தனர் காணம்மானை
செய்யணிந்த நாடுடையான் சீராவைத்தானுருவி

கைதுணிய வெட்டிக் கடந்து வளி போகலுற்றார்
கைஒன்றும் இல்லாள் கவுதன் பராக்கிராமன்
வைகுண்டம் சேரவரம் பெற்றார் அம்மானை
சென்றார்கள் லெட்சுமியைத் தேடி வருகையிலே
வண்டார் குளலி வளியிலவளொருத்தி
மண்களிக்கப் பச்சை வடிவு கண்டு சக்கரமும்
கண்களிக்கக் கண்டு கைதொழுதாரம்மானை
கானமயிலார் கை நிறையத் தான் சாற்றித்
தேனும் கிழங்கும் சாப்பிட்டாரம்மானை
சித்தம் மகிழ்ந்து திருமாலும் தம்பியரும்
மெத்த மகிழ்ந்து வேண்டும் வரங் கொடுத்தார்
வந்தார் பெருமாள் மலர் மகளைத் தான்தேடி
செந்தாமரையாரைச் சிந்தையுள்ளே தானினைந்து
அந்தாலின் கீழே அமர்ந்திருந்தாரம்மானை
துய்ய இளைய பெருமாள் துடை தனிலே
பைய்ய முகம் வாடிப் பள்ளி கொண்டாரம்மானை
பள்ளி கொள்ளக்கண்டனுமான் பாங்காய் முகங்காண
தொண்டுபடவந்தனுமான் தோன்றினர் காணம்மானை
தோன்றி மரத்தில் துணிவாகத் தானேறி
ஏறியே ஓர் கொப்பில் இருந்தனர் காணம்மானை
கரத்தில் சுமத்தனுமான் கருணையினால் அப்போது
மரத்தில் இலை பறித்து எறியலுற்றார் அன்னேரம்
அலை எடுத்த காராளி அர்ச்சுனனார் தம்பியராம்
சிலை எடுத்துவாளி தெரியலுற்றார் அம்மானை
மல்லைச் செறிந்த புயத்துடனே வந்தனுமான்
வில்லைப் பறிக்க விரைந்தனர் காணம்மானை
பள்ளி கொண்டார் கண்மலர்ந்து பார்த்தாரம்மானை
கொள்ளி கொண்டகண்ணனுமான் குளைகாதில் குண்டலமும்
கண்டு பெருமாள் காட்டலுற்றார் தம்பியற்கு
புண்டரீகக் கண்ணனார் போத மனமகிழ்ந்து
ஆலைமரம் நின்றிறங்கி அனுமானடி தொழுது
மாலை வணங்கி வளியடிமை நானென்னறான்
சீரடந்த செம்பொன் திருமாலனுமானை
வாவென்றழைத்து மகிழ்ந்து முகம் நோக்கி
நீ யார் மகன் எனக்கு நின்பதிகள் ஏதென்றார்
மாயன் மகிழ்ந்து வார்த்தை பல கேட்கலுற்றார்
அப்போதனுமான் அவர்க்கருளிச் செய்தபடி

அய்யா அடியேன் அவனிமுழுதும் அறந்த
பையாரடிவின் பகைவன் மகன்னான் என்றான்

### விருத்தம்

வானவர் காணாரந்த மறையவர் காணார் மண்மேல்
ஊனமொன்றில்லா வண்ணம் உடம்பு நொந்தேன் உனைப் போற்றி
தானவர் காணாரந்தத் தரணியில் மன்னர் காணார்
கோணியாரண்டு சொன்ன கொற்றவன் விமலா நீயே

உன்னையான் கண்டபோது ஒருவருங் காணாதிந்தக்
கன்னவிற்காதிற்தூங்கும் கவுசிகுண்டலுமும் கண்டேன்
முன்னையான் செய்து கொண்ட மொய்த் தவமின்று பெற்றேன்
அன்னையார் சொல்லிவிட் ஆகுவாரில்லம் நீயே

கார்முகில் ஏர்க்கும் மேனி கமலங்கள் ஏர்க்கும் கண்கள்
போர்முகில் ஏர்க்கும மேனி பொருந்தும் மாந்தளிர்களொக்கும்
சிரனை காக்கும் கரத்தைத் திசையினில் கேட்டமுண்டாம்
ஆரினி உலகில் வெல்வார் ஆழிய உலகு தன்னில்

வாக்கினில் துதிக்கப் பெற்றேன் வரமுனை நினைக்கப் பெற்றேன்
சோக்கினில் காணப்பெற்றேன் நிழ்கழல் பணியப்பெற்றேன்
கார்க்கும் உன்சேனைக்கெல்லாம் கடன்வண்ணம் கருமம் வேண்டி
போக்குநின்வினையே போக்கும் பொன்னடிசேரப் பெற்றேன்

### வேறு

அங்கே அயோற்றி அரசுபதி ஆழாமல்
இங்கே தனியே எழுந்தருளக் காரியமேன்
செந்தாமரையாரைச் சிறந்த வனத்தே இருத்தி
மான்வேட்டை ஆடி வரமுன்னே வாளரக்கன்
தான்வேட்டை ஆடி தரணிதனை வலம் வந்தான்
பூமனைக் கொண்டிலங்கை போய்ப்புகுந்தாரம்மானை
நாமவளைத்தேடி நடத்திங்கே நாடி வந்தோம்
என்றார் பெருமாள் இயல்புடனே தான் கேட்டு
நின்றார் அனுமான் நெடுநேரம் வாய் புதைந்து
ஆதிபரனுலகை ஓரடியாய் அளந்தவரே
இதுவோ ஒருபொருட்டாய் எழுந்தருளக் காரியமேன்
எட்டிலங்கைவென்று லெட்சுமியை மீட்கவல்ல
சுட்டிலங்கை மீட்கவல்ல சுக்கிரீபன் என்றொருவன்

மட்டிலங்கை புக்களித்து வாளரக்கனைப் பிடித்து
சிமிட்டி முளிப்பளவில் சீதை அந்தலெட்சமியை
மண்டு பெரும்புடனே மாயவனே சீதை தன்னை
கொண்டுவந்து சீதை தன்னைக் கூட்டவல்ல சுக்கிரீவன்
காட்டகத்தில் வாழும் கலைக்கோட்டு மாமுனிவன்
தாடகையைக் கொன்ற சகாயம் போல் எங்களுக்கு
சோலையில் பாரளந்த சுக்கிரீபனுக்காக
வாலிதனைக்கொன்று மலர்க்குழலாள் தாரகையை
தாலிகட்டத்தக்க சகாயம்பண்ண வல்லீராய்
என்றான் அனுமான் லெட்சுமணர் என்ன சொல்வார்
சொன்னபடி செய்தால் சுக்கிரீபன் எங்கே என்றார்
அன்னாளிகையில் அனுமான் விரைந்தோடி
முன்னாகவந்து முகுந்தன் பராக்கிருமன்
சொன்னான் பலவார்த்தை சுக்கிரீபனுக்கனுமான்
வாரிக்கையால் வீசிவரும் அனுமானின் சொற்கேட்டு
மூதிகை காட்டி முறுவலுற்றார் அம்மானை
தன்பங்கம் தீர்க்க அறியாதவனேதான்
என்பங்கம் தீர்க்கிறவனிவனோ இயலனுமான்
அப்போதனுமான் அவனுக்கெடுத்துரைப்பான்
தப்பாமற் சொல்லுகிறேன் தான்கேளாய் சுக்கிரீபா
மாயம்காண் வைகுண்டம் வாழும் பெருமாள்காண்
ஆயன் காண் வாழும் அயோற்றிகிராசன் காண்
ஓரடியாலிந்த உலகை ஆழவந்தவன்காண்
நீறணியும் செஞ்சடையோர் என்னும் நெடியோன்காண்
சங்கு பலதண்டு வளை சக்கரமும் உள்ளவன் காண்
எங்கும் அவராய் இருக்கும் நல்ல மாயவன் காண்
குன்றாமல்மலைதடுத்த கோவிந்தன் காண்அம்மானை
என்றமொழி கேட்டு எழுந்திருந்து சுக்கிரீபன்

## விருத்தம்

வலமது போக்கும் நல்ல வானகத்திருந்து நாமக்
குலமது பாயும் மங்சை சேருமவ்விடத்தேபோகும்
நலமிக வார்த்தை சொல்லும் நன்னாரை வலத்தே பாயும்
தலமிக உரைக்கும் காடை தானுமவ்விடத்தே போகும்

பொருந்திய நிமிர்தமெல்லாம் போலசேயாகுமென்று
திருந்தமுன்தேவர் தேடும் தேவர்கோனாருமங்கை
இருந்து முன்அரசை ஆழ லெட்சணமுண்டு காணும்
வருந்தியே வாருமென்று வாருதியும் அளைத்து வந்தான்

வேறு

கண்டமுகத்தம் கருமமெல்லாம் நல்லதென்று
செண்டான் பெருமாள் எதிர்முன்னே சீராக
நின்று அவனும் வணங்க அறியாமல்
எவரை வணங்க அனுமானெனக் கேட்டான்
அவனி முழுதும் அளந்தார் இவர் என்றான்
ஆரணனே போற்றி அடியேன் பெருந்தவம்
காரணனே கண்ணே என்று ஒருகையாலே
மையதிரமேனியனை மதியாமல் நின்று ஒரு
கையாற்தொழுது கடக்க நின்றான் சுக்கிரீபன்
வண்டலருந்தாரான் மலர்ப்பாதம் தான்தொழுது
கண்டுதொழுது கண்களித்தாரம்மானை
அப்போ பெருமாள் அவன் முகம் பார்த்தேதுரைப்பார்
தப்பாமல் உங்களுக்குத் தானுதவி செய்திடுவேன்
அடைத்துக் கடலை அரக்கர் புதிதளிக்க
படைக்குத் துணையாய் வருவையோ பாரறிய
தோடணிந்த வாலிக்குத் தோராமல் சுக்கிரீபன்
நாடறியச் சொல்லுகிறேன் நானுனக்கு நன்றாக
பேரணங்கு தாசகையைப் பெண்டுவைத்து நீயிருக்க
மண்ணுலகை ஆளுதற்கு வாலிதனைக் கொல்லுகிறேன்
என்றார் பெருமாள் இயல்பாக இப்பொழுது
குன்றால் மலைதடுத்த கோவிந்தனைப் பார்த்து
சொன்னான் பலவார்த்தை சுக்கிரீபன் அப்பொழுது
நன்னார் புவிக்கரசே நாரணரே நீர்தாமும்
வாலிதனைக் கொல்லும் வகை நான் அறியவென்றால்
வேலைதனில் கண்வளர்ந்தீர் விண்ணப்பம் கேட்டருள்வீர்
சோலைதனில் புகுந்து துந்துமியைப் போயெடுத்து
வேலைதனில் விளவே எறிந்திட நீ வல்லீராய்
வாலிதனைக் கொல்லும் வகை இது காண்மாயவரே
சுக்கிரீபன் துரைக்கத் துய்யோனுள மகிழ்ந்து
மிக்க பெலனுடைய விஸ்டுணுவும் தான் சிரித்து
இதுவோ பெருமை என்று எம்பிரான் தான் நகைத்து

வாரிருசிமிகுதாலால் விரலுருட்டி மேல்விரலில்
வீசிவிட்டார் துந்துமியை விண்ணுறவே அம்மானை
கண்குளிரக் கண்டு கனக்கப் பிருஷமுற்று
பெண்கலைக்கு நல்ல பெருமாளைத்தான் பார்த்து
வாழுமுலகரித்த மானாகம் மேல் முளைத்த
ஏழுபலாபரமும் ஊடுருவ எய்தீராய்
சாலிவயல் சூழ்மிதுலை தையல் நல்லாள் தன்கணவன்
வாலிதனைக் கொல்லும் வலுமை பெரியதென்றார்
நண்பால் வனத்தருகே நாலுமொன்றாகி நின்ற
இந்த மரமுடுருவ எய்புமென்றார் சுக்கிரீபன்
தன்பால் மரத்தையவர் தப்பாமல் எய்யவென்று
மன்றலர் அளந்தார்தான் வாலை உறமிதிக்க
திண்ணமுடன் மானாகம் சென்னி நிமிர்ந்திடவே
வாழுமுலகறிய மானாகம் மேல் முளைத்த
ஏழுபலா ஊடுருவ எய்தனர் காணம்மானை
பாரளந்தார் செய்த பராக்கிராம மத்தனையும்
கண்ணிரண்டும் கண்டு கண் குளிந்தாரம்மானை
என்றிசையுமெண்ணும் இலங்கை நகர்தனிலே
அண்டம் உலகளந்த ஆயனார் தேவியரை
கொண்டுவர வாலிதனைக் கொல்லுமென்றார் சுக்கிரீபன்
முன்கைப்பிலனுடைய மூர்க்கனைக் கொல்லுதற்கு
சன்னிதியில் வந்து பல சத்தியங்கள் செய்தருளீர்
அண்டர்களும் அக்கினியும் ஆயரும் சாட்சியதாய்
கன்னிதனைக் கொண்டு வருவேன் நான் தப்பாமல்
வன்கைப் பெலனுடைய வாலிதனைக் கொல்லுமென்றார்
சன்னிதியில் சென்றுபல சத்தியங்கள் செய்தபின்பு
மல்லைச் சிறந்த சமத்துடனே வாலிதனைக்
கொல்லுதற்குத் தப்பாது கொற்றவனே என்றுசொல்லி
அந்தகிரி நாதர் அவருக்கு முன்பாக
சத்தியங்கள் தான் செய்து தான் கொடுத்துவிட்ட பின்பு
அல்லலுற்ற மேனியனார் ராமரம்பைத் தெரிந்தெடுத்து
வில்லுக்கு நேராய் விரைவாய் அணுப்பார்த்து
சொல்லுக்குத் தாளாச் சுக்கிரீபா அஞ்சாதே
மல்லுக்கு வாவென்றளைப்போம் வா வாலிதனை
வேலைதனில் கண்வளர்ந்த வேதியனார் சொற்கேட்டு
சேலைகட்டி மற்பிடிக்கச் சென்றனர் காணம்மானை
மண்ணதிர விண்ணதிர வாண்முகடு தானதிர

எண்ணரிய அட்டகிரி எட்டும் கிடுகிடென்ன
இன்று தெரியும் இனிவாடா வாலி என்றான்
நின்றானே சுக்கிரீபன் நெருங்க வலுப்பேசி
அந்தமொழி கேட்டு அயிராபதம் போலே
சிந்தை வெகுண்டு திசைகள் திடுக்கிடவே
மண்டு குறுக வருமளவம் பார்த்து நின்று
வாலிகட்டிக் கொண்டெடுத்து மண்மேல்விழப்போட்டான்
கட்டிப்பிடித்துக் கழுத்தை நெருக்கிடவே
காலிடையே வைத்துக் கட்டிச் சினத்துடனே
விட்டெறிந்தான் வாலி மிகவளன்று அப்பொழுது
தூக்கி எறிந்தான் தூரமேசிர யோசனை தான்
ஏக்குற்ற மன்னன் சிமுந்தான் வளியிடையே
பங்கப்பட்ட சுக்கிரீபன் பதைத்து எழுந்திருந்து
செங்குருதிபாயத் திருமாலின் முன்னே போய்
கண்ணரே உம்மைக் கனக்க நான் நம்பிவிட்டேன்
எண்ணினேன் கொடி இளந்தேன் என் ஆண்மை எல்லாம்
ஏற்றம் பெரிய இராமரே உம்முடைய
வார்த்தைதனைக் கேட்டு மதியளிந்து விட்டேனே
தேற்றிவிட்டு என்னைச் சேரமுன்னே கொல்வனென்று
ஏற்றிவிட்டு ஏணிதனை வாங்குவரோ இப்படித்தான்
மாறுபட்ட வாலியுட மணித்தாரகை தன்னால்
தோற்றவன்றே தோற்றுச் சும்மா இருந்த எம்மை
போற்றியவன்கையில் பொடிபடுத்தி விட்டீரே
என்றமொழிகேட்டு இராமருமங்கேது சொல்வார்
என்னாணை தம்பி இலட்சுமணன் தன்னாணை
உன்னாணை உங்கள் முகம் குறுக்கமாட்டாமல்
நின்றுநான்விட்டேன் நெடுஞ்சரத்தைக் கைக்கொண்டு
கண்டு மயங்காதே கணைதொடுப்பேன் அஞ்சாதே
மானேந்தும் கையார் மகாதேவர் தன்னாணை
தானேந்திவாலிதனைத் தப்பாமற் கொல்லுகிறேன்
காந்தமலர் தன்னைக் காதில் அடையாளமிட்டு
பூந்துபொருமென்று புருஷோத்துமருரைப்பார்
நம்பாமல் நம்பி நடுவே மறுமனதாய்
அம்மையுடனே சடையார் எல்லாம் துணைகண்டு
செம்பாதம் போற்றி தெறிந்து மறுமனதாய்
அத்தகிரி நாதரிட அணை நம்பிச் சுக்கிரீபன்
மெத்திருந்து கொக்கரித்து வீரமபல பேசி

மண்ணதிர விண்ணதிரவான் முகடுதானதிர
எண்ணரிய அட்டகிரி எட்டும் கிடு கிடென்ன
கொன்று விடவேணுமென்று கொடுங்கை முறுவலுற்றான்
ஆரடா புத்தி சொல்லி அடையாளம் சூட்டி வந்தாய்
பாரடாநீதான் படப்போற பாடுதன்னை

### விருத்தம்

அருக நீ என்று மன்னன் அவன்டுளாய் மாலை சூட்ட
பொருக்கெனப்போக கடுவன்று புகழ்வலி இராமனாரும்
பெருக்க நற்சிலையை வாங்கிப் பெரு வளிகொள்வேன் என்று
ஒருக்கையில் சிலையை வாங்கி உண்மையாய் நிலையில் நின்றான்

கடிதினிற்போகவென்று கட்டுரை செய்தி சொல்லி
படிமுமுதளந்த மாயன் பரிவுடன் சிலை எடுத்து
முடிதலை பத்துள்ளானை முடிசியே கிட்டி வந்து
வடிவிலை வாலிதன்னை வதைக்கவே நின்றான் மன்னன்

### வேறு

கொல்ல எழுந்திருந்து கொடுஞ்சிலையை நானேற்றி
வாமுமுகில் மேனியனார் வடிவுடைய மாயவனார்
நாளும் பொழுதும் நடந்திடவேணுமென்று
மெய்ப்பாக நல்ல வியளம் அவற்க் குரைக்க
இப்போது கொல்ல வகை எண்ணி நின்றாரம்மானை
அப்போது வாலி ஆமுடையாள் என்ன சொல்வாள்
தடக்கை உடையவரே தட்டுக்கெடப்போறாய் நீ
வடக்குநின்று வேடர் இருவர் வந்தாரென்றார்கள்
கடுக்கச்சடையானோ காயாம்பூ மேனியனோ
படைக்குத்துணையாகப் பரிந்து வந்தானென்னார்கள்
கண்டகனாவின் கொடுமையிது மன்னவரே
என்று சொல்லித் தாரகையும் இவனை விலக்கலுற்றாள்

### விருத்தம்

பொருவது கருமமல்ல பொல்லாங்குகண்டே நான்தான்
வரமுள்ள மன்னனாலே மடிவது திண்ணம்
அரிகனை வல்ல மன்னன் எடுத்ததோர் சிலையினாலே
பரிவுடன் நீதான் பட்டுப் பாரினில் விளக்கண்டேன்

உற்றதோர் கருமம் சொன்னேன் ஊழ்வினை உன்னைச்சுற்றி
வற்றிஉன்வலியும் வாழ்வும் அடங்கலும் இழந்தாயிப்போ
பெற்றிடும் வாழ்வு முன்னம் பிரிந்திடம் போதுவந்து
சுற்றியே உன்னைக் கொல்லத்துடந்தது தானுமென்றான்

## வேறு

புன்னமைலர்க் குழலாள் பத்தி சொல்லக் கேளாமல்
மின்னுங்கடல் பிடைசூழ் மேதினிக்குமப்பாலே
என்னில் மிகுந்த பிலனுடையரில்லை என்று
சிரித்தான் மிக வாலி தீப்பறக்கக் கண்ணாலே
விரித்துக் கரத்தை மிகத் தட்டிக் கொக்கரித்து
பாரடா நீதான் படப்போற பாடுதன்னை
ஆரடா புத்தி சொல்லி அடையாளம் சூட்டி வந்தாய்
சொன்னமொழிகேட்டுச் சுக்கிரீபன் வந்தெதிர்த்தான்
மின்னி இடித்தாப்போல் மிகத்தட்டிக் கொக்கரித்து
உன்னிப்பிடித்து உறும்பூசல் செய்யலுற்றார்
தன்னில் மதம் பொழிந்து தானின்றாரம்மானை
தரித்து எதிர்த்து நின்றவனைத் தான் பிடித்து
நெரித்துப் பிடிப்பளவில் நீலவண்ணன் கண்டுகொண்டார்
ஏற்றமுள்ள வாலிக்கு இராமபாணம் தொடுக்க
ஓச்சமுள்ளவாலியுடல் ஊடுருவப்பட்டதுவே
எய்தார் பெருமாள் இராமசரத்தாலே
நெஞ்சிலேபட்ட அம்பை நெடுங்கையால் பிடித்துவாலி
வஞ்சகன் இராமனென்னும் வரிசிலையெளுத்தைக் கண்டு
காராளி தன்னைக் கடைந்தமிர்தம் உண்டவனே
மட்டுற்றதோழானே வாளரக்கனை வாலில்
கட்டிவைத்த சேவுகனே கண்ணாளாவென்றழுதால்
வாரிஎடுத்து மடியிலுற வணைத்து
காரியமாகச் சொன்னேன் கருமமொன்றும் காணாமல்
வாரிகடைந்தவனே நீஎன் வார்த்தை மறுத்தாயே
சோரிவடியத் துணையற்று நின்றாயே
என்று புலம்பி எழுந்திருந்தாள் தாரகையும்
நின்று திகைத்து நெடுமால் முகம் நோக்கி
கண்டெடுத்த தோழானே குற்றங்கள் செய்ததுண்டோ
நன்றி நடுவில்லாமல் நாரணரே கொன்றாயே

### விருத்தம்

மரங்களேறிக் கனிகளுண்டு வாழும் புனத்தேநாமிருந்தோம்
கரங்கள் கூப்பி எப்பொழுதும் காலைமாலை கைதொழுது
ஆரங்கனே எம்மையாளும் இராமனே என்று நீதான்
குரங்கைநீ எய்ய வென்றோ கொற்றவில் வாங்கினாயோ

### வேறு

என்றவள் சொல்ல இராமச்சந்திரன் என்ன சொல்வான்
நன்றியுள்ள தாரகையே நான்சொல்லக் கேட்டருள்
அஞ்சாதே சேவுகனை அறியாமல் எய்தோம் யாம்
நம்சோசிரசானை யிந்த நாலுமறை தன்னானை
என்னானை தம்பி இலட்சுமணன் தன்னானை
உன்னாணை வாலி உருவிய புண்ணாற்றுகிறேன்
என்னானை வாலி இறக்க நீ வல்லாயோ
சொல்லாய் என உரைத்தார் திருமாலும் அப்பொழுது
அப்போது வாலி அளண்டு முகம் நோக்கி
உங்கள் குலத்தார் வடுப்பட்டிருந்தாலும்
எங்கள் குலத்தார் வடுப்பட்டிருப்பார்களோ
என்று சொல்லித் தாரகையும் ஏற்றமுள்ளவாலியவன்
நின்று திருமால் முகம் நோக்கி ஏதுசொல்வான்

### விருத்தம்

கொப்பில்தூங்கும் மாங்கனியும் கொடிய பலாவின் பலாச்சுளையும்
நம்பித்தின்று நாமிருந்தோம் நாராயணற்கென செய்தோம்
தம்பிதுணையே சரசோதி தக்க அறியும் பெருமாளே
அம்பிலிருந்த திருநாமம் அடியேன் தலைமேற்கொண்டேனே

### வேறு

சங்குபல சக்கரத்தால் என்னைச் சகித்தாப்போல்
அங்குதனும் தம்பியையும் அப்படி என்றெண்ணாதே
இன்றுபோலென்றும் இருவரையும் நன்றாக
சென்றுபோர் வென்று சினேகமுடன் வாழுமென்று
வஞ்சகங்கள் செய்யாமல் மன்னவனே இன்று முதல்
அஞ்சாமற் காத்து அரவணித்துக் கொள்ளுமென்று
இந்த உலகை எனக்கிளைய தம்பியற்கு
சிந்தனையில்லாமல் செங்கோல் செலுத்துகைக்கு

அன்று முதலாக அரியாசனத்திருத்தி
என்றுமொருநாளாய் யீடேற்றிக் கொள்ளுமென்று
சுக்கிரீபனுக்கும் சொல்லரிய அங்குதற்கும்
மைக்கண்ணரைத் தொழுது வாழ்ந்திருங்கோவென்று சொல்லி
மன்னவனார் கைகொடுத்து மலற்குழலாள் தாடகையை
என்னுடைய தம்பிக்கிவள் தன்னை ஒப்புவித்து
கூட்டி இருவரையும் குறைவறவே வாழுமென்று
காட்டிக் கொடுத்துக் கயிலாயம் தான் சேர்ந்தான்
வாலிபட்ட பின்பு வாலி தம்பி சுக்கிரீபனுக்கு
தாலிகட்டு வித்தார் தனிநெடுமாலம்மானை
வட்டமிட்ட வங்க கடல் சூளுலகறிய
பட்டங்கட்டிச் சுக்கிரீபனுக்குப் பாரித்தார் பள்ளிகொண்டார்
இந்த இலங்கை இருந்தரசை ஆளுமென்று
சீராகச் செங்கோல் செலுத்தி அரசாண்டு
தாரகையைப் பெண்டு வைத்துத் தானிருந்தாரம்மானை
வாலி உடல் துணிய வந்துபட்ட அம்புடனே
வேலைதனில் மூழ்கி மீண்டுவந்து சேர்ந்திடுமாம்
பொன்னிலங்கை புக்ளித்துப் பொற்கொடியைக் கொண்டுவர
தன்னிளைய தம்பி தன்முகத்தைத் தான் பார்த்து
மன்னரிராமர் மதியோன் எடுத்துரைப்பார்
வன்கைப்பெலனுடைய வாலிதம்பி சுக்கிரீபனை
அங்கு நீர்போய்க் கூட்டி அழைத்தோடி வாருமென்றார்
பொங்கரவில் பள்ளிகொள்ளும் புண்ணியனார் செப்பிடவே
தன்னுடைய தம்பியர்தான் அப்போதுரைக்கலுற்றான்
என்னென்றுங்கேளாமல் ஏற்றமுடன் தானிருந்தான்
வாலிதம்பி சுக்கிரீபன் வாய் மதங்கள் வீறு சொல்லி
மால்தாம் நமக்கு நிகரோ என உரைத்து
இளையபெருமாள் உரைக்கின்ற வார்த்தை எல்லாம்
செவியில் நுளையாமல் செற்றிருந்தாரம்மானை
போனவர் மீண்டு புண்டரீகக் கண்ணனுக்கு
மானமில்லான் சொன்ன வார்த்தை பல உரைத்தார்
வார்த்தை பல கேட்டு வலுராமர் ஏதுரைப்பார்
வெல்லும் பெருமாள் வேகித்துக் கண் சிவந்து
பார்த்திபனே நம்முடைய படைக்குத் துணையாக
வாரமென்று சொல்லி வாய் வார்த்தை கேட்டிட

தாரணியல் மார்பன் தானிரண்டு பின் செல்ல
வார்த்தை தவறாமல் வகுத்தபடி சொன்னேன்
சாரதியார் தம்மை அருகழைத்து மாயவனார்
ஏற்றமுடனே இருக்கின்ற மன்னனுக்கு
சாற்றும் வகைகளெல்லாம் தான்சொல்லிவிட்ட பின்பு
கூற்றன் மிக அஞ்சும் கொடிய அரசன் தனக்கு
நலவு நமக்கவன்தான் நன்றாகச் செய்தவன் காண்
தன்தமயன் வாலிதனைத் தப்பாமற்கொன்றதொரு
அந்தம்பிருக்கு தென்று அனுமானைப் போகவிட்டார்
மேகமொற்ற மேனியனார் வீறான வார்த்தை சொல்லி
வேகமுடனோடி விரைந்து வந்தங் கேது சொல்வான்
கூரம்பாலுன்னுடைய கொற்றவனைக் கொன்றுவிட்ட
பாரம்பிருக்குதென்று பார்த்திருக்கச் சொல்லுமென்றார்

## விருத்தம்

வாலியைக் கொன்ற அம்பு மார்பினைத் துளைத்த அம்பு
கூர்மையில் குறைந்ததில்லை கொண்டு நாமிங்கிருந்தோம்
தாரகை தன்னைத்தானே தாரமாய்த்தந்தோமென்று
காரியத்தளவே சொல்லீர் அக்காலிதத்துறவு தானே

## வேறு

வீரமுடன் தானோடி விரைந்து வந்தங்கேதுரைப்பான்
கூரம்பாலுன் தமயன் வாலிதனைக் கொன்று
பாரம்பிருக்குதென்று பயப்பட்டெழுந்திருந்து
கூராரும் வேல் விளியாள் கொடங்கை குலைத்தெழுந்து
அந்தமொழி கேட்டு அஞ்சி எழுந்திருந்து
கூட்டி எழுவது வெள்ளம் குரங்குத் தாளத்துடனே
கட்டிப் பசுவுடனே வந்து கண்டான் சுக்கிரீபன்
மெத்தமன மகிழ்ந்து வேந்தனும் தம்பியரும்
சித்தம் மகிழ்ந்து சிரித்தார் காணம்மானை

## விருத்தம்

அறுபது வெள்ளம் சேனை ஆனதோர் வாரங்கள்
பறுபதம் போலே வந்து பார்மிசை நடந்து கண்டு
பொறியது நெற்றிக் கண்ணார் பாற்பதம் தெரிவு செய்த
அரியனே போற்றி என்று அயோற்றி ஆழ்பவனைக்கண்டான்

மெத்தவே மனமகிழ்ந்து வேந்தனும் தம்பி தானும்
சுற்ற நாயகனாரந்தச் சுக்கிரீபனைத் தழுவிக்கொண்டு
மற்றநாளிலங்கை தன்னில் மலர்மகள் தன்னைத்தேடி
பித்தனாயிருந்த வேந்தன் பின்னையே தெளிந்து நின்றான்

ஆதி அரும்பொருளே அச்சுதா அரங்கமாலே
நீதியாயிலங்கை ஆண்ட நிமலனே வாழ்வே உள்ளம்
பாதியாய்ப் பகர்தளித்த மரமனே தம்பிரானே
வேதநாயகனாய் வந்த விமலனே சரணமென்றான்

பச்சையாய் மேனிகொண்ட பாற்கடல் வண்ணா உன்னை
அச்சமாய் இருந்தோ மிங்கே யயமெல்லாம் கண்டுவிட்டாய்
இச்சையாயயோற்றி ஆண்ட இறைவனே வாழ்வே உள்ளம்
காட்சியால் வார்த்தை சொன்ன காகுத்தாசரணமென்றான்

மலைதனிலருவியாகி வானவரமுது கொள்க
நிலைதனை உறுதி கொண்ட நிமலனே வாழ்வே உள்ளம்
குலைதனிலம்பு வைத்து கோசல நாட்டு வேந்தே
அலைதனில் கண்வளர்ந்த அர்ச்சுதா சரணமென்றான்

வேறு

மெத்த மனம் மகிழ்ந்து வேந்தனும் தம்பியரும்
சித்த மகிழ்ந்து சீதைக்குத் தூதுவிட்டார்

விருத்தம்

அய்யனும் மனமகிழ்ந்து அரசனுக்கு அன்பு செய்து
வெய்யோனும் தம் பிதானும் வீரனை வரவழைத்த
மையமர் கண்ணாள் தன்னை மற்றவர் கொடுபோயங்கே
வையகமுழுது மாண்டு வாழ்வனோ அரக்கனென்றான்

அரிமலர் அஞ்சு பற்றி அவனியில் அழியக்கண்ட
எரிமதன் தன்னைப் போற்ற இரவியுமிங்கேபோக
கரிபரிதேர்கள் சிந்திக் கனலென அரக்கன் மாள
நரிபரிக்கிவிட்ட நாயகரானை கொல்வேன்

வாழ்வனோ அரக்கனென்று மலர்விழி வேந்தன் சீறி
ஆள்வனோ இலங்கையங்கே அணிமயிலிருக்கும் போது
மாழுவன் சரத்தினால் மக்கள் அன்னை சுற்றங்களெல்லாம்
வேள்வில்லாத்துடைய மன்னன் விற்றகு விளம்பலுற்றான்

பொன்னிலங்கு கனைக்காலும் மாருதன்புயமிருக்கப் பொலிவினோடும்
தென்னிலங்கைக் நகரிருக்கச் சீதையும் சிறையிருக்கச் சிலையுமேந்தி
என்னிலங்கோராரிருக்க எல்லோருமுடனிருக்க இலங்கைவேந்தன்
தன்னிகரற்று தரணியை ஆழ்வேனென்று தாவியே ஏவிநின்றான்

திணைத்திணை வயிற்றில்லாச் சிற்ற தேற்றும் புகழ்
வனத்திடை திரிவதும் வருவதும் கருந்தி வாழ்கையாள்
அனைத்துள்ள உயிர்களும் மதுக்கும் அங்கனே
மனத்துயர் நீக்கினாரில்லை மன்னனே

## வேறு

என்ன இராமர் இவற்றுக்கு எடுத்துரைக்க
மன்னவர்கள் யாபேரும் வந்தெழுந்தேது சொல்லார்
தென்னிலங்கை புக்களித்துத் சீதை சிறை மீட்க
உன்னுடைய பாதம் உத்துதொழுதிடுவோம்

## விருத்தம்

அங்குதன் நீலன் அரசனைப் பணிந்து நோக்கி
தந்திர இலங்கை புக்கித் தாரணியெங்கும் தேடி
மந்தி வெற்பெடுத்த தோழான் முடிதலை பத்தும்
அந்திரமயிலைக் கூட்டி அவ்விடம் பணிவே கொன்றான்

அடியது கமலம் பூத்த அய்யனே அமரர்கோவே
கொடியவன் நகரி புக்கிக் கோதையை எங்கும்தேடி
நெடியதோர் பராவைத்தாண்டி நெருங்கியே வனமளித்து
சடுதியில்லாறோமென்று சீராமனைத் தொழுது நின்றான்

## விருத்தம்

மன்னவன் மகிழ்ந்துமெத்த வானர வீரன் முன்னே
பண்விப்பகைவன்பெற்ற பராக்கிர்மம் உள்ள வீரன்
வன்னமென்மலரோன் தந்த வாள்கையால் விரித்துவிட்ட
அன்னை சொல்மறவாதந்த அனுமனே வாருமென்றார்

பாருதி உதிரம் பாயும் பலதிசை ஓடும் வீரன்
மாருதிகவுஷம் கொண்டு வரத்தினால் வந்தமைந்தன்
சீருதி திருமாலான தெசரதன் புதல்வனாரை
மாருதி வீரன் வந்து மன்னனைப் பணியலுற்றான்

தொல்வினை அகலப் பெற்றேன் தோத்திரங்காணப் பெற்றேன்
அல்லருங் குழலாள்சேரும் அன்பெல்லாம் சேரப்பெற்றேன்
மல்லமார் குழலினாளே மலரடி பணியப்பெற்றேன்
கல்லைப் பெண்ணாக்கிவிட்ட காகுத்தா சரணமென்றான்

ஆதியே உலகமண்ட அருவுரு ஐயாவே நீ
வேதியாயுலகுக்கெல்லாம் வித்தகா சரணம் நீயே
நீதியாயுலகில்வாழும் நிமலனே சரணம் நீயே
நீதியாயுலகை ஆண்ட நிமலனே சரணமென்றான்

தண்டொடு தடக்கை பற்றித்தடம் மயில்கொண்டுபோன
வண்டொடுசோலை சுற்றும் வனங்களிலங்கை சென்று
சென்று நீயிப்போதே தான் சிறப்புடன் மீளுமென்று
உண்டுலகளந்த வேந்தன் உற்றது விளம்பலுற்றான்

வேறு

சித்தார் குலத்துதித்த சீதைக்குத் தூதுவிட்டு
முந்தப்பெருமாள் அனுமான் முகம் நோக்கி
மையாருங்கன்னி மணவாளன் மாயவனார்
அய்வற்கு முன்னே அனுமான் வாவென்றழைத்து
செங்கரத்தில் வாழுந் திருவாளி கைகொடுத்து
அந்தரக்கின்சேனை அணியிலங்கை புக்களித்து
கோமாளிகை தேடிக் கொங்கை மின்னை ஆராய்ந்து
கால்நாளிகையில் கடிதோடி வாருமென்றார்
பூவாளி கோமானைப் போகவிட்டார் தூதாகி
அந்த மொழிகேட்டு அனுமானு மேது சொல்வான்
எந்தன் பிரானே இமையோர் பெருமாளே
அந்தரக்கண் முன்னே அங்குதனும் சாம்புவனும்
என்னில் மிகுந்த பிலனுடையார் யாரிங்கிருக்க
சீர்பாதம் போற்றித் திருவடியைக் காணவென்று
கானகத்தில் வாழும் கவிக் குலங்கள் தானிருக்க
வாரமுள்ள தம்பியரும் மன்னவரும் தானிருக்க
வீரச்சிலை எடுக்க விதித்தானோ நம்மை என்று
மாதாவைக்கண்டு வாய்மொழிகள் தான் கேட்டு
வேலை கடந்து சென்று வாருமென்று போகவிட்டார்
ஆபாதநாயடியேன் அனுமான் மிக மகிழ்ந்து
வாளி எனவாழ்த்தி மாருதியைத் தான் பார்த்து
ஆளி கொடுத்து அனுப்பினர் காணம்மானை

## விருத்தம்

சாம்புவனொருவனுண்டு தளலாிக்குமுதனுண்டு
ஓங்கிய பனக்கை நீலன் உரஞ்சொல்லும் மனிதருண்டு
ஓங்கிய கரடி சிங்கம் எழுவது வெள்ளம் சேனை
இங்கிவைதானிருக்க என்னை நீரனுப்பினீரே

ஏவினேன் என்று சொல்லி இளைத்து நீ வார்த்தை சொன்னீா்
ஆவிசேர் துயரம் தீர அலைகடல் தன்னைத் தாண்டி
தேவியார் சீதை தன்னைத் தெளிவுறத் தேடிக்கண்டு
வாவிசூழ வனத்தைப் பாயும் வானர வீரன் நீயே

## வேறு

தென்திசைக்குமுதனுடன் சீரான அங்குதனும்
நின்பிலத்திலொற்றதொரு நீலனுடன் சாம்புவனும்
குமுதனையும் கூட்டி விட்டனர் காணம்மானை
மெத்த அனுமானும் வேண்டும் வனங் கடந்து
சித்தம் மகிழ்ந்து திருமாலைத் தெண்டனிட்டு
பாற்கடலில் பள்ளி கொள்ளும் பாதமதனைத்தொழுது
வெற்றியுடன் மீளுமென்றுவிடை கொடுத்தாராம்மானை
போர்ந்தான் படைத் தலைவன் பொற்கனகன் தென்திசைக்கு
வந்தான் வலுஅனுமான் மண்டலங்கள் தேடலுற்றான்
அங்குதனும் சாம்புவனும் நீலன் குமுதனுமாய்
இந்தக்கடலுலகம் ஈரேழும் தேடலுற்றார்
கம்பார்குளலாரைக் காரிகையைக் காணாமல்
சம்பாதி சொல்லி வழிநடந்தார் தூதுவர்கள்
புக்கொளித்தார் பாதாளம் பூமித்துவாரமதில்
திக்குத்திசையும் தெரியாமல் தேடலுற்றார்
பூதலங்கள் தேடிப் புதுமலைகள் தான்தேடி
மாதா ஒருத்திதனை வழியில் கண்டாரம்மானை
இந்திரசாலம் மருட்டி இங்கு வந்தாரெனவே
மந்திரவேதக் கவியனுமான் போறனென்று
அக்கடலைத்தாண்டி அகன்றனர் காணம்மானை
சிக்கென்றனுமான் சிறிராமன் விடுதூதன்
திக்குத்திசைதோறும் தேடலுற்றாரம்மானை
தன்னந்தனியே தவசு நின்றாள் தானொருத்தி
கன்னல் மொழிக்காரிகையைக் கண்ணாலும் பாராமல்

என்ன என்ன காரியங்கள் தேடிவந்தீர் என்றுரைத்தான்
நாமகளார் தன்மாமி நாராயணன் தேவி
பூமகளைத்தேடி வந்தோம் பொற்கொடியே என்றுரைத்தார்
கண்ணைச் சிமிட்டிக் காரிகையு மேதுசொல்வாள்
ஏக மனமகிழ்ந்து இங்கில்லை போமென்றுரைத்தாள்
போகநினைந்து புறப்பட்டாரெல்லோரும்
தென்கடலைக் கண்டு திரும்பியவரெல்லோரும்
தேவியரைத்தேடித் திகைத்து வந்தோமென்பளவில்
ஆவிதனைவிட்டு அகல்வோமென உரைத்தார்
கம்பார் குழல்மடவார் காரிகையைக் காணாமல்
சம்பாதி நிற்கும் சமயத்தில் சென்றுவிட்டார்
விடையேறுமீசன் விடுத்த திறலனமான்
சடாசுமுனிபட்டதுதான் சத்தியமாய்ச் சொல்லலுற்றார்
தம்பி பட்டான் என்று சொல்லிச் சம்பாதிகேட்டுருகி
வம்புலவு சம்பாதி நீங்களார் சொல்லுமென்றார்
அரவனையில் கண்துயின்ற அரக்கன் குலமறுக்க
இராமனென வந்தருளும் இராசாவின் நூதனமென்றார்
அப்போது சம்பாதி அவர்முகம் பார்த்தேதுரைப்பார்;
மகிழ்ந்து சடாசு பட்ட வாறுரையுமென்று சொன்னாள்
மகிழ்ந்து கருணையுள்ள விறலனுமான் ஏதுரைப்பான்
எங்கள் பெருமாள் இராமருடைய தேவியரை
துங்கமுடி வாளரக்கன் சூழ்ந்து கொடு போகயிலே
தேரைப் பிடித்துத் சிதற அடித்தொடித்து
பாரமுடிபத்தும் பறிக்க மிக முளைத்து
நிலையறிந்து தானரக்கன் நின்டுபொருகையிலே
பலவாளிதான் தொடுத்துப் பாரச்சிறகொடிக்க
வீரனைவளரக் கண் வெட்டினான் மண்ணில் விழ
என்றான் அனுமான் எழுந்திருந்து சாம்பாதி
மண்ணில் விழுந்தழுதான் மாருதியும் போயெடுத்தான்
கண்ணீர்தனைத் துடைத்துக் கட்டுரைத்தாரம்மானை
அய்யோ நானென்றும் அருஞ்சிறை காத்திருந்தேன்
வன்சிறைபோக வாருமென்ன மாதவத்தான்
தெற்கே இராவணன் தான் சீரிலங்கை ஆண்டிருப்பான்
பொற்கொடியும் மங்கிருப்பாள் போமென்று தானனுப்பி
சேர்ராம பரிராசன் தார்வேந்தன் தான் கேட்டு
அன்பாய் அனுமானை அருகணைத்து வார்த்தை சொல்வார்
அரக்கர் வலுவும் அவருடைய மாய்கைகளும்

பார்க்க உரித்தவன்தன் பாலகனே நீங்களும்தான்
ஏழுகடல் கடப்பீர் எங்கும் திரியவல்லீர்
அக்கினிக்கோட்டை அடைக்கவல்லீர் நீரனுமான்
உன் தந்தையைப் போலே உலகேளும் திரியவல்லீர்
செந்தாமரையாரைத் தேடி முடியாதே என்றார்
அஞ்சினால்சற்றே அடவி வளி தான் கடக்க
நஞ்சாளியைத் தாண்டி நடக்கமுடியாதோ என்றார்
அப்போதனுமான் அவர்களுடனேது சொல்வார்
தப்பாமல் நாயகியைத்தான் தேடவேணுமென்று
சென்றிலங்கை புக்கிச் சீராமருட தேவியரை
கண்டலங்கடி பணிந்து கண்குளிரத்தெண்டனிட்டு
வெற்றி கண்டு மீள்வேன் என்றங்கடி பணிந்து

## விருத்தம்

சாம்புவ அஞ்சினாரேகபோக ஆற்றாதார் போகை போகை
கொஞ்சி வாயமுந்தக் கோளைகாள் போகை போகை
எண்டிசை இலங்கை புக்கி இராமர் தன் தேவி தன்னை
கண்டு நான் மீள்வதல்லாள் கனாவிலும் மீளேனென்னறால்

ஆளெண்டானாதலவ ஆதலென்று சொன்னவன் தன்னால்
மீண்டாருண்டாய் மீளுங்கோ வெற்றி கொண்டொளியாமீளேன்
தீண்டா இலங்கை தீமூட்டி சீதை தன்னைச் சிறைமீட்டிடல்
வேண்டாதனை வேண்டி இருந்த வெட்கக்கேடெனவென்றாள்

பரிந்து நான்பாயவெண்ணில் பகலவன் மறைந்து போவான்
விரைந்து நான்பாய வெண்ணில் விண்ணவர் வெருவியோடும்
முறிந்து நான்பாய வெண்யில் முழங்கிய கடல் கடப்பேன்
இரைந்து நான்பாய வெண்ணில் இலங்கையும் அழியுமென்றான்

## வேறு

சிக்கெனவே சென்று சிராமச்சந்திரன் தூதன்
கொக்கரித்துத் தாண்டிக் குதித்தானொரு நொடியில்
அக்கடலைப்புக்கெறிந்து ஆங்காரத் தாடகைமுன்
புக்கவனும் தான் திகைத்துப் போக வளி காணாமல்

மீனாகத்தாண்டி விழுங்கவருகையிலே
மானாகமென்னும் மலையை எடுத்து வந்தான்
வானமுட்ட வளிகண்டு வயிறு குடல் வளியாய்
தான்மட்டில் நின்றெதித்து ஆங்காரத்தாடகைதான்

### விருத்தம்

எழுதிய இலங்கை மூதூர்க் ட கதுவளி மயிலே என்ன
வளியது வென்று சொல்லி வானுற வாய் விரிப்பக்
களியெனுமுடலைப் பேணிக் காதெனப் புகுந்துவாயால்
பழுதறப்பாய்ந்து போனான் பச்சைமால் தூதன்தானே

### வேறு

கங்கையிலே வந்தெதிர்த்த கன்னிதனைக் கண்டனுமான்
அங்கையிலாளிதனை ஆகாசத்தே எறிந்து
வாய்புகுந்து செவியால் புறப்பட்டனுமானும்
தோய்ந்து முழுகிச் சுடரொளி தானேந்தி
ஏசினார் மூதூரில் இலங்கை மாநகரிகண்டான்

### விருத்தம்

எட்டுத்திசையாள் நாமுகத்தாளுலகேழும்
தொட்டுப்பொருதசோதி நிறத்தான் சுடர்க்கண்ணாள்
முட்டிய போர்தன்னில் மூவுலகோர்களும் வாராமல்
கட்டுச்சடுது காவற்காக்கும் கண்டமயிலரார்

### வேறு

காவலளிந்து கடக்கவந்தாய் நீயெனவே
வெகுகாளிசூலமுடன் வெஞ்சினத்தால் வந்தெதிர்த்தாள்
ஆரடா நீதான் அஞ்சாமல் வந்து நின்றாய்
பாரடா நீதான் படப்போற பாடுதனை
நோக்கினாள் சூலமுடன் நோக்கியவன் தாடியிலே
தாக்கினான் மெய் கலங்கித் தள்ளாடிப் போய்விழுந்தான்
அந்தரத்தில் வந்து அனுமானைக் கண்டு மிக
சந்திர சூரியர்கள் தன்னொளிகாட்டலுற்றார்

### விருத்தம்

என்றானரக்கன் இராமன் தேவி யிங்கிருக்க
முன்னே சென்று வினையதனை யின்று முடிக்கக் கருதியதோர்
அன்னாயதியை அழகுடைய அல்லிமலரில் மிகவாழும்
பொன்னே மணியே மரகதமே புனைய நகரிற்புகுந்தாயே

நிழல்பொதிந்த மாளிகையில் நீண்டதோர் புகழ்படைத்த
தளலோம்மணிமுடியார் தனையிழந்து மதி விதியால்
குலைபொதிந்த விளிமயிலை கொடுவினையிலங்கையில்
அளல்வெந்து உருகுதலும் ஆவதென்றானனுமானும்

எண்ணி எண்ணியே இலங்கை வேந்தனும்
அண்ணலாற்றவ னளிக்கும் தூதன் யான்
நண்ணியே அன்னகர் நாடுவோ மெனப்
புண்ணிய முதல்வனும் புனக்குரங்காகினான்

நீருமறியாமலே நிழலு மறியாமலே
பேருமறியாமலே பிறருமறியாமலே
ஊருமறியாமலே ஒருவருமறியாமலே
ஆருமறியாமலே அரக்கர் பதிபுக்கினான்

## வேறு

அந்தரத்தே வந்து அனுமானைக் கண்டுமிக
சந்திரசூரியர்கள் அந்த ஒளிவுடனே
முந்தெதிரே வந்து முகங் காட்டினர் காணம்மானை
வந்து புகுந்தான்காண் வாளரக்கன் பட்டணத்தே
வந்த கருமம் முடித்து மனத்துயரம் தீர்க்கவென்று
சென்று புகுந்தனுமான் சித்திரப்பூ மண்டபத்தே
மன்னர்பெரும் வீதியெல்லாம் வந்து மிக ஆராய்ந்து
மங்கல வீதி வகைவகையாய் ஆராய்ந்து
சங்கு மிகுந் தமிழ் கூட்டந்தான்தேடி
ஆடக்கோயில் அணிமதிலெல்லாம் தேடி
நாடகசாலை நடுத்தெருவெங்கும் தேடி
ஈனமுள்ள செம்முகத்தார் வீற்றிருக்கும் தெருவும்
கும்பகன்னத் தெருவும் குமாரர்கள் தன் தெருவும்
கோட்டு மடவார் குமாரர்கள் தன்தெருவும்
கட்டுப்பரியாக்கர் காரியப்பர் தன்தெருவும்
எட்டுத்திசையுமுலகேளும் நின்றதிர
இந்திரசெயிறு இருக்கும் இடந்தேடி
வாலியராவான் தெருவும் மயிரக்கண தன்தெருவும்
கோலிளடுத்துக் கொடுங்கை பரவிவர
தேடியே ஓடித் தெருக்கள் திடுக்கிடவே
முக்காலும் மூன்று மூவாயிரம் வீதி எல்லாம்
திக்காமலெங்கும் தெருவளியே தான்தேடி

பத்துத்தலையுடையான் பட்டணத்தில் உள்ளதெரு
அத்தனையுந்தேடி அந்த ஆரணங்கைக்காணாமல்

## விருத்தம்

*மண்டுகள் மடங்கள்தேடி வணிகர் தன்தெருக்கள் தேடி*
சென்றுமுன் பொருதளிக்கும் சேகவத்தெருக்கள் தேடி
குன்று மின் மடவார் வாழும் குறுந்தெருத் தேடித்தேடி
அண்டியமறையோரதும் அந்தணர் தெருக்கள் புக்கான்

அங்கவர் வாழுமந்த ஆயிரம் தெருக்கள் தேடி
சங்கமரிருந்து வாழும் தானவர் தெருவும் தேடி
மங்கல மடவார் பாடும் மன்னவர் தெருவும் தேடி
குங்குமமுலையார் வாழும் குறுந்தெருப்புகினானே

கருதிய நாளிகைபுத்தில் காலனும் வெருவி ஓடும்
ஒருவனே ஒருநாளிகை பன்னிருயோசனைதான்
உருகியே ஒருநொடி தாமதமில்லா உறுவலிதன்னாலே
தெருவுமுன்னூறாயிரமதுதனை ஓடியே தேடினாடின

## வேறு

அந்த உரமாறி அனுமானு மவ்வடிவாய்
வந்து புகுந்தான் வாளரக்கன் மாளிகையில்
வட்டமதில் கடந்து மாணிக்கவாசல்புக்கான்
முத்தின் படிவாசல் முகப்பைக் கடந்து வந்தான்
அந்தப்பவளம் அழுத்தியவாசல் புக்கான்
மின்னும் படிவாசல் வெள்ளிப்படி கடந்தான்
பொன்னின் படிவாசல் புகைபோலே போய்ப்புகுந்தான்
ஆராய்ந்துமெத்த அடைவாகத்தான்தேடி
சீராக வந்துபைம்பொன் சிங்காசனம் புகுந்து
பட்டுமேல் கட்டிப் பவளத்தால் கால் நிறுத்தி
முத்துமணி மண்டபத்தை முத்தாலிடையழுத்தி
ஆணிப்பொன்னாற் சமைத்த அழகுடைய மண்டபத்தே
மாணிக்கமிட்டு வயிர விளக்கெரிய
சந்தணமும் குங்குமமும் சவ்வாதும் பன்னீரும்
சேர்ந்த மலரணைக்கே சித்திரவிஸ்த்தாரமிட்டு
வெள்ளிப்பலகைகளும் வேந்தனிராவணனும்
பள்ளிகொள்ளும் பாவனையைப் பார்த்தங்கனுமானும்

### விருத்தம்

ஒளிபத்து முடிதனில் ஒளிவிடு பட்டமும்
கருதிய வாயிற் கடுகெனப் பிறந்தும்
இருபது புயங்களை எண்ணியே பார்த்துமேல்
பருவரை ஒரு பத்துப்படிந்ததொக்குமே

### வேறு

ஒருபத்துச்சென்னி ஒளிவிடும் செம்முகமும்
இருபதுதோளும் இலங்கை மன்னர் கைத்தலமும்
பருவரை ஒக்குமென்று பார்த்து நின்றாரம்மானை

### விருத்தம்

பூங்குழலலைந்துசோரப் பொருக்கடை கண்ணீர்பாய
பாங்கினாலமிர்தமுண்ணும் பவளவாய்க்கினிது காட்டி
இங்கினில் கிடந்தவாறே யிவனுடமங்கை என்று
ஓங்கியே உறைவாளேந்தி ஒளிமுடியறுப்பனென்றான்

### வேறு

கொண்டை குலைந்துவிளக் கொடுவாயிதன் வடிய
வண்டோதரியாற்கு வாய் விளிகள் புலையதள்ள
கண்டிவள்தானல்லவென்று கண்ணாலும் பாராமல்
திடுக்க மற நின்றனுமான் சீராவைத் தானுருவி
படுக்கும் அரக்கனுட பத்து முடி கிழப்பி
எடுத்து முடியை அறுக்கவென்று எண்ணியவன்
ஆராரும் சூழும் அவணி அளந்தாருடைய
சீராக ராமபானம் திகைக்குமோ என்று எண்ணி
சீராவும் குன்றுமென்று செப்பியவன் விட்டகன்று

### விருத்தம்

என்றவன் எழுந்திருந்து இருபது தோளினானை
குண்டம்நாம் செய்து விட்டாற் குற்றமாமென்றே எண்ணி
வென்றிசேர் இராமன் கையால் விதிபளிமுடிவதென்று
நன்றல்ல கொல்வதென்று நல்லியே எண்ணி மீண்டான்

### வேறு

எண்ணி இராவணனை இப்போதலை யறுத்தால்
மண்ணை அளந்தாற்கு மனதிற்கு ஏராது

மூட்ட மணிமுடியை விட்டரக்கனை நெகிழ்ந்து
விட்டு வைத்து மெள்ள வந்து மேல் திசை தேடலுற்றான்
மட்டுற்ற சோலை மலற்காலெல்லாம் தேடி
அட்டதிக்கென்னும் அயோகவனத்தருகே
விண்ணில் முகில் சொரிய வெற்றுங்குழலாளரை
தண்ணீர் எடுக்க வந்த தைய நல்லாள் சொற்கேட்டு

விருத்தம்

போயவனிலங்கை புக்கிப் புவகமதெல்லாம் தேடி
மாயவன் தேவி தன்னை வனத்தினில் காணாதேடி
தீயொரு நான்குமூன்றும் திசைகளும் ஆராய்ந்தெங்கும்
போயொரு கண்கள் கார்க்கும் பெருவனம் தன்னில் வந்தான்

வேறு

தண்ணீர் எடுக்க வந்த தைய நல்லாள் சொற் கேட்டு
எந்தன் பிராட்டி இருக்கும் இடமறிந்து
சிந்தை மகிழ்ந்தனுமான் சீர்பாதங்காணவென்று
வந்தே அயோகவனம் புகுந்தாரம்மானை
அவ்வளவில் அந்த அயோகவனத்தருகே
செவ்விளநீர் கொங்கை சிமித்திரையும் ஏது சொல்வாள்

விருத்தம்

காலைப்பொழுதில் தென்திசையில் கருங்காகம் குரல்கண்டு
மாலைப்பொழுதில் தென்திசையில் மதுரப்பல்லி வரவு சொல்லும்
சோலைத்திசையில் குயில்கூவும் சொன்னபடிக் கேற்றென்னாளும்
மாலைப்பொழுதில் மணங்கூடும் மதியங்கூடும் கூடாதே

வேறு

பருதி எதிர்ப்பல்லி பலபலெனச் சொல்லுகையால்
நிருதர் பதியளியப் போகுதென்றாள் நேரிளையும்
இலங்கை முழுதும் எரிகொளுத்தப் போகுதென்றாள்
தலங்களுள்ள அரக்கர் தலையுருளப் போகுதென்றாள்
அல்லைப் பெருங்குழலாள் அந்தத்திருச்சடையும்
நல்ல விடயம் நமக்கு வரப் போகு தென்றாள்
இன்னாளிலேதான் இராமச்சற்திரன் தூதன்
பொன்னாளி கொண்டு வரப் போகுதென்றாள் பொற்கொடியும்
கேட்டு மனமகிழ்ந்து கிளிமொழியாள் பெண்களுடன்

வாட்டந் தவிர்ந்து மன மகிழ்ந்து வாணுதலார்
தாளுங்குழலாரைக் தண்டாமரையாரை
வாழும் அயோகவனம் வந்தநுமான் தேடலுற்றான்
மானும் குயிலும் வனக்கிளியும் வண்டினமும்
கானமயில் விளையாடும் கற்பகப்புல்ங்காவனத்தே
தேனிருந்து வாழும் செழுங்காவனத்தினிலே
மானனைய கண்ணாள் மலர் மகளார் வீற்றிருந்தார்
பெண்ணான பெண்களிலே பெண்கள் பிடைசூழ
மின்னேரிடையாளும் வீற்றிருந்தாரம்மானை
ஆரிவரோவென்று அனுமானறியாமல்
பாரமுலைப் பெண்ணணங்கைப் பார்த்துநின்று என்ன சொல்வான்
ஆயிரங்காகத்திலொரு அன்னம் இருந்தாப்போல்
காசகமாக நடுவே நிறுத்துகைபோல்

### விருத்தம்

வாலது முறுக்கிக்கொண்டு மரந்தனிலேறிப் பார்த்து
காலொடு கவடு குத்திக் கண்டனன் அயோகந்தன்னில்
மேல்வருங் கோட்டிலேறி மெள்ளமுன் நடந்து சென்று
மாலுடையிராமன் தூதன் வந்தனன் என்று சொன்னான்

### வேறு

அவ்வளவிலங்கே அந்த அரக்கனவன் தேவி
மைவேல்விளியாள் வண்டோதரி என்ன சொல்வாள்
கொற்றவளே இன்று கொடியகனாக்கண்டேன்
கோலமதினிவங்கை கொற்றவனே என்னுடைய
தாலி சிதறித் தரையில் விழக் கண்டேன்
என்னிலமெண்ணும் இலங்கையிராவணனே உன்
பொன்னின் முடிபத்தும் பொறிந்து விளக்கண்டேனே
அம்புவியோரெண்ணும் அரக்கர் குலத்தரசே உன்
தம்பிமார் பட்டுத் தரையில் விளக்கண்டேனே
அந்தரத்தோர் மெய்க்க அச்சமத்தனாயிருந்த
இந்திரசெயிற்றும் இறந்து விடக் கண்டேனே
தலங்கள் முழுது மெண்ணும் தார்வேந்தே உன்னுடைய
இலங்கை முழுதும் எரிகொழுத்தக் கண்டேனே
மாறாத மன்னா மணவாளா உன்னுடைய
வீறானவாசல் வெளியாகக் கண்டேனே
செல்வப் புகளரசே தென்னிலங்கை மன்னவனே

ஏற்றமுள்ள வாழ்வும் இழந்து விடக்கண்டேனே
முகிலே நீராக முழங்கும் நகரி எல்லாம்
பகலில் நரி ஓடிப்பாழ் கிடக்கக் கண்டேனே
அந்த இலங்கை அரக்கனவன் தேவி
கொங்கை தனத்தாள் கொடிய கனாக் கண்டேனே
பண்சேனை சூழப் பலசீதமும் முளங்க
பெண்சேனை சூழப் பிறப்பட்டான் வாளரக்கன்
வந்தானே லெட்சுமியை வைத்த அயோகயிலே
கொந்தார் குழலார் திருச்சடையைத் தானளைத்து
இன்று திருவாவளிவர இடக்கண் துடிக்குதென்றார்
என்கை பிடித்த முகூர்த்தமோ எம்பெருமாள்
உன்கைபிடித்தாருடனிருக்க நீயும் வந்தாய்
சிலையிற் புகழான தினகரற்கு நான்மகளாய்
நிலையிற் படியளந்து நின்றார்க்குத் தேவியுமாய்
வலையிற் புகுந்ததொரு மான்போல் சிறை இருக்க
தலையில் விதிவசத்தைத் தள்ளுவராவரார் வல்லனுமான்
அந்தப்பெருமாள் அரியமொழி கேட்டு
முந்தக் கடல் கடந்து முன்னூற்றின் காதவளி
பாலடருமென்மொனியார் பார்த்தங்கனுமானை
வந்தபடி சொல்லெனக்கு வல்லனுமானிப்பொழுது
என்றுமொழிய இலயனுமானேது சொல்வான்
கோவிந்தனார் சொற்கேட்டுக் குந்திக் கடல் கடந்து
தேவரீர் சீர்பாதம் சிந்தையுள்ளே தானிநைந்து
வந்தேன் வளியடிமை செந்தாமரையாரே
பார்மாதுமென் மொழியார் பார்த்தங்கனுமானை
சொல்லும் மொழிகேட்டு லெட்சுமியார் என்ன சொல்வார்
சீமானாய்ச் சென்று திசை வென்றுவரும் சேவுகரும்
சாகாமல் என்றும் சமத்தனாய் வாழ்ந்திருப்பாய்
காராளிமேனிக் கருனாகரன் என்னை
நேராகச் சற்றும் நினையாரோ நெட்டூரா
வன்னெஞ்சர் தன்னுடனே வாய்திறந்து சொல்லனுமான்
அங்கம்புண்ணானேன் அறவே மிக மெலிந்தேன்
செங்கமலக் கண்ணனைச் சேருவனோ நானனுமான்
வெண்டாமரையாரை மேகவண்ணன் தேவியரை
தின்றொளிலென்றுஞ் சேருவனோ நானனுமான்
மண்ணோர் புகழவரும் மாயவரைக்காணாமல்
கண்ணேதுயிலுதில்லை காவல்தனிலே இருந்தேன்

வருத்தம் வியாகூலங்கள் மாயவரைக் காணாமல்
இருக்கமுடியாதினி யனுமான் நீகேளும்
இந்த வன ந்தில் யானிருந்தேன் என்னாளும்
வந்து சிறை மீளாவிட்டால் மாய்த்திடுவேன் வாணனை
ஆளி உலகளந்த அச்சுதனார் தன்னோடே
வாருமனுமானே வாய்திறந்து சொய்லாய் நீ

## விருத்தம்

மைய வண்ணன் நின்றதும் வானிலவர்பாதந்தெறிக்க வாடைவீச
அவ்வனற்தனிலிருந்து வருந்துகிறேன் யாரை நோவேன்
செவ்வன்ன நகையாரை திருமேனிக்கினியாரைப் பிரிந்து நானும்
இவ்வண்ணம் படுவாயென்று இறையவனும் தலை ஓட்டில் எழுதினானே

## வேறு

அஞ்சாதே தாயே அரக்கர் பதி அழிக்க
மஞ்சாதுணிக்காக வருவார் காண் வாணுதலே
ஆயன்ன பாலிப்போ அடியேன் கொடுபோறேன்
மாயன் பாலிப்போது வாரீரோமாதாவே
என்ற மொளியேதான் கேட்டு ஏதுசொல்லாள்லெட்சுமியும்
செப்பரிய எங்கள் திருமால் விடுதூதா
எப்படி நீ என்னைக் கொடுபோவாய் என்மகனே
கண்ணுற வேதக் கவியனுமான் தன்னுடலை
விண்ணுற வோங்கி மிகவளைந்து காட்டலுற்றான்
கண்களிக்கக்கண்டு கமலத்திருமகளார்
பெண்கலைக்கு நல்ல பெருமாள் எழுந்தருளி
என்றமொழிகேட்டு லெட்சுமியாரென்ன சொல்வார்
நின்றானனுமான் நெடுநேரம் வாய்புதைத்து
பச்சைமுகில் வண்ணன் பாரளந்தான் பாக்கியமே
நச்நரவில் பள்ளி கொள்ளும் நாராயணன்தேவி
இச்சை சொல்லிப்பிச்சை இரக்கும் அரக்கனுடைய
பச்சை வண்ணன் தூதன் பழங்கள் தின்ன வேணுமென்றான்
என்றமொழிகேட்டு லெட்சுமியும் ஏதுசொல்லாள்
வானரமே அனுமானே வார்த்தை ஒன்று சொல்லுகிறேன்
ஆயன்வரவிடுத்த அரும்பொருளே கேட்டருள்வாய்
வன்றோட ஒண்ணாது வான் குயில்கள் கூவாது
தென்றல் வந்து வீசாது தேன்மதுக்களுண்ணாது

கொம்பிறக்க ஒண்ணாது கோலக்கவியனுமான்
வெம்பிப் பழுத்து விழுந்தகனி உண்ணுமென்றாள்
என்றாளேலெட்சுமியும் எழுந்திருந்து தானனுமான்
நின்றானனுமான் நீதியுடன் வாய் புதைத்து
தென்னிலங்கை மன்னன் அறியாதிருந்தானால்
இந்த உலகுதனில் ஆர்வருவார் என்று சொல்லி
அரக்கர்விடுதூதன் அந்த மலர்க்காவனத்தே
வந்தே அயோக வனத்தை அளிக்கலுற்றார்
ஓங்கி நிமிர்ந்து உலாவி ஒரு நொடிக்குள்
மரங்கள் தனைப்பிடுங்கி மண்மேலெறியலுற்றான்
பூங்காவனமெரியப் புக்களித்துப் போடலுற்றான்
கண்டரக்கன் சேனை எல்லாம் கணக்கச் சினந்தெழுந்து
அண்டிப்பிடிக்க அனுமனிடம் வந்தெதிர்த்தார்
அந்தரத்தேவீசி அடித்தான் அவனியிலே
மெத்தவந்த சேனை எல்லாம் விழுந்து தப்பி ஓடிவந்து
தத்தளிக்கக்குத்தித் தலை பிழைத்தோமென்று சொல்லி

விருத்தம்

சோலையில் புகுந்து சென்று குமுதமும் பலாவும் தெங்கும்
சாலவே பறித்தெறிந்து தடுமாறிச் சிதறமண்ணில்
ஆலமே கொதித்ததென்ன அந்தணராக்கரெல்லாம்
மாலைசேர் தோளினாலும் வாகுதோள் தட்டி நின்றான்

குடி எழுந்து என்றிசை ஞாலமும்
கொடி எழுந்தது கொற்றவர் நகரெல்லாம்
அடி எழுந்தது அரக்கர் கவுந்தாகினி
பொடி எழுந்தது பூதலமெங்குமே

அடர்ந்ததோர் சோலை எல்லாம்
அடியொடே பிடுங்கிக் கொண்டு
படமது உயர ஓசை பாருள்ள அரக்கர் காண
கடலது கடந்துவீரன் கைவலிகாட்டலுற்றான்

இலங்கை மன்னன் நகர்வாசல் இருக்கவல்லரக்கரெல்லாம்
கலங்கியே எழுந்திருந்தார் கண்டவரயோகை தன்னில்
இலங்கிய இராமன் தூதன் இமைப்புடன் அரக்கர் தன்னை
குலந்தோறும் புகுந்து கொல்லும் கூற்றுவன்வந்தே னென்றான்

முட்டிய மரங்களையெல்லாம் முதலுடன் பிடுங்கிக் கொண்டு
கட்டிய காவலாளர் கடுகமுன் நடந்து சென்று
கிட்டவே வந்தபோது கிளர்ந்த வல்லரக்கர் தம்மை
பட்டுநூல் தலைபட்டாப்போல் பாரினில் மடியக்கொன்றான்

பொறுப்புடன் அவர்கள்மாளப் புகளுடையிராமன்தூதன்
பாருடல் குருதி ஓடப் பதைத்த வல்லரக்கர் தம்மை
சீருடன் சிதலை சிந்தச் சினத்துடன் பொருதவென்று
காரது கடிந்தசோலை கடுவனம் அதிரப் பாய்ந்தான்

வாசகங்கேட்டரக்கன் வந்து முன்நடந்துசென்று
பேசினவார்த்தை எல்லாம் பெருங்குரங்கேது சொன்னாய்
நாசமும் செய்து உன்னையமன்தனக் கிடுவோமென்று
ஓசையாய் நடந்து சென்று ஓடியே பொருதலுற்றான்

பிடித்தனன் சிறிதுபேரைப் பிசைந்தனன் சிறிது பேரை
அடித்தனன் சிறிதுபேரை அதட்டினன் சிறிதுபேரை
கடித்தனன் சிறிதுபேரைக் கசக்கினன் சிறிதுபேரை
நடித்தனன் சிறிதுபேரை நசுக்கினன் சிறிதுபேரை

மரமது பிடங்கலுற்றான் மதிளினை உதைத்திடித்தான்
அண்டமும் வெருவியோட அனமனின்றார்ப்பரித்தான்
துண்டம் வெம்பரிகளற்று துளைவில்லா அரக்கர்தம்மை
கண்டதுண்டங்களாகக் கசக்கியே பியத்தெறிந்தான்

### வேறு

ஓடியே ஒருவன் ஒருபத்துமையானுடனே
வாடிமனந் தளன்று வாய்புதைத்தங்கேது சொல்வாள்
என்னடா வந்தாய் இயல் பெரிய காலவரே
மன்னவனே நம்முடைய வளர்மரங்களுள்ளதெல்லாம்
புன்சொற் குரங்கு புனக்குரங்கு இங்குவந்து
அஞ்சாமற் காலை அளிக்குது ஆர்வேந்தே
வனக்காவற்காரரெல்லாம் வந்துவந்தசேனை எல்லாம்
பூங்காவனக்குரங்குபொடி படுத்திப் போட்டுதென்றார்
கேட்டு இராவணன்தான் கிலேசமாய்ச் சொல்வானாம்
தோட்டத்தில் வந்தவர்கள் சும்மாதான் வந்தார்கள்
பூங்காவனமளிக்கும் புன்சொற் குரங்குதன்னை
ஓங்கிப் பிடித்து உயிர்க்களுவில் வையுமென்றார்
என்ற மொழிகேட்டு ஒரு தூதன் ஏது சொல்வான்

## விருத்தம்

பட்டவர்விழ மற்றும் படாதவர் சிலபேரோடி
முட்டிமுன் நடந்துசென்று முடிந்ததே குரங்கின்கையால்
கண்டு நீபாரக்க வேண்டும் நால்வரும் நீயும்மண்டி
தொட்ட நீரொருவரிங்கே தொடருதே நீ பாரக்கவல்லீர்

இருபது தோளும் மார்பும் இலங்கையில் மகுடம் சூட்டி
ஒருபத்துத் தலையினனே உம் பற்கரசேகேளாய்
பொருவது குரங்கே ஆகில் போர்வலியரக்காமாளும்
ஒருபொழுதிருக்குமாகில் உனக்கு நன்றல்ல கண்டாய்

மண்ணோடு விண்ணதிர்ந்து மந்திரவாள் சுழண்டு
கண்ணோடு கோவமெழுந்து கண்டஅமச்சர் பயந்து
எண்ணியகரும்வெண்டஎனக்கெதிர் குரங்கேவென்று
புண்ணியபாவம் பலித்திடப் பத்துவெள்ளம் சேனைபடை ஏவினானோ

## வேறு

சென்றெதிர்த்தார் நம்முடைய சேனை உள்ளார் அத்தனையும்
அந்தரத்தே வீசி அடித்தான் காண் ஆர் வேந்தே
பூங்காவனமளிக்கம் புன்சொற்குரங்கு தன்னை
எங்களால் ஓட்முடியாதென வுரைத்தார்
என்றமொழிகேட்டு இலக்கணனைத் தானழைத்து
மண்ணும் அயோகவன மழிந்து போகாமல்
உம்முடைய சேனைகளும் நீயுமுடனே தான் போய்
அந்தரக்கன்மைந்தன் அர்ச்சுதனையும் அழித்து
பூங்காவனமளித்துப் போனபடையைச் செயித்து
பாங்காயிருந்து படையளிக்கும் பூங்குரங்கை
நெருங்கிப் பிடித்து நறுக்கிவிட்டு வாருமென்றான்
அப்போ இலக்கணனும் யானை படை தேருடனே
தப்பாமல் மந்திரிகள் தானேழுபேருடனே
எண்ணவொண்ணார் சேனை இலக்கமற்றகாலாளும்
மண்ணும் விண்ணும் நின்றதிர வந்தனர் காணம்மானை
கொல்லும் இலக்கணனும் குமாரரேழு மந்திரிகள்
சேரவளைந்து பிடிக்க வந்து சூழ்ந்து கொண்டார்
பாய்ந்தனுமான் சேரப்பதைத்தடித்துக் கொல்லலுற்றான்

அப்போதனுமான் அதிபிஷமாய் மகிழ்ந்து
கிட்டவருமளவும் கீழ்க்கண்ணால் பார்த்து நின்று
வந்தரக்கன் சேனை எல்லாம் வாலால் வளைந்து சுற்றி
அந்தரக்கன் சேனை எல்லாம் அடித்தான் அவனியிலே
மெற்ற வந்த சேனை எல்லாம் விண்ணுலகமேற்றிவிட்டான்
மைக்கப் பிடிக்கவந்த வேந்தன் இலக்கணனை
தேய்த்தனுமான் நெற்றியிலே திலதமிட்டாரம்மானை

## விருத்தம்

உருண்டு கிடந்த சிரங்கள் சிரங்கள் ஒளிந்துவிடந்த சிரங்கள்
புரண்டுகிடந்த பிணங்கள் பிணங்கள் புகைந்தொளுகின்ற சரங்கள் சரங்கள்
இரண்டுமருங்கும் இலங்கை இலங்கை எறிந்து முறிந்த மரங்கள் மரங்கள்
குரங்கு குரங்கென நின்று மலைத்தனை குலைகுலைந்தே இலங்கை எல்லாம்

## வேறு

எற்றிசையும் எண்ணும் எழுவரையும் தான் வதைத்தான்
பத்துத்தலையான் மகனை உதைத்தெறிந்தான்
மைக்கப் பிடிக்கவந்த வேந்தனிலக்கணனை
தேய்த்தனுமான் நெற்றியில் திலகமிட்டாரம்மானை
அரக்கர் குரங்கை அடிக்கவந்த சேனை எல்லாம்
சேரக்குருதி திரைகடல் போலோட
பாரில் அரக்கர் படைப்பட்டதுதான் பாருமினி
ஆற்றாமலோடி அரக்கன் நகரிலுள்ளோர்
கூற்றுவனோவென்று கொடுங்கை குலையலுற்றார்
பார்த்த பெரும் புகழான் பட்டணத்தாரெல்லோரும்
குரங்கு குரங்கென்று குலையலுற்றார் அம்மானை
செண்டணிந்த வீரன் மகன் சேனை படை அத்தனையும்
கொன்றெதிர்த்து நின்று கொக்கரித்தானம்மானை
ஆரணங்கள் போற்றும் அரக்கன் விடுதூதன்
தோரணத்தின் மீதிருந்து தூங்கினார் காணம்மானை
வட்டகடல் சூழ் மதிளிலங்கை மன்னவன்தான்
பட்ட இலக்கணனைப் பார்த்து வியாகூலமாதாய்
கட்டி அழுது கண்ணாற் புனல் சொரிய
முட்டி அழுது முறையிட்டாரம்மானை

## விருத்தம்

பயங்கனைப் தன்னிலேந்திப் பனைப்புயன் தன்னை வென்ற
வெங்கனை வினையோன்பெற்ற வீரரில் வீரா உன்னை
திங்களிர் கதிரோன் நோக்கும் தினகரன் தன்னைவென்ற
சுவர்விடு புயனே உன்னைக் கொன்றது குரங்கோவென்றான்

## வேறு

மண்டலத்தோர் போற்றும் மன்னா நீ என் மகனே
கொன்றதுவுமுன்னைக் குரங்கோ என அழுதான்
யாவியென்ன செய்வேன் பாலா என அழுதான்
தலையொரு பத்து தரையில் விழ அழுதான்
பிலங்களுடையான் பெருக்கச் சினந்தெழுந்து
இலங்கை அழியுதென்றிந்திரசெயிற்றை அழையுமென்றான்
மேகநாதன் கேட்டு விளியால் நெருப்பெரிய
ஆகம் மிகப் பொங்கி அங்கோடி வந்து நின்றான்
தம்பியரைக் கண்டு தலத்தில் விழுந்தளுதான்
அச்சுதன்பட்டு அழுது மிகத் தெளிந்து
புன்குரங்கு போகாமல் நெருக்கிப் பிடித்திறுக்கி
வன்கயிற்றால் கட்டிக் கொண்டு வாருமென்றான் வாளரக்கன்
மானைப் பிடிக்கவல்ல வட்டக் கடல் கலங்கி
மீனைப் பிடிக்கவல்ல வேங்கை பிடிக்கல்ல
இன்னும் இயமனல்ல இந்திரனார் தானுமல்ல
வன்னமெளுதுகின்ற மாயவனார் தானுமல்ல
உரங்களுடைய உலகளந்தார் தானுமல்ல
குரங்கைப் பிடித்து வரச் சொன்னீரே கொற்றவரே

## விருத்தம்

தம்பியைக் கொன்றவன் தன்னை நான் காண வேண்டும்
வெம்பியே இவனுடைய வீரியம் காணவேண்டும்
உம்பரும் உம்பர்கோனும் உலகுள்ளோராயிருங்காண்
இம்புறு தூளியாகக் கிடத்திறேன் கிடத்திறேனே

## வேறு

அண்டு பெருமாள் படையாற் பெரியவனோ
தோற்றான் பத்து ரெட்டித் தோழான் மகன் சினந்து
ஏற்றிய வில்லுடனே இந்திரசெயிற்று வந்தெதிர்த்தான்

கட்டும்பரியும் கடல் கரியும் காலாளும்
எட்டு மலையும் உலகீரேழும் நின்றதிர
விண்பறக்கச் சிந்தூள் மிகமறைக்க வெய்யோனும்
பண்பறக்க வெண்ணாப் படை எடுத்தாராம்மானை
அந்தரத்தோர் காண அனுமானிலக்காக
வந்தெதித்தான் மேகநாதன் மண்ணும் விண்ணும்நின்றதிர

விருத்தம்

மண்டல மகிழ்ந்து பாயில் மறுகடல் உடைய மண்டி
எண்டிசை சுமந்தநாகம் ஏங்கியே எழுந்து ஓட
தோன்றியவாயரக்கி மைந்தன் சூல்வயிறுடைந்து ஓட
அண்டங்கள் பிளந்ததென்ன ஆற்பரித்தனுமன்நின்றான்

வேறு

மடித்தடக்கிவாலதனை வாறவனைப் பார்த்திருந்தான்
இடித்தடக்கிக் கொட்டிச் சிரித்தானனுமானும்
வம்பார் கடல் சூழ் மதிளிலங்கை மன்னன் மகன்
அம்பாயிரம் தொடுத்து அனுமானிலக்காக எய்தான்
வந்த அம்பு தன்னை எல்லாம் வாரிப்பிடித்தனுமான்
முந்தரக்கண் முன்னே முறித்தொடித்துப் போடலுற்றான்
சிந்தை சினம் தீரச் செயிற்றுக் சிலைவாங்கி
வந்து பொழியும் மழைக்கால் போலெய்யலுற்றான்
வெடிக்கும் நெருப்பிடிபோல் விண்ணும் மண்ணும் நின்றதிர
அடித்துக் கலக்கி அதிர்த்தனுமால் மார்பில் இட்டான்
தப்பிக்குதித்துத் தலத்தில் புகுந்துளக்கி
அப்பிப்பிடித்து அரக்கர் தனைநெரித்து
கொப்பளிக்க மூளை குருதி குதி கொள்ளவே தான்
தத்தளிக்கக் குத்தித் தவிடு பொடியாக்கி
மூண்டுகொண்டு சத்துருவை முடித்தான் நொடிப்பொழுதில்
மீண்டு வந்து தோரணத்தின் மீதிருந்தாரம்மானை

விருத்தம்

கொன்றதோர் வேகங்கண்டு கொடுஞ்சிலைகையில் ஏந்தி
எண்டிசைமுகமுமேங்கி இந்திரசெயிற்றுப் பார்த்தான்
கண்டதோர் கண்களாற்பக் கருத்துடனனுமான் தன்னை
மண்டலமருகில் நின்று மயங்கியேயயர்ந்து விட்டான்

யாவரோ இவனுடன் பொருவாரென்றான்
யாவரோ இவனுடன் எதிர்பாரென்றான்
யாவரோ இவனையும் கொல்வாரென்றான்
யாவரோ இவனையும் வெல்லாரென்றான்

## வேறு

என்றும் சமர்த்தன் இந்திரசெயிற்றுக் கலங்கி
நின்றுதிகைத்து நினையாததெல்லாம் நினைந்து
நாணைத் தோணித்து நடந்திங்கே வந்தேன்நான்
மேலுற்றெடுத்ததொரு தனுவிற் பிடித்தகையால்
கால்பிடிக்க வந்த காரணமதென்னவோதான்
போர்பிடிக்கக் கண்டு நின்று போர்பொறாதிரந்தேனால்
மால்விடுதூதனுக்கு வந்து போர் கிடைத்ததுவே
அறங்கண் புரிந்தவர்போல் அனுமானுறக்கேட்டு
உறங்கி இருந்தனுமான் ஒன்றை நினைத் தேதுசொல்வான்

## விருத்தம்

நெறிந்திடும் அனுமானுந்தான் சென்றிடுவீரன் முன்னே
மறித்தென்னை அலனோ எய்யமயிரினோரம்பு தொட்டால்
வெறித்திடும் வரன் வில்லி இளைவற்கிலக்கு வேண்டும்
குறித்திடும் இவனை நாமும் கொடுஞ்சரங் காண்கிறோமே

## வேறு

கோவுக்கு நல்ல குமாரர் படைத்தலைவா
ஏவுக்கு நல்ல இந்திரசெயிற்று நீயோடா
சிறந்த படைஎடுத்துச் சேவுகனாய் வந்து நின்றாயே
எடுத்தசிலை நானேற்றி எய்ய வந்து நின்றாயே
வண்ணச்சிலை வாங்கி வையம் திடுக்கிடவே
நாணைத்தோணித்து நடந்திங்கே வந்தாயே
அப்போதனுமான் அவனைமுகம் நோக்கி
தப்பாமற் சொல்லுகிறேன் தானரக்கா நீகேளாய்
ஆயர்திருவானை அகப்படுவேன் உன்கையில் நான்
வாயுமகன் நானனுமான் மறுதோரணம் தன்னிலே
பாயுமளவிற்தலை பத்துடையான் தன்மகனே
அயிராபதத்தில் அறிமிகுந்த சேவுகனே
மயிராலோரம்பும் மறுகனையும் நீதொடுக்க
வல்லயடாவெண்பளவில் வல்லோமெனமொழிந்தான்

என்றமொழிகேட்டு எய்வேனெனமொழிந்தான்
வாயுமகனிருந்து மறுதோரணம் தனிலே
வீதிஉள்ள தோரணத்தை விட்டு மறுதோரணத்தில்
பாயுமுன்னே எய்வேன் படுஞ்சரங்கள் பாருமென்றான்
தோரணத்தில் நின்றனுமான் தோரணத்தில் பாயுமுன்னே
ஆரணத்தார் போற்றும் அரக்கனுடதன் மகனும்
வீதிவிட்டு வீதி வரும் முன்னம் வீரனும் தான்
நீதிஉடன் நின்று நெடுஞ்சிலையை நானேற்றி
மயிராலோரம்பு மறுகனையும் தான்தொடுத்தான்
நீராரிவற்கெனவே நின்றங் கதிசயித்து
அந்தனுமான் மெச்சி விட்ட ஆணைதவறாமல்
வந்தங்கே நின்று வருகளைத்தாரம்மானை

## விருத்தம்

மறுகணை தொடுத்த வீரன் மகிமை கண்டனுமான்தானும்
இறைவரும் மெச்சவானோர் யாவரும் கண்டதில்லை
நறைமகளுடைய வேந்தன் நாயகன் விட்ட தூதன்
நறை கமளனுமான் கண்டான் நாகமக் கணங்கள் கூற

மந்திரவில்லினாலே மந்திர விரதம் பூண்ட
இந்திரமங்கை கூறி இந்திரசெயிற்றே உன்னை
அந்தரவாணோர் போற்றும் ஆண்மைகள் கண்டேனிப்போ
உந்தன் கைவில்லின் ஆண்மை போலுலகினில் இல்லையென்று

என்றரோதனுமான் தன்னை இராவணன் மகனும் நின்று
மண்டலந்தன்னில் உன்போல் வலியுள்ளார் இல்லை என்று
செண்டுமுன்கயிறு கட்டிச் சேவகம் செய்வாயென்று
இன்று நாமிருபேரும்தான் இணங்கியே நடப்போமென்றான்

## வேறு

சங்கை ஒற்றமேனி சரசுபதிதன் கணவன்
பங்கயத்தோனந்தப் பாசுபதமகனால்
இடையிற் கயிறுகட்டி இந்திரசெயிற்றுப்பிடிக்க
படையிற் புகழ் பெரிய பட்டணத்தார் பார்க்க வந்தார்
நாமள் முன்போக நீ பின்வரவு மொண்ணாது
நீர் முன்போக நான் பின்வரவு மொண்ணாது
ஆனாலும் நாமள் இருபேரும் சரி எனவே
போனோர் வளி இரண்டாய்ப்புகழ் பெரியபட்டணத்தையே

புதுமை இதுதானும் புன்குரங்கு இங்குவந்து
மதிமந்திரிகளையும் மன்னர் குமாரரையும்
மண்டலத்தில் உள்ள மனிதர் பலர்தமையும்
வென்றி குரங்கிதுவோ என்றென்றே கூறிடுவார்
துண்டு மலற்கூந்தல் தோகையர்களெல்லோரும்
இன்று புதுமைஎன எட்டிப்பார்ப்பாரும்
அரக்கர் தமையும் ஆன பூங்காவினையும்
உரத்துடனே கொன்ற குரங்கிதுவோ என்பாரும்
நெருங்கிவருவாரும் நின்று நின்று பார்ப்பாரும்
மரத்திலே ஏறி மட்டிட்டுப் பாற்ப்பாரும்
இந்தக் குரக்குக்கெதிரில்லை என்பாரும்
அந்தக் குரங்கை அடித்துக் கொல் என்பாரும்
பூங்காவனமளித்த புன்சொற் குரங்குதன்னை
ஏங்கப் பிடித்து இறுக்கிக் கொல் என்பாரும்
என்று பலபேரும் எண்ணாமலோடி வந்து
ஒன்றுபடக்கூடி உபயத்தளகாக
நின்று புதுமைகண்டு நெடுமால் விடுதூதன்
இன்றிங்கிலர்களையம் எப்படியும் கொல்வமென்று
படரும் புகழ்பெரியான் பார்க்கவந்தசேனை எல்லாம்
உடலிற்கனையால் உறுபூசல் செய்யவென்றே
அடருமயிற்காவில் அம்புதனை அந்தனுமான்
சேனைபடக் கண்டு சினந்தானிந்திரசெயிற்று
தான்மன்னர்சூழத் தானனுமானைப் பிடித்து
பொன்னிலங்கை வேந்தன் புடைசூழ வீற்றிருக்கும்
மன்னன்முன்னோடு கொண்டு சென்று விட்டான்காணம்மானை
ஏற்றம்பெரிய இராவணனைக் கைதொழுது
மாற்றலரைவெல்ல வல்ல மன்னவனுமேதுசொல்வான்
அரக்கர் குலத்துக்கரசனே நீயிவனை
குரங்கிதுவென்றென்றெண்ணாதே கூற்றுவன்கான் கொற்றவன்
சரத்துக்கிவனுடம்பு சற்றும் சலியாதே
உரத்துக்கிவனைப்போல் உலகுதனிலில்லையென்றான்
ஆனாலிவனை அகப்படத்தான் பிடித்து
சூதானம் நானறியச் சொல்லுமென்றான் மன்னவனும்
கடுக்கச்சடையார் இருக்கும் கயிலை மலை
எடுக்கும் புயத்தையடையயானை ஆணையிட்டு
தடுத்து மறித்துப் பிடித்து வந்தேன் நானிவனை

படைக்குப் பெரிய சமத்தன் காணென்றுரைத்தான்
எண்ணாயிரங்காதம் இரையென்று பாய்ந்தவன்காண்
மன்னா இவனை எளியவனென்றெண்ணாதே
இலங்கைதனை அழிப்பான் எதிர்ப்பாருயிர்வதைப்பான்
தலங்கள் முழுதும் தானாளவல்லவன் காண்
சரங்கள் இவனுடம்பில் தைக்க அணுகாது
குரங்கினமென்றெண்ணாதே கூற்றுவன்காண் கொற்றவனே

### விருத்தம்

கொந்தலர்காவை அழித்திளமைந்தனைக் கொன்றகுரங்கிது காண்
அந்தரமாகிய தோரண மீதிலமரந்த குரங்கிதுகாண்
சந்திரசூரியர் மண்டலமெங்கும் தாவும் குரங்கிதுகாண்
இந்த இலங்கை புகுந்த குரங்கிது எத்தனை ஆண்மைகள் செய்ததுவே

### வேறு

என்றிந்திரசெயிற்று இராவணற்குச் செப்பலுற்றான்
மண்டலத்தில் வீரன் வாளரக்கனைப் பார்த்து
அந்தரம் போலே அறவே உபாயமாதாய்
இந்தஅரக்கன் இருக்கும் சபை தனிலே
வாலைமடித்தடக்கி வாளரக்கனைப் பார்த்து
சாலமிருந்து சமயமிருந்தானனுமான்
கண் சிவந்து கையொடுகை தட்டிக் கடுஞ்சினமாய்
மண்சுமந்த நாகம் மணிமடியான் வாளரக்கன்
ஏனடாவந்தாய் நீ எவன் விட்டதூதனடா
நானடாகேட்பதற்கு நன்றாகச் சொல்லுகிறேன்

### விருத்தம்

இச்சொல்லை உரைக்கக்கேட்டு இராவணனிவனென் றெண்ணி
மெச்சமாய் நகரிலெய்தி வெம்படை இருப்பக் கண்டு
மச்சமாய் நீரில்வாழும் மாயவன் விட்டதூதன்
அச்சமொன்றில்லாவீரன் அனுமனுமென்ன சொல்வான்

### வேறு

நானடாவாளரக்கா தானுனக்குச் சொல்லுகிறேன்
தானடாவாளரக்கா தானின்று வாய்புதைத்து
சாலிவயலிலங்கை தன்னிலொரு சேவுகனை

வாலில் மயிருடனே கட்டிவைத்த வாலிதனை
கூர்வாள்நெடுஞ்சரத்தால் கொன்று விண்ணிலேற்றிவிட்ட
நாராயணண்விட்ட தூதனடா நானரக்கா

விருத்தம்

உரங்கள் தனித்தனி பேசும்அரக்கரை முன்னமும் நானறிவேன்
புரந்த பெரும்புகழ் வாலிபடக்கனை தொட்டவன் மாலடியேன்
விரும்புசாதியில் இராமனிராகவன் எம்பெருமாள் விடுதூதன் யானனுமான்
இருந்த அரக்கரில் எவனடா சொல் இராவணன் தானோ என்றான்

வேறு

வலுவுடைய வாலி மயிர்காம்பு தன்னாலே
மெலிய உடல் சலிய மெத்தனவே கட்டிவிட்ட
தலைகளொரு பத்துடையானிவனெனவே
வலுமையுடனே வழக்காகக் கேட்கலுற்றான்
பாய்த பெரும் பச்சையில் பத்துத் தலையுடனே
இருந்தரார் உலகுதனில் எவனடா என்று சொன்னான்.

விருத்தம்

கையோடு கைதான் தட்டிக் கடுகவே கோபங்கொண்டு
வையனகண்;ணாள் தன்னை வலுமையால் மீட்கவந்தாய்
மையடையிராமன் சொன்ன வீரியங் கேட்டிருப்பேன்
பொய்பட உரைத்தான்தன்னை புகைபடக் கொல்லுமென்றார்

குரங்கின் குலத்திற் பிறந்தவனே கூசவேண்டாம் கொல்ல வென்று
உருங்களுடையான் விடுதூதன் உற்றவனுக்கெதிர் நின்று
செருக்கித்தியரியப் பிறந்தாராம் தேடித்திரிவான் தனைப் போலே
அரக்கர் குலத்திற் பிறந்தவனே அழகிதாகச் சொன்னாயே

வேறு

கரங்களிருபத்துடையான் முகம்நோக்கி
மரங்களுருவவெய்த மாயன் விடுதூதன்
ஆமடா உந்தன் அளவறிந்து பேசுமடா
போமடா வீணாபுவியளந்தான் தேவிதனை
மையாரும் பச்சை வடிவர் தம்மைக் காணாமல்
அய்யமிரக்க வந்து அஞ்சாமல் கொண்டு வந்தாய்
இப்போது எங்கள் இலட்சுமியை விட்டிலையாய்
தப்பாமலுந்தன் தலையறுப்பேன் தானரக்கா

## விருத்தம்

அடாதடாது செய்து நீ அண்டமளந்தோன் தேவிதனை
விடாதடாது செய்து நீ விண்ணடாது போடாநீ
சுடாதடாது போவேனே துய்யவனுன் இலங்கைதனை
படாதடாது போமடா அடாபிடா இராவணா

## வேறு

கரங்களிருபத்துடையான் முகம்நோக்கி
மரங்களுருவவெய்த மாயன்விடுதூதன்
ஆமடா உந்தன் அளவறிந்து பேசுமடா
போமடா வீணா புவியளந்தான் தேவிதனை
மையாரும் பச்சை வடிவர் தம்மைக் காணாமல்
ஐயமிரக்க வந்து அஞ்சாமல் கொண்டு வந்தாய்
இப்போது எங்கள் இலட்சுமியை விட்டிலையாய்
தப்பாமலுந்தன் தலையறுப்பேன் தானரக்கா

## விருத்தம்

அடாதடாது செய்து நீ அண்டமளந்தோன் தேவிதனை
விடாதடாது செய்து நீ விண்ணடாது போடாநீ
சுடாதடாது போவேனோ துய்யவனுன் இலங்கைதனை
படாதடாதுபோமடா அடாபிடா இராவணா

## வேறு

மாயன்விடுதூதன் வலுவரக்கன் முன்னிருந்து
காயமிக வேககளிரிதனில் சொல்லுமென்ன
பாயும் புலிபோல் சினந்தவனைப் பார்த்திருந்து
வாயிலடிக்க நோக்கினான் வாளரக்கன்

## விருத்தம்

வெடித்தெழுசினத்துடன் மிகுந்தவல்லரக்கனை
அடித்தெழுகரத்துடன் விரித்தவனடித்தான்
அடித்தகை பிடித்தவரைக் கனை முறித்தே
முடித்தலை கழுத்திலும் முகத்திலும் அறைந்தான்

## வேறு

பிடித்த கரத்தை யவன்பேணி வைத்துப்பாராமல்
அடித்தானனுமான் அரக்கனுட தாடியினில்
கோவித்தரக்கன் குரங்கு தனைக்கு கொல்லுமென்று
மேவிச்சபையின் விபிசணனும் முன்னே சென்று
மாருற்ற தோளானே மாற்றான் வரவிடுத்த
தூதரைக் கொல்லுவரோ சொற்பெரிய போர்வேந்தே
எங்கள் குலத்துக்கரசனே நீயிவளை
பங்கப்படுத்திவிட்டீர் பத்துத்தலையோனே
அங்கவர் சொல்ல அரக்கர் குலத்தானை
துங்கமடி அசைத்துத் தூங்கி மிகப்பார்த்து
உத்தரங்கள் சொல்லி நீ உத்தாளாய் நின்றாயே
சத்துருவாய் நின்று நீ சதிசெய்தாய் தம்பியரே
தம்பியல்ல இன்றுமுதல் சத்துருவாய் நின்றாயே
நம்பி இனி எந்தன் முன்னே நாடாது நீபோடா
என்றுமிகப் பேசி எரிஎனவே கண்சிவந்து
நின்றவரைப் பார்த்து நீணிலங்கை மன்னவனும்
கல்லாதவாவி கடல் சூளிலங்கை உள்ளோர்
எல்லோரும் கூடி இருத்திப் பிடித்திவனை
பட்டுப்பிடவை பணிப்பிடவை பாவாடை
எட்டுக்கிரி வண்ணம் எளுதரிய மேலாடை
கோடைப் பூவன்னி கொந்தளமேல் பூவாடை
ஆடைபணிவகையும் ஆனபட்டுத் தேவாங்கும்
மாணிக்கம் முத்து வயிரூரியம் வயிரம்
ஆணிப்பொன்னாலே அளுத்தியதோர் ஆடைகளும்
சாலிவயலிலங்கை தானாமும் மன்னவனார்
கோலவரிக் கண்ணாற்குக் கொடுத்ததுகிலிரண்டுமுளம்
மாயன் வரவிடுத்த தூதன்மேல் சுற்றெனவே
நீதியுடன் கொடுத்து நின்றார் துகிலுரிய
சேரக்குவித்துத் திரண்டந்த மாமலைபோல்
வாரிக் குவித்து வால்நிரம்பச் சுற்றுமென்றான்
நெய்க்குடங்கள் கோடி நீரெண்ணை தான்கோடி
கைக்குடங்கள் கோடி கலந்து துயில்தோய்த்து
மட்டுற்ற வாலி மருகன் மேல் சுற்றிடவே
எட்டுத்திசையும் எரிகொளுத்தவேணுமென்று
உற்றதுயிலாடை ஒன்றும்விடாதபடி
சுற்றச் சுற்ற வாலைத் துலையாமல் நீட்டலுற்றார்

தாயான லெட்சுமியார் தனது துயிலுரிய
மாயாதவாளரக்கணன் வசனமுரைத்திடவே
அச்சொல்லைக்கேட்டு அனுமானும் தன்வாலை
கொச்சை இதுவென்று குறுக்கிவிட்டான் வாலதனை
பறச்சி கொவ்வைமொழிப் பலசீலையுள்ளதெல்லாம்
காய்ச்சிய பால்நெய்யில் கலைதோய்த்துத் தான்சுற்றி
கட்டிக் கொடுத்துக் கனலைக் கொளுத்திவிட
சுட்டுப்பதைத்து துடித்து விழுவார்போல்
எட்டுத்திசைதோறும் எங்கும் விரைந்தோடி
மட்டமார்ந்தசோலை மலர் மகளைத் தானினைக்க
சித்தம் மகிழ்ந்தனமான் சீர்பாதம் தான்நினைக்க
சுற்றும் சுடாதபடி சாபமிட்டாரம்மானை
கோயாம்பூ வண்ணன் கருணாகரன்விடுத்த
துய்யோன் நடந்து தெருவீதி தான்வரவே
கண்ட அரக்கரெல்லாம் காடுமுறிந்தோடிடவே
அன்று பயந்து அனைவோரும் தான் நடந்தார்
வேகத்திலே அனுமான் மெத்த மணமகிழ்ந்து
துய்ய நரைக்கிழவி சுடுமென்ற சொற்கேட்டு

விருத்தம்

சொன்னதோர் மொழியைக்கேட்டுத் தூதுவன்விரைந்து சென்று
மன்னவன் இலங்கை மூதூர் வாழ்நகர் சுடவென்றெண்ணி
தண்ணிலே அயிற்றுத்தூதன் தானவன் தனைநினைந்து
பொன்னநகரிலங்கை மூதூர்நகர் தனில் வந்தான் வீரன்

வந்தனனுமனும் மனமது மெச்சியே சிந்தையில் வியாகூலம்தீர வென்றுதான்
அந்தரத்தோளுடைய அரக்கன்தன் பதிமந்திர புயத்தினான் அனலை மூட்டினான்
சிந்தையும் மாறாமல் செல்வேனென்று செயிற்றியே எயிற்றிநின்று வேறுசொல்லி
தந்திரமாகவே சீதைமீட்க சாகசத்தைக்காட்டியே வாட்டியே புல்ட்டிநின்றான்

அரக்கர் தம்மிலங்கைமூதூர் அத்தனையும் சுடவென்றெண்ணி
உரக்கமாமறையோர்வாழும் உண்பதிவிடவென்றெண்ணி
இரக்கமொன்றில்லாவீரர் இடங்களைச் சுடவென்றெண்ணும்
திருப்பதம் நினைந்தோர் வாழும் திருப்பதி விடுவேனென்றான்

வேறு

எண்ணிமனது இருந்து விகாரமுற்று
வன்னம் பெரிய மாயன்விடுதூதன்

முத்தின்படி வாசல் முகப்பை எரிகொளுத்தி
எத்திக்கும் நாலுதிசை எங்கும் எரிகொளுத்தி
முத்துமணி மண்டமும் வாளரக்கன் மாளிகையும்
வட்டமதிள் மண்டபமும் வாளரக்கண் மாளிகையும்
நட்டமறச்சுட்டு நடுக்கடலில் வால்தோய்த்து
மட்டமரந்த சோலை வாளிலங்கைதானளித்து
எட்டார் குழலார்லெட்சுமியைத் தெண்டனிட்டு
தாடாண்மைவல்லபிரான் தான்விடுத்த தூதுவனை
வாடாமல் வீரன் வாவென்றருகழைத்து
கச்சுமுலையார் கனக்க மகிழ்ந்துநின்று
மெச்சி அனுமானை வீரியங்கள் தான்தொடுத்து
பேராளனாகப் பெருமாள் பதம்பெறுவாய்
காராளன்மேனிக் கண்ணர் பதம் பெறுவாய்
சாகாமல் என்னாளும் சமர்த்தனாய் வாழ்ந்திருப்பாய்
ஆகமங்களெல்லாம் அறியவல்ல புண்ணியனார்
நாகமதிற்றுயிலும் நாராயணருள் பெறுவாய்
என்று வரங்கொடுத்து லெட்சுமியுமப்பொழுது
சென்று திசைவென்று சீராமனாய்வாழுமென்று
போற்றி அருகளைத்துப் புகழ் பெரிய வீரனைத்தான்
ஆற்றி அனைத்து அனுமான் முகம் பார்த்து

## விருத்தம்

மீளாமயக்கம் மிகுந்திருந்தேன் மிதுலைநகர்கே தான்பிறந்து
வாளால் வலியரக்கற்குதவியதாய் வந்தேனயோகவனந்தனிலே
நாளால்வினையால் வருந்துகிறேன் நாயேன்கண்கள் துயிலாமல்
சூடாமணியுன் கைகொடுதுத்தொழுதேன் பாதம் தொழுதேன்

## வேறு

என்று சொல்லக்கேட்டு இயலனுமான் ஏதுசொல்வான்
மண்டலரும் சீர்துளசிமாலையணிமாயவனார்
கொண்டரக்கர் சேனைகுருதிவெள்ளம் ஆறோட
அன்றரக்கனைக் கொண்டு அருஞ்சிறை மீட்டேக
வந்திடுவோமென்று மனங்குளிரவார்த்தை சொல்லி
செந்தாமலர்ப்பாதம் சென்று வணங்கிநின்று
சூடாமணி வாங்கிச் சூடக்கடல் தான்தாண்டி
தோளால் வலியுடைய சுக்கிரீபன் காட்டகத்தில்
அஞ்சாமற் சுக்கிரீபன் அச்சிறாமைதான் புகுந்து

கஞ்சமலற் புயத்தான் கண்ணன் விடுதூதன்
சிங்காசனம் புகுந்து தேன் மதுவை உண்ணலுற்றான்
பூங்காவைச் சென்று புதுமைகண்டெல்லோரும்
வனக்காவலாளர் கண்டு மன்னவற்குச் சொல்லலுற்றார்
புனக்காவலாளருக்குப் புத்தியுடன் வார்த்தை சொல்லி
அனுமானும் லெட்சுமியைக் கண்டு வந்தானாகுமென்று
தனுவாங்கும் கையாற்குத்தானுரைத்தான் சுக்கிரீபன்
எண்ணுமளவில் இராமர் முன்னே சென்றனுமான்
மன்னன் திருத்தாள் பணிந்துமுன்னே நிற்கலுற்றான்
கண்டேன்நான் லெட்சுமியைக் கண்ணாரவென்று சொல்லி
திண்டோளனுமான் திருமாலைத்தெண்டனிட்டான்
சுட்டி எடுத்தனைத்த கண்பிருசிமுண்டாகி
முட்டி இலங்கை சென்று மொய்க்குழலைத் தான்தேடி
வல்லியைக் கண்ட மறுமாற்றம் அத்தனையும்
சொல்லி அனுமானும் சூடாமணி கொடுத்தான்

## விருத்தம்

தாட்கொண்டேன் துயர்தீர்ந்தேன் தம்பிரான் அருளினாலே
வாட்கொண்டேன் கண்ணினாளை மலர்ந்த பூங்கண்ணிணானை
கோட்கொண்ட செல்வம் போலக் குலாவிய அரக்கர்சேனை
நாட்கொண்டு இலங்கைவிட்டு நானுமிப்போவந்தேனே

## வேறு

என்று அனுமானும் இவ்வார்த்தை தானுரைக்க
மன்னவனும் கேட்டு மனமகிழ்ந்து கொண்டாடி
வாங்கிமணியை மனமகிழ்ந்து கொண்டாடி
பாங்குடனே வெல்லப் படைஎடுத்தாரம்மானை
என்று முசுறுகரடி எழுபது வெள்ளம் குரங்கு
விண்ணில் மண்ணும் நின்றதிர வீரமுரசதிர
இடிபறக்கத் தம்பட்டம் இராசதிடிமுழங்க
படிபொறுக்கவொண்ணாப் படைஎடுத்தாரம்மானை
மன்னன் இராவணன் மாநகரி தானளிக்க
தென்னவனான சிறிராமனும் படையும்
சென்றுவளி நடந்து சேர்ந்து கடற்கரைக்கே
மன்னர் படையுடனே நெடியமாலம்மானை
அன்று சமுத்திரந்தானாரென்று கேளாமல்
நின்ற சமுத்திரந்தான் நினையாமல் நின்றதுவே

### விருத்தம்

வறுமை கண்டவர் மெய்ஞானிகள் எவர் வரினும்
வெறுமை கண்டவர் யாவரும் யாரையும் விரும்பார்
குறுமை கண்டவர் கொடுங்கனல் என்னிலும் கூசார்
சிறுமை கண்டவர் பெருமை கண்டல்லது சொல்லார்

அண்டருலகத்து முடியாளருங் கேறுமீறித்
தென்றிரை சுமந்தவன் சென்னியிற் சடையிற்தாங்கி
குன்றினிலிருந்த நீரும் கொடுங்கனல் போலச்சீறி
பண்டைநாளிருந்தங்கே பதை பதைத்தெழுந்ததங்கே

### வேறு

அன்றுகடல் மாயவரை ஆரென்றும் கேளாமல்
நின்ற சமுத்திரம் தான் நேராய் நினைந்ததில்லை
கதித்த கணை தொடுத்தார் கண் சிவந்து மாயவரும்
கொதித்த கடல் கதறிக்கோவென்றபயமிட
ஏக்கற்று நின்று இராமச்சந்திரனிலே
மூக்குநீர் போலே மூளையில் நின்றதம்மானை

### விருத்தம்

வாட்டமே எடுத்துமெத்த வாருதிக்கிறைவனேங்கி
ஓட்டமும் நடையுமாக ஒருநொடி நொடிக்குமுன்னே
தேட்டமாய்ப் புவிதானாட்டுத் தெசரதன் புதல்வன்தன்னில்
கூட்டினார்கரத்தையங்கே கும்பிட்டான் குறித்து நின்றான்

### வேறு

மாயவனே உன்னை ஒருமானிடறென்றிருந்தேன்
ஆயனே எந்தனடிக்கிணைகள் செய்தபிழை
போதப் பொறுத்தருளும் புண்ணியரே என்று சொல்லி
சீதை சீராமனையும் தெண்டனிட்டாரம்மானை

### விருத்தம்

ஆயுறுகரத்தால் மண்மேல் அடியுறையாக வைத்து
தீயவர்சிறியோர் செய்தபிழை பொறுப்பது பெரியோர்செய்கை
பாயிருள் நிற்கும் தெய்வப் பருதியை அழித்தமாலே
ஆயிரம் நாமத்தையா சரணமென்றடியில் வீழ்ந்தான்

## வேறு

ஆபாதகண்தான் அறியாமற் செய்தபிழை
சீர்பாதஞ் சேரத் திருவருளும் உம்மருளால்
மாயன்படைபோக வழிமுழுதும் தானாக
தூயோன் அடிவணங்கித் தொழுது நின்றாரம்மானை
கறுக்கும் கடலரசன் செய்தபிழை அத்தனையும்
பொறுத்துப் பெருமாள் போத மனமகிழ்ந்து
தோள்துளைய மாயவனார் தொடுத்துவிட்டவெண்சரணத்தை
மீள் அழைத்து அசுரர்கள் மேல் ஏவிவிட்டார்
எட்டுமலையும் உலகேளும் நின்றதிர
மட்டமரும் திண்டோளான் வாளரக்கன் திடுக்கிடவே
கடலை அடைக்கவென்று காயாம்பூமேனியனார்
ஆளிதனைக் கடந்து அக்கரைக்கே சென்றேறி
அருமிப்படையுடனே அமர்ந்திருந்தாரம்மானை
அந்தகிரி நாதர்படை ஆர்ப்பார்த்தான் கேட்டு
மெத்தப் பயந்து விபூசணரும் வந்து நின்று
எத்திசையும் எண்ணும் இராவணனார் முன்சென்று
பத்துத்தலையனுக்குப் புத்திமதி சொல்லலுற்றார்
மதம்பெரிய கும்பகர்ணனும் மன்னன் விபூசணனும்
இதம்பெரிய இராவணனை ஏற்கவே கைதொழுது
மாயன் கடற்கரையில் வந்துவிட்டாரண்ணாவி
ஆயனிடதேவியரை ஆரணங்கைப் போகவிடாய்
மன்னவனே நாமிருந்து வாழிலங்கை ஆளவென்றால்
தென்னவனே ஆயனிட தேவியரைப் போகவிடீர்
தேனிருக்கும் பூஞ்சோலை தென்னிலங்;கை மன்னவனே
நாமிருக்க வேணுமென்றால் நாயகியைப் போகவிடாய்
நாகமணி முடியார் நமக்காகச் சேனையெல்லாம்
போக உயிரிழந்து போகாமல் போகவிடீர்
மான்விரும்புங் கண்ணார் மாயனிட தேவியரை
நாம்விரும்ப ஒண்ணாது நாயகியைப் போகவிடீர்
இலங்கை முடிக்கரசே ஈரேழுலோகமெல்லாம்
கலங்கி மயிருடனே கட்டிவைத்த வாலிதனை
யடங்களுடனே ஒருகணையினால் வதைத்தார்
இரங்கி இராவணரே லெட்சுமியை விட்டுவிடாய்
இந்தமொழிகேட்டு இராவணனுமேது சொல்வான்
அந்த மனிதரென்னோரடந்து போர் செய்வார்களாய்

இந்த உலகில் இருக்கமாட்டேன் என்று சொல்லி
தன்தம்பிமார்களுடன் தார்வேந்தன் செப்பலுற்றான்

## விருத்தம்

வானிருந்த பதிபுக்கி வானவர்வலிமை செய்கொடுவன் என்மகன்
கோனிருந்த கயிலாயவாள் மலைஎடுத்த தோளிருக்கவே
யானிருந்துயதி சந்திரசூரியரெமுந்து சாய்வதுந்தங்ஙனே
யானிருந்தபதி அழியுமென்பது என்எண்ணமோ அரசர் எண்ணமே

வலுவுள்ளாய் வழக்குள்ளாய் மாமலை எடுக்கவல்லாய்
மேலினாற் தேவரெல்லாம் மெல்லடிபயிணைப் பெற்றாய்
கலியுகவரதனான கரியமால்தேவிதன்னை
விடுவது கருமம் சொன்னேன் வேதனோடுகெடுகுவாயே

## வேறு

இன்னமொன்று சொல்ல இராவணனே நீகேளாய்
முன்னமே வந்தனுமான் மூதூரில் பட்டணத்தை
இன்னதென்றெண்ணாமல் அழித்தது கண்டிலையோ
ஏற்றமுள்ள வாழ்வும் இழந்துவிடப்போகுதுகாண்
தாயாரும் தள்ளார் தமியேன் உரைத்த சொல்லை
ஆண்ட இலங்கை அழிந்துவிடப்போகுது காண்
வேண்டாம் நீ லெட்சுமியை விட்டுவிடும் அண்ணாவே
மாண்டால் ஒளிய மறுபடி யானும்விடேன்
அந்தமொழிகேட்டு அரக்கன் தம்பி எதுசொல்வான்
இந்தமொழி உரைத்தீர் இறந்துவிடவேண்டி அல்லோ
ஆருமிருந்து அமர்பொருது வெல்வர்களோ
பாருமினி உமக்குப் பார்வேந்தேயில்லை என்றால்
மூவுலகை ஆளும் முதல்வனே உம்முடைய
சேவுகர்களெல்லாம் செருக்களத்தில் மாண்டிடுவர்
கற்புடையதேவி கடுஞ்சாபம் தன்னாலே
இப்புவி நீ ஆளாமல் இறந்துவிடப் போகிறாயே
அந்தமொழி கேட்டு அரக்கனுமங்கேதுசொல்வான்
இந்தமொழி நீயும் எடுத்து மிக உரைத்தாய்
தம்பி அல்ல நீ எனக்குச் சத்துருகான் மாபாவி
நம்பி நீ எந்தன் முன்னே நாடாதே போய்விடென்றான்
தாரணிமேல் பத்துத்தலை திருகி விழ்ந்தாலும்
ஆரணங்கைப் போகவிடேன் அவனருகே நீபோடா

## விருத்தம்

தலை ஒருபத்துண்டேனும் சாகரன் வாழ்வுண்டேனும்
மலைஒருபுயமுண்டேனும் மன்னவா மகிழவேண்டாம்
பலகலை வெல்லமாயன் பகளியேதொடுப்பானாகில்
தலையொரு பத்தும் துள்ளித் தரைதனில் வீழ்வாயென்றான்

ஏதினால் இளக்கம் பேசிஇராமனைப் பெரியோனென்று
பூதலம் மதிக்க எந்தன் முன்னின்று புகழ்ந்து சொன்னாய்
மாதுதன்வரத்தினாலே மாலுமென்றுரைத்தாலும்தான்
போதினில் விடுவதில்லை பொன்னணங்காரை அங்கே

இக்கணம்போறேன் அண்ணா என்வார்த்தை கேட்காவிட்டால்
முக்காலும் தப்பாமல் நான் முன்னவனருகேபோறேன்
மைக்குழல் தன்னால் நீயும் அடித்திடும் வார்த்தை கேளீர்
எக்காலம் எம்மைக் காண்பேன் என்னுடன் பிறந்தகோவே

மந்திரவாளைப் போற்றீர் மணிமதினிலலங்கை ஆண்டீர்
சந்திரபகவான் தானம் சாயவே வார்த்தை போறீர்
இந்திர தேவரோடு இருந்தரசாளப்போகிறீரே
அந்த நல்மங்கையாலே அழியவே வார்த்தை போறீர்

மலைதனை எடுக்கப்போறீர் மணிமுடி தரிக்கப்போறீர்
அலைகடலுலகமெல்லாம் ஆளவே வார்த்தைபோறீர்
சிலைதனை எடுக்கவல்லீர் சேவடிபணியப்போறீர்
குலமகள் சாபத்தாலே கொற்றவாயடிமை என்றான்

அடிமிசை பகர்ந்தேனையா ஆதரவாலேநின்றேன்
படிமிசை பகர்ந்த வார்த்தை பகர்ந்திடப் பகைவனென்றான்
முடிமிசைகரமும் நீயும் மூர்க்கரும் தம்பிமாரும்
அடிமிசை கேட்கும் போது அணுகுவேன் பார்க்கவென்றான்

## வேறு

பாயும் புலிபோல் சினந்தவனைப்பார்த்து
மாயனல்ல நீயெனக்குச் சத்துருத்தான் மாபாவி
நம்பிஇனி எந்தன் முன்னே நாடாது நீபோடா
இக்கணமே போறேன்நான் என்வார்த்தைகேட்கிலையோ
முக்காலும் தப்பாமல் போறேனெனமொழிந்தான்
மைக்குழல் தன்னால் நீயும் முடிந்திடப் போறீரே

எக்காலம் உம்மைக் காண்பேன் என்னுடன் பிறந்தவரே
சந்திரபகவான் தானம் சாயவே வார்த்தைபோறீர்
இந்திரதேவரோடு இருந்தரசாளப் போறீர்
அந்தசால் மங்கையாலே அழியவே வார்த்தை போறீர்

விருத்தம்

வண்டணி நிறத்தினாம மலரடி கமலத்தாலும்
கண்டனன் னண்டபோது கண்ணினாற் காட்சிபெற்றேன்
தென்திரை அயோற்றி ஆளும் தெசரதன் மகனே உன்னை
அண்டினேன் எனக்கு வந்த ஆபத்தை நீக்குவாயே

உறும்பெரும் கிளையை விட்டேன்
உடன் பிறந்தவரை விட்டேன்
இருந்த நற்சேனை விட்டேன்
இலங்கையும் அகல விட்டேன்

வேறு

அருந்தவப் புயனே உந்தன் அடைக்கலம் என்று
திருந்தற வினைகள் தீர்த்துத் திருவுளமருள்செய்வாயே
அருளே புரிந்து அடியேனை அங்கழைத்து
இருள்சூழ் வினைஅறுத்து ரெட்சிப்பாய் என்றுசொல்லி
முடிகளொரு பத்துடையான் தனக்குடைய தம்பியவன்
படிமிசை வந்து பணிந்து நின்றானம்மானை
வேற்றாளாய் வந்து விபீசணரைத்தான் பார்த்து
மாற்றானார் தம்பி வரவந்த காரணமேன்
ஏன்வந்தாரந்த இராவணனார் தம்பி என்று
தேன்பொதிந்த மாலைத் திண்புயத்தாரெல்லோரும்
கொன்றுவிடவேண்டுமென்று கூறினாரெல்லோரும்
அண்டம் உலகளந்தான் அனுமான் முகம்நோக்கி
தப்பாமற்கேட்டு விசாரமுற்றாரம்மானை
அப்போ பெருமாளுக்கனுமான் எடுத்துரைப்பான்

விருத்தம்

பேடையைப் பிடித்து தன்னைப்பிடிக்க வந்தடைந்தபேடை
வேடனுக்கபயம் நல்கி விரகிடை நனைந்துமூடி
பாடுறு பைம்புண்ணோக்கி அதினுடன் கொடுத்து பைம்புண்
வீடுபாரணுமார்ந்த வார்த்தை வேதியன் வளியிதென்றான்

இடைந்தவற்கபயமாகி வேண்டிரந்தவற் கேறு நீர்வேருல
கடைந்தவற்க் காதியால முண்டவர் கண்டீவீரோர்
உடைந்தவற்க்குதவராகிலும் தோன்றும் முதவாராகில்
அடைந்தவுற்கிடர்தான் செய்தால் அரசர்களாண்மையோதான்

நஞ்சதை மிடமதில் நயம்மளுவாழும் நாகம்
தஞ்சினமுன்னந்தானே தாதைபாற்கொடுத்தரசாள
அஞ்சினேனென்று சொல்லி அந்தணற்கரசி என்றான்
வெஞ்சினகூற்றைக் கொன்ற மேன்மைகளறிந்திலாரோ

வேறு

நண்ணார்பதிக்கரசே நாராயனாராசன்
ஒண்ணாது சொல்ல உள்ளாளிவர்காணும்
என்னப்பெருமாளிவனை முகம்நோக்கி
மன்னன் விபிசணரை வாவென்ருகழைத்து
வீயுமந்துமாலையணிமார்பா விபூசயரே
நீவந்த காரியங்கள் சொல்லாய் என உரைத்தார்

விருத்தம்

பஞ்செனச் சிறுக்கும் என்கால் பிறவியைப் பிரிந்தபாவி
வஞ்சனுக்கிளைய என்னை வருகென அருளிச்செய்தாய்
தஞ்சமும் எனக்கு நீயே தார்சடைக் கடவுளுண்ட
நஞ்செனச் சிறந்ததோளா நாஷகா சரணமென்றான்

வேறு

மின்னேரிடையாரை விட்டுவிடாய் என்றுசொல்லி
சொன்னேன் சுனையளியச் சொன்ன என்னை ஓட்டிவிட்டான்
ஆபாதனோருந்து அவனி மிசை ஆளாமல்
சீர்பாதங் காணவென்று வந்தேன் திருமாலே
எண்ணமறியாதவனோடிருந்து அரசாளாமல்
மண்ணைஅளந்தார் மலரடியைக் காணவந்தேன்
சொல்வார்த்தை கேளாத துற்சனனை விட்டகன்று
மல்லார்புய நெடுமால் மலரடியைக் காணவந்தேன்

### விருத்தம்

அத்திருவாளும் மாயனோ அற்புதவாலி காலனோ
உற்றம் பெருக்க குருபமாய் அயோற்றி வேதசாரமோ
வித்தகராண்மை மேகமோ விரபரியாதமேருவோ
எதனையாளி கூடினால் இப்படிக் காணலாகுமோ

நம்பித் தெண்டனைகூலி நம்பி என்பால் வந்தடைந்தாய்
செல்லுமாயிலங்கை தன்னை உமக்கு நாம் தருவோமென்று
நல்லதோர் தம்பிமார்கள் மூவரில் நால்வரானாய்
பல்பெருஞ்சேனை சூழ்ந்த பைந்தலை வீரன் நீயே

### வேறு

மஞ்சாரும்மேனிமாயன் விபிசஷணரை
அஞ்சாதே என்று அவற்கு அருள்புரிந்து
அந்த இலங்கை அரசுபதி முன்னாக
தந்தோம் விபூசியரேதார்வேந்தே இன்றுகேளாய்

### விருத்தம்

இப்படிஇராமன் சொல்ல இராசகோவேது சொல்வான்
மைப்பொரு இலங்கை நம்மால் வென்றிலோமாகில்வார்த்தை
தப்புவோமென்று சொன்ன தம்பிதன்முகத்தைப் பார்த்து
அப்பனே அயோற்றிபாதி அருளுவோ மவனுக்கென்றார்

### வேறு

தின்றோள் மணிமார்பன் திருமால் தனைப்பார்த்து
வந்தான் சடைமுடியான் வந்து கண்டான் எனக்கொடுப்போம்
நன்றாயயோற்றியிலே நாலிலொரு பங்களிப்போம்
என்றார் பெருமாள் லெட்சுமணர் தன்னுடனே
நின்றுகடக் கரைக்கே நீர்பொருத ஒண்ணாது
இன்றிவனைக் கொல்ல எடு நீர் படையை என்று
அன்றனுமான் செய்துவந்த ஆண்மைதனைக் கேளீர்
கொன்றானனுமான் குமாரனுட கோடிபடை
மன்றில் புயவலிய மந்திரிமாரெல்லரையும்
ஆயிரங் கோடி அரக்கர் தனை வதைத்தான்
பத்துத்தலை உடையான் படை ஆயிரங்கோடி
இத்தனையும் கொன்று யமனூரில் ஏற்றிவிட்டு

மட்டமர்ந்த கோலை எல்லாம் வெட்டவெளியாக்கி
முட்டரக்கன் மாளிகையும் மூதூரில் பட்டணமும்
நட்டமறச் சுட்டு நடுக்கடலில் வால் தோய்த்து
வெட்டவெளியாக்கி விட்டான் வேந்தனே தூதனென்றான்
மெத்தனுமான் செய்து வீரியத்தைக் கேட்டான்
புளுக்கமெமுந்துடம்பு பூரித்தாரம்மானை
முந்தப்பெருமாள் அனுமானும் முகம் நோக்கி
இந்தக் கடலை அடைக்கும்படி சொல்லலுற்றார்
தப்பாமலோடித் தவமலையைத் தானெடுத்தான்
வந்தானொரு நொடியில் வானோர்கள் தான்மதிக்க
கொன்றாரும் தோழனுமான் கொண்டு வரும் குன்றதனை
மந்தாரும் சூளும் வடிவுகடலடைக்க
குங்குமத்தாற் சேறாடும் கொந்தளகண்ஆசாரி
எங்கும் உலகடைய உலகீரேளும் நின்றதிர
வாங்கிஅணை அடைத்தான் வான்முகடு நின்றதிர
கடியபடை நடத்திக்கலிங்கர் பளிங்கெமுமி
முட்டமதிளெடுத்தான் மூவுலகும் நின்றதிர
குந்திக் கவியனுமான் குலம்பெரிய ஆசாரி
வந்து பெருமாளை வணங்கினர் காணம்மானை
வட்ட மிட்டவங்கக் கடலேமும் தானடைத்தோன்
அடருமலற்காவில் அனுமான் முகம் நோக்கி
துடரும் மலை வாங்கிச் செல்லும் ஒருநொடியில்
கடலை அடைத்து வளி கண்டார் காணம்மானை
அடுத்தார் சிலபடையும் அம்புவில்லும் சக்கரமும்
எடுத்தார் படையை உலகீரேளும் நின்றதிர
வாளும்படை எடுத்து வாறார் காணம்மானை
ஏழுகடலுமுல கீரேளும் நின்றதிர
பார்த்து நின்றான் வாளரக்கன் பட்டணத்தாரெல்லோரும்
குரங்குப் படையுடனே கோபாலர் தான் வரவே
அரக்கனுமப்போது ஆலித்த மண்டபத்தே
தளங்கள் படைசூழத்தார் வேந்தர் போற்றி செய்ய
துளங்கவரி வீசத் தோகையர்கள் போற்றி செய்ய
தென்னிலங்கை வேந்தன் சிந்தாரணித் தேர் மீதில்
என்னிலமும் போற்ற எம்பெருமாள் தன்படையை
தன்னுள்ளம் தான் மகிழ்ந்து தாமன்வரலாற்றை
சென்னிமுடிபத்தும் தெரிய மன்னன் பார்த்திருந்தான்
ஆரணிமார்பன் அரிராமனப்பொழுது

வீரமணி வேந்தன் விபுசணரைத்தான் பார்த்து
சாலிவயல்பிடைசூழ் தாரணியில் மன்னவனே
கோலியவனுடனே கொற்றவர்கள் சூழ்ந்து நிற்க
வீரமணித்தேர் மீதில் விடிந்தெழுந்த நாயது போல்
ஆர்ப்பார்த்துடனே ஆர்ப்பரித்துக் கொண்டாடி
பார்த்திருந்தான் நம்மன் படைப்பெருமை தன்னை எல்லாம்
பூத்தமலர்த்தொடையாய் புண்ணியனே உன்னுடைய
இலங்கைக்குத் தெற்கே எழுமோ இரவி என்றார்
துலங்கு விபூசணரும் தொழுது மிக உரைப்பார்
சேமத்திருந்த திருமகளைக் கொண்டு வந்த
சாமத்துரோகன் தலையென்றார் அம்மானை
சுத்தப்பெருமான் அறியாமற் சுக்கிரீபன்
எத்திசையும் போற்றும் இராவணன் முன்னே குதித்து
குத்தித் தலை மூளை குருதி ஆறோடிடவே
பத்துத்தலையும் பறித்து வந்தானம்மானை
பதியை அளந்தவர்தான் பரிவாகப் பார்த்து நின்று
விதமேது சுக்கிரீபா என்று மிக உரைத்தார்
ஆண்ட இலங்கை அரக்கன் சிரமுடிகள்
மீண்டுமுளைத்து மிகவளைந்தாரம்மானை
அப்போ பெருமாள் அவர்படையைத் தான் கூட்டி
மைப்பான அங்குதனும் அவ்வீரன் சாம்புவனும்
வெள்ளம் பதினாலும் வீரமுடன் நீங்கள் சென்று
தெள்ளும் மதிளிலங்கை தெற்குவாசல் காருமென்றார்
லெட்சுமணனும் வீரர்பலதேருடனே
அச்சமற மேற்கு வாசலிலே காருமென்றார்
நீலன் குமதன் நின்றசதுவலியன்
காலன்படைத்தலைவர் காவலர்களெல்லோரும்
சுற்றிங்கு நில்லாமல் தடையறவே நீங்கள் சென்று
தானும் விபூஷணரும் தம்பி சுக்கிரீயனுமாய்
மேவும் படைத்தலைவர் வெள்ளம் பதினேழும்
இங்கினி நாமிருப்போம் இரண்டு வெள்ளம் சேனைகள் போய்
அங்கே சென்று அருங்கனிகள் தான்பறித்து
காயும் கிழங்கும் கனிகளும் தான் பறித்து
ஈயுமென்றார் மாயவரும் எல்லோரும் அப்பொழுது
அந்தவியளம் அரக்கனும் தான்கேட்டு
தன்தன்படைத்தலைவர் தானவரை அங்கழைத்து

ஆயிரம் வெள்ளம் அடுத்துவரும் சேனை எல்லாம்
மாயிருஞாலமுடையாரவழைத்து
மேகநாதனுடனே வெள்ளமிருநூறு சென்று
வாங்கி அனுமான் வரவழைத்துக் காருமென்று
வெள்ளம் இருநூறும் வேந்தன் மகோதரனும்
தெள்ளியவரெல்லோரும் தெற்குவாசல்காருமென்றான்
இந்திராணிக்கும் இருநூறு கொண்டு சென்று
பேரரக்கர் தென்னிலங்கை போய்க்காருமென்று சொன்னார்
இருந்த அரசருடன் இராவணனுமென்ன சொல்வான்
பரந்த பெருங்காவல் பச்சவண்ணனென் காவல்
என்றாணிராவணனும் இலங்கை நகருள்ளோற்கு
ஒன்றாகக்கூட்டி யுறங்கிஇனிதிருந்தார்
மாற்றலரைவெல்லவரும் மாயவனார் தன்படையை
பார்த்து நின்று ராவணனும் போறாரென உரைத்தார்
தூதுவர் சொல் கேட்டுச் சொல்வாரிமாரப்போ
மாதுற்ற தோளாமன்னா விபூசணனே
இப்போ இராவணன்முன் யான் தூது போகவிட
அப்போதமரதுதாம் பொருவோம் நல்லதென்று
கேட்கப்பெருமாள் கிலேசமுற்று மன்னவனும்
வாட்கையுடைய வலியரக்கன் தனக்கும்
ஏற்க்கவே புத்தி சொல்லி யான் சொன்ன வார்த்தை
மூற்க்கமாய் விட்டான் முதல்வனே இப்பொழுது
ஆனாலும் நல்ல அறிவுடைய வார்த்தை சொல்லி
தானாக நல்ல வல்ல சமத்தனை ஏவுமென்று
ஆகமுற்ற பச்சை அருளாளன் அங்குதன்னை
மேமுமொற்ற பூங்குழலலை விட்டுவிடச் சொல்லுமென்று
போகவிட்டார் தூதாகப் பேரக்கன் பக்கத்துக்கு
ஆகம் மிகப் பொங்கி அங்குதனும் போகலுற்றான்

## விருத்தம்

என்றவர்க்குரைப்பதென்ன ஏந்திளையாளைவிட்டு
மன்றல்சேர்தொடையான் ஆண்ட மலரடி பணிதலங்கே
சென்று நீபோற்க்களத்தில் செயித்துயிர் விடுதல் நன்றோ
நிண்டுறச் சொல்வீர் நீயே நிருதனுக்கியம்புமென்றான்

ஈனதொழிமொழிந்து நீயும் இராவணன்தனக்கு முன்னே
நன்மையாய்வரவும் வேணும் நண்பனே என உரைக்க
தன்னிகரில்லாவீரன் தானுமங்கெழுந்து போர்ந்து
சின்மொழி மொழிய அங்கே சென்றானங்குதனுமப்போ

வேறு

அங்குதனுமப்போ அரக்கன்முன்னேதான் சென்று
மங்குதடா உன்வாழ்வு வாளரக்கா நீகேளாய்
வட்ட உலகளந்த மாயவனார் தேவியரை
விட்டுவிடு நீ கெடுவாய் வேண்டாமென உரைத்தான்

விருத்தம்

இராவணா நீயுமிப்போ இராமர்தன் தேவியாகரால்
இராவணா நீயுமிப்போ இறந்திடப் போறாய் திண்ணம்
இராமர்தன் தேவியரை இங்குநீ அழைத்துக்கொண்டு
இராமர்தன் முன்செல்லென்று இயம்பினார் தூதனங்கே

வேறு

என்ற மொழிகேட்டு இராவணனுமப்பொழுது
நன்றல்ல வார்த்தை நமக்கு நீதானுரைத்தாய்
ஆகவைப்பேன் மூதூர் அரசு பதியாக
வேகவைத்த மந்தி இங்கே வந்துதடா மீளவென்று
மட்டுயுர்ந்த தோளுடையான் வாலியுடைகையாலே
கட்டுண்ட வந்தாய்நீ கண்ணர் பதம் பெறவே
குட்டுப்படவந்தாய் கொற்றவனே நீயுமென்று
மட்டுயர்ந்த தோளுடைய மன்னவனே என்று சொல்லி
சாலிவயலிலங்கை தன்னிலொரு சேவுகனை
வாலில் மயிருடனே கட்டிவைத்த வாலிதனை
கூர்வாள் நெடுஞ்சரத்தால் கொண்டுவிண்ணில் ஏற்றிவிட்ட
நாராயணன்விட்ட தூதனடா நானரக்கா
என்தகப்பன் வாலிதனை இராமர் சரத்தால் எய்த
அந்தனுமான் தூதன் அங்குதண்டா நானரக்கா
என்றமொழிகேட்டு இராவணனுமேது சொல்வான்
நன்றாக நீமொழிந்தாய் நல்லதொரு அங்குதனே
வாலிஎன்தோழன் மகன் அங்குதன்னானாகில்
நீலவண்ணன் உன்னையுங் கொல்வான்காண்நெட்டூரா

உன்னுடைய தந்தையைக் கொண்டுன்னையும் கொல்விப்பான்
என்னிலங்கை வந்திரு நீ என்று மிகஉரைத்தான்
மன்னா உனக்கு மணிமகுடமும் சூட்டி
இன்னிலத்தை ஆளுதற்கு ஏற்றமும் தருவேன்
வந்திரு நீ என்னருகே என்றானிராவணனும்
அந்தமொழி கேட்டு அங்குதனு மேது சொல்வான்
சங்கு சக்கரம் தரித்த சக்கரபாணி தன்னைவிட்டு
சிங்கத்தின்குட்டி மூளிநாயருகே சேருமடா
சொல்லச் சினந்தெழுந்தான் தோளிரண்டுபத்துடையான்
பல்லைக்கடித்துப் பிடித்திவனைக் கொல்லுமென்றான்
கொல்லப்பிடிக்க வந்த சேனை எல்லாம் தான் துரத்தி
கல்லால் எறிந்தோட்டிக் கார்வண்ணன் தூதுவனார்
அப்பிப்பிடித்து அரக்கரவர் சேனைஎல்லாம்
தாவிப்பிடித்துத் தலத்தில் நெருக்கிடவே
மூண்டெழுந்த சேனைஎல்லாம் மாண்டுழக்கிகொன்றுழக்கி
மீண்டுவந்து மாயவற்கு விண்ணப்பம் செப்பலுற்றான்
மட்டமர்ந்த தோள்பெரிய மாயவனே நாயகியை
விட்டிலனே சண்டாளன் என்றுரைத்தானங்குதனும்
அப்போது எம்பெருமாள் அதிவேகம் தன்னுடனே
இப்போதரக்கன் இலங்கை அழிக்கவென்று
இந்துவொத்த செம்முகத்தோன் எழுந்தருளிவந்துநின்று
வந்துவிட்டாரரக்கர் வடக்கு வாசல் அம்மானை
தேசமெய்க்கும் மன்னர்கண்டு திடுக்கிடவே
வாசல் நாலுங்கட்டி வளைந்து கொண்டாரம்மானை
வீறாக வந்தபடை மெத்த அதிர்ந்திடவே
ஆறாத கோபமுடன் அரக்கன் படைகூட்டி
மத்தணிந்து கச்சகைட்டி முந்தியட்டுவாளரக்கன்
பத்துமுடிக்கும் பருமணிகள் தானணிந்து
சேனைபடைத்தலைவர் தேர்கள் ஒருகோடி
ஆனைகுதிரை அவைககளொரு கோடி
விண்பறக்கச் செந்தூள் மிகப்பறக்கவெய்யோனை
பண்பொறுக்க வொண்ணாப் படை எடுத்தாரம்மானை
சந்தனமும் குங்குமமும் சாந்து மிகப்பூசி
வந்திருந்தான் சிங்காசனத்தில் மணிமுடியோன்
இருபது கண்ணும் எரிபறக்கத் தான்விளித்து
ஒருபத்துச் சென்னி உடைய இராவணனும்
சீறும் புலிபோலச் செம்பொன்மணித்தேரில்

ஏறினானை வாளரக்கன் எட்டுத்திற்கும் நின்றதிர
பத்துத்தலையும் பகல வானொளி போலே
மெத்த ஒளிபறக்க விண்ணுள்ளோர் தான்காண
கோலக் கொடிபறக்கக் கொற்றக்குடை நிழற்ற
மாலைக் குளலி அவள் வண்டோதரி விலக்க
வெறுந்தளத்துடனே வேந்தனிராவணனும்
நீண்ட சிலையும் நெடுவாளும் தானிறுத்தி
ஆண்டபடைகள் அனைவரையும் வாருமென்று
பூண்டுகட்டியிப்போ புறப்பட்டாரம்மானை
மாணிக்கத் தேர்கோடி அடர்ந்துதொடர்ந்துவர
எத்திற்கும் முன்னே இராமச்சந்திரன் முன்னெதிரே
பத்துத்தலையான் படையுடனே வந்தெதிர்த்தான்
கத்திக்கதறிக் கடல்போல் மிகமுழங்கி
மெத்ததிர்ந்து கொக்கரித்து வேந்தன் படையுள்ளோர்
கத்தும் கடலடைத்த கார்வண்ணன் தன்படையோர்
மெத்தமூரித்தார்கள் வேந்தன் படையிலுள்ளோர்
மீண்டும் பெருமாள் விபூஷிணரைத் தான்நோக்கி
ஆண்ட இலங்கை அரக்கன் படை தனைத்தான்
அண்டார் பிரான்படையும் அமரர் கோன் தன்படையும்
எண்டிசையில் என்னவொண்ணாச் சேனையுடன் வந்து கண்டான்
இன்னிலங்கை ஆளும் இலங்கை இராவணனார்
சேமத்திருக்கும் திருமகளைக் கொண்டுவந்த
சாமத்துரோகி படையென்றாரம்மானை
மெத்தப்பெருமாள் விபூசனனார் சொற்கேட்டு
தத்துப்பரிவாளரக்கன் தனம்முறிந்து தான்விழவே
எத்திசையும் உள்ளோர் இராசபெரும் படையை
குத்தித் தலையறுத்தார் குருதி குதிகொள்ளவேதான்
அன்றுபடைத்தலைவர் அறுபத்து நால்வருமாய்
சென்றெதித்தார் தம்முடைய சேனைபடையுடனே
மாயன் படைகள் வளிகெட்டலைந்தோட
துய்ய கணைகள் தொடுத்து மிகப் பொருதார்
கண்டாரிளைய பெருமாள் பெரும்படையை
துண்டதுண்டமாகத் துணித்துவிட வேண்டுமென்று
இருபடையும் கூடின எதிர்த்துப் பொருகையிலே
வருசிலை நான்கொளுவி வந்து நின்றாரம்மானை
சிந்தாமணித்தேரில் நின்று செங்கையிலே வாள்சுளற்றி
எதிர்த்தான் விபுசணன் மேல் எதிர்நின்றாள் லெட்சுமணன்

மட்டமர்ந்த சொல்லுடைய மாயர்க்கிளையவர்மேல்
பட்டுருவிவேலும் பரிந்ததுவே அம்மானை
மண்ணும் மறைநாலும் வானவரும் தேவர்களும்
எண்ணும் திருமாலும் இளையபெருமாள் விழவே
கண்கள் இருபத்துடையான் கடுஞ்சினமாய்
தங்கமுடி வாளரக்கன் தான் கொடுக்கமாட்டாமல்
பத்துத்தலையுடையான் பார்த்து மிக உரைப்பான்
கற்றைச்சடையானிருக்கும் கயிலைமலைதானுமல்ல
வங்கக்கடலுமல்ல மண்ணுமல்ல விண்ணுமல்ல
துங்காதியுமல்ல சூரியனார் தானுமல்ல
எண்ணுமியமனல்ல இந்திரனார் தானுமல்ல
கண்ணர் தம்பிதானெக்குக் கனமாயிருக்குதென்றார்
கடக்கக் குதித்து நின்று கையும்மெய்யுமாடாமல்
எடுக்கப்பிலன் குறைந்து நின்றானிராவணனும்
அன்னேரம் தன்னில் அனுமார் விரைந்தோடி
மன்னனிராவணன் தன் மணிமுடிகன் தான் தெறிக்க
தாவிக்குதித்துத் தரையில் விழுந்திடவே
கோவித்தனுமானும் குத்தினான் மார்புதனில்
குத்துப்பட்டமார்பில் கொம்பு கலகலவென
மெத்தத் தளண்டு விழுந்ததுவே அம்மானை
முன்னே இராவணனும் முற்கோடி பதித்த கொம்பு
பின்னே களண்டு விழுந்ததுவே அம்மானை
மறந்து விளி சுளண்டு வாளரக்கன் போய்விழவே
காந்தமலர்க்கையான் கருணாகரனனுமான்
வேந்தர் பெருமாள் மிகவெறுப்பார் நம்மை என்று
ஆராய்ந்து மிகவே அனுமான் திகைத்து நின்றார்
வேந்தன் இராவணனும் மெய்சோபந்தான் தெளிந்து
போர்ந்தங்கெழுந்திருந்து புன்குரங்கைத் தான்பார்த்து
மெச்சிக் குரங்கை மிகவே விரல் சுழற்றி
அச்சம் தெளிந்து அரக்கன் முகம் நோக்கி
உன்னுடையகைதான் இருப்புலக்கையோகெடுவாய்
என்றானிராவணனும் அப்போதனுமானும்
என்னை மெய்க்க வேண்டாம் இலங்கைக்கு ராசாவே
உன்னை மெச்சிக்கொண்டேன் உவகளந்தார்தம்மானை
பொன்னிதளின்தே தணியும் புகழ் சேரிராவணனே
என்குத்துப்பட்டுப் பிளைத்தவர்களில்லையிப்போ

ஆனபடியால் அச்சமந்தா நீ அரக்கா
நானேபெரியோன் என்று நீயே உரைத்தபடி
தானேபாரென்று தனுக்கொண்டெழுந்திருந்து
நானிலமும் போற்றும் நாராயணன் தூதன்
அனுமான் எழுந்திருந்து அரக்கன் தனைப்பிடித்து
தனுவால் எறிந்துவிட்டான் தானரக்கன் தன்னை இப்போ
தூக்கி எறிந்தான் தூரமொருயோசனைதான்
தாக்கியே வந்தனுமான் தன்னாயன் தம்பிதனை
கொண்டு வந்து முன்விட்டுக் கும்பிட்டாரம்மானை
பட்டதொரு தம்பியரைப் பார்த்து வியாகூலமாய்
கட்டிஅழுது கண்ணாற் புனல் சொரிய
தம்பிதனைவிட்டுத் தனித்திருக்க வல்லேனோ
அப்புவியில் இப்போ அரசாள வல்லேனோ
அன்னையர்கள் மூவருக்கும் அயோற்றி நகர் வேந்தருக்கும்
என்னவென்று சொல்லியாமிங்கினி இருப்போம்

### விருத்தம்

அன்னையும் பிதாவும் வேறாய் அயோற்றி மாநகரைவிட்டு
தன்னையும் பிரிந்தபோது தன்னுடன் பிறந்தபாவி
உன்னையும் பிரிந்து நானும் உய்வனோ உலகுதன்னில்
என்னையும் அறிந்து உன்னைக்கொல்லுமோ இயமன்தானே

### வேறு

என்கைச் சிலையில் இருக்கும் திறமறிந்து
வன்கையாற் கொன்றான் மன்னன் இராவணன்தான்
உன்னை இழந்து உலகுதனில் வாழ்வேனோ
என்னைப்பிரயாத இளைய பெருமாளே

### விருத்தம்

மனைவிதேடலாம் மக்களைத் தேடலாம்
புரவி ஆயிரம் பூதலம் தேடலாம்
பிறவி தேடொண்ணா மெய்த்துணைத்தம்பியே
உனை மறந்து நான் உய்யும் வாறெங்ஙனோ

### வேறு

படருமழகடைய பச்சை வண்ணன் கையாலே
தடவத்தடவ உயிர்பெற்றெழுந்தார் தம்பியரும்

ஆயர்திருத்தாள் அடிபயிந்து தெட்டனிட்டுத்
தூயோனும் வார்த்தை சொன்னாரோ ராமருக்கு
மாயன் சினந்தெழுந்து வாளரக்கன் சேனை எல்லாம்
சீராய் எரிக்கச் சீராமனும் உன் நினைந்து
ஏகினார் சக்கரத்தை எத்திசையும் தான்கலங்க
துரத்திப் பொருதார் காண்தொல்லை உலகதிர
பாரஞ்சு பத்துத்தலை அறுத்தாரம்மானை
அந்தத்தலை அத்தனையும் அப்போமுளைத்தெளுந்து
உற்றபெருமாள் புயங்கள் என்னென்று மறிகிலேன்
எண்ணிஇருந்து இனியமையு மென்று சொல்லி
மன்னை அளந்தார் முன்வந்து நின்றாரம்மானை
குன்றுமேல் வந்து நின்ற கொற்றவனைக் கோவிந்தனார்
இன்றுபோய் நாளைவா என்றார் இராவணனை
நின்று நெடுமூச்செறிந்து நினையாததெல்லாம் நினைந்து
சென்றுகுபுந்தான் திருமாளிகைதனிலே
ஆயனுடசேனை அகமகிழ்ந்து கொண்டாடி
கூவென்று தானெமுந்தார் குரங்குத் தளங்கலெல்லாம்
தோற்ற அரக்கன் தூளாகத்தான் முறிந்து
ஆற்றாமலோடி அடை கோட்டைப்பட்டிருந்தான்
மாலை செறிந்த குளல் வண்டோதரி விலக்க
மன்னவனே நீயும் மணி மகுடமிளந்து
பொன்னின் முடிஇழந்து புத்தி மிகக் கலங்கி
வண்டோதரிசொல்ல வாளரக்கன் தான் திகைத்து
தேரினில் நின்றங்திகைத்து நின்றான் வாளரக்கன்

## விருத்தம்

ஆண்டதோர் செம்பொற்பீடத்ததமர்ந்தவன் வருத்தமாகி
குண்டுயர் நினையாகில் கொடுஞ்சினத்துடன் நினையாகில்
இன்னுநம்தூதர் தம்மை இவ்வளி திருத்தி என்றான்
மன்றுளோர் மாண்டாலும் வாழ்வேனோ நானேயிங்கே

## வேறு

பார்க்கும் உலகம் பதினாலும் புகுந்தோடி
அரக்கரை எல்லாம் அணைத்தோடிவாருமென்றான்
காலனெனவே கங்கடுகி அவர் போனார்
வாலியராவானென்னும் வாளரக்கன் வந்து நின்று

மந்திரியை வெட்டுவித்த மன்னவனே நீகேளாய்
மகோதரனுமப்போ மன்னவனைக் தேற்றலுற்றான்

### விருத்தம்

வென்றவர் தோற்பார் தோற்றவர் வெல்வார் எவற்குமேலாய்
வென்றவர் அஞ்சார் அவர் அயிற்றலுக்கெல்லையுண்டோ
நின்றவர்தாழ்வார் தாழ்ந்திருந்தவர் நெறியின் மீதே
பூண்டவரிருவர் பேரைப்புகழ்தி புகளுக்குமேலாய்

### வேறு

இத்துயரமேது இராவணனே இப்போது
அத்தகிரிநாதருடை ஆண்மைகள் காண்பதற்கு
தத்துக்குரங்குத் தளங்கள் படும்பாடு
மெத்தனவே காண்பதற்கு சீரா நீ கும்பகனை
இக்கணத்திலே அழைத்து ஏவுமெனவேதான்
நலம்பெரிய வார்த்தை நமக்குரைத்தாய் நீயெனவே
குலம்பெரிய கும்பகனைக் கொண்டோடி வாருமென்றான்

### விருத்தம்

சென்றவர் பத்துநூறு சீரிய வேந்தரோடி
மன்றல் சேர் தொங்களன்றன் மனதினில் வருத்தம்மாறி
இன்றிவன் முடிவுமென்றோன் எளுப்புக வெண்ணி நின்ற
குன்றினுமுயர்ந்ததோளான் கும்பகன் கோயில்புக்கான்

### வேறு

கலங்கி அரக்கரெல்லாம் கால்சாய்ந்து போகுதடா
இலங்கை அழியுதடா எழுந்திரடா கும்பகனே
உறங்குகின்ற கும்பகனே உங்களண்ணர் சேனை எல்லாம்
இறந்துவிடப் போகுதடா எழுந்திரடா கும்பகனே

### விருத்தம்

உறங்குகின்ற கும்பகனே உங்கள் மாயவாழ்வெல்லாம்
இறந்துவிடப் போகுது எழுந்திராய் எழுந்திராய்
குரங்குபோல வந்தெதிர்த்த கால தூதர் கையினால்
உறங்குவாய் உறங்குவாய் இனிக்கிடந்துறங்குவாய்

கட்டுறுகவனமாவோர் ஆயிரங்கடிதுவாங்கி
மாற்றலர் உலகு ஆண்ட மார்பிடை வருத்தமாக
விட்டுற நடத்தி ஓட்டி மெல்லுற வருதல் கண்டு
தட்டுற உறங்குவான் போற் தடந்துயர் கொள்வதானான்

வேறு

கொட்டுடனே கோந்தாலி கூரிய வாள் கோடாலி
வெட்டித்திறந்தோர் விளைப்பிளை கும்பகற்கு
ஆனை குதிரை அடர்ந்து மிதித்துவர
சேனை மன்னர் தான் நடுங்கச் செங்காளமூதிவர
கோலி அடித்திதெழுப்பிக் கும்பகரன்றனையும்
வாரிஎழும்பி மறுகி மறுகிக் கிடந்தான்
எழும்ப நமக்கு முடியாது தானெனவே
தளம்பெரிய வாளரக்கன் தன்முன்னே வந்து சொன்னார்
கிங்கிலியர் தம்மைக் கிருபையுடனே அழைத்து
கங்கில் விடியுமுன்னே சடுதியில் எழுப்புமென்றான்
மதயானைகோடி வாள் பரிகள்தான்கோடி
பூதமன்னன் மார்பில் ஏற்றிவட்டமிட்டெழுப்ப
சுகமான நித்திரையாய் தூங்கினார் காணம்மானை
இருப்புலக்கை கொண்டு இரண்டு நூறாயிரம் பேர்
திருத்தமுடன் கொண்டு செவி தாடியில் அடித்தார்
அடித்த மன்னர் தான் சலித்து அறவே மிகமெலிந்து
எடுத்துலக்கை தன்னை எறியலுற்றாரம்மானை
அந்த இலங்கை உள்ள ஆடுமாடுள்ளதெல்லாம்
இங்கிவர்மேல் சாய்க்க எழுந்திருந்தார் கும்பகர்ணன்
அனர்தல் தெளிந்து ஆர்ப்பாரஞ்செய்து கொண்டு
இங்கிது என்னவென்று எழுந்திருந்தாரம்மானை
இலங்கை மதிக்க எழுந்திருந்தார் கும்பகர்ணன்
மூரி நிமிர்ந்து நெடு மூச்சுத் தானெறிந்து
வாரி எழுந்திருந்தான் வையம் திடக்கிடவே
கொள்ளைப்பசி தீரக் கொளுக் ள கட்டையும் சோறும்
வள்ளல் இவருக்கு மலை போல தான் குவித்து
பள்ள உடல்தறிந்து பாச்சினாப் போல் மதுவை
உள்ளதெல்லாம் வாரி ஒருக்காலேதான் குடித்து
தேன்மதுவும் மாங்கிசமும் தின்றாரேகும்பகனார்
கொப்பாகத் தின்றவனும் கொள்ளைப் பசிதீர
ஏப்பமிட்டு மெள்ள எழுந்திருந்தான் கும்பகர்ணன்

அண்ணார் அழைக்கப் போறேனெனவெழுந்தான்
மண்ணோர் மகிந்திடவே வந்து கண்டான் கும்பகர்ணன்
ஈரைந்து சென்னி உடைய இராவணனும்
வீரபட்டும் மன்னனுக்கு வியக்கினர் காணம்மானை
தம்பிவரும் வளிக்குத் தானும் எதிர் சென்று
வம்பலரும் தோளான் வலுவுடைய வாளரக்கன்
குன்றோடுகுன்று குலாவும்படிபோல
ஒன்றோடு ஒன்றுபட உறத்தளுவிக்கொண்டிருந்தார்
உற்றவியளம் உன்றுபட வாளரக்கன்
மற்று நிகரில்லா வலுவுடைய கும்பகற்கு
பத்துத்தலையுடையான் பட்டதுயரத்தனையும்
எத்தும்படைகள் எதிர்சென்று தோற்றதுவும்
மண்ணை அளந்தவர் முன்வந்து பொருததுவும்
எண்ணமுடனே இயல்வாகவே உரைத்தான்
ஆயனுடைய தேவி அகமகிழ்ந்து தானிருந்தாள்
பாயும் குரங்குத்தளமெல்லாம் ஆர்ப்பரித்தார்
வண்டோதரியும் மனதில் சலிப்பானாள்
கொண்டமணித் தேரிறங்கிக் கொடுந்துயரங் கொண்டிருந்தான்
அரக்கரை எல்லாம் அழைத்தோடி வாருமென்றான்
பாரக்கும் உலகு பதினாலுந்தான்தேடி
அரக்கரை எல்லாம் அழைத்தோடி வந்தார்கள்
பார்க்கும் புகளோனே பார்த்திபனே நீசென்று
குரங்குத் தளங்களையும் கொற்றவர்கள் தங்களையும்
நெருங்கிப்பிடித்து நீகொண்டு வாருமென்றான்
அந்தஉரை கேட்டு அரக்கன் தம்பி என்னசொல்வான்
இந்தவினை நீமுடித்தாய் என்னண்ணே என்று சொன்னான்
சீதையை இன்னும் சிறைமீட்டு விட்டிலையோ
வேதப்படி சாபம் விளைந்ததோ மன்னவனே
இலங்கை அரக்கர் பல உயிரும் மாளாமல்
இலங்கைக்குராசாவே லெட்சுமியை விட்டுவிடாய்
என்றமொழிகேட்டு இராவணனுமேது சொல்வான்
குண்டுயர்ந்த தோளுடைய கொற்றவனே நீகேளாய்
பெலங்கள் குறைந்தாலும் பேர்மாண்டு போனாலும்
இலங்கை அழிந்தாலும் லெட்சுமியை விட்டுவிடேன்
வேகமுடனுரைத்த வேந்தன் இராவணனை
ஆகமிகப்பெரிய அறிவுடைய கும்பகரும்
நாமும் நல்வார்த்தை நமக்குரைக்கப்போங்கண்டாய்

ஆயனுடனே அமர் செய்து செல்வதற்கு
நம்மாலும் உம்மாலும் நாட்டிலுள்ளோர் தம்மாலும்
ஆயன் படையை வல்லல் ஆகாது கண்டாயே
ஆனாலும் என்னை அழைத்து நீர்வார்த்தை சொன்னாய்
போனாலும் உன்னை விட்டுப் போகாது கண்டாயே
வந்துற்ற போர்க்களத்தில் மாற்றான் வருகைகண்டு
பின்னிட்டுப் போவர்களோ பேர்பெரிய அண்ணாவே
உன்யோடுடன் பிறந்தேன் உனக்குமுன்னே என்னுயிரே
மன்னா விடுகை வகைகண்டு தானுரைத்தேன்
ஆக மிகப்பெரிய அண்ணே பொறுத்தருளும்
தாகமுடனுரைத்த தன்சொல்லை இப்பொழுது
வென்றுவருவேனென்றிருக்க நீவேண்டாங் காண்
பொன்றுதல்ல தப்பாது போர்வேந்தே கேளுமென்றான்
தேவியரைப் இப்போ சிறை நீக்கிப் போகவிட்டார்
கோவியார் நம்மளவில் குறை ஒன்றும் வராது
என்றங்குபேச எரிஎனவே கண்விளித்து
குன்றென்ற தோளான் கும்பிட்டெழுந்திருந்து
கார்க்கோல மேனிக் கரியோனுடன் பொரவே
கட்டினான் கச்சை கதிர்வாள் வலதணிந்து
வட்டமரந்த சோடயமும் வல்லயமும் தானெடுத்தான்
நீலவரி வல்லயமும் நிறையொற்ற கைவாளும்
கோலவரிப்பட்டயமும் கொடுஞ்சுரிகையுமெடுத்து
வேலுமெடுத்து மிகத்தண்டுதானெடுத்தான்
சூலங்;களை எடுத்துச் சூழ்ந்தபடை கட்டுமென்றான்
இந்திரலோகம் எரிஎனவே தீப்பறக்க
மந்திரவாளை மருங்கிலே தான்சேர்த்து
குணம்பெரிய கும்பகனும் கும்பிட்டெழுந்திருந்து
வணங்கி வளிகொண்டு மன்னவனைத் தான்பார்த்து
இன்னுமொரு வார்த்தை இயம்புகிறேன் கேட்டருள்வீர்
மன்னா நான் தோற்றால் மாயனிட தேவியரை
அண்ணே நீவிட்டு அரசாளும் என்று சொன்னான்
எண்ணாமல் நீயும் எதிர்த்துப் பொருதாக்கால்
மன்னாமுடிவாகச் சொன்னேன் நான்
நின்னுடைய பேரில் நின்றதனால் சொன்னேனென்று
வில்லுத் தளங்கோடி வேந்தர் பலகோடி
சொல்லத்துலையாப் படை எடுத்தாரம்மானை

அறுபது வெள்ளம் படையுடனே வந்தெதிர்த்தான்
பறுபதம் போலே பிறப்பட்டாரம்மானை
மையாருங்கண்ணி மணவாளன் அச்சமுற
கைநாகந்தோர் புரவிகாலாட்கள் தன்னுடனே
சித்திரத்தார் நிறைந்த தேர்கள் நிறைந்து செல்ல
கதித்து வருஞ்சேனை கடல்போல் நிறைந்து செல்ல
பார்சிறந்த வில்லியவன் பாங்குடனே தேரேறி
பாரளந்தானோடுபடை பொருத வேணுமென்று
மண்ணதிர விண்திர விருதுபலசூழ
அப்போதுமாயன் அவ்விடத்தில் தானிருந்து
இப்போவிபூசணரே யிவனாரெனவுரைத்தார்
அப்போதடிதொழுது அடியேற்கு முன்பிறந்த
இப்போ இராவணற்கு நேரே இளையவன்காண்
என்றார் விபூஷணரும் மற்றயோர் தன்னுடனே
என்றமொழிகேட்டு இராமருளிச் செய்வார்
நீயே உயிரிழந்து மெத்தநொந்து போகாமல்
நீபோயவனை அணைத்தோடி வாருமென்றார்
மேலோருரைக்க விபூஷனணரும் சென்றுகண்டு
சேலையொதுக்கிச் சென்று நின்று வாய்புதைத்து
எனக்கு நீ அண்ணாவி இலங்கை அளியுமென்டு
அன்றுமுதல் அண்ணருக்குச் சொன்னேனறிந்தில்லையோ
ஆறாதகோவியுடன் அங்கிருந்து மாளாமல்
வாறீரோ அண்ணாவி மாயவரைக் கண்டிருப்போம்
அரசு பரிகலமும் ஆண்ட பரிதேருடனே
முரசுபல அதிர மூவுலகும் ஆண்டிருப்போம்
மன்னர் விபூசனரும் மகிழ்ந்துரைத்த சொற்கேட்டு
அண்ணனெனும் கும்பகனும் அவர்க்கருளி ஏதுசொல்வார்
வாசமுற்ற சோலை மதிளிலங்கை மன்னவனார்
ஆசையுடன் நமைவளர்த்த அண்ணர்தமை விட்டகன்று
சொல்லுற்றபோர் துடர்ந்து போவர்களோ தம்பியரே
கிள்ளை மதிலங்கை கிளைகெட்டுப்போகாமல்
கொள்ளை பெருஞ்சேனையுடன் கூட நின்று மாளாமல்
உள்ள பேர் தன்னில் ஒருத்தனாகிலும் பிளைத்து
எள்ளும் இளநீரும் இறைத்திடும் நீ என்று சொன்னார்
எல்லோரும் நாங்கள் உடனிறந்து போனாக்கால்

நல்லவிபூசணரே நற்பதவி சேருமென்றார்
இன்று முதல் நமக்கு உடற்பிறப்பு மில்லையென்று
கண்டு இருவருமாய்க்கட்டி மிகஅழுது
தமையனிடதாள்தொழுது தானும் விரைந்தோடி
இமையோர்பதி ஆளும் இராமர் முன்னே வந்து நின்று
அய்யனே கேளீர்அயோற்றிக்கு ராசாவே
மெய்யனே எத்தனை தான் வேண்டி உரைத்தாலும்
ஆதியான் முன்னே அபையமெல்லாம் கூறியபின்
வேதியனந்த விதிவளிகாணென்றுரைத்தார்
மாதரே போல வளிந்தோடவல்லேனோ
முன்சென்றமர் பொருது பிளைத்திருக்க வல்லேனோ
வேதியனாரந்த விதிப்படியே யல்லாது
மாதினருளால் மடிந்தங்கிடுவோமோ
என்றாரேகும்ப கன்னனாரிப்பொழுது
அன்னேரம் தன்னில் அரிராமர் தன் படையோர்
மன்னன் கும்பனுடன் வந்து பொருதனராம்
அரிராமர்தன் படையை அரக்கன் படையிலுள்ளோர்
உரத்துப்பொருதார் ஒருவற்க்கொருவர் சென்று
அரக்கரெல்லாம் பட்டு அவனிதனில் போய்விழவே
பாற்கும்புகளுடையான் பச்சை நிறத்தான் படையை
குரங்குப்படைகள் சாயக் குன்று மலை எடுத்து
படைத்தலைவர் மேலே எறியலுற்றாரம்மானை
சிமித்திரையாள் மைந்தன் சிங்கம் போல் வில்லுடனே
அடுத்துவருமரக்கர்கள் அப்போது பட்டுவிழ
இராவணனார் தம்பியரும் இராமருடதம்பியரும்
பார்முழுதும் மெய்கப் படைபொருதாரம்மானை
எதிர்த்துப் பொருதார் இலட்சுமணர் அப்பொழுது
அதிர்த்துவரு மப்பு கண்டு அனைவரும் பின்னிடவே
போர்வேந்தன் கும்பகன்ன் போய்விட்டானப்பாலே
ஆலமெனப் பொங்கி அவற்கு இளையோனும்
சூலமெனவே அரக்கன் சுக்கிரீபன் வந்துகட்டி
மற்போர் பொருதவனை மார்பிற் பட அடித்து
அல்லையொற்ற மேனி அரக்கனிலக்காயெடுத்து
மண்ணில் விளக்குத்தி மார்போடேதானெடுத்து

அண்ணனிராவணற்கு அருகிருக்கக் கொண்டுசென்று
எம்பெருமானப்போ இராமச்சரந்தொடுக்க
கையை நெகிழ்ந்தவனும் கண்ணைத் துடைக்கலுற்றார்
துய்யதுரை சுக்கிரீபன் சூழ்ந்தவாள் தானுருவி
காதிரண்டும் மூக்கும் கடுகி அவனறுத்தான்
பாராமலடிவைத்துப் பதுங்கின்றாரம்மானை
எடுத்தார்கள் வானரங்கள் ஆரியனும் தான்மகிழ
மாற்றானார் தம்பி மதம் பெரியகும்பகனும்
சண்டாளன் நம்மைச் சதித்தானே என்று எண்ணி
நின்றானனேகம் நெடுமூச்சித் தானெறிந்து
அரக்கனளித் தானிலங்கை எல்லாரும் பார்த்து நிற்க
மூக்கறிருக்க முடியாதே என்று சொல்லி
மெத்ததிர்ந்து கொக்கரித்து வீரபாசையுங் கூறி
பத்தியதாகப் பதறத்துக் கொல்லலுற்றான்
சினத்துப் பொருதான்காண் சிங்கம் போற்கும் கண்ணன்
கனத்தபெரும்புகளான் கார்மேகமேனியனும்
கத்துங்கடல் மாயவனார் கையிரண்டும் துள்ளவெய்தார்
மெத்த அவன்காலால் வீசி மிகப் பொருதார்
வட்டமிட்டுக் காலால் வளைத்து வருமளவில்
பட்டுப்பட வானரங்கள் பற்காட்டி ஓடலுற்றார்
மாலோன் வெகுண்டு வாளரக்கன் தம்பியர்தன்
காலிரண்டும் வீழக்கணை தொடுத்தாரம்மானை
நீலமணிபோலே நிலத்தில் விழுந்தவனும்
மாயனுடசேனை வானரங்கள் தான்மாள
அம்புவிதானும் அகலமுள்ள அம்மியுமாய்
கும்பகன்னன் அம்மிக்குளவியுமாய்த் தானுருண்டான்
ஆயனே எங்கள் அயோற்றி நகற்கரசே
மாயனே அந்த மதிகேடன் செய்தகிளை
சேரப்பொறுத்தருளும் சென்னி அலையில்லா
நீரும் கணைதொடுத்து நில்லென்று தானுரைத்து
பாவியுடன் பிறந்து பட்டதுதான் போதுமென்று
ஏவிவிடும் நீரும் ராமச்சரந்தன்னை
மாலை முகம் பார்த்து மன்னன் தம்பிகும்பகனும்
வேலை தனி லென்னுடலை விழும்படி உதவு மென்றான்

## விருத்தம்

மூக்கில்லா முகமீதென்று முனிவரும் அமரர்தானும்
நோக்குவார் நோக்காமலுன் கணையினால் என்கழுத்தை
நீக்குவார் நியக்குவாய் நின்தலையைக் கருங்கடலில்
போக்குவாய் இது உன்னை வேண்டுகிறேன் போறென்றான்

## வேறு

ஐயனே எங்கள் அரும்பொருளே ஆரமுதே
மெய்யனே விட்டுணுவே வேதாவை ஈன்றவனே
சூழ்ந்தவினைகள் தொலைந்து தூளாய்விழவே
வாழ்ந்ததேனுலகில் மண்ணாசை தன்னாலே
பொங்கு சமுத்திரத்தில் புண்ணியனே என்னுடலை
நீக்குவாய் என்று நெடியோன் பதம் வேண்டி
வம்பலரும் தோளான் வரம் வேண்டி மன்றாட
வரங் கொடுத்து அப்போ வாளி வாங்கிப் பெருமான்
காந்தலை அறுத்துக் கருங்கடலிற் போடலுற்றார்
அம்புதலை கொண்டு ஆளிதனிற் போட
கண்டு கடல் கலங்கி கண் புரண்ட தம்மானை
வீசுதலை நாசியிலும் மிக்க செவிவாய்தனிலும்
பரந்தகடல் சுற்றிப் பார்தனையாண்டதும்
அவ்வானம் போலே அகன்ற கலத்தனையும்
செவ்வானம் போலே சிவந்ததுவே அம்மானை
அன்ற பெருமாள் அவர்விட்ட சக்கரமும்
பாற்கடலில் மூழ்கிப் பச்சை வண்ணன் கைதனிலே
ஏற்கவே வந்து இருந்ததுவே அம்மானை
ஆயருடைய சேனை ஆற்பரித்தாரம்மானை
தூதன் விரைந்தோடிச் சொன்னானிராவணற்கு
சீதை மகிழ்ந்திருந்தாள் தென்னிலங்கை மானிலத்தே
தரையில் விழுந்தளுது தம்பி எனக்கதறி
இறைவர் சிரிப்பார் என்றேங்கி மிகவாடி நின்றான்
அப்போ இரவி அடைந்தான் குடதிசையில்
மைப்போல் இருளெங்கும் வந்து வந்து வளைந்ததுவே
குன்றெடுத்த தோளுடைய கும்பகர்ணன் பட்டபின்பு
நின்று புலப்பி நெடுந் துயரம் கொண்டிருந்தான்
எண்டையிலும் வாடி என்செய்வோமென்றுரைத்து
மட்டமர்ந்ததோளுடைய மன்னவனார் அப்பொழுது

அட்டகிரி போலே அலறிவிழுந்தளுதான்
மன்னன் அளுதிடவே மகோரத்தனும் வந்து நின்று
தென்னிலங்கை மன்னன் சிறந்த சொற்கேளான்
இந்த வலிகெட்டு இருந்தாயே இராசாவே
மாய்கை பல வல்ல மன்னா நீ இப்பொழுது
ஆயருடன் போர்பொரவே அசுரர்களில்லை இனி
கேளாய் இராவணரே கீழுலகமத்தனையும்
ஆளுவான் மாயா இராவணென்றொருவன்
மன்னவனைத் தானளைத்து வார்த்தை பல உரைத்து
தென்னவனே நீயும் செலுத்துவாய் என்றுரைத்தான்
அன்னவன் சொல்ல அவனை மிக அளைத்து
மன்னன் மாயிரக்கன் வந்து கண்டான் அம்மானை
மன்னவனே தென்னிலங்கை ஆளும் இராசாவே
தன்னந்தனியே தளம்படையைத் தோற்றாயே
வம்பலரும்தோளுடைய மன்ன இராவணரே
தம்பியரைத் தோற்றுத் தளங்குலைந்து போனாயே
என்னை அளைத்திலையே இலங்கைக்கு ராசாவே
முன்னோனை பின்னோலையும் மூர்க்கமுடை மன்னரையும்
சென்றுபோர் வென்று சீராமரையும் தம்பியையும்
கொண்டுவருவேன் நான் கொற்றவரே என்று சொல்லி
தப்பாமற் கொன்றிடுவேன் தாமங்கிருவரையும்
இப்போ எடுத்து வா என்றான் வாளரக்கன்
அல்லாரும் மேனி அரக்கன் இவை உரைக்க
எல்லாரும் காண இராமரையும் தம்பியையும்
கொல்லாமல் நீஎடுத்துக் கொண்டு வாகொற்றவனே
மல்லாரும் தோளான் விழ கொண்டானம்மானை
சொன்ன வியளம் விபூஷணற்குத் தூதுவர்கள்
மின்னி மறைந்தாப்போல் வந்து விசளமிட்டார்
வந்தவர்கள் சொன்னவளிவியளம் அத்தனையும்
செந்தாமரைக் கண்ணன் திருமாலுக்குச் செப்பிடவே
வீறாகவே நடந்து விபூஷணருமப்போது
அறிவார்த்தை சொல்லிக் கும்பிட்டு அங்குநின்று
மாது புயத்தரசே மன்னவனே இன்றிரவு
சூதானமுண்டாய் யிருமென்று சொல்லி வந்தார்
கூசாமல் தான் குரங்கு அரசனையுமங்களைத்து
வாறானேயந்த மயிராக்கனின் றிரவு
காலோனொத்துக் கவியனமானுடைய

வாலாலே கோட்டை இடுவானாம் மயிரக்கன்
கோலமுடன் வந்தனுமான் கோட்டை இடுவதன்முன்
வாலாலே கோட்டைஇட்டான் மண்ணளவும் விண்ணளவும்
கொந்தலரும் தோளனுமான் கோட்டை இடுவதென்றான்
அந்திபட வந்து ஆதித்தன் போய் மறைந்தான்
மண்டலத்தின் கீழே மயிரக்கன் வாறவளி
புண்டரீகவாவியிலே பூந்தாமரை மணக்கும்
தாடாண்மை தாண்டி தாவிப்புகைபோலே
விந்தைசேரும் புயத்தான் விபூஷணரைப் போலே
வந்தான் மயிரரக்கன் மாயன்தளந்தனிலே
சிந்தினான் மாயப்பொடி சேனைத் தளந்தனிலே
சிந்தூரமென்னச் சிதறினர் காணம்மானை
மாயனையும் தம்பியையும் மாணிக்கப் பெட்டியிலே
காயங்குலுங்காமல் கட்டித்தலையில் வைத்து
பெட்டியிலே தான் வைத்துப் பேசாமல் கொண்டு வந்தான்
வட்டமதிள் சுற்றி வளி எங்கும் காணாமல்
வீசுபுகழ் அரக்கன் விபிசணரைப் போலே
ஆசுவனம் போக அனுமான் வளியை விட்டீர்
அப்போதனுமான் அவனுரைத்த சொற்கேட்டு
இப்போது கேளாய் இராவணனார் தம்பியரே
வல்லாண்மை சொன்ன மாயிரக்கன்வாராமல்
கல்லாலே கோட்டை கட்டிக் கதவடைத்துப் போட்ட
வாலாலே கோட்டை கட்டி வைத்திருந்தேன் மன்னவரே
நூல்போகவொண்ணாது நுன்செவியினூடே போ
என்று செவியைத் திறந்தானனுமானும்
மன்னன் செவி கடந்து மதிள் கடந்து போகலுற்றான்
போனதற் பின்மாயன் படைத்தலைவன் விபூசனனார்
ஆயன்படைத் தலைவர் அப்போது வார்த்தை சொல்வார்
எச்சரிக்கையாக இருமென்றாரம்மானை
என்றமொழி கேட்டு இயலனுமான் சொல்வான்
இப்போது போய்ப்பிறப்பே எப்போது என்றிருந்தேன்
நானல்லாக் காணனுமான் நன்றாகக் காத்திருந்தேன்
என்றேங்கித் தானெமுந்து இருபேரும்தான் சலித்து
பரிந்தெடுத்து மாயவரைப் பாயலிலே தேடலுற்றார்
இருந்த இடத்தே தேடி இருவரையும் காணாமல்
பகைவன் சதிதானோ பாவியே என்று சொல்லி
உபையந்தளத்தார் ஒருவருக்கும் சொல்லாமல்

## விருத்தம்

சந்திரனில்லா வானம் தாமரை இல்லாப் பொய்கை
மந்திரி இல்லாவாசல் மத கரியில்லாதவன் போர்
தந்திரமில்லா ஆண்மை தனமில்லா இளமை போல
இந்திரனில்லாத் தேவர் இராமனில்லாத சேனை

மூப்பில்லாக்குமரி போலே முனையில்லானளித்த சேனை
காப்பில்லாக் கொடியசெயலை கரையில்லாநிறைந்தவாவி
கோப்பில்லாக் கொடியோராடல் இருவில்லாநிறைந்த ஞானம்
ஆப்பில்லாச் சகடுபோலே எங்கள் அரசனில் லாதசேனை

குயிலில்லா மாவின் சோலை குணமில்லாப் பலநூல் கல்வி
வெயிலில்லா உலகமுவேரில்லா மரங்கள் வானில்
புயனில்லார் பைம்பொன்வானம் புகலில்லான் நாடுகற்றோர்
இயலில்லாச்சங்கம் போலும் எங்கள் இராமனில்லாத சேனை

மாதரைப்போலே நாமும் முன்சிறுக்கமே செய்து நின்றால்
காதவரிராமன் தன்னைக் காணம் வாறேதோ கண்டாய்
பாதரில்லாதலத்தும் பண்ணாதி பாதலத்தும்
வேதனார் தலத்தும் தேட நான்முகன்றன்னைக் காண்பாய்

வேலையைக் கலக்கி அண்டம் வெடிபடப் படைத்த முன்னோன்
ஆலையில் நெருப்பை மூட்டி அக்கரை சுருக்கி எங்கும்
கோல காற்றோடேஏகிக் கூற்றையும் கொல்வனே நான்
ஏலவார் வென்திண்டோள் எங்களிராமனைக் காணோமாகில்

## வேறு

என்ன செய்வோமென்று இருவருமாய் நிற்பளவில்
அஞ்சாதே என்று அனுமான் மனம் தேற்றி
விண்ணுலகும் மண்ணுலகும் விரைந்தெங்கும் தான்தேடி
கண்ணில் அவன்தனை நான்கண்டு கொண்டுவாறேன் நான்
மண்ணுலகுக்குள்ளே வளிகாட்டவல்லீராய்
ஏமலியாமல் எழுந்திருந்து விபூசணரும்
தாமரைத் தண்டில் தாவிப் புகைபோலே
நாமவரைக் காண நடந்து நீர் செல்லுமென்றார்
அந்த அனுமான் உடனே உருமாறி
இந்த உலகில் எழுந்து வரவேண்டுமென்று
புக்காத பூமித்துவாரத்தின் சென்றுபுக்கி

அக்கினிக் கோட்டை அடுத்து நின்றாரம்மானை
அக்கோட்டை தான் கடந்து அப்பாலே தானோடி
தேடி அனுமான் திகைத்தெங்கும் காணாமல்
வாடி மனம் தளண்டு வந்தான் குளுக்கரைக்கே
மாயாமயிராக் கண்மரு மகனைத் தான் பிடித்து
காளிக்கிரை கொடுக்கக்காவல் வைத்தராம்மானை
வாரைவெண்டபூ முலையாள் மயிராக்கண் தங்கையவள்
தாரைவிளி நீர்சொரியத் தண்ணீர் எடுக்க வந்தனள்
மங்கையரே என்னுடைய மாதாவே நீர்கேளீர்
எங்களுலகாளும் இருவர் வரக் கண்டீரோ
என்றமொளிகேட்டு இளங்கொடியுமென்ன சொல்வாள்
இன்றிரண்டுபேரைப் பிடித்து வந்து இப்பொழுது
மண்ணில் மிகப்பெரிய மாகாளி எண்ணுமொரு
பெண்ணுக்கிரு வரையும் பெலியிடக் கொண்டுவந்தான்
மெலியுங்கொடியுடையாள் வீர மாகாளியற்கு
பெலியிடவேனுமென்று பின்னே பெலி கொடுத்தான்
மங்கையரே உம்முடைய மக்களையும் தானமிட்டு
சிங்காசனத்தில் வைத்துச் சேமபட்டங் கட்டுகிறேன்
தண்ணீரிடையாளே தண்ணீர்க் குடத்துடனே
என்னை அடக்கிக் கொண்டு போக நீவல்லாயோ
தாரிருக்கும் தோளானே தண்ணீர் குடம் தன்னை
நீர்நிறுத்துக் கொள்வான்காண் நெட்டூரன் கேடனென்னை
பெண்ணமுதே அஞ்சாதே என்பேரனுமான் என்றுசொல்லி
விண்ணுறவோங்கி மிகவளந்து காட்டலுற்றான்
கண்ணாரக்கண்டு கனக்க மனம் மகிழ்ந்து
பண்ணோர் மொழியாரும் பார்த்து நின்றங்கேதெனவே
கொண்டு போகவல்லே நான் கோலமெனக்கொள்ளுகிறாய்
தண்டாமரைப்புயத்தான் தன்னுடலைத்தான் சுருக்கி
கொப்பொடியத்தாண்டிக் குவளையார் கடந்தனிலே
தப்பனையாகத் தரித்தனர் காணம்மானை
தன்மரும் பூங்குளலாள் தண்ணீர் முகந்தெடுக்க
எண்ணி மயிரரக்கன் இராவணன்தன் வாசல்புக்கான்
கண்சிவந்து பார்த்துக் கபாடம் வருகுதென்று
தண்ணீர்தனையும் தராசியில் நிறுக்க அவர்
கண்ணன்மால் தூதன் கடுகி அணுக்கொண்டு
குடத்தை உடைத்தனுமான் கொக்கரித்து மார்புதட்டி
தடத்தை விரித்துத் தவிடு பொடியாக்கலுற்றான்

போயரக்கன் வாசல் புகுமளவில் மாயஅரக்கன்
வாசல்தனில் நின்று மன்னரனைவோரும்
திக்கெங்கும் ஓடித் திசை எங்கும் தான் வளைந்து
தக்கவலியுடைய தனிவீரனைச் சூழ்ந்து கொண்டார்
மின்னி மறைந்தாப் போல் வேதக் கவியனுமான்
உன்னிப் பொருதார் உலகம் திடக்கிடவே
அய்யகோவென்று அரக்கரபையமிட்டு
கையாரக் குத்திக் கழுத்தை நெருக்கிடவே
பாங்காக வந்த பெருமரக்கர் சேனை எல்லாம்
நீங்காத வண்ணன் நெடுமால் விடுதூதன்
கொன்றுளக்கி நின்றெதிர்த்துக் குத்திக் குடல்பிடுங்கி
வென்றனுமான் நின்று விளியால் விளக்கெரிய
வார்த்தை மிடுக்குடைய மாயரக்கன் சேனை எல்லாம்
கரத்தால் பிடித்துக் கார்க்குருதி ஆறோட
அரக்கர் குலத்தை அழித்தானனுமானும்
பார்க்கும் புகளுடைய பச்சைவண்ணன் தூதனவன்
தலங்களதிர்ந்திடவே தனுக்கொண்டுதாய்பாய்ந்து
மயங்கி அரக்கர் மதிகெட்டுடைந்தோடி
அடித்தங்குளக்கி அனுமானணிமதிளை
உடைத்துப் பொசுக்கி எங்கும் எரிகொளுத்தி
தோற்றே அரக்கர் துணிபட்டுடைந்தோடி
ஆற்றாமலோடி அரண்மனையினுட் புகுந்தார்
மண்ணுலகுக் கீழுலகில் ஆளுகின்ற மாயரக்கன்
கண்ணுக்குக்காணாப் படை எடுத்தாரம்மானை
அன்றரக்கன் சேனை எல்லாம் அனுமான் அடித்துளக்கி
கொண்டெறிந்தானெங்கும் கோலப்பெரும்படையை
ஆளி உடைந்தாப்போல் அனுமானும் ஆற்பரித்து
மாளிகைதான் புகுந்து மாயரக்கனைப் பிடித்து
வாலால் வலுவுடைய மன்னவனார் தூதுவனார்
பேர்பெரிய காளி பெலிபூசை கொண்டதற் பின்
தார்வீழும் பூங்குழலாள் தண்ணீர்க்குடத்துடனே
வாள்வித்தாள் மக்களுக்கு மணிமகுடமும் சூட்டி
ஆளி உலகளர்ந்த ஆயனையும் தம்பியையும்
கீழ்பூமியாலே கிழக்கு வெளிக்க முன்னே
ஆரூரறியாமல் அடைகோட்டடைக்குள்ளிருந்த
ஊரும் உலகம் உறக்கம் தெளிய முன்னே
ஆளிதனிற்றுயிலும் ஆயனையும் தம்பியையும்

கோழிகூவமுன்னே கொண்டு வந்தாரம்மானை
கொண்டு வரக்கண்டு கோபாலனையும் தம்பியையும்
எண்டிசையும் போற்றும் இராவணனார் தம்பியரும்
கட்டி அணைத்தெடுத்துக் கண்ணார் கருணை செய்து
அட்டதிக்கும் போற்றும் அனுமாரைக் கொண்டாடி
ஆலாத்தி சுற்றி அலங்கரித்தாரம்மானை
வாலாலே கோட்டை கட்டி வைத்திருந்தாரன்னேரம்
விளித்துப் பெருமாள் விடிந்திரண்டு நாளிகையில்
அனைத்து விபூசணரை அரக்கன் தானின்றிரவு
வந்திலனோ அந்த மாயரக்கன் தானுமென்றான்
செந்தாமரைக் கண்ணன் திருமாலுக்குரைத்திடவே
அந்த அனுமான் முதல்வனைக் கைதொழுது
அந்தரக்கன் முன்னே அவன் வீறு சொன்னமையால்
இன்றைக்கு வந்திலனே எங்கெனவே பின்னைஅவன்
என்றைக்கும் வாறார் என உரைத்தாரம்மானை
வட்ட உலகழ்ந்த மாயவனார் அப்பொழுது
கட்டுப்படா அரக்கனவன் படையைத் தான்கூட்டி
எண்ணரிய வானரங்கள் எழுபது வெள்ளம்சேனை
விண்ணுள்ளோர் தான்காண மிக்கவிடுதூதன்
கோவிந்தரைஅந்தக் குரங்குப்படையுடனே
ஏவினாரந்த இலங்கை இராவணன்மேல்
தாவி விழுந்து சலிப்பாகத்தானிருந்தான்
மாண்டானோ அந்த மாயரக்கன் தானுமென்று
எண்டிசையும் போற்றும் இலங்கை இராவணனும்
அதிகாயனைச் சென்றழைத்தோடி வாருமென்றான்
மதியேபெரிதுடைய மன்னன் உரைத்திடவே
சடுதியாக வந்து கண்டு அதிகாயனையும்
பதியாளும் மன்னர் பறந்து வரச்சொன்னார்காண்
அதிகாயாவென்று அவர்களுரைத்திடவே
மதியுடைய மன்னவனை வந்து கண்டாரம்மானை
வண்டோதரியாற்கு வாய்த்த திருமகனே
அன்றொருலகு அடங்கலையும் கார்த்தவனே
கும்பகன்னனுடனே கூடவரும் சேனை எல்லாம்
அம்புவியிலுள்ள அனைவரையும் கொன்றுளக்கி
விண்ணுலகிலாள விரைந்தங்கே போகவிட்டு
இராமனையும் தம்பியையும் அந்தவளிபேர்களையும்
தும்பி துளைத்தது போல் துய்யவனே நீசென்று

வெய்யசினம் தீரவிட்டு விண்ணில் ஏற்றிவிட்டு
அய்யனே என்று சொல்லி அமர்ந்திருந்தாரம்மானை
மன்னரிருவரையம் வானுலகம் ஏற்றிவட்டு
தண்ணீர்மிடுக்குடைய சாம்புவனையும் துரத்தி
அனுமானுடன் குமுதன் அங்குதனையும் துரத்தி
அனுமாரும் சுக்கிரீபன் அத்தனையும் கொன்றுளக்கி
வருவேனெனச் சொல்லி மன்னன் அதிகாயன்
பொருஞ்சிலைகை ஏந்திப் பிறப்பட்டாரம்மானை
ஊரில் படைகளெல்லாம் ஒக்கவே போகவென்று
பாராளும் மன்னன் பரிந்து விடைகொடுத்தான்
வாருமென்று சொல்லி மகிழ்ந்து விடைவாங்கி
போருக்கிசைந்து புறப்பட்டாரம்மானை
நூறு வெள்ளம் சேனை நொடிக்குள்ளே தான்சென்று
ஆறுவெள்ளம் புரவி ஆனை அதிலிரட்டி
தேரிரண்டு கோடி திசைகள் பறந்துவர
பாரிடமெங்கும் பரந்துதான் சூழ்ந்துவர
சென்றானரக்கன் சேனைபடையுடனே
வேண்டி லெட்சுமணர் விபூசரைத்தானளைத்து
கொதித்து வந்த சேனையுடன் கூடி நின்றாரானவே
அதிர்த்துப் போர்வெல்ல அதிகாயனென்றொருவன்
இந்திரசெயிற்றுக் கிளையானிவனெனவே
அந்தரத்தில் உள்ள அமரரை வென்றவன்தான்
ஆருமறியா அருங்கயிலை தானெடுக்க
ஆருமறிய அரியசிலை வளைத்தோன்
அதிகபிலவான்காண் அதிகாயனென்னுரைத்தார்
விதிவளியால் வந்தான் என்றார் விபூஷணரும்
அன்னேரம் தன்னில் அரியபரிகுலமும்
மன்னரிராமன் வரவிட்டவான்படையும்
தன்னிலிருபடையும் தானெங்குமூடி
உன்னிப் பொருதார் ஒருவற்கொருவர் சென்று
குரங்குப்படைகலெல்லாம் குலைகலைந்து தாளெனவே
நெருங்கி அரக்கர்படை நின்று பொருதிடவே
படைத்தலைவர் சேரப் பருவதங்கள் தானெடுத்து
உடைத்தரக்கரோடு உறுக்கிப்பொருதனர்காண்
படைகெட்டுடைந்தோடப் பார்த்து அதிகாயன்
நடைகொண்டு தேரேறி நாலுதிக்கும் அஞ்சலென்று

வானரங்கன் மேலும் வாயு மகன் மேலும்
தானங்கு வில்லெடுத்து சரமாரியெய்யலுற்றார்
வெம்பிமளமளண்டு வில்லெடுத்துலெட்சுமணர்
நம்மில் வலுவுடையயானோ அரக்கன்மகன்
என்று சினந்து எரிஎளவே தான்விளித்து
நின்ற அனுமான் நெடுந்தோளின் மீதேறி
வில்லெடுத்து நானேற்றி மிகப்பெரிய அம்பெடுத்து
அல்லல்படுவாரை அஞ்சலென்று கையமர்த்தி
தோள்மீதில் நின்று தோன்றியே லெட்சுமணர்
வாளிபல எய்தார் மழைக்கால்பொளிந்தாப்போல்
வந்து படும் அம்புதனை வாளியினால் தான்விலக்கி
அந்தரத்தோர் போற்ற அதிகாயன் அம்புதொட்டான்
வீரற்கிளையான்தான் மேலிற் கவசமற்றும்
பாரில் விளக்கண்டு பெருமரக்கன்றன் மகனார்
ஆகம் மிகப் பொங்கி அடர்ந்து மிகப் பொருதான்
வாகுடனே கொல்ல வகை நினைத்தானம்மானை
அன்னேரந்தன்னில் அரிவிட்டுணுக்கிளையோன்
இன்னேரந்தன்னில் இவனைக் கொல்லவேணுமென்று
மல்லமரும் தோளுடைய மாயவனாதம்பியரும்
தொல்லை எனகேளும் திக்கெங்கும் போற்றிடவே
துய்யதொருவாளி தொடுத்தெய்தாரம்மானை
வெய்யகணைதொடுத்து வீரக் படைதுலைத்து
மட்டமர்ந்த தோளாண் மணிமுடியைத் தானறுத்து
திட்டெனவே ஆளியிற்போய் சென்றங்குதான்மூழ்கி
அம்பிறாத் தூணியின் மேல் அக்குறைந்தாரம்மானை
வம்பலரும் தோளுடைய மாயன் படைகலெல்லாம்
துந்துமிகளாற்பத் தடிகள் பலமுழங்க
அந்தரத்திலுள்ள அரனரும் போற்றி செய்ய
ஆரியனார் சேனை ஆர்ப்பார மானதுவே
சூரியனும் உச்சியின் மேல் தோன்றி நின்றம்மானை
மக்களொருமூவருடன் மகாசேனை பட்டதென்று
புக்க இராவணற்குப் போயுரைத்தாரம்மானை
அரக்கன் விழுந்தலறி அய்யகோவென்றுரைத்தார்
குரங்;குப் படையானோ கொன்றானென அழுதான்
எழுதற் கரியான் இலங்கை நகரி எல்லாம்
அழுத குரலாய் அழுதனர்காணம்மானை

## விருத்தம்

குழுமிக்குலைவாள் அரக்கியர் கூந்தலார்
தழுவித்தழுவி தவப்பேயாதித் தங்களொடுவார் போற்றி
அழுமித்தெளியாத்தூரே காலனென்றன் உயிற்புயத்தான்
வெழுவிற்றனி என்றெண்ணி இந்திரசெயிற்றமுதான்

கெட்டேனடா உற்றதே தெண்டு கிடந்தாராயரும்
மட்டாது நடங்கினார் மாற்றமறிந்து நின்றான்
ஒட்டநெடுந்தேர் கட்டி ஏறி இமைப்பிலுற்றான்
கட்டார்தன் காட்டிய தாதையைச் சென்று கண்டான்

கண்டானிறை ஆறிய நெஞ்சின் கைகூப்பி
உண்டாக்கியதே தென்றுவன்றாலும் மூப்பிமாரை
கண்டானுயிர்க்கா லணிக்கும் பணிக்கும்பனொரு
விண்டானடைந்தான் அதிகாயனெனும் வீரனன்றான்

செல்லாதென் முன்னஞ் சுடரைச் சுடாத்துண்டு கண்டான்
பல்லவதாரத்தை அதுக்கிவிண் மீதுபார்த்தான்
எல்லாரு மிறந்தாரென்றேங்கி நின்றான்
வில்லாளரை எண்ணிய வீரற்குமுன் நிற்கும் வீரன்

## வேறு

இந்திரனை வென்றவில்லு ஈசன் கொடுத்த சரமும்
அந்தரத்தோரெல்லாம் அடைவாயிந்த சரமும்
கம்பமதயானைக் காலாட் குதிரைகளும்
அம்புவியிலெல்லாம் அடைவாய்ப்பரந்துவர
அம்பிறாத் தூணிகட்டி ஆதிசரமெடுத்து
செப்புமடமாதர் சேக்கவரி தானிரட்ட
கொடிய சினத்துடனே கோவித்தெழுந்திருந்து
படிபொறுக்க வொண்ணாப் படைஎடுத்தாரம்மானை
இப்போ அரக்கர்படை எண்ணித் தொலையாது

## விருத்தம்

தேராயிரமாயிரம் யானை கோடி தன்மகாசேனைகோடி
போரானை புறத்தினில் இரட்டிச்செல்ல
தாரார் புரவி கடல்முன் செல்லத்தானை வீரர்
போராளிமுன் செல்லச் சென்றனன் போற்றி எல்லாம்

## வேறு

சேனைதனை வேண்டான் தேராயிரங்கோடி
ஆனைகதிரை அதிலிரட்டி யாளி சிங்கம்
விண்ணோர்கள் பார்க்க விரைவுடனே தேரேறி
விண்ணிற் கொடிபறக்க மேளம் மிக ஊதிவர
எண்ணித் தொலையாப்படையுடனே வந்தான்காண்
குண்டுநிகரான கொற்றவனே இன்றெனக்கு
இன்றுவந்து நின்று நீ யாரோவெனக் கேட்டான்
என்றமொளி கேட்டு என் சொல்வார் விபூசனனார்
அந்தரத்தோர் தம்மை ஆளடுமை ஆண்டவன்காண்
இந்திரனைக் கட்டி அருஞ்சிறையில் வைத்தவன்காண்
வார்மிகுந்த சேவுகன் காண் மாதவத்தால் வல்லவன்காண்
இந்த இலங்கை உலகை இராவணனம்
ஆண்டானிவனாலே அய்யனே என்றுரைத்தான்
பார்நிறைந்த வில்லியவன் பாருலகில் வல்லவன்காண்
போரறிந்து நன்றாய்ப் பொருதுமென்றார் அம்மானை
அக்கணத்தில் வாளரக்கள் அரிகுலத்தாரைத்துரத்தி
பக்குவங்கள் சொல்லிப் படைஎடுத்தாரம்மானை
படைத்தலைவர் சேரப் பருமலைகள் தானெடுத்து
அடித்தரக்கன் தன்னை அரிகுலங்கள் தான்துரந்து
ஓடினார் வாளரக்கர் உம்பரை வென்றானருகே
வாடிமனம் தளன்று மகாகோபம் தன்னுடனே
கொடியதோர் தேரேறிக் கூற்றுப்போல் ஆற்பரித்து
எங்கே லெட்சுமணன் என்றான் அரக்கனும் தான்
அங்கே அனுமான் அரக்கனுடனே பொருதான்
ஒருகோடி அம்பு ஊடுருவி மண்ணில்விழ
இருவர்பொருதார் இயல்வுடனே அம்மானை
ஒருவற் கொருவர் உடைய மற்றோர்க்காமல்
இருபேரும் போற்களத்தில் நின்றபொருதார்கள்
அனுமாருடனே அடர்ந்து அமர்பொருதார்
தனுவாங்குங் கையான் தனக்கிளைய தம்பியரும்
வில்லெடுத்து நாணேற்றி மிக்க சரமெடுத்த
வில்லாண்மை உள்ள வீரன் எதிர்சென்று
பார்ச்சிலையில் பகழி தொடுத்துவிட்டார்
ஆறாயிரங்கோடி அரக்கரவர்தனையும்
நூறாயிரங்கோடி வாளிதொட்டுக் கண்சிவந்து

ஆயனுடனே மேனியிலே அரக்கனும் அம்புதொட்டான்
துய்யகணையத்தனையும் தொடுத்து விட்டாரம்மானை
அறுநூறு அம்பு ஆயன்மேல் தானளுத்தி
எளுநூறு அம்பு லெட்சுமணன் மேலுருவி
அன்னேரந்தன்னில் அருஞ்சிலையைத் தானெடுத்து
மின்னிமளைக்கால்போல் லெட்சுமணரப்பொழுது
தேரறுத்து விலல்றுத்துத் தெய்வப்படை அறுத்து
போரரக்கன் மேனிஎல்லாம் புண்படவே தான்துளைத்து
ஆயிரம் தேரை அரை நாளிகை தனிலே
பாய்பரிகள் கோடி பட எய்தாரம்மானை
ஏலவணித்தரக்கன் ஏறுகின்றதேர் மீதில்
வில்லுடனே வந்தவனும் மேகத்தின் மீது நின்றான்
ஐயர்க்கிளையான் அமர் ஒளிய நின்றார்கள்
வெய்யசிலை வாளரக்கன் வேகித்துப் பார்த்து நின்றான்
ஆகம்மிக் கொதித்து அங்கே அரக்கனும் தான்
நாகபாசங் கொண்டு நடந்து வந்தங்கென்ன சொல்வான்
எங்கே இராமன் லெட்சுமணனெங்கே என்றான்
அங்கே இலட்சுமணர் மார்பு தட்டி எழுந்திருந்து
பாரச்சிலையறப் பகளி கொடுத்துவிட்டான்
வீரக்கனை சென்று தைத்து மேகநாதன் தேற்சுளலும்
அரைநாளிகையிலாடியதே அம்மானை
ஆகமொத்தமுதூர் அரக்கன் மகன் சினந்து
நாகக்கணை தொடுத்தான் நாராயணன் தளத்தில்
பையரவம் சிக்கெனவே பச்சை நிறத்தான் படையை
கையும் மெய்யும் ஆடாமல் கட்டினர் காணம்மானை
கட்டிவிளவிட்டுக் கடற் சேனை அத்தனையும்
பட்டதென்று வாளரக்கன் பட்டணத்திற் போய்ப்புகுந்தான்
சீராய் இலங்கை அரக்கன் முன்னே சென்று நின்று
நாராயணன் தளத்தை நாக பாசத்தினாலே
வாராமல் கட்டி வதைத்து வந்தேன் நான் மன்னவனே
நேராக நான் போய் நெகிழ்த்தாலினி யொளிய
ஆராலும் கூடி அவிழ்க்க முடியாது
மெய்யென்று சொல்லி மேகநாதன் சொற்கேட்டு
அய்யிரண்டு சென்னி அரக்கன் மன மகிழ்ந்து
புத்தி மனம் மகிழ்ந்து புகுந்தானே வாளரக்கன்
மெத்த மனம் மகிழ்ந்து விபீசணனார்தானெமுந்தார்
ஓடி இராமருக்கு உரைத்தாரொருநொடியில்

முடுக்கத்தில் வந்து முன்னே இளையவனை
மடியில் கிடத்தி வைத்து மாயவனார் தானமுதார்
ஆயனும் விபூசணரை அப்போ வரவழைத்து
பாரிலிதற்கு பகையுண்டோ மன்னவனே
அப்போ விபூசணனார் ஆயரடி தொழுது
தப்பாமல் வீழ்ந்தழுது தாமேது வார்த்தை சொல்வார்
அருளாளனுந்தன் அடியானொருவன்காண்
கெருடாழ்வான் தன்னை அழையுமென்றாரம்மானை
அப்போபெருமாள் கெருடாள்வான் தனை நினைக்க
தப்பாமலந்த நினைவறிந்து தான்கெருடன்
வானம் தனைச் சிறகால் மறைத்து மதம் பொழிந்து
தான் வந்தவர்கள் தலத்தில் விழுந்திடவே
ஆராய்ந்து பார்த்து அரவ மெல்லாம் விட்டோடி
தோய்த்துப் பொடியாக்கித் துரத்தியது விட்டதுவாம்
அப்போ அரசர் படை ஆர்ப்பரவம் தன்னுடனே
தப்பாமற் கொக்கரித்துத் தானெழுந்தாரம்மானை
இளையோனுமப்போ இறையவனைக் கைதொழுது
வளையாத சேனையுடன் வந்து நின்று தெண்டனிட்டான்
இறந்தார்கள் என்று லெட்சுமியார் தான் சலித்து
அறையில்லந்தனுமான் ஆங்காரப் பிலத்துடனே
படையிலும் மும்மடங்காய்ப்பாரப் பெலத்துடனே
அண்டம் முட்ட நின்றனுமான் ஆற்பாரம் செய்யலுற்றான்
கேட்டானரக்கன் கிளர்ந்தெழுந்தானப் பொழுது
வாட்டமுடனேங்கி மனம் தளண்டு வாடி நின்று
மன்னன் மகனை வரவழைத்து என்ன சொல்வான்
அன்னவர்கள் வானரங்கள் ஆற்பாரம் கேட்டிலையோ
பாசம் விட்டுக் கொன்றோமென்று பாரறியச் சொன்னீரே
ஆயன்படை நின்றவர்கள் ஆற்பரித்தாரம்மானை
அய்யனே ஈசன் அரும் பாசமற்றுதென்றால்
வெய்யபோர் வேண்டாம் விடு நீரும் லெட்சுமியை
என்றமொழி கேட்டு இராவணனு மென்ன சொல்வான்
நட்டமெழுவாய் மகனே நாராயணன் சனத்தைக்
கட்டி வைத்தோமென்று கதையால் முடித்தாயே
என்றமொழி கேட்டு எழுந்திருந்தங் கென்ன சொல்வான்
சென்று பொருது சீராமன் படையத்தனையும்
கொண்டு வருவேன் நான் கொற்றவனே என்றுரைத்தான்
ஆகப்பயந்தீரே அய்யரே பாருமினி

மேகநாதன் வந்து பிறப்பட்டான் வெஞ்சினமாய்
இன்றைக்கு லெட்சுமணன் எங்கே இருப்பனென்று
மற்றநாட் சென்று கொல்லலாம் என்று சொல்லி
பத்துத் தலையான் பரிந்தவனை நில்லுமென்று
முத்து மணிமுகப்பில் முன்னிருந்து என்ன சொல்வான்
வாலியராவான் தன்னை வாவென்றருகழைத்து
ஆலித்தெழுந்து அரக்கனவன் மாலியல்லான்
ஆர்த்தெழுந்தசேனை அரக்கரெல்லாம் தான்கூட்டி
பார்த்தே இராவணன்தன் பாதம் வந்து தெண்டனிட்டான்
ஆறுபடைத்தலைவர் அய்யிரண்டு வெள்ளம் சேனை
காடறுபடக் குரங்கைக் கொல்லுமென்றான் வாளரக்கன்
பத்து வெள்ளம் சேனை பரிந்தருகு சுற்றிவர
தத்திவரு மரக்கள் தளங்கள் படையைக் கண்டு
ஆரியனும் விபூஷணரை அப்போதருகழைத்து
வாரிற்றொனி போலே வருகிறவனாரெனவே
என்றமொழிகுகட்டு விபூசணனார் என்ன சொல்வார்
தேவர்படை பொரவே சென்றவரை வென்று வந்த
மாதவர் தான் பொருது வடக்கிலிருப்பானை
சூழவெருண்டு கொள்ளத் துரத்திப் பொரு தோளான்
வலியவனென்று மகிழ்ந்து பின்னு மேது சொல்வான்
ஆரியனே அந்த அரக்கன் தனைப் பிடித்து
சூரியனை வென்று வந்த சூரியன் சத்துருக்கன்
ஆயிரம் குதிரையின் மேல் அரக்கர் சனத்தை ஒருவன்
புவனமெனப் புகுந்து வந்தானே என்றுரைத்தார்
அவனி இவனாலே ஆண்டானிராவணனும்
அவனுடனே வந்த அரக்கர் தான் பத்து வெள்ளம்
கூறுபட அரக்கர் தன்னைக் கொன்றுவிட்டாரம்மானை
உடைந்தோடித் தூதன் உரைத்தானரசனுக்கு
படைத்தலைவர் பட்டதெல்லாம் பண்பாகத் தானுரைத்து
அஞ்ஞாதே என்று அவனை மனம் தேற்றி
காற்றுக்கிறைவன் கொடுத்தகணை தன்னாலே
மாற்றிப் பகைவெல்ல வகைகள் பலவும் உண்டு
என்றார் விபூசணனார் எழுந்திருந்தார் புண்ணியனார்
அய்யனுமங்கே போய் அகற்ற ஒரு நொடியில்
துய்ய கணைவில் வளைத்துத் தோன்றினார் காணம்மானை
ஆற்றாமலந்த அரக்கன் அவன் தானும்
தோற்றாமல் மேகத்தில் தோன்றினர் காணம்மானை

மாயவரை வெல்ல மகோதரனைத் தானினைந்து
துய்ய வகை ஒன்று சொல்லுகிறேன் கேளுமென்று
இந்திரரும் தேவர்களும் எல்லாம் நமக்குதவி
வந்தாரெனவே மாயவரே வாருமென்று
போர்ந்தானே அப்பொழுது போர்ந்த மகோதரனும்
வந்தான் மிகவிழுந்தான் வாளரக்கன் அப்பொழுது
அன்றற்கிளையோன் அமர்க்களத்தில் சென்றிடவே
கண்டபடை விழவே புண்ணியனார் தான்பொருதார்
இந்திரசெயிற்றோடே லெட்சுணர்தான் பொருதார்
அந்தரத்தோர் வந்து அயற்களத்தைப் பார்த்து நின்று
வென்றாளம் பூண்டிலங்கும் எங்களரவான் தளத்தார்
துண்ட துண்டமாகக் குவித்து விட்டாரம்மானை
லெட்சு மணரோடே எழுபது வெள்ளம் சேனை
கார்வண்ணன் தன்னைக் கடூரமாய் அப்பொழுது
நாராயணனைக் கொண்டு நான் சினந்தீரவேணுமென்று
அப்போதவற்கு அனேக வரங்கொடுத்து
செப்பரிய பத்து வெள்ளம் சேனையுடன் கூடி
சென்றரக்கன் தேரேறிச் சேர்ந்து வருகையிலே
பத்து வெள்ளம் சேனை பறந்தருகு சுற்றிவர
முத்துவடமணிந்து முளைக்களத்தில் சென்று புக்கான்
வானரங்களோடே மகாஅரக்கன் தான் பொருதான்
அப்போது லெட்சுமணர் அவனோடமர் பொருதார்
படைத்தலைவர் என்னும் படைத்தலைவர் சென்று புக்கார்
அங்கரக்கர் வேந்தன் அதிர்ந்து மிகப்பொருதார்
வீரமுடனங்குதனும் வந்து பெரும் படையில்
போர்தனிலே வந்து போர்ந்து மனமகிழ்ந்து
சூரியனார் சத்துருவைச் சூரியன்தன் மகன்தான்
ஆரியனார் காண அறுத்தனர் காணம்மானை
கண்ணிற் கருதிக் கடுங் குதிரை சேவுகனார்
விண்ணிற்குரங்கை எல்லாம் விரைந்தோடக் கொல்லுமென்றான்
அவனைத்தடுக்க அனுமாரும் மாட்டார்காண்
புவனமெல்லாம் காணப் பொறுப்பிப்போமென்றுரைத்தார்
ஆற்றார் படைத்தலைவர் அயற் கிளையோனும்
காற்றுப்படை கொண்டு கழுத்தறுத்தாரம்மானை
வாசுவின்கணையும் வருணனுடதன் கணையும்
காகத்தின் கீளிருந்து கடுக வந்தானிந்திரசெயிற்று
குரங்கொடி மற்றக் குரங்கரசர்தானோட

விரைந்தோடித் தேசமெங்கும் விட்டனர் காணம்மானை
அப்போபெருமாள் அதிகோபம் தன்னுளே
இப்போ விபூசனரே இதற்கு வளிசொல்லு மென்றார்
மஞ்சாரும் மேனியரே மாயனிட தான்தொழுது
அஞ்சாதே என்று அவரை மனந்தேற்றி
காற்றுக் கிறைவன் கொடுத்தசரம் தன்னாலே
மாற்றிப் போர் செய்ய வகைகள் மிகவுண்டு
என்றார் விபூசணனார் எழுந்திருந்தார் புண்ணியனார்
அய்யரும் போயங்கே அகற்றும் ஒரு நொடியில்
துய்யகணை வில்லெடுத்துத் தோற்றினார் காணம்மானை
ஆற்றலுடன் வெகுண்டு கடலரக்கரத்தனையும்
மாற்றிக் கணை தொடுக்க மாற்றினர் காணம்மானை
நாலாயிரங்கோடி நல்லகணை தொடுத்தார்
மாலானமேனி எல்லாம் மறைய எய்தாரம்மானை
நல்லதென்று கொண்டாடி நாலுகணை தொடுத்தார்
வில்லறுத்துத் தோளறுத்து வீரமுடி தானறுத்து
பாரடைய வீழ்ந்தார் படைத்தலைவர் எல்லோரும்
ஆரியனைக் கைதொழுது ஆற்பரித்தார் வானரங்கள்
ஐயர் மகிழ்ந்திருக்க அரிகுலத்தாராற்பரிக்க
வெய்யோன் குடதிசையில் வீழந்ததுவே அம்மானை
தூதுவர்கள் ஓடிச் சொன்னாரே ராவணற்கு
பாதகமோவென்று படியில் விழுந்தழுதான்
வட்ட கடலில் வலமாய் ஒருநொடியில்
எட்டுத் திசையும் இருளோடே தான்வந்தான்
அத்தனும் கீழ் திசையில் அங்கே எழுந்தருளி
வெற்றி முரசதிர விண்ணும் மண்ணும் தானதிர
கொற்றக் கொடி பறக்க கொடிகள் மிக ஆற்பரிக்க
மற்றநாள் வந்து பிறப்பட்டான் இந்திரசெயிற்று
ஒன்பது கோடி தேர்கள் பரந்து வர
நாகமலைக் கொப்பாக நாலாயிரங்கோடி
வெம்புரவி காலாள் மிகத் துரந்து விட்டுவர
பொருதான் மிக வீரன் பூமி எல்லாம் தான் நடுங்க
மந்தாரம் சூழும் மதிலிலங்கை மன்னன் மகன்
கண்டானனுமான் கனக்கச் சினந்தெழுந்து
நின்றொடித்தான் மகிழ்ந்து தீரப் பொருதலுற்றான்
பரிபாரம் சேரப் படுகுதென்று சுக்கிரீபன்
மருவளரும் மாயவற்கு வந்து வியளமிட்டார்

காகத்தனப்போ கடுஞ்சரங்கள் தானெடுத்து
கூட்டிக் குவித்தார் குறைத்தலைகள் கூத்தாட
மந்திரத்தாலுள்ள மதஞானமுள்ளவன் காண்
இந்திரசெயிற்று இலட்சுமணர் முன்னெதித்தான்
இளையோனும் அந்த இலங்கைக்கு ராசனுமாய்
வளையாத வில்வாங்கி வாளி பலதொடுத்தான்
பூண்டபடை பொரவே புண்ணியனார் தான்பொருதார்
இந்திரசெயிற்றோடே இளையபெருமாள் தானும்
அந்தரத்தோர் வந்து அமர்க்களத்தைப் பார்த்து நிற்க
எட்டுத்திற்கும் நின்றதிர எழுபது வெள்ளம் சேனை
மட்டுற்ற பூந்துளசி மாயன் தளத்தாரை
காடினார் குன்றெடுத்துத் தாரணியில் போய்ப்புகுந்து
வாடினார் வானரங்கள் வலுக்குறைந்து விட்டதுவே
மலைக் காட்டில் அந்த வானரங்கள் அத்தனையும்
பிறங்காட்டி ஓடிப் படாத பங்கம் பட்டதுவே
அந்தரக்கனப்போ அம்பைத் தொடுத்துவிட
வென்றாளம் பூண்டிருக்கும் வெண்கவரி நரர்தளத்தார்
துண்ட துண்டமாகத் துணிந்துவிட்டாரம்மானை
லெட்சுமணனோடே எழுபது வெள்ளம் சேனை
படைத்தலைவர் உள்ளதெல்லாம் பட்டனர் காணம்மானை
முட்டிக்கரை வேண்ட இராவணனார் முன்னே சென்று
வட்ட உலகளர்ந்த மாயன் படை அத்தனையும்
ஒக்களிய வெட்டி உருண்டு பிரண்டோட
பெட்டியும் மூடலும்போல் வெட்டி வந்தேனரசே
மெய்யென்று சொல்லி அந்த மேகநாதன் சொற்கேட்டு
அய்யிரண்டு சென்னி அரக்கன் மனமகிழ்ந்து
மாயவனார் தன்னுடைய மாற்றங்கள் பேசுவனாம்
மரத்தில் விழுந்தமுது மாயவனார் தம்பியரை
ஏந்தி எடுத்து மடியில் வைத்தாரம்மானை
தாரார் விபூசனரே சாம்பு வனைத்தானழைத்து
ஆர்செத்தார் ஆர்பிழைத்தார் என்றுடனே தான் பார்த்து
எண்ணுமளவில் அனுமான் எழுந்திருந்து
மன்னர் பெருமாள் மலரடியைத் தாள்தொழுது
ஆயனார் அந்த அனுமானைத் தான் பார்த்து
நானொன்று சொல்லுகிறேன் நல்லனுமான் நீகேளீர்
சேரான புரமெரித்த சிவன் கயிலை தானோக்கி
சீருடனே அந்தச் சிறந்த வனம் கடந்து

மாருதமேசென்றால் மருந்து மலை தோன்றும்
முடிசூடு மாமலையில் மும்மருந்து கொண்டுவர்ந்து
படையதனில் செந்தாமரைப் பிளைக்கப் பண்ணுவாயனுமான்
அடையாளம் சொல்லி அனுப்பிவிட்டாரம்மானை
குடையாற் புகழனுமான் கும்பிட்டெழுந்திருந்து
மின்னி மறைந்தாப்போல் வேதக்கவி அனுமான்
உன்னி மறைந்து ஒரு நொடியில் தான் பாய்ந்து
நாடிக் குறித்து வந்த நல்ல மருந்துதனை
தேடிப் பறிக்கச் சிலகாலம் செல்லுமென்று
அருந்து கனிவாயனுமா னொருநொடியில்
மருந்து மலைபிடுங்கி வலுவுடனே வந்து கண்டான்
வரணித்தனுமானை வரவழைத்து மாயவனார்
உன்னி மருந்து கொண்டு ஊது மென்றாரம்மானை
பட்டாருடல் பொருந்திப் பச்சை மருந்து தன்னை
இட்டார் பிழைத்தார் எழுந்திருந்தாரெல்லோரும்
ஆவென்று பொங்கி அரக்கன் மனமேங்கி
கூவென்றெழுந்திருந்தார் கோசல நாடு வந்தார்
பொழியும் மலை இருள்போல் போர்ந்தரக்கந்தனையும்
அழியப்பொருது ஆர்ப்பரித்தாரம்மானை
கண்டாரனரக்கன் மகன் கருகி முகம்வாட
அண்டிப் பொர நமக்கு ஆயுதங்களில்லையென்று
இந்திரசெயிற்று யாகம் வளர்க்கலுற்றான்
அழித்தனனிலங்கை அரக்கனுடதன் மகனார்
வளக்கும் யாகமது மனதறிந்து விபூசணனார்
இந்தயாகம் முடித்தால் யாவற்கும் வெல்லலரிது
எந்தவகையாலும் இப்போபொருதவேணும்
என்றார் விபூசணனார் எம்பெருமாள் அப்பொழுது
இன்று தேரேறும் லெட்சுமணா என்றுரைத்தார்
என்னவிபூசணரும் நானொருவனென்றுரைத்தார்
சென்று புகுந்தெதிர்த்தார் இந்திரசெயிற்றுடனே
மாறுகொண்ட மாயவற்கு வளியும் திசைகாட்டி
ஏறிக் கடல் கடந்து இலங்கை வளியாக
மீறிவந்தானென்று மிகநடந்து மேகநாதன்
சீறி அமர்பொருதான் சிறிய தகப்பனுடன்
கேட்டங்கிளைய பெருமாளெழுந்திருந்து
ஓட்டம் நடையாக ஓடி வந்தாரம்மானை
இந்திரசெயிற்றுடனே இளையபெருமாளெதிர்த்தார்

அன்னேரம் செந்தூள்பறக்க அமர்பொருதார்
மேகத்தினுட் புகுந்து வேந்தன் மகனொழிக்க
அகம்மிக மகிழ்ந்து அனுமானுமப்பொழுது
வாளகிரி போலே வந்தனுமான் மன்னவனை
தோளில் எடுத்துச் சுமந்து நின்றாரம்மானை
இந்திரன் தந்தாயுதத்தை இளைய பெருமாளெடுத்து
அந்தரத்தே ஏவி அவன் தலையைத் தானறுத்து
இந்திரலோகம் எல்லோற்கும் தான் காட்டி
வந்தவன் தந்தை முன்னே வைத்தனர் காணம்மானை
வன்னகச் சிலையாள் மணிமுடியைக் கண்ட உடன்
தன்னக முகத்திலறைந்து கொன்றாரம்மானை
வாய்த்த மகனே மதம் பெரிய சேவுகனே
ஏற்றிய வில்லி இந்திரசெயிற்றே என்றழுதான்
பத்துத் தலையும் பதைக்க அவன் வயிற்றில்
குத்தி இரத்தம் குளம்பாய் விழுந்தழுதான்
பட்டணத்தில் உள்ள பலசாதி அத்தனையும்
கெட்டோமென ஏங்கிக் கிலேசமுற்றாரம்மானை
இந்திரசெயிற்றுப் பட்டு இலங்கை அளிந்ததுகாண்
முந்தரக்கர் சேனை முறை இட்டாரம்மானை
வேலை உலகளந்த வெண்கண்மால் தன்னெதிரே
மூலப்பிலன் வந்து மூண்டதுவே அம்மானை
ஏழாயிரம் வெள்ளம் எண்ணிறைந்த மூவுலகும்
பாதத்திலந்தப்படி விழுந்தார் முன் வந்தெதிர்த்தார்
அப்போது சுக்கிரீபன் அங்குதனும் சாம்புவனும்
செப்பரிய நீலனுடன் சேர்ந்த குமுதனுமாய்
மைந்தன் சதவல்லியுமாய் வந்தொரு மூவருடன்
விரைந்தான் விட்டுணுவுடன் வீரமுள்ள மாதிரியும்
படைத்தலைவரெதித்துப் படை பொருதாரம்மானை
கோலிமலை பிடுங்கிக் கோவிந்தனார் தளத்தார்
மூலப் பிலனுடனே மோதினர் காணம்மானை
மாமரங்கள் பூமரங்கள் மாளவே தான்பிடுங்கி
சென்று பிடுங்கிச் சிதறடித்தாரம்மானை
ஆலிலை மேற்பள்ளி கொள்ளும் அற்சுதனார் தன்னெதிரே
மூலப்பிலன் வந்து மூண்டனர் காண்அம்மானை
வன்போரைக் கண்டு வானரங்கள் தான்முறிந்து
கண்டு படைத்தலைவர் கலங்கி முறிந்தோட
ஒன்றி ஒருவனுமாய் நின்றார் உலகளந்தார்

மூலப்பிலன் வந்து முடுகியதே அம்மானை
நீலமலைபோலே உலகேளும் நின்றதிர
ஏராச்சிலையில் யிராமபாணம் எடுத்து
போராயிரம் கோடி போய்ப்பட்டாரம்மானை
ஆற்றலுடன் வேகம் அடங்காக் கணைதொடுத்து
மாற்றுக்கணை தொடுத்து மாற்றினார் காணம்மானை
நாலாயிரங்கோடி வல்ல கணைதொடுத்தார்
மாலான மேனி எல்லாம் மறைய எய்தாரம்மானை
நல்லதென்று கொண்டாடி நாலுகணை தொடுத்தார்
வில்லறுத்துத் தேரறுத்து வீரமுடி தானறுத்து
பாரடைய வீழ்ந்தார் படைத்தலைவர் எல்லோரும்
ஆரியனைக் கைதொழுது பார்த்தனர் காணம்மானை
அய்யன் மகிழ்ந்திருக்க அரிகுலத்தாராற் பரிக்க
வெய்யோன் குடதிசையில் வீழ்ந்தது வேயம்மானை
தூதுவர்கள் ஓடிச் சொன்னாரே ராவணற்கு
பாதகமோ வென்று படியில் விழுந்தழுதார்
எட்டுத்திசையும் ஈடெறித்தான் வந்தங்கு
ஆதித்தன் கீழ்திசையில் அங்கே எழுந்தருளி
வேதமுரசதிர விண்ணும் மண்ணும் நின்றதிர
கொற்றக்குடை நிழற்றக் கொடிகள் மிகப் பறக்க
மற்றாநாள் வந்து பிறப்பட்டார் இராவணனும்
ஒன்பது கோடி தேர்கள் உலொலாம் பரந்து வர
நாக மலைக்கொப்பாய் நாலாயிரங்கோடி
மேகப் புரவியெலாம் மிகுத்து அதிர்ந்து வர
போர்ந்தானே வீரன் பூமி எங்கும் தானதிர
மந்தாரம் சூழும் மதிளிலங்கை மன்னவனைக்
கண்டே அனுமான் கனக்கச் சினந்தெழுந்து
துண்டாடித் தான்பொருது தீரன் மகிழ்ந்திருந்தான்
அரக்கன் மேலெங்கும் அருங்குருதி ஆறோட
இரக்கமுள்ள மாயோற் கிளையோனிவை பொருதான்
உருக்கும் சிலையில் ஒரு மணிகள் ஓசையிட
குறைத்தலைகளெங்கும் கூத்தாடும் அம்மானை
அப்படியோர் திரளுக் காயிரங்கோடிதலை
செப்பமுடனே சிறு மாத்திரையுடனே
நீள்வளைகள் போலே நிறைந்ததொரு வாசமணி
ஏழரை நாளிகையில் ஓயாமலாடியதே

வண்ணப் படை எடுத்த வாளரக்கன் சேனை எல்லாம்
மானப் பொடி படுத்திவானேற்றி விட்டனர்காண்
வெள்ளிச் சிலைபெருமாள் மிகுத்தரக்கர் தங்களுடல்
துள்ளி விளப்பகளி தொடுத்தனர் காணம்மானை
ஆறாக ஓடி அலை எறிந்த செங்குருதி
நேராக எங்கும் நிறையாயிருந்ததுவே
பரிபாரஞ் சேரப் படுகுதென்று சுக்கிரீபன்
மருவளரும்மாயவற்கு வந்துவியளமிட்டார்
காகுத்தளப்போர் கடுஞ்சரங்கள் தானெடுத்து
கூவிக் குவித்தார் குறைத்தலைகள் கூத்தாட
மந்திரத்தால் வேத மத ஞானமுள்ளவர்காண்
இந்திரசெயிற்றுப் போல் லெட்சுமணர் முன்னெதிர்த்தார்
இளையோனும் அந்த இலங்கை இராவணனும்
வளையாத வில்வாங்கி வாளி பல தொடுத்தார்
இமையோர் களப்போர் இவர்கள் போர் பார்த்து நின்று
வேறொருவராலே வெல்ல முடியாது
அனுமார் மேல் நூறம்பு அமர்பொருதாரம்மானை
மறைநீதியான் மேலே மறைத்தான் மறுஅம்பு
ஆறாயிரங்கோடி அம்பு பல தொடுத்தார்
நூறாயிரங்கோடி அம்பு துளைத்தோடி
ஆண்டு பதினாலும் சென்றளவில் அப்போது
இரண்டு திருத்தேர் வரவிட்டார் இந்திரனார்
வில்லில் பெருமாள் மேதினியில் நில்லாமல்
ஏறித்திருத்தேர் நடத்தினார் எம்பெருமான்
இந்திரனார் கூடி இமையோரும் எல்லோரும்
மண்ணோர் புகழவரும் மாயன் படைக்கெதிரே
வந்தான் நெடுந்தேரேறி வடக்கு வாசல்தனிலே
தொண்ணூறு குடை பிடிக்கத் தோன்றினான் ராவணனும்
நின்றானிராவணனும் நெடுமூச்சுத் தானெறிந்து
கண்டேதான் லெட்சுமணர் கடுஞ்சரங்கள் தான் தொடுத்தார்

## விருத்தம்

வென்றிலேனென்ற போது வீரமுன்னளவு நிற்கும்
நின்றிலேனென்ற போது இராமனும் பேரும் நிற்கும்
பொன்றுதல் ஒருகாலத்தில் தவறுமோ புதுமைகண்டோ
இன்றுள்ளோர் நாளைமாழ்வார் புகழுக்கு மிறுதியுண்டோ

## வேறு

அரக்கர் பல த்தேரும் அம்பு வில்லும் தானெடுத்து
ஈரைத்து தேரறுத்து அச்சடைய வாளறுத்து
பாராளும் பத்துத் தலை அறுத்தாரம்மானை
அறுத்ததலை அத்தனையும் அப்போதே தான் முளைத்து
உற்றபெருமாள் புயங்களொன்றும் மண்டியிலே
எண்ணி இருந்தான் இனியமையுமென்று சொல்லி
மண்ணை அளந்தவர் முன் மண்ணுமெழுபுவிக்கு
இன்றுபோல் வந்தெதிர்த்த கொற்றவனைக் கோவிந்தனார்
இன்றுபோய் நாளை வா என்றாரிராவணனை
நின்று திகைத்து நினையாததெல்லாம் நினைந்து
சென்று புகுந்திருந்தான் திருமாளிகை தனிலே
ஆயனுடதேவி அகமகிழந்து கொண்டாடி
கோவென்றெழுந்திருந்தார் கோணகிரியார் தளத்தார்
தோற்றே அரக்கன் தூளெனவே தான்முறிந்து
அற்றாமலோடி அடைகோட்டை பட்டிருந்தான்

## விருத்தம்

வானரம் பொருத மார்பும் வலிய குன்றெடுத்த தோளும்
நாரணன் முனிவற்கெல்லாம் நலம்பெற உரைத்த நாமம்
தாரணி மவுலிபற்றுஞ் சங்கரன் கொடுத்த வாழ்வும்
வீரமும் களத்தில்போட்டு வெறுங்கையாய் அன்றுபோனான்

## வேறு

மாலைச் சிறந்தகுளல் வண்டோதரியும் வந்து
மன்னவனே நீயும் மணிமகிடமும் இழந்து
சொன்னதொன்றும் கேளாமல் தோற்றுடைந்து விட்டீரே
வண்டோதரி சொல்ல வாளரக்கன் தான் திகைத்து
தேராலிறங்கித் திகைத்திருந்தான் வாளரக்கன்
வினாவிவருந்தூதுவனைத் தானழைத்து மென்ன சொல்வான்

## விருத்தம்

ஆண்டதேரோடு செம்பொற் பிடத்திருந்தவன் வருத்தம்மாறி
கொடுந்துயர் நினையானாகில் கொடுஞ்சுனையாகி நின்றோன்
மீண்டிடும் தூதர் தம்மை இவ்வளி குறுகி நின்றான்
ஆண்டதோர் பணியின் வல்லான் அரக்கரை கொண்டு போர்ந்தான்

## வேறு

தொண்ணூறு குடைபிடிக்கத் தோன்றிரானிராவணனும்
கண்டேதான் லெட்சுமணர் கடுஞ்சரங்கள் தான்தொடுத்தார்
தொண்ணூறு குடையும் துள்ளவெய்தாரம்மானை
வாழ்வுகண்டு தாள்வு செய்ய ஒண்ணாதெனவுரைத்தார்
இராமரென்னும் மளவும் இராவணனார் சிரந்தளைக்கும்
என்று துணிந்து இராவணனு மெழுந்திருந்து
இருநூறு வெள்ளம் படையுடனே வந்தெதிர்த்தான்
சென்னிமுடி பத்தும் தேசமெங்கும் மொன்றார
செம்பொன்மணித் தேரேறி எதிர்சென்றாரம்மானை
மாயன்படைத்தலைவர் வானரங்கள் சேரவந்து
மலைக்குவடுதான் பிடுங்கி வானரங்கள் சேனை எல்லாம்
சிரசுமுடிகள் பின்வாங்க சிதறடித்தாரம்மானை
ஆயனுடதளமும் அரக்கனுடதளமும்
தென்திசைகள் கீழ்திசைகள் செவிடுபடப்பொருதார்
பூமரங்கள் மாமரங்கள் புன்னை மரம்பிடுங்கி
காய்மரங்களுள்ள தெல்லாம் காய்மாளவே பிடுங்கி
அடித்தார்கள் வானரங்கள் அரக்கர் தளம் முறிய
அரக்கன் அனுமானும் அலைகடல் போலே பொருதார்
இந்திரலோகத்தாரும் ஏங்கி முகம் வாடினரே
அரக்கர் படையை அறுத்தாலவனொளிய
இரக்கமுடனே ஏங்கி நின்றாரம்மானை
இருந்தநாள் போதும் இனியமையுமென்று சொல்லி
திருமணித்தேர் நடத்திச் சென்றனர் காணம்மானை
முக்காலும் மூண்டு சீராமபாணம் விடவே
எறிக்கும் கதிரவன்போல் இருக்கும் கதிர்முடிகள்
மறுத்து மடிகள் வளர்ந்ததுவே அம்மானை
விபூசணரப்போ மேகவண்ணற்க் கேதுரைப்பார்
சேமத்திருக்கும் திருமகளைக் கொண்டு வந்த
சாமத்துரோகி தலையின்னதே ஆகுமென்று
அடையாளம் சொல்லி அகல நின்றாரம்மானை
முத்துவாசல் புடைசூழ மூதூரில் வாளரக்கன்
சங்குகுறித்தார்முன் சமுத்திரமேழும் முழங்க
துங்கமுடிபத்துடனே சொல்லரிய வாளரக்கன்
பட்டையமும் நல்ல பருங்கருவஞ் சேர்ந்தாப்போல்
நெட்ட நெடியரக்கன் கிட்ட வந்து சேர்ந்ததுவே

செங்கைச் சிலைப்பெருமாள் சீராமபாணம் தொடுத்து
அங்குமுடியதனை அறுத்தனர் காணம்மானை
பத்துத் தலையும் பறிபட்ட ராவணனும்
தத்துந்துகிரியிலே தாமோ தரப்பெருமாள்
இச்சையுடன் அந்த இலட்சுமியை மீட்டுவர

## விருத்தம்

வெள்ளெருக்கும் மலர்முடியான் வெற்பெடுத்த திரைத்தோளான் மேனி எல்லாம்
எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும் இடந்தேடி இளைத்தவாறே
கள்ளிருக்கும் குளலார் நாசகியை கடுஞ்சிறையில் வைத்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் பிளந்து தடவியதே ஒருவன்வாளி

## வேறு

அப்போது மாயவனார் விபூஷணரைத் தானழைத்து
இப்போ இராவணற்கும் உள்ளிட்ட இராட்சதற்கும்
தப்பாமலுள்ள சடங்கு செய்யப்போமென்றார்
என்பிறப்பே அண்ணாவி என்வார்த்தை கேளாமல்
உன்வார்த்தையாலே உயிரிழந்து விட்டாயே
அன்னை உடனே அரசுபதி ஆளாமல்
காசினியோர் வாளக் கடன் களித்து விட்டாயே
தென்னிலங்கை செல்வம் செலுத்தி அரசாளாமல்
மாணிக்கப் பொன்னிலங்கை வாழ்வொளிந்து விட்டீரே
அண்டுபெருமாள் அடியார் தன்னண்ணாவி
இன்று பெருமாள் இணையடியைச் சேருமென்றார்
பெரும்பாவி கும்பகற்கும் பெண்பிறந்தாரெல்லோற்கும்
அரும்பாவி சொற்கேட்டு அரசளிந்து விட்டீரே
என்றெங்கியே எழுந்து இராவணனை விட்டகன்று
சென்று பெருமாள் திருவடியைத் தெண்டனிட்டு
இலங்கை அழிந்து இராவணனும் பட்டபின்பு
துலங்கு விபூசணனைச் சொன்னா அரசாள
வெட்டி இலங்கை தன்னை வென்று தந்த விபூசணரை
பட்டங் கட்டி அரசாள வைத்தாரே பள்ளி கொண்டார்
இன்று இலங்கை இராவணனார் பட்ட பின்பு
கொண்டைகளுஞ் சொரியக் கோலமலர் செங்களுநீர்
மல்லிகைப்பூச் சொரிந்து வாசமலர் வீச
கங்குல் வெருண்டோடக் கண்கள் நிலவெறிப்ப
செங்கதிரோன் வந்து வாளரக்கன் சென்னி கண்டு

கண்டு மிகக் கதறிக் காரிகையுமேது சொல்வாள்
தென்னிலங்கை செங்கோல் செலுத்தி அரசாளாமல்
மன்னவரும் வானவரும் மாறு கொண்டார் நம்முடனே
ஆளிஇலங்கை நகர் அரசுபதி ஆளாமல்
பாளிலங்கை ஆக்கி விட்டுப் பட்டணத்தே போனீரோ
கொங்கையிலே குத்திக் கூந்தல் விரித்தலறி
மண்ணில் விழுந்து மயில்போல் விழுந்தலறி
கண்ணீர் சொரியப் பெருமாள் முன்காரிகை போய்
அண்டர் சுவாமி அரனார் அரும்பொருளே
ஆகாமையாலே அறியாவனோடே சென்று
சாகாதெனக்கு வரம்தா வென்றாளம்மானை
தன்னாலேகெட்டரக்கன் தாரமே நீகேளாய்
என்னால் பொறுக்குமது எல்லாம் பொறுத்தேன் நான்
எல்லாரும் காண அவன் எழுத்தினாற் பட்டனர்காண்
பூமின்னேரிடையாற்கு வெற்றிவிட்டார் அம்மானை
அன்னாளிகையில் அக்கினியைத் தான்வளர்த்து
காசினியில் உள்ளோர்கள் காணவே கொக்கரித்து
அக்கினியில் தான்விழுந்து ஆகாசத்தே போனாள்
முந்தப்பெருமாள் அனுமன் முகம் நோக்கி
அந்தத் தெரிவையரை அழைத்தோடி வாருமென்றார்
சொல்லுமொரு நொடியில் சோலை தனில் புகுந்து
மாண்டது காணரக்கன் மகாசேனை உள்ளதெல்லாம்
நின்றாரழைத்துவரச் சொன்னாரெளுந்து வாரும்
கரியமால்தேவியரைக் கண்டனுமான் தானழைக்க
பிரியமுடனே பிறப்பட்டாள் பெண்ணமுதம்
ஓதுங்கடலும் உலகேளும் நின்றதிர
சீதைபிராட்டியரைச் சிறை மீட்டுவாறார்கள்
விண்ணோரும் மந்திரியும் வெய்யோனும் சந்திரரும்
கண்ணீறு சுற்றிக் களித்தனர் காணம்மானை
அந்தச் சபையில் அக்கினி தெரிசனை பண்ணி
சந்திரரும் சூரியரும் தானவரும் வானவரும்
வாங்கித்தவக்கோடி வந்து புக்காரம்மானை
முத்துக்கண்சீதை மூவுலகும் மாளும் என்று
அத்திகிரிநாதர் வரவழைத்தாரம்மானை
வண்டார் குழலாரும் மாயவரும் தம்பியரும்
கண்டு கவுசலையைக் கைதொளுதாரம்மானை
மையாரும் வேல்விளியும் மாயவரும் தம்பியரும்

கேகேகியைக் கண்டு கைதொழுதாரம்மானை
மொற்றாரும் மொற்றமணி மொய் குளலும் தம்பியரும்
சிமித்திரையைக் கண்டு தெண்டனிட்டாரம்மானை
மின்னிமழை பொழிய மேதினியோர் தான்வாழ்க
செந்தமிளோர் வாழ்க திசைகளெட்டும் தாள்வாழ்க
தந்தபெருமாள் தானிருந்தாரம்மானை

## விருத்தம்

இக்கதை படிப்பவர் இருந்து கேட்பவர்
நற்கதையிற் பயன் நயந்துரைப்பார்
இப்புவிதன்னில் இருந்தின்ப மெய்தியே
மைப்பயில் நிறத்தார்தம் வைகுண்டம் சேர்வரே

மச்சமானவனே போற்றி வராகமானவனே போற்றி
கைச்செபமானாய் போற்றி கார்முகில் வண்ணா போற்றி
அச்சுதா போற்றி போற்றி அரவினில் வாய்போற்றி
பச்சை ஆலிலையின் மீது பள்ளி கொண்டவனே போற்றி போற்றி

கல்லது பெண்ணதாகக் காலனே போற்றி போற்றி
வில்வரி இருகூறாக மிதுலையி லொடித்தாய் போற்றி
தொல்லுலகளந்தாய் போற்றி துளசியை அணிந்தாய் போற்றி
அல்லலை அறுக்கவந்தாய் அரிகரிராமா போற்றி போற்றி

மடற்கொடி நெஞ்சமும் வானின் நீளமு கடற்குளி ஆழமும்
கண்டறிந்திலேன் கிடக்கிறேன் அக்கரை கீரியும் முட்டவே
நடப்பதென் முதுகினில் நம்பி நாராயணா
வாழ்க வாழ்க வாணவரும் வையமும் போற்றி நிற்க.

# உசாத்துணை நூல்கள்


1. கமலநாதன் சா.இ., (பதிப்பாசிரியர்), (2002) பாரத அம்மானை, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
2. கந்தையா, வீ.சி., (1964) மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்.
3. சாமிநாதையர், உ.வே., (1994) சிலப்பதிகாரம் - அடிார்க்கு நல்லார் உரை, சென்னை.
4. சீனிவாசன், ரா., (2000) கம்பராமாயணம் (உரைநடை), அணியகம், சென்னை.
5. சுப்பிரமணியம், பூ., (1991) சுவடியியல், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. பூர்ணப்ரஜ்ணதாஸ்., சர்வானந்த தாஸன்; (தமிழாக்கம்), (2010) வான்மிகி இராமாயணம், சிறி வைகுண்டா எண்ட பிரைசஸ்.
7. வித்தியானந்தன், சு., (பதிப்பாசிரியர்), (1970) கஞ்சன் அம்மானை, இலங்கை பல்கலைக்கழகம், பேராதனை.
8. கம்பராமயண யுத்தகாண்டம், (1970) அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

# பின்னிணைப்பு

| ஏட்டில் உள்ளது | திருத்தமானது |
|---|---|
| அங்குதன் | அங்கதன் |
| அஞ்ஞாதே | அஞ்சாதே |
| அடித்துளக்கி | குழப்பத்தை உண்டாக்கி என்ற பொருள்பட நிற்கும் |
| அண்ணாவி | ஒரு குழுவின் தலைவர் (வழிநடத்துபவர்) |
| அதிகாயன் | இராவணனின் மகன் |
| அமச்சர் | அமைச்சர் |
| அய்யகோ | ஐயகோ |
| அய்யர் | அண்ணர் (இராமன்) |
| அய்யிரண்டு | ஐயிரண்டு |
| அய்யனே | ஐயனே (மேலான தன்மையில் அழைத்தல்) |
| அயோகவனம் | அசோகவனம் |
| அயோற்றி | அயோத்தி |
| அரக்கனுட | அரக்கனுடைய |
| அழியுமெண்டு | அழியுமென்று |
| அனுப்பார்த்தல் | இலக்குப்பார்த்தல் |
| ஆமுடையாள் | வாலியின் மனைவி |
| ஆர் வேந்தே | யார் வேந்தே |
| ஆரடா | யாரடா |
| ஆரை | யாரை |
| ஆரியன் | இராமன் |

| | |
|---|---|
| ஆருமிருந்து | யாருமிருந்து |
| ஆலாத்தி | ஆராத்தி |
| அழியுமெண்டு | அழியுமென்று |
| ஆளடுமை | ஆளடிமை |
| ஆனை | யானை |
| இந்திரசெயிற்று | இந்திரனுடன் மேகநாதன் சண்டை செய்து அவனுடைய இந்திரசெயிற்று எனும் ஆயுதத்னைப் பெற்றான். அதனால் மேகநாதனை இந்திரசெயிற்று என்பர் |
| இருபேரும் | இரண்டு பேரும் |
| இலக்குமணன் | இலட்சுமணன் |
| உத்தாளாய் | ஒத்தாளாய் (தான் மட்டும்) |
| உன்யோடு | உன்னோடு |
| எல்லாரையும் | எல்லோரையும் |
| என்னண்னே | என்ன அண்ணா |
| ஏக்கும் | ஏர்க்கும் |
| ஏகினார் | ஏவினார் |
| ஏப்பமிட்டு | ஏவறை விடுதல் |
| ஏராது | ஏற்க முடியாது |
| ஒண்ணாது | முடியாது |
| கலியாணம் | திருமணம் |
| கலைக்கோட்டுமாமுனி | சுக்கிரிவன் |
| கவுசலை | கோசலை |
| கனக்க | மிக அதிகம் |
| கும்பகர், கும்பர், கும்பன் | கும்பகர்னன் |
| குமாரனுட கொடி படை | குமாரனுடைய கொடி படை |
| கெங்கை | கங்கை |
| கெருடன் | கருடன் |
| கேகேகி | கைகேயி, கைகேசி |

| | |
|---|---|
| கைச்சிறை | வீட்டுக்காவல் |
| கொக்கரித்தல் | போருக்கழைத்தல் |
| கொள்ளை நாள் | அதிக நாள் |
| கோழி கூவும் முன்னே | விடிவதற்கு முன்னுள்ள காலம் |
| கோரை | கோரைப்புல் |
| கௌதலை | கோசலை |
| சக்களத்தி | மற்றாள் என்பது போன்று |
| சடாசிமுனி | சடாயு |
| சந்தானம் | சந்ததி, வம்சம் |
| சரசுபதி | சரஷ்வதி |
| சாகாமல் | மனம் சோராமல் |
| சுழண்டு | சுழன்று |
| சிமிட்டி முளிப்பளவில் | கண் மூடிவிழிப்பதற்குள் |
| சிமித்திரை | சுமித்திரை |
| சிறிராமான் | இராமன் |
| சீராமன் | இராமன் |
| சூடாமணி | சீதை அணிந்திருந்த ஒருவகை நகை |
| செண்டான் | சென்றான் |
| சென்றுகண்டு | சென்று கண்டு (பார்த்து) |
| சேகன் | சேவகன் |
| சோபம் | சோகம் |
| தண்ணி | தண்ணீர் |
| தளண்டு | தளர்ந்து |
| தினகரன் | சனகன் / ஜனகன் |
| தெசரதன் | தசரதன் |
| தலையோட்டில் எழுதுதல் | தலைவிதியைக் குறித்தல் |
| தளங்குலைதல் | மனம் சோர்தல் |
| தனுக்கொள்ளுதல் | அனுக்கொள்ளுதல் |
| திரவடி | திருவடி |
| திருத்துழாய் மாலை | துளசிமாலை |

| | |
|---|---|
| துடரும்மலை | தொடரும்மலை, தொடர்மலை |
| தென்டமிட்டு | தெண்டனிட்டு |
| நம்மள் | நமது |
| நம்மன் | நம்முடைய |
| நன்றி நடுவில்லாமல் | நேர்மையற்ற |
| நாமிருபேரும் | நாம் இருவரும் |
| நொன்னார் | நொந்தார் |
| பட்டுப்பிடவை | பட்டுப் புடைவை |
| பட்டு விடல் | இறத்தல் |
| பத்துத்தலையான் | இராவணன் |
| பரிபாரம் | பரிவாரம் |
| பன்டி | பன்றி |
| பாரடைய வீழ்ந்தார் | உலகம் அதிர வீழ்ந்தார் |
| பிடைசூழ | புடைசூழ |
| பிலன் | பலம் |
| பிள்ளை விடாய் தீர்த்தல் | பிள்ளை பேறு கொடுத்தல் |
| பிறங்கால் | புறங்கால் |
| பிறப்பட்டான் | புறப்பட்டான் |
| புஷ்தகம் | புத்தகம், பொத்தகம் |
| பெத்தமனம் | பெற்ற மனம் |
| பெண்டு வைத்தல் | மனைவியாக்கல் |
| பெலம், பெலன் | பலம் |
| பெலியிட | பலியிட, பலி கொடுத்தல் |
| பைகுண்டலம் | வைகுண்டலம் |
| போறென்றான் | போறேன் என்றான் |
| மகோதரன் | இராவணின் மகன் |
| மட்டுழக்கி | கொன்றுழக்கி |
| மயிரரக்கன் | இராமரையும் இலக்குவணனையும் மயக்கி கொண்டு வந்தவன் |
| மளமளண்டு | விரைவாக |
| மற்றநாள் | மறுநாள் |

| | |
|---|---|
| மனம் தளண்டு | மனம் தளர்ந்து |
| மன்னவர்கள் யாபேரும் | மன்னவர்கள் எல்லோரும் |
| மாங்கிசம் | மாமிசம் |
| மாயப்பொடி | மயக்கும் மருந்து |
| முகம் குறுக்கமாட்டாமல் | முகம்சுழித்தல் |
| முன்கைப்பிலன் | முன்னங்கைப் பலம் |
| மெள்ள | மெல்ல |
| மொன்னாது | ஒன்னாது அல்லது இயலாது |
| மேகநாதன் | இராவணனின மூத்தமகன் |
| யயம் | ஜயம் |
| ராமர் | இராமர் |
| லெட்சுமி | சீதை |
| லெட்சுமணன் | இலட்சுமணன் |
| வண்டோதரி | மண்டோதரி |
| வந்தி செய்தல் | தீவினை செய்தல் |
| வந்துதடா | வந்ததடா |
| வாளரக்கன் | இராவணன் |
| விசுவாமுனி | விசுவாமித்திரர் |
| வியளம், விசளம் | தூது |
| வரணித்து | வர்ணித்து |
| விபீடணன் | விபுஷ்ணன் |
| விபூல்சர் | விபுஷ்ணன் |
| விழுங்குதல் | உண்ணல் |
| வீரப்படை துலைந்து | வீரப்படை தொலைந்து |
| வெகுண்டு | வெருண்டு |
| வெள்ளம் சேனை | ஆயிரம் வீரர்கள் கொண்ட படை |
| வேணுமென்று | வேண்டுமென்று |
| வேதமுனி | தசரதன் அம்பு விட்டு கொன்றவனின் அப்பா |



**கலாநிதி முருகு தயாநிதி**

தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் முனைவர் முருகு தயாநிதி அவர்கள் இலங்கை, தேசிய கல்வி நிறுவகத்தில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். தம்முடைய நுண்மான் நுழைபுலத்தின் ஊற்றாக பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு அரிய படைப்புகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள "இராமர் அம்மானை", பழந்தமிழர்களின் விளையாட்டான 'அம்மானை' எனும் மகளிர் விளையாட்டினை நினைவுபடுத்துகின்றது. இராமயணத்தின் வரலாற்றை அம்மானை விளையாடும்போது பாடுவதாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய இளைய சமுதாயத்தினரும் எளிதில் பயின்று அறிந்து கொள்ளக்கூடிய வகையில் இப்பாடல்கள் அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது, காலத்தின் தேவை கருதி இந்நூலை பதிப்பித்து வெளியிட முயற்சித்துள்ள பேராசிரியர் அவர்களின் பணி போற்றுதலுக்குரியது.

ஆசிரியர்தம் சீரிய தொண்டு வளர்க.

முனைவர் **பாஞ். இராமலிங்கம்**
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி, இந்தியா.

ISBN 819383077-6